யோபு - முன்னுரை

காலமும் இடமும்

யோபுவின் புஸ்தகம் கி.மு. 1843 - 1703 ஆம் வருஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் ஊத்ஸ் என்னும் தேசத்தில் நடைபெற்றவையாகும். (யோபு 1:1).

யோபுவுக்கு பல பாடுகள் வந்தன. அப்போது அவனுக்கு சுமார் 70 வயதாயிற்று. அதன் பின்பு யோபு 140 வருஷம் உயிரோடு இருந்தான். (யோபு 42:16). யோபுவிற்கு சோதனைகள் வந்த வருஷம் சுமார் கி.மு. 1845 ஆகும்.

எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் வெளியேறியதற்கு 15 வருஷங்களுக்கு முன்பாக யோபு மரித்துப் போயிருக்க வேண்டும். மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப் படுவதற்கு முன்பாக யோபு ஊத்ஸ் தேசத்தில் வாழ்ந்தான். யோபுவின் புஸ்தகத்தில் பண்டிகைகள், ஓய்வுநாள் பிரமாணங்கள் போன்ற மோசேயின் பிரமாணம் எதுவும் கூறப்படவில்லை.

யோபுவின் புஸ்தகத்தில் கர்த்தரைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கும் காரியமும், யோபுவின் மார்க்கமும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, ஆகியோரின் மார்க்கங்களைப் போலவும், விசுவாசத்தைப் போலவும் உள்ளது. இவர்கள் எல்லோருமே மோசேயின் நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக ஜீவித்தவர்கள். (யோபு 1:5; யோபு 42:8).

நோவா (ஆதி 8:20), ஆபிரகாம் (ஆதி 12:1-13; ஆதி 15:9-11) ஆகியோரைப் போலவும் மற்றும் பல முற்பிதாக்களைப் போலவும் யோபு தன்னுடைய குடும்பத்திற்காவும், தன்னுடைய பிள்ளைகளுக்காகவும் கர்த்தருக்கு முன்பாகப் பாவநிவாரண பலி செலுத்தியிருக்கிறான்.

யோபு உண்மையான நபரல்ல. அவன் ஒரு கற்பனைப் பாத்திரம் என்று சிலர் கூறுகிறார்கள். யோபுவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருப்பவை உண்மை நிகழ்ச்சிகளல்ல. அவை உருவகங்கள் **(allegory)** என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இவையெல்லாம் தவறான கருத்துக்கள். வேதாகமத்தில் யோபுவின் புஸ்தகத்தைத் தவிர, மேலும் சில புஸ்தகங்களில் யோபுவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 46:13; எசே 14:14,20; யாக் 5:11)

யோபுவின் புஸ்தகத்தில் முதல் இரண்டு அதிகாரங்களும், கடைசி அதிகாரமும் வரலாற்றுச் சம்பவங்களை விவரிப்பதாக உள்ளது. மற்ற அதிகாரங்கள் கவிதை நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் எதுவும் உருவகங்களாகவோ, கற்பனைகளாகவோ இல்லை. எல்லாம் உண்மைச் சம்பவங்களாகவே உள்ளன.

கர்த்தரும், வேதாகமப் புஸ்தகத்தின் மற்ற ஆசிரியர்களும் யோபுவையும், இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் மற்ற நபர்களையும் உண்மையான நபர்களாகவே அங்கிகரிக்கிறார்கள். யோபுவின் நண்பர்களுடைய பெயர்களும், அவர்களுடைய தேசமும், கோத்திரமும் கூறப்பட்டிருக்கிறது.

சாத்தான் பரலோகத்தில் கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக நின்றதும் ஓர் உண்மைச் சம்பவமே ஆகும். யோபுவின் புஸ்தகத்தை எழுதிய ஆசிரியருக்குக் கர்த்தர் பரலோகத்தில் நடைபெறும் சம்பவங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். கிழக்கு தேசத்து ஜனங்கள் ஞானிகளாக இருந்தார்கள். யோபுவின் புஸ்தகத்தைப் போன்ற கவிதை நடையிலேயே அவர்கள் சம்பாஷணை செய்வது வழக்கம். ஆகையினால் இந்தப் புஸ்தகம் அக்காலத்து மொழிநடையின் பிரகாரம் எழுதப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்

யோபு புஸ்தகத்தை எழுதியர் யாரென்று தீர்மானமாகச் சொல்ல இயலவில்லை. மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக யாரோ ஒரு நபர் இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்க வேண்டும். ஒருவேளை யோபுவே இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியராக இருக்கலாம். ஆனால் இந்தப் புஸ்தகத்தின் கடைசி சில வாக்கியங்களில் யோபுவின் மரணத்தைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவேளை இந்தப் புஸ்தகத்தை யோபுவும், மோசேயும் எழுதியிருக்கலாம்.

யோபு - முன்னுரை

மையக்கருத்து

மனுஷருக்கு உண்டாகும் பாடுகளைப் பற்றி இந்தப் புஸ்தகத்தில் விரிவாகக் கூறப் பட்டிருக்கிறது. மனுஷன் பாடுகளை அனுபவிக்கும்போது அவனுக்கு ஏற்படும் மனப்போராட்டங்களும் இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரிடத்தில் பக்தியுள்ள மனுஷருக்கு ஏன் பாடுகள் வருகின்றன என்பதற்கான காரணமும் இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. மனுஷருடைய பாடுகளில் சாத்தானுடைய பங்கையும், கர்த்தருடைய பங்கையும் யோபுவின் புஸ்தகம் விவரித்துக் கூறுகிறது.

யோபுவின் புஸ்தகத்தில் காணப்படும் முக்கியமான செய்திகள்

1. மனுஷருடைய பாடுகள், துன்பங்கள், வியாதிகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கம்.
2. மனுஷருடைய பாடுகளுக்குக் காரணம்
3. மனுஷருடைய துன்பங்களுக்குச் சாத்தானே காரணம்.
4. தங்களுக்குப் பாடுகள் வரும்போது மனுஷர் பொறுமையோடு இருக்க வேண்டும். *(யாக் 5:10)*
5. கர்த்தரிடத்தில் உதவி கேட்டு விண்ணப்பம் பண்ணும்போது கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அவர்களுடைய பாடுகளிலிருந்து நீக்கி இரட்சிப்பார்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 42

வசனங்கள் - 1,070

கேள்விகள் - 329

புதிய தீர்க்கதரிசனங்கள் - 2

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 1,066

கட்டளைகள் - 13

முன்னறிவிப்புக்கள் - 4

யோபு புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். *(யோபு 1:7,8,12; யோபு 2:2,3,6; யோபு 38:1; யோபு 40:1,6; யோபு 42:7).* இந்தப் புஸ்தகத்தில் தீர்க்கதரிசனமும், கர்த்தரிடத்திலிருந்து வந்த செய்தியும் அதிகமாகக் காணப்படவில்லை. யோபுவின் சிநேகிதர் கர்த்தரிடத்தில் ஜெபிக்காமலேயே தங்களுடைய மனதிற்குத் தோன்றியதையெல்லாம் பேசுகிறார்கள்.

பொருளடக்கம்

I. வரலாற்றுப் பின்னணி

1. யோபுவின் குணாதிசயம் *(1:1)*
2. யோபுவின் குடும்பம் *(1:2)*
3. யோபுவின் பிரஸ்தாபமும் ஐசுவரியமும் *(1:3)*
4. யோபுவின் பக்தி *(1:4-5)*

II. தேவன், சாத்தான், யோபு ஆகியோர்

1. தேவனும் சாத்தானும்
   - (1) பரலோகத்தில் தேவ புத்திரரின் ஆராதனை *(1:6)*
   - (2) சாத்தானிடம் தேவன் கேட்ட கேள்வியின் இரண்டு அம்சம் *(1:7-8)*
   - (3) சாத்தான் யோபுவைப் பற்றி சொன்னதின் நான்கு அம்சம் *(1:9-11)*
   - (4) யோபுவைச் சோதிக்க தேவன் சாத்தானுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அனுமதி வழங்குகிறார் *(1:12)*
2. சாத்தானும் யோபுவும்
   - (1) யோபுவின் நான்கு விதமான இழப்புகள்
     - (அ) வேலையாட்கள், எருதுகள், கழுதைகள் *(1:13-15)*
     - (ஆ) வேலையாட்களும் 7,000 ஆடுகளும் *(1:16)*

யோபு - முன்னுரை

(இ) வேலையாட்களும் 3,000 ஒட்டகங்களும் (1:17)

(ஈ) வேலையாட்கள், குமாரர்கள், குமாரத்திகள், பண்ணைவீடு (1:18-19)

(2) யோபுவினுடைய நேர்மையின் ஏழு அம்சம் (1:20-22)

3. தேவனும் சாத்தானும்

(1) பரலோகத்தில் தேவ புத்திரரின் ஆராதனை (2:1)

(2) தேவன் சாத்தானிடம் கேட்டதின் இரண்டு அம்சம் (2:2-3)

(3) சாத்தான் யோபுவைப் பற்றி சொன்னதன் இரண்டு அம்சம் (2:4-5)

(4) யோபுவைச் சோதிக்க தேவன் சாத்தானுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அனுமதி வழங்குகிறார் (2:6)

4. சாத்தானும் யோபுவும் - பருக்கள் (2:7-8)

III. யோபுவின் மனைவி - தனது நேர்மையை யோபு கடைப்பிடிக்கிறான் (2:9-10)

IV. யோபுவும் மூன்று நண்பர்களும் - வருகையும் ஏழு நாள் கவனிப்பும் (2:11-13)

V. யோபுவும் அவனுடைய மூன்று நண்பர்களும் - சம்பாஷணைகள்

1. யோபுவின் சம்பாஷணை

(1) பிறப்பிற்காக புலம்புதல் (3:1-10)

(2) குழந்தைப் பருவத்திற்காகப் புலம்புதல் (3:11-19)

(3) வாலிபப் பருவத்திற்காகப் புலம்புதல் (3:20-26)

2. எலிப்பாசின் சம்பாஷணை

(1) அவனுடைய பேசும் ஆர்வம் (4:1-2)

(2) யோபுவின் பழைய கால நன்மைகளைக் குறித்து நான்கு அம்சங்கள் (4:3-4)

(3) எட்டு அம்ச குற்றச்சாட்டு - யோபு விதைத்ததை அறுக்கிறான் (4:5-6)

(4) துன்மார்க்கர் விதைத்ததை அறுப்பார்கள் - யோபு விதைத்ததையே அறுக்கிறான் (4:7-11)

(5) யோபுவின் துன்மார்க்கத்திற்காக தேவன் அவனை நீதியாகத் தண்டிக்கிறார் (4:12-21)

(6) வசைமொழியின் நான்கு அம்சம் - யோபு துன்மார்க்கனாய் இருப்பதினால் தேவன் அவனுடைய ஜெபத்திற்கு செவிகொடுக்க வில்லை (5:1-2)

(7) துன்மார்க்கர் விதைத்ததை அறுப்பதன் எட்டு அம்சம் - யோபுவைப் போல துன்மார்க்கர்கள் பாடு அனுபவிக்கவேண்டும் (5:3-5)

(8) தவிர்க்க முடியாத தீங்கு (5:6-7)

(9) தேவனைத் தேடுமாறு யோபுவுக்கு ஆலோசனை - தேவனுடைய மகத்துவம் (5:8-16)

(10) தேவன் யோபுவைச் சிட்சிக்கிறார் - சிட்சிப்பதனால் ஏற்படும் விளைவு (5:17-27)

3. எலிப்பாசுக்கு யோபு கூறிய பதில்

(1) தாங்கமுடியாத துக்கம் (6:1-7)

(2) தன்னுடைய துக்கத்தில் தன்னை அழித்துவிடுமாறு யோபு தேவனிடம் ஜெபிக்கிறான் (6:8-13)

யோபு - முன்னுரை

(3) தன்னுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளாததற்காக யோபு தன் நண்பர்களைக் கடிந்து கொள்கிறான் (6:14-21)

(4) யோபு தன்னுடைய தனித்தன்மையைக் காத்துக் கொள்கிறான் (6:22-23)

(5) தன்னுடைய நண்பர்களின் கசப்பான வார்த்தைகளுக்காக யோபு அவர்களைக் கடிந்து கொள்கிறான் (6:24-27)

(6) தன்னை நம்புமாறு யோபு தன்னுடைய நண்பர்களிடம் கூறுகிறான் (6:28-30)

(7) யோபு மரிக்க விரும்புகிறான் - அவனுடைய துயரத்தின் பன்னிரெண்டு அம்சங்கள் (7:1-10)

(8) தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக யோபு தேவனிடம் குற்றம் சுமத்துகிறான் (7:11-21)

4. பில்தாத்தின் சம்பாஷணை

(1) யோபுவின் வார்த்தைகளுக்காக அவனைக் கடிந்து கொள்கிறான் (8:1-2)

(2) யோபுவையும் அவனுடைய குமாரர்களையும் அவர்களுடைய துன்மார்க்கத்திற்காகக் கடிந்து கொள்கிறான் (8:3-7)

(3) பாரம்பரியத்திலிருந்தும் இயற்கையிலிருந்தும் கற்றுக் கொள்ளுமாறு யோபுவுக்கு வேண்டுகோள் விடுகிறான் (8:8-12)

(4) யோபுவை மாயக்காரன் என்று கூறி நிந்திக்கிறான் (8:13-22)

5. பில்தாத்திற்கு யோபுவின் பதிலுரை

(1) தேவனுக்கு முன்பாக மனுஷனால் நீதிமானாக இருக்கமுடியாது (9:1-4)

(2) தேவனுடைய வல்லமையின் பன்னிரெண்டு அம்சம் (9:5-12)

(3) தேவனுக்கு யோபுவால் மறுமொழி கொடுக்க இயலாது ஆனால் அவரிடம் ஜெபிக்க முடியும் (9:13-15)

(4) யோபுவின் குழப்பம் - ஜெபத்திற்கு பதில் கிடைத்ததில் சந்தேகம் (9:16)

(5) தேவன் தன்னைக் கசப்பினால் நிரப்புவதாக யோபு தேவன்மீது குற்றம் சாட்டுகிறான் (9:17-18)

(6) அநீதி, உதவியின்மை ஆகியவற்றைப் பற்றி யோபுவின் முறையீடு (9:19-21)

(7) தேவன் தன்னிடத்தில் இரக்கமில்லாமல் இருக்கிறார் ஆனால் துன்மார்க்கரைத் தண்டிப்பதில்லை என்று யோபு தேவனிடத்தில் முறையிடுகிறான் (9:22-24)

(8) தேவனிடத்தில் யோபுவின் முறையீடும் குற்றச்சாட்டும் (9:25-31)

(9) மத்தியஸ்தர் இல்லாமல் இருப்பதினால் யோபுவால் தேவனுக்குப் பதில்கூற முடியவில்லை (9:32-33)

(10) தேவன் தன்னைக் கலங்கப் பண்ணுவதாக யோபு தேவனைக் குற்றப்படுத்துகிறான் (9:34-35)

(11) யோபு தன்னுடைய கசப்பினால், தேவன் அநீதி செய்கிறார் என்றும் துன்மார்க்கருக்கு உதவி செய்கிறார் என்றும் குற்றப்படுத்துகிறான் (10:1-3)

(12) தேவன் தன்னை நிர்மூலமாக்குவதாக யோபு குற்றம் சாட்டுகிறான் (10:4-8)

யோபு - முன்னுரை

(13) உதவிக்காக யோபு தேவனிடம் ஜெபம் பண்ணுகிறான். ஆயினும் தேவன் தமது கோபத்தை தன்மீது கூட்டுவதாக யோபு குற்றப் படுத்துகிறான் (10:9-17)

(14) யோபு தனது பிறப்பிற்காக புலம்புகிறான் - தனது மரணத்தைக் குறித்து எதிர்பார்த்து அஞ்சுகிறான் (10:18-22)

6. சோப்பாரின் சம்பாஷணை

(1) யோபுவின் ஐந்து பாவங்களுக்காக அவனைக் குற்றப்படுத்துகிறான் (11:1-4)

(2)யோபு விதைத்ததை இன்னும் போதுமான அளவு அறுக்கவில்லை என்று சோப்பார் கூறுகிறான் (11:5-6)

(3) தேவனுடைய சர்வ ஞானமும் சர்வ வல்லமையும் (11:7-12)

(4) ஜெபித்து, பாவம் செய்வதை விட்டு விட்டால் தேவன் ஆசீர்வதிப்பார் என்று சோப்பார் யோபுவுக்கு கூறுகிறான் (11:13-19)

(5) யோபு துன்மார்க்கன் என்று சோப்பார் அறிவிக்கிறான் (11:20)

7. சோப்பாருக்கு யோபுவின் பதிலுரை

(1) யோபுவின் வஞ்சகப் புகழ்ச்சி - தான் தாழ்ந்தவன் என்பதை மறுக்கிறான் (12:1-3)

(2) ஒரு மனுஷன் தாழ்ந்திருக்கும் போது மற்றவர்களுடைய மனப் பாங்குகளை யோபு கூறுகிறான் (12:4-5)

(3) தேவன் துன்மார்க்கரோடு உடன்பட்டிருக்கிறார் என்று யோபு தேவனைக் குற்றப்படுத்துகிறான் (12:6)

(4) தேவனுடைய மகத்துவத்தின் முப்பது அம்சங்கள் (12:7-25)

(5) யோபு தன்னுடைய தாழ்மையை மறுபடியும் மறுக்கிறான் - தன்னுடைய நண்பர்கள் பொய் கூறுபவர்கள் என்றும் காரியத்திற்கு உதவாத வைத்தியர்கள் என்றும் கூறுகிறான் (13:1-4)

(6) தன்னைத் தனிமையாக விட்டுவிடுமாறும், தேவன் தமக்குப் பிரியமானதைத் தன்னிடத்தில் செய்யட்டும் என்றும் யோபு தன்னுடைய நண்பர்களிடம் கூறுகிறான் (13:5-13)

(7) மரணபரியந்தம் தான் தேவனையே நம்புவதாக அறிவிக்கிறான் - தேவனிடத்தில் தன்னுடைய நம்பிக்கையையும் பக்தியையும் வெளிப்படுத்துகிறான் (13:14-18)

(8) தன்னை நியாயமாக நடத்துமாறு யோபு தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான் (13:19-28)

(9) மனுஷனைக் குறித்து யோபுவின் தத்துவம் - இப்போதும் இனிமேல் (14:1-22)

8. எலிப்பாசின் சம்பாஷணை

(1) யோபுவின் பாவங்களுக்காக அவனைக் குற்றப்படுத்துகிறான் (15:1-16)

(2) வரலாற்றின்மீது எலிப்பாசின் கவனம் - துன்மார்க்கனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டு - யோபு வேதனைப்படுவதினால் அவன் துன்மார்க்கனாய் இருக்க வேண்டும் (15:17-35)

9. எலிப்பாசுக்கு யோபுவின் பதிலுரை

(1) அலட்டுண்டாக்கிற தேற்றரவாளரைக் கடிந்து கொள்கிறான் (16:1-6)

யோபு - முன்னுரை

(2) தேவனுக்கும் மனுஷனுக்கும் எதிராக யோபுவின் குற்றச்சாட்டு (16:7-14)

(3) தான் அனுபவிக்கும் பாடுகள் தன்னுடைய துன்மார்க்கத்தின்விளைவினால் வந்ததல்ல என்று யோபு கூறுகிறான் (16:15-22)

(4) யோபுவின் துக்கமும் தேவனிடத்தில் குற்றச்சாட்டும் (17:1-16)

10. பில்தாத்தின் சம்பாஷணை

(1) யோபுவின்மீது கடிந்துரை (18:1-4)

(2) துன்மார்க்கரின் அழிவு (18:5-21)

11. பில்தாத்திற்கு யோபுவின் பதிலுரை

(1) தன்னுடைய நண்பர்கள்மீது கடிந்துரை (19:1-5)

(2) தன்னுடைய பாடுகளுக்கு காரணம் தேவனே என்னும் குற்றச்சாட்டு (19:6-13)

(3) தன் மனைவி, வேலையாட்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டு (19:14-20)

(4) தன்மீது இரக்கம் காண்பிக்குமாறு யோபு தன் நண்பர்களை வேண்டுகிறான் (19:21-22)

(5) தன்னுடைய அனுபவங்களை ஒரு புஸ்தகத்தில் எழுத வேண்டுமென்று யோபு விண்ணப்பம் செய்கிறான் (19:23-24)

(6) தன்னுடைய பாடுகளுக்குக் காரணம் தேவனே என்று குற்றம் சாட்டினாலும் யோபு இன்னும் தேவனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறான் (19:25-27)

(7) யோபு தன்னுடைய சொந்த ஜீவியத்திற்கு தானே பொறுப்பு எடுத்துக் கொள்கிறான் (19:28-29)

12. சோப்பாரின் சம்பாஷணை - துன்மார்க்கர் மாய்மாலக்காரர் ஆகியோரின்மீது நியாயத்தீர்ப்பு - யோபு துன்மார்க்கனும் மாய்மாலக்காரனும் என்னும் குற்றச்சாட்டு (20:1-29)

13. சோப்பாருக்கு யோபுவின் பதிலுரை

(1) தான் பேசுவதைக் கேட்டு அதன்பின்பு தன்னைப் பரியாசம் பண்ணுமாறு யோபு தன் நண்பர்களிடம் கூறுகிறான் (21:1-6)

(2) துன்மார்க்கரின் செல்வம் (21:7-15)

(3) துன்மார்க்கரும் நல்லவரும் அவர்கள் விவாதங்கள் போலவே அழிந்து போவார்கள் (21:16-26)

(4) தாங்கள் சொன்னதைச் சிந்தித்துப் பார்க்குமாறு யோபு தன் நண்பர்களிடம் கூறுகிறான் (21:27-34)

14. எலிப்பாசின் சம்பாஷணை

(1) யோபு ஒரு மாயக்காரன் என்று கூறுகிறான் (22:1-4)

(2) யோபுவின் எட்டு பாவங்களைக் குறித்து குற்றம் சுமத்துகிறான் (22:5-9)

(3) யோபு தான் விதைத்ததை அறுப்பதாகக் கூறுகிறான் (22:10-11)

(4) யோபு தன்னுடைய பாவங்களை மூடுவதாகக் கூறுகிறான் (22:12-14)

(5) யோபுவைத் துன்மார்க்கருடைய பிரிவில் சேர்க்கிறான் (22:15-20)

யோபு - முன்னுரை

(6) யோபு மனந்திரும்பினால் மட்டுமே அவனுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும் என்று கூறுகிறான் (22:21-30)

15. எலிப்பாசுக்கு யோபுவின் பதிலுரை

(1) தேவனிடமிருந்து நியாயமான விசாரணை வரும் என்னும் ஆவல் (23:1-5)

(2) நியாய விசாரணையில் நல்ல முடிவு ஏற்படும் என்னும் யோபுவின் நம்பிக்கை (23:6-7)

(3) யோபு தேவனைத் தேடுகிறான் (23:8-9)

(4) யோபு இன்னும் தேவனிடத்தில் பக்தியாயிருக்கிறான் (23:10-12)

(5) தேவனுடைய வழிகள் ஆராய முடியாதவைகள் (23:13-17)

(6) துன்மார்க்கரின் பாவங்கள் - தான் இப்படிப்பட்ட பாவம் செய்ய வில்லை என்று யோபு கூறுகிறான் (24:1-25)

16. பில்தாத்தின் சம்பாஷணை - மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாய் இருக்க முடியாது (25:1-6)

17. பில்தாத்திற்கு யோபுவின் பதிலுரை

(1) யோபு தன் நண்பர்களிடம் பேசிய பரியாசப் பேச்சுகளும் கேள்விகளும் (26:1-4)

(2) தேவனுடைய 15 கிரியைகள் (26:5-14)

(3) தன் பாடுகளுக்காக யோபு தேவன்மீது குற்றம் சுமத்துகிறான் (27:1-2)

(4) யோபு தேவனிடத்தில் தான் வைத்திருக்கும் ஐக்கியத்தைக் காத்துக் கொள்கிறான் (27:3-12)

(5) யோபுவின் தத்துவம்

(அ) துன்மார்க்கரின் முடிவு (27:13-23)

(ஆ) யோபுவின் காலத்தில் உலோகச் சுரங்கங்கள், ஆலைகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு இருந்தது (28:1-11)

(இ) ஞானத்தின் கிரயம் ஆதாரம், விளக்கம் ஆகியவை (28:12-28)

(6) புலம்பல் - யோபுவின் கடந்த காலம்

(அ) யோபுவின் ஐசுவரியத்தின் பத்து அம்சங்கள் (29:1-6)

(ஆ) யோபுவின் மகிமையின் எட்டு அம்சங்கள் (29:7-11)

(இ) யோபுவின் சுபாவத்தின் பன்னிரெண்டு அம்சங்கள் (29:12-17)

(ஈ) யோபுவின் பாதுகாப்பின் ஆறு அம்சங்கள் (29:18-20)

(உ) யோபுவின் மகிமையின் பன்னிரெண்டு அம்சங்கள் (29:21-25)

(7) புலம்பல் - யோபுவின் தற்காலம்

(அ) யோபுவைப் பரியாசம் பண்ணுகிறவர்களின் குணாதிசயம் (30:1-8)

(ஆ) யோபுவைப் பரியாசம் பண்ணுகிறவர்களின் நடத்தை (30:9-14)

(இ) யோபுவின் பாடுகள் - சரீரமும், ஆத்துமாவும் (30:15-18)

(ஈ) தனக்குப் பாடுகளை உண்டாக்கியதற்காக யோபு தேவனைக் குற்றப்படுத்துவதின் பன்னிரெண்டு அம்சங்கள் (30:19-24)

(உ) யோபுவின் பாடுகள் - சரீரமும், ஆத்துமாவும் (30:25-31)

(8) யோபுவின் நேர்மையான நடத்தையின் பன்னிரெண்டு அம்சங்கள்

(அ) ஸ்திரீகள்மீது மோகமாக இருக்க வில்லை (31:1-4)

(ஆ) யாரையும் ஏமாற்ற வில்லை (31:5-6)

(இ) கண்ணியமில்லாமல் நடந்து கொள்ளவில்லை (31:7-8)

(ஈ) விபச்சாரம் செய்யவில்லை (31:9-12)

(உ) அநீதி இழைக்கவில்லை (31:13-15)

(ஊ) மனுஷத்தன்மை இல்லாமல் நடந்து கொள்ளவில்லை (31:16-23)

(எ) பேராசைப்படவில்லை (31:24-25)

(ஏ) விக்கிரகாராதனை செய்யவில்லை (31:26-28)

(ஐ) யாரையும் வெறுக்கவில்லை (31:29-31)

(ஒ) விருந்தினரை உபசரிக்காமல் இருக்கவில்லை (31:32)

(ஓ) மாய்மாலம் பண்ணவில்லை (31:33-37)

(ஔ) யாரையும் ஏமாற்றி வஞ்சிக்க வில்லை (31:38-40)

VI. யோபுவும், எலிகூவும் - எலிகூ யோபுவோடு பேசிய சம்பாஷணையும் அவனுடைய மூன்று நண்பர்களும்

1. எலிகூ தொடர்ந்து பேசுகிறான் (32:1-5)

2. எலிகூ இதுவரையிலும் அமைதியாக இருந்ததற்கு காரணம் (32:6-7)

3. அவனுடைய ஞானத்தின் ஆதாரம் (32:8-9)

4. எலிகூ பேசுவதற்கான காரணத்தின் பதினைந்து அம்சங்கள் (32:10-22)

5. எலிகூ யோபுவிடம் கூறிய முதலாவது பதிலுரை

(1) பதிலுரைப்பதற்கு அவனுடைய தகுதி (33:1-7)

(2) யோபுவின் எட்டு தவறுகள் (33:8-13)

(3) தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் கிரியைகள்

(அ) தேவன் தமது சித்தத்தையும் நோக்கத்தையும் வெளிப் படுத்துகிறார் (33:14-18)

(ஆ) மனுஷன் தேவனை மறுதலிக்கும் போது பாடுகளின் மூலமாக மனுஷனுக்கு பாடம் கற்பிக்கிறார் (33:19-22)

(இ) மனுஷன் தாழ்மையடைந்து தேவனிடத்தில் மனந்திரும்பி வரும்போது அவர் தமது செய்தியோடு அதை வியாக்கியானம் பண்ணுவதற்கும் ஒருவரை அனுப்புகிறார் (33:23)

(ஈ) தேவனால் சிட்சிக்கப்பட்டவன் தேவனை ஏற்றுக்கொள்ளும்போது தேவன் அவனை இரட்சித்து குணப்படுத்துகிறார் (33:24-28)

(உ) தேவனுடைய கிரியைகளின் காரணம் (33:29-30)

(4) எலிகூ யோபுவிடம் கூறியது (33:31-33)

(5) யோபுவின் மூன்று நண்பர்களோடு கூறிய எலிகூ கூறிய பதிலுரை

(அ) அவர்களுடைய கருணைக்காக விண்ணப்பம் (34:1-4)

யோபு - முன்னுரை

(ஆ) தேவனுக்கும் மனுஷருக்கும் எதிராக யோபு எட்டு பாவங்களைப் புரிந்ததாக எலிகூ யோபுவைக் குற்றப்படுத்துகிறான் (34:5-9)

(இ) கேட்பதற்கு முதலாவது அழைப்பு - தேவன் தமது நீதியை நிலைநிறுத்துவதன் பன்னிரெண்டு அம்சங்கள் (34:6-15)

(ஈ) கேட்பதற்கு இரண்டாவது அழைப்பு - - தேவன் தமது நீதியை நிலைநிறுத்துவதன் முப்பது அம்சங்கள் (34:16-33)

(உ) எலிகூ யோபுவைக் கடிந்து கொள்கிறான் - யோபு இன்னும் அதிகமாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகிறான் (34:34-37)

(6) எலிகூ யோபுவிடம் கூறிய இரண்டாவது பதிலுரை

(அ) அவனுடைய மூன்று பெரிய தவறுகள் (35:1-3)

(ஆ) எலிகூ யோபுவை நிந்தித்து தேவன் செய்தது சரியானது எனக் கூறுகிறான் (35:4-14)

(இ) யோபுவைத் தேவன் தண்டித்திருப்பதாக எலிகூ கூறுகிறான் (35:15-16)

(7) எலிகூ தேவனை இன்னும் ஆதரித்துப் பேசுகிறான்

(அ) தேவனுக்காகப் பேசுவதாகக் கூறுகிறான் (36:1-4)

(ஆ) தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் பதினெட்டு கிரியைகள் (36:5-15)

(இ) தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் கிரியையே யோபுவிடமும் காணப் படுவதாக எலிகூ கூறுகிறான் (36:16-25)

(ஈ) தேவனுடைய முப்பத்தி நான்கு பெரிய கிரியைகள் (36:26-37:13)

(உ) தேவனுடைய வல்லமையையும்கிரியைகளையும் கவனிக்க வேண்டுமென்று எலிகூ யோபுவுக்கு ஆலோசனை கூறுகிறான் - தேவனை விடத் தன்னை ஞானவானாக எண்ணக்கூடாது (37:14-24)

VII. கர்த்தரும் யோபுவும்

1. கர்த்தருடைய முதலாவது சம்பாஷணை

(1) கர்த்தருடைய கோரிக்கைகள் (38:1-3)

(2) உயிரற்ற பொருட்களின் சிருஷ்டிப்பைக் குறித்து முப்பத்தாறு கேள்விகள் (38:4-38)

(3) உயிருள்ளவைகளின் சிருஷ்டிப்பைக் குறித்து இருபத்தி மூன்று கேள்விகள் (38:39-40:2)

(4) கர்த்தருக்கு யோபுவின் பதிலுரை (40:3-5)

2. கர்த்தரின் இரண்டாவது சம்பாஷணை

(1) யோபுவைப் பற்றி நான்கு கேள்விகள் (40:6-9)

(2) யோபுவுக்கு கூறப்பட்டுள்ள அறைகூவலின் எட்டு அம்சங்கள் (40:10-14)

(3) பிகெமோத்தைப் பற்றிய விளக்கத்தின் பதினாறு அம்சங்கள் (40:15-24)

(4) லிவியாதானைப் பற்றிய இருபது கேள்விகள் (41:1-14)

(5) லிவியாதானைப் பற்றிய விளக்கத்தின் ஐம்பத்தியாறு அம்சங்கள் (41:15-34)

(6) யோபு கர்த்தரிடம் கூறிய பதிலுரை (42:1-6)

யோபு - முன்னுரை

VIII. கர்த்தரும் யோபுவின் மூன்று நண்பர்களும் *(42:7-9)*

IX. கர்த்தர், சாத்தான், யோபு *(42:10-13)*

X. யோபுவின் முடிவுரை *(42:14-17)*

1 அதிகாரம்

I. வரலாற்றுப் பின்னணி - (ஆதி 46:13; எசே 14:14-20; யாக் 5:10-11)

1. யோபுவின் குணாதிசயம்

யோபு 1:1 ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்.

"ஊத்ஸ் தேசம்" (the land of Uz) - இது ஏதோமிற்கு தெற்கிலும், மேற்கு அரபியாவிலும் உள்ளது. கல்தேயரின் எல்லை வரையிலும் ஊத்ஸ் தேசத்தின் எல்லை விரிந்து பரவியிருக்கிறது. அந்நாட்களில் அரபியா, பெத்தாரா ஆகிய பிரதேசங்களும் ஊத்ஸ் தேசத்தில் அடங்கியிருந்தன. (எரே 49:7,20; புல 4:21; எசே 25:13; ஆமோ1:11-12; ஒப 1:8-9).

"யோபு" (Job) - இந்தப் பெயருக்கு "நெருக்கப்படுதல்" "afflicted" என்று பொருள். இவன் இசக்காரின் மூன்றாவது குமாரன். இசக்கார் யாக்கோபின் குமாரன். (ஆதி 46:13; எசே 14:14,20; யாக் 5:11). யோபுவின் பெயர் இந்தப் புஸ்தகத்தில் 56 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. யோபு ஒரு வரலாற்று நபர். இவன் ஒரு கற்பனை பாத்திரமல்ல. ஆகையினால்தான், இந்த வாக்கியத்தில் "யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்" என்று ஆரம்பமாகிறது. லூக்கா 16:19-20 ஆவது வசனத்திலும், "ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியங்களெல்லாம் அந்த நபர்களின் வரலாற்று உண்மையை விளக்குகிறது. யோபு புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் கற்பனைக் கதைகளல்ல. இவை உண்மைச் சம்பவங்களாகும்.

யோபுவின் சுபாவம்

1. உத்தமன்

2. சன்மார்க்கன்

3. தேவனுக்குப் பயந்திருக்கிறவன்

4. பொல்லாப்புக்கு விலகுகிறவன்

உத்தமன் (perfect) - תָּם - tawm - 8535

பெயரடை - குணசாலியான, உத்தமன், சன்மார்க்கமான **perfect** (யோபு 1:1,8; யோபு 2:3; யோபு 8:20; யோபு 9:20-22; சங் 37:37; சங் 64:4); **plain** (ஆதி 25:27); **upright** (நீதி 29:10); **undefiled** (உன் 5:2; உன் 6:9). இந்த வார்த்தை "தாமம்" (**t.amam** תָּמַם - **8552**) என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு பூரணம், முழுமை என்று பொருள் கூறலாம்.

உத்தமனாதல் (make full) - תָּמַם - taw-mam' - 8552

வினைச்சொல் - செலவழி, தீர், கட, மாண்டு போ, முடி, ஒழி, நிறைவேற்று, நிர் மூலமாக்கு, அழி, அக்கிரமம், விழு, மாறு, இற, கட்டு, அற்றுப்போ, முற்று, முடிவு, வெந்துபோதல், வாங்கு, உத்தமனாக, தழல், கெடு, வேவி, தொலை, தொகையார் **(to complete; make full; be entire; to finish)**

சன்மார்க்கன் (upright) - יָשָׁר - yaw-shawr' – 3477

பெயரடை - செம்மையான, நீதிமான், சரியான, உத்தமன், நலமான, சன்மார்க்கன், யதார்த்தமான, நீதியுள்ள, நியாயமான **(to be straight) upright** (யோபு 1:1,8; யோபு 2:3; யோபு 8:6; யோபு 17:8; 1சாமு 29:6; 2நாளா 29:34; சங் 7:10; சங் 11:2,7; சங் 25:8; சங் 32:11; சங் 33:1; சங் 37:14,37; நீதி 11:3); **right** (யாத் 15:26; உபா 6:18; உபா 12:8); **righteous** (யோபு 4:7; யோபு 23:7); **meet** (2இராஜா 10:3; எரே 26:14); **just** (நீதி 29:10); **straight** (எரே 31:9; எசே 1:7,23); **convenient** (எரே 40:4-5); **equity** (மீகா 3:9).

யோபு – தொகுப்புரை

1 அதிகாரம்

பயப்படுதல் (feared) - יָרֵא - yaw-ray' - 3373

பெயரடை - பயப்படுகிற, பயந்திருக்கிற, பயங்காளி, பயந்த, பயப்பட்ட, பயமுள்ள, பயபக்தியுள்ள **(to revere; be afraid of; to have deep respect for)** *(யோபு 1:1; யாத் 9:20; 1இராஜா 18:3; 2இராஜா 17:32-34,41).* கர்த்தருக்குப் பயப்படுவதே மெய்யான மார்க்கமும், மெய்யான பக்தியுமாகும். *(நீதி 1:7,29; நீதி 2:5; நீதி 8:13; நீதி 14:26-27; ஏசா 11:2; அப் 9:31).*

பொல்லாப்புக்கு விலகுதல்(eschewed evil) - סוּר - soor' - 5493

வினைச்சொல் - கிட்டவா, நீங்கு, விட்டுப்போ,அற்றுப்போ, கட்டளையிடு, கைவிடு, முரட்டாட்டமிடு, சோரம்போ, நீடித்திரு, தப்பிவிடு, விட்டுப்பிரி, திரும்பு, உள்ளேவா, அகன்றுபோ, புறப்படு, கிட்டப்போ, கழற்றப்படு, எதிர்கொண்டு போ, போ, வழியைவிடு, விடாதிரு, விலகிப்பே, வா, அற்றுப்போ, நீக்கப்படு, மதிகேடாய்நட, விடப்படு அப்புறப்படுத்து, எடு, எறிந்துவிடு, நீக்குகிறவனாயிரு, ஒப்புக்கொடு, செய்யப் போ, அகற்று, தகர்த்து, தள்ளிவிடு, கொண்டு வா, விட்டகற்று, தள்ளி விட்டவனாயிரு, எடுத்துப்போடு,கழற்று, பிரித்துப்போடு, தடுப்பவர்களாயிரு, வாங்கு, விலகப் பண்ணு, அகற்றிவிடு, மாற்று, ஓய்ந்திரு, இடித்துப்போடு, தவிர்த்திரு, களைந்து போடு, பிரி, களைத்துவிடு, கழலு, துரத்திவிடு, நிர்மூலமாக்கு, அழிந்துபோ, அறுத்துப்போடு, ஒழித்துவிடு, உரிந்து போடு, தள்ளப்படு, அகற்றப்படு, பின்வாங்கு, வெட்டிப்போடு **(to turn off; decline; depart from; lay away; leave undone; be past; pluck away; put down; rebel against; remove; be sour against) withdraw** *(யோபு 1:1,8; யோபு 2:3; 1பேதுரு 3:11).*

2. யோபுவின் குடும்பம் - *(42:13-17)*

யோபு 1:2 அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள்.

"ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும்" - யோபுவின் இரண்டாவது குடும்பத்தில் அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். *(யோபு 42:13).*

3. யோபுவின் பிரஸ்தாபமும் ஐசுவரியமும்

யோபு 1:3 அவனுக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக் காரரும் இருந்தார்கள்; அதினால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான்.

"ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள்" - பூர்வக்காலத்தில் ஒருவருடைய சொத்தை மதிப்பிடுவதற்கு அவருடைய மிருகஜீவன்களை எண்ணுவது வழக்கம். *(யோபு 42:12; ஆதி 13:2,5; ஆதி 24:35).* இங்கு கூறப்பட்டிருக்கும் கழுதைகள் பெண் கழுதைகளைக் குறிக்கும். இவை கோவேறு கழுதைகள். இவற்றின் பாலை அக்காலத்தில் பருகினார்கள். ஆகையினால் ஆண் கழுதைகளைவிட பெண் கழுதைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இங்கு கூறப்பட்டிருக்கிறது.

"கிழக்கு" என்னும் வார்த்தையின் பயன்பாடு

1. ஆபிரகாம் .... அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கை விட்டு, கிழக்கே போகக் கீழ்தேசத்திற்கு அனுப்பி விட்டான். *(ஆதி 25:6)*

2. மெசொப்பொத்தாமியா *(ஆதி 24:10; ஆதி 29:1)*

3. மீதியானியரோடும், அமலேக்கியரோடும் உதவி புரிந்தவர்கள் கிழக்குத் தேசத்திலிருந்து வந்திருந்தார்கள். *(நியா 6:3,33; நியா 7:12; நியா 8:10)*

1 அதிகாரம்

4. சாஸ்திரிகள் கிழக்குத் தேசத்திலிருந்து வந்திருந்தார்கள். (1இராஜா 4:30; மத் 2:1)

5. யோபுவின் தேசம். (யோபு 1:3)

6. மேதியா, பெர்சியா, அசீரியா, பாபிலோன் ஆகிய தேசங்கள். (ஏசா 2:6; ஏசா 11:14; ஏசா 41:2; ஏசா 46:11; எரே 49:28; எசே 25:4,10)

7. ரோமப் பேரரசிற்குக் கிழக்குப் பகுதியிலுள்ள தேசங்கள் வருங்காலத்தில் அந்திக் கிறிஸ்துவிற்கு விரோதமாக யுத்தம் பண்ணும். (தானி 11:44)

4. யோபுவின் பக்தி - (வசனங்கள் 1:8,20-22; 2:3,10; யாக் 5:10-11)

யோபு 1:4 அவன் குமாரர், அவனவன் தன் தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள்.

யோபு 1:5 விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப் படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்.

"அவனவன் தன் தன் நாளிலே" - அவர்களுடைய "பிறந்த நாட்களில்" அல்லது அவர்களுக்கு வரிசைப் பிரகாரம் நியமிக்கப் பட்டிருக்கும் "முறை நாட்களில்".

"அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப் படுத்தி" - யோபு தன் பிள்ளைகளைப் பரிசுத்தப் படுத்துகிறான். ஒருவேளை தன் குமாரர் பாவஞ் செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்களோ என்று யோபு தனக்குள் நினைத்துக் கொள்கிறான். அதற்காக அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலி களைச் செலுத்துகிறான். வேதாகம வரலாற்றில் இரண்டாம் முறையாகப் பரிசுத்தப்படுவதைப் பற்றிய குறிப்பு இங்கு கூறப்பட்டிருக்கிறது. வேதாகமத்திலுள்ள புஸ்தகங்களில் யோபுவின் புஸ்தகமே மிகவும் பழமையானதாகும். மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே யோபுவின் புஸ்தகத்திலுள்ள நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. பரிசுத்தத்தைப் பற்றிய முதலாவது குறிப்பு கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்தாகும். (ஆதி 2:1-4).

யோபு கர்த்தருக்கு முன்பாகத் தகனபலிகளைச் செலுத்துகிறான். இதனால் கர்த்தருடைய இரக்கம் தன்னுடைய பிள்ளைகள்மீது வந்திறங்கும் என்று நம்புகிறான். தன்னுடைய மனதில் தன் பிள்ளைகளை வேறுபிரிக்கிறான். ஆனாலும் தன் பிள்ளைகளுக்காக யோபு செய்யும் காரியம் அவர்களை இரட்சிக்காது. சரீர மரணத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்காது. யோபுவின் பிள்ளைகள் தங்களுடைய பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டதற்கான குறிப்பு எதுவுமில்லை. யோபு தன்னுடைய பிள்ளைகளைக் கர்த்தரிடத்தில் பிரதிஷ்டை பண்ணுகிறான். பெற்றோரால் தங்கள் பிள்ளைகளைக் கர்த்தரிடத்தில் பிரதிஷ்டை மட்டுமே பண்ண முடியும். பிள்ளைகளுடைய இரட்சிப்பிற்கு அந்தப் பிள்ளைகளே மனந்திரும்ப வேண்டும்.

"சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்" - ஆபேலின் காலத்திலிருந்து பலிசெலுத்தும் வழக்கம் தொடர்ந்து வருகிறது. (ஆதி 4) இயேசு கிறிஸ்துவின் காலம் வரையிலும் பலி செலுத்தப்பட்டிருக்கிறது.

1 அதிகாரம்

II. தேவன், சாத்தான், யோபு ஆகியோர் - (1:6-2:8)

1. தேவனும் சாத்தானும்

(1) பரலோகத்தில் தேவ புத்திரரின் ஆராதனை - (2:1; 38:7; சங் 103:20; 148:2; லூக் 2:13; எபி 1:6; வெளி 5:11-14)

யோபு 1:6 ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்.

"ஒருநாள்" - பரலோகத்தில் கர்த்தருடைய தூதர்கள் கர்த்தருடைய சந்நிதியில் இந்த நாளில் வந்து நிற்கிறார்கள். இந்த நிகழ்ச்சி இரண்டு முறை நடைபெறுகிறது. (யோபு 1:6; யோபு 2:1) பரலோகத்தில் தேவதூதர்கள் அடிக்கடி கர்த்தருடைய சந்நிதியில் வந்து நிற்கும் வழக்கம் உள்ளது. பூமியில் நாம் கர்த்தரை ஆராதிப்பது போல பரலோகத்திலும் தேவதூதர்கள் கர்த்தரை எப்போதும் ஆராதித்துக் கொண்டிருக்கிறார்கள். காணக் கூடாதவைகளைக் காணக்கூடியவற்றின் மூலமாகப் புரிந்து கொள்ள முடியும். (ரோமர் 1:20; கொலோ 1:15-18; வெளி 4:9-11; வெளி 5:8-13; வெளி 19:1-10). பரலோகத்திலும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு பூமியில் இருப்பதுபோல, அங்கு பரலோகத்தில் பகல், இரவு என்ற வேறுபாடு இராது. (ஆதி 1:14-19; ஆதி 8:22).

"தேவபுத்திரர்" (sons of God) - பழைய ஏற்பாட்டில் ஐந்து இடங்களில் தேவபுத்திரர் என்னும் வார்த்தை தேவதூதர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யோபு 38:4-7; ஆதி 6:1-4) இந்த வசனத்திலும், யோபு 2:1 ஆவது வசனத்திலும் நடைபெறும் சம்பவம் பரலோகத்தில் கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக நடைபெறுகிறது.

"கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது" - தேவபுத்திரர்கள் கர்த்தரை ஆராதிப்பதற்காகவோ, அல்லது தங்களுடைய பணிவிடைகளை நிறைவேற்றுவதற்காகவோ அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்தலங்களில் வந்து நிற்கிறார்கள். (1இராஜா 22:19-22; ஏசா 6; தானி 4:25-26; தானி 7:9-14; சக 3:1-2; வெளி 4-5; வெளி 19:1-10).

சாத்தான்

வேதாகமத்தில் வரலாற்றுப் பிரகாரமாக இந்த வசனத்தில் தான் சாத்தானைப் பற்றி முதன் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் புஸ்தகத்தில்கூட சாத்தான் அவனுடைய பெயரினால் அழைக்கப்படவில்லை. யோபுவின் சரித்திரம் பூர்வக்காலத்தில் நடைபெற்றது. யோபு இசக்காரின் குமாரன். (ஆதி 46:13) மனுஷருடைய வீழ்ச்சிக்கு காண முடியாத ஒரு சத்துரு காரணமாக இருந்தான். சர்ப்பத்தைத் தன் கருவியாகப் பயன்படுத்தினான். (ஆதி 3) ஒரு சமயம், சாத்தான் பேதுருவைக் கூட பயன்படுத்தியிருக்கிறான். (மத் 16:23). யோபுவின் புஸ்தகத்தில் சாத்தான் ஒரு பெரிய வலுசர்ப்பமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறான். (யோபு 41) கீழ்ப்படியாமையின் பிள்ளைகளினிடத்தில் சதாகாலங்களிலும் சாத்தான் அசுத்த ஆவியாகக் கிரியை செய்து வருகிறான். (எபே 2:1-3). இந்த வசனத்தில் சாத்தான் ஒரு ஆள்தத்துவப் பண்புடைய நபராகவும், பரலோகத்திற்குப் போகும் சிலாக்கியம் உள்ளவனாகவும், கர்த்தரிடத்தில் மற்றவர்களைக் குறித்துப் பேசக்கூடிய வாய்ப்பு பெற்றவனாகவும் கூறப்பட்டிருக்கிறான். (வெளி 12:9-12). சாத்தான் என்றும் பெயருக்குச் சத்துரு என்றுபொருள். (1இராஜா 11:14)

யோபுவிற்கு வந்த சோதனைகளில் நடைபெற்ற சம்பவங்கள்

1. சாத்தானுடைய வருகை. (யோபு 1:6; யோபு 2:1)
2. தேவனுடைய கேள்வி. (யோபு 1:7; யோபு 2:2)
3. சாத்தானின் பதில். (யோபு 1:7; யோபு 2:2)

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

4. யோபுவைக் குறித்து தேவனுடைய சாட்சி. (யோபு 1:8; யோபு 2:3)

5. யோபுவைக் குறித்து சாத்தானுடைய குற்றச்சாட்டு. (யோபு 1:9-11; யோபு 2:4-5)

6. தேவன் சாத்தானுக்குக் கொடுத்திருக்கும் வரையறைக்குட்ட அனுமதி. (யோபு 1:12; யோபு 2:6)

7. யோபுவைச் சோதிப்பதற்காகச் சாத்தான் புறப்பட்டுப்போவது. (யோபு 1:12; யோபு 2:7)

8. உபத்திரவங்கள் - யோபுவின் உடைமைகள் (யோபு 1:13-19); யோபுவின் சரீரம் (யோபு 2:7)

9. யோபுவின்மீது ஏற்பட்ட விளைவு - தன் ஐசுவரியத்தை இழந்தபோது (யோபு 1:20-22); தன் சரீர ஆரோக்கியத்தை இழந்தபோது. (யோபு 2:9-42:6)

(2) சாத்தானிடம் தேவன் கேட்ட கேள்வியின் இரண்டு அம்சம் - (2:2-3)

யோபு 1:7 கர்த்தர் சாத்தானைப் பார்த்து: நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான்.

யோபு 1:8 கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.

(3) சாத்தான் யோபுவைப் பற்றி சொன்னதின் நான்கு அம்சம் - (2:4-6)

யோபு 1:9 அதற்குச் சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்?

யோபு 1:10 நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று.

யோபு 1:11 ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான்.

"வேலியடைக்கவில்லையோ?" - கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைச் சுற்றிலும் வேலி அடைத்திருக்கிறார். இதனால் சாத்தானால் கர்த்தருடைய பிள்ளைகளைத் தொடமுடியாது.

"அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்" - தன்னுடைய தனிப்பட்ட ஆதாயத்திற்காகவே ஒவ்வொருவனும் கர்த்தரைச் சேவிக்கிறான் என்பது சாத்தானுடைய குற்றச்சாட்டு. கர்த்தர் ஒரு மனுஷனை ஆசீர்வதிப்பதை நிறுத்திவிட்டால், அந்த மனுஷன் உடனடியாகக் கர்த்தருக்கு விரோதமாக எழும்பி அவரைத் தூஷிப்பான் என்று சாத்தான் கூறுகிறான். ஆனால் இது மெய்யல்ல. எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் கர்த்தரைத் துதிக்கும் ஜனங்கள் இந்தப் பூமியில் திரளாய் இருக்கிறார்கள்.

நெருக்கத்திலும், அழிவிலும் தேவனுடைய கிரியைகள்

சாத்தான் கர்த்தரிடத்தில் "உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவை யெல்லாம் தொடும்" என்று கூறுகிறான். கர்த்தர் தொடுவதினால் யாரும் சபிக்கப்படுவதில்லை. கர்த்தர் தொடும்போது, அந்த நபருக்கு ஆசீர்வாதமே உண்டாகும். தம்முடைய பாதுகாப்பின் கரத்தை யோபுவை விட்டு அகற்றுமாறு சாத்தான் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான்.

யோபு – தொகுப்புரை

1 அதிகாரம்

(யோபு 1:11-12). ஒரு மனுஷனை விட்டு கர்த்தர் தம்முடைய பாதுகாக்கும் கரத்தை அகற்றிப் போடும் போது, அவனுக்கு ஆபத்தும், அழிவும் நேரிடுகிறது. இந்தப் பூமியில் சாத்தானும், அவனுடைய அந்தகாரச் சக்திகளுமே மனுஷருக்கு அழிவை உண்டாக்குகிறார்கள். கர்த்தர் யாரையும் அழிப்பதில்லை. யோபுவின் விஷயத்திலும் இந்தச் சத்தியமே நிறைவேறுகிறது. யோபுவின் ஐசுவரியத்தைக் கர்த்தர் அழிக்கவில்லை. (யோபு 1:12-19) யோபுவின் சரீரத்தில் கர்த்தர் வியாதியை அனுப்பவில்லை. (யோபு 2:7) யோபுவின் பாடுகளுக்குச் சாத்தானே காரணம். அவனே மனுஷருக்கு நெருக்கத்தையும், அழிவையும் கொடுக்கிறவன். (லூக்கா 13:16; யோவான் 10:10; அப் 10:38).

மனுஷருக்கு வியாதிகள், விபத்துக்கள், துன்பங்கள் ஆகியவை அனைத்தும், சாத்தான் மூலமாகவே வருகிறது. ஆனால் மனுஷனோ கர்த்தர் மூலமாகத் தனக்குப் பாடுகள் வருவதாகத் தவறாக நினைக்கிறான். கர்த்தர் யாரையும் உபத்திரவப்படுத்துவதில்லை. கர்த்தர் தம்முடைய பாதுகாப்பை ஒருவனைவிட்டு அகற்றும்போது, அவனுக்கு உபத்திரவம் தானாகவே வந்துவிடுகிறது. கர்த்தருடைய கிரியை இரட்சிப்பு. சாத்தானுடைய கிரியையோ அழிவு. (யோவான் 10:10; அப் 10:38).

(4) யோபுவைச் சோதிக்க தேவன் சாத்தானுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அனுமதி வழங்குகிறார் - (2:6)

யோபு 1:12 கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ, அவனுக்கு உண்டானவை யெல்லாம் உன் கையிலிருக்கிறது; அவன் மேல்மாத்திரம் உன் கையை நீட்டாதே என்றார்; அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டுப்போனான்.

"அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது" - யோபுவுக்கு உரியவை அனைத்தும், இப்போது சாத்தானிடம் ஒப்புக் கொடுக்கப்படுகிறது. யோபுவின் குடும்பத்தில் சாத்தான் சிலரை அழித்துப் போடுகிறான். மீதமுள்ளவர்களைக்கூட சாத்தான் யோபுவுக்கு விரோதமாகப் பயன்படுத்துகிறான். யோபுவின் மனைவி அவனைத் தூஷிக்கிறாள். யோபுவின் சிநேகிதர்கள்கூட அவனுக்கு துராலோசனை கூறுகிறார்கள். (யோபு 1:11,15-17,19; யோபு 2:9).

2. சாத்தானும் யோபுவும்

(1) யோபுவின் நான்கு விதமான இழப்புகள்

(அ) வேலையாட்கள், எருதுகள், கழுதைகள்

யோபு 1:13 பின்பு ஒருநாள் யோபுடைய குமாரரும், அவன் குமாரத்திகளும், தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து, திராட்சரசம் குடிக்கிறபோது,

யோபு 1:14 ஒரு ஆள் அவனிடத்தில் வந்து: எருதுகள் உழுகிறபோது, கழுதைகள் அவைகளின் பக்கத்திலே மேய்ந்து கொண்டிருக்கையில்,

யோபு 1:15 சபேயர் அவைகள்மேல் விழுந்து, அவைகளைச் சாய்த்துக் கொண்டு போனார்கள்; வேலையாட்களையும் பட்டயக் கருக்கினால் வெட்டிப்போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.

யோபுவை உபத்திரவப்படுத்த சாத்தான் பூமியில் பயன்படுத்திய கருவிகள்

1. சபேயர் (யோபு 1:15)
2. வானத்திலிருந்து அக்கினி (யோபு 1:16)
3. கல்தேயர் (யோபு 1:17)
4. பெருங்காற்று (யோபு 1:19)
5. வியாதி (யோபு 2:7)
6. பக்தியில்லாத மனைவி (யோபு 2:9)

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

(ஆ) வேலையாட்களும் 7,000 ஆடுகளும்

யோபு 1:16 இவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து: வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து, ஆடுகளையும் வேலையாட்களையும் சுட்டெரித்துப் போட்டது; நான் ஒருவன்மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.

"இவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து" - யோபுவிற்கு துன்பத்திற்கு மேல் துன்பம் வருகிறது. அதுவும் அவனால் தாங்கிக் கொள்ள முடியாதவாறு ஒன்றுக்கு மேல் ஒன்றாகத் தொடர்ந்து வருகிறது. (யோபு 1:16,17,18,20-22).

"வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து" - இது ஒருவேளை மின்னலாக இருக்கலாம். இக்காலத்தில்கூட புயல், மின்னல், இடி ஆகியவற்றின் மூலமாக உண்டாகும் அழிவு கர்த்தரால் உண்டாயிற்று என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் யாரையும் அழிக்க வேண்டுமென்று கர்த்தர் இயற்கையை மனுஷருக்கு விரோதமாகப் பயன் படுத்துவதில்லை. சாத்தானே ஆகாயத்து அந்தகாரப் பிரபுவாக இருக்கிறான். **"the prince of the power of the air"** (எபே 2:1-3) சாத்தானுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கொஞ்ச அதிகாரத்தைக் கொண்டு அவன் இயற்கையின் சக்திகளை மனுஷருக்கு விரோதமாகப் பயன்படுத்துகிறான்.

(இ) வேலையாட்களும் 3,000 ஒட்டகங்களும்

யோபு 1:17 இவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து: கல்தேயர் மூன்று பவுஞ்சாய் வந்து, ஒட்டகங்கள்மேல்விழுந்து, அவைகளை ஓட்டிக்கொண்டு போனார்கள்; வேலையாட்களையும், பட்டயக்கருக்கினால் வெட்டிப் போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.

(ஈ) வேலையாட்கள், குமாரர்கள், குமாரத்திகள், பண்ணைவீடு

யோபு 1:18 இவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து: உம்முடைய குமாரரும் உம்முடைய குமாரத்திகளும், தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்துத் திராட்சரசம் குடிக்கிறபோது,

யோபு 1:19 வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த வீட்டின் நாலுமூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின் மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள்; நான் ஒருவன்மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.

(2) யோபுவினுடைய நேர்மையின் ஏழு அம்சம் - *(2:9-10; 10:4; 13:14; 16:15; 23:10; 27:3; 31:1)*

யோபு 1:20 அப்பொழுது யோபு எழுந்திருந்து, தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து:

யோபு 1:21 நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.

யோபு 1:22 இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை.

"யோபு எழுந்திருந்து" - யோபுவின் குமாரரும், குமாரத்திகளும் மரித்துப் போனார்கள். அவனுடைய ஆடுமாடுகளெல்லாம் அழிந்து போயிற்று (யோபு 1:14) இவ்வளவு காரியம் நடைபெற்ற பின்பும், யோபு கர்த்தரைத் தூஷிக்கவில்லை. சாத்தானுடைய எண்ணமும், எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை. யோபு எழுந்திருந்து, கர்த்தரைத் தூஷிப்பதற்குப் பதிலாக அவரைத் துதிக்கிறான். (யோபு 1:11,20-22).

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

துன்ப வேளையில் யோபுவின் செயல்கள்

1. யோபு எழுந்திருந்திருக்கிறான்.

2. துக்கத்திற்கு அடையாளமாகத் தன் சால்வையைக் கிழிக்கிறான்.

3. துக்கத்திற்கு அடையாளமாகத் தன் தலையைச் சிரைத்துக் கொள்கிறான். (லேவி 21:5; எரே 7:29; எரே 16:6; மீகா 1:16)

4. தரையிலே விழுந்து பணிகிறான்.

5. கர்த்தர் தனக்கு எல்லாவற்றையும் கொடுத்தார் என்று கூறி அவரைத் துதிக்கிறான்.

6. நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன் என்று அறிவிக்கிறான். (யோபு 1:21).

7. கர்த்தருக்குக் கொடுக்கவும், எடுக்கவும் உரிமை உண்டு என்று அங்கிகரிக்கிறான்.

8. கர்த்தருடைய நாமத்தை ஸ்தோத்திரிக்கிறான்.

9. இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ் செய்யவுமில்லை. (யோபு 1:22).

10. தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை.

யோபுவின் தவறு

1. கர்த்தர் தனக்குக் கொடுத்ததை எடுத்துப் போட்டார் என்று கூறுகிறான். (யோபு 1:21)

2. தேவன் கையில் நாம் தீமையைப் பெற வேண்டுமென்று அறிவிக்கிறான். (யோபு 2:10)

மனுஷர் தங்களுக்கு வியாதி, துன்பம், உபத்திரவம் ஆகியவை வரும்போது, இவற்றிற்கெல்லாம் கர்த்தரே காரணமென்று நினைக்கிறார்கள். சாத்தானுக்கும், தங்கள் துன்பத்திற்கும் தொடர்பு இருப்பதாக இவர்கள் நினைப்பதில்லை. யோபுவும் மற்ற ஜனங்களைப் போலவே நினைக்கிறான். மனுஷர் பாடுகளை அனுபவிப்பது கர்த்தருடைய சித்தம் என்றுகூட சிலர் அறிவிக்கிறார்கள். விசுவாசிகளுக்கு சோதனைகளும், உபத்திரவங்களும் வருவது மெய்தான். ஆனால் இரட்சிக்கப்படுவதற்குச் சோதனை வரவேண்டுமென்னும் அவசியம் எதுவுமில்லை. பாடுகளை அனுபவித்தால்தான் ஒரு நபரை இரட்சிக்க முடியும் என்பது தேவனுடைய சித்தமுமல்ல.

எகிப்து தேசத்தில் யோசேப்பு பல சோதனைகள் வழியாகக் கடந்து சென்றான். (ஆதி 39-41) ஸ்தேவானுக்கு யூதர்கள் மூலமாக உபத்திரவம் உண்டாயிற்று. (அப் 7) அப்போஸ்தலர் பவுல் பசியிலும், நிர்வாணத்திலும், காவலிலிலும், கப்பற் சேதத்திலும், துன்பங்களை அனுபவித்தார். (2கொரி 11) இந்தப் பாடுகளுக்கெல்லாம் கர்த்தர் காரணமல்ல. தம்முடைய பிள்ளைகள் பாடுகள் வழியாகச் செல்லும்பொழுது கர்த்தர் அவர்களுக்கு அந்த உபத்திரவங்களைத் தாங்கிக் கொள்ளும் பெலனைத் தருகிறார். சாத்தானுடைய அந்தகாரச் சக்திகளை மேற்கொள்ளும் வல்லமையைக் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அருளுகிறார்.

கர்த்தர் நமக்கு ஒரு பாடத்தை எப்படி வேண்டுமானாலும் கற்பிக்கலாம். நமக்கு ஒரு உபத்திரவத்தை அனுப்பித்தான் நமக்குப் பாடம் கற்பிக்க முடியும் என்னும் நியதி எதுவுமில்லை. நமக்குப் பாடுகளும், உபத்திரவங்களும் வரும்போது, கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்திருந்து, அதற்கான காரணங்களைத் தியானித்துப் பார்க்க வேண்டும். கர்த்தரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு நமக்கு வியாதியும், துன்பமும், தரித்திரமும், விபத்துக்களும் வரவேண்டும் என்னும் அவசியமில்லை. நாம் இருக்கும் நிலையிலேயே கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் தியானித்து, அவருடைய வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

யோபு, ஆசா, எசேக்கியா ஆகியோரைப் போல நாமும் பாடுகளை அனுபவிக்க வேண்டுமென்று ஒருசிலர் கூறுகிறார்கள். அது அவசியமல்ல. அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை வாசித்து, தியானித்துப் பார்த்து, நம்மால் கர்த்தரைத் துதிக்க முடியும்.

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

நம்முடைய வாழ்வில் நாம் தேவையில்லாமல் பல பாடுகளை அனுபவித்துக் கொண்டு வருகிறோம். கர்த்தர் அவற்றை நமக்குக் கொடுக்காமலேயே அவை கர்த்தர் மூலமாகத்தான் நமக்கு வந்திருக்கிறது என்று அங்கலாய்க்கிறோம். அப்படிப்பட்ட தேவையில்லாத பாடுகளில் சில.

1. பாவத்திலிருந்து நம்மை முற்றிலும் சுத்திகரிப்பதற்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்தார். ஆகையினால் பாவத்தின் மூலமாக வரும் பாடுகள் நமக்குத் தேவையற்றவை. (மத் 1:21,மத் 26:28; 2கொரி 5:17-21; ரோமர் 1:21-32; 1கொரி 6:9-11; கலா 5:5,19-21; 1பேதுரு 4:15; 1யோவான் 1:7-9; 1யோவான்2:29; 1யோவான்3:8-10; 1யோவான் 5:1-4,18).

2. மனுஷருடைய சரீரங்களிலிருந்து வியாதிகளை அகற்றுவதற்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தார். ஆகையினால், வியாதிகள் மூலமாக வரும் பாடுகள் நமக்குத் தேவையற்றவை.(ஏசா 53,மத் 8:16- 17; யோவான் 10:10; அப் 10:38; யாக் 5:14-16; 1பேதுரு 2:24). வியாதியிலிருந்து கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். (சங் 34:9-10; சங் 91:1-12) வியாதியில் இருப்பவர்களைக் குணப்படுத்தும் வல்லமைகளையும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கிறார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; லூக்கா 24:49; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; 2கொரி 12; யாக் 5:14-16).

3. வியாபாரத்திலும், பொருளாதாரத்திலும் தோல்விகள். (சங் 1:3-4; சங் 23:1-6; சங் 34:9-10; சங் 37:1- 8; சங் 84:11)

4. தவறான தீய பழக்கவழக்கங்கள். (ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13; 1கொரி 6:9-11; 2கொரி 5:17-21; கலா 5:16-26; கொலோ 3:5-10; தீத்து 2:11-13; எபி 4:14-16; எபி 7:25; 1யோவான் 1:7-9; 1யோவான் 2:29; 1யோவான்3:8-10; 1யோவான் 5:1-5,18).

5. ஆவிக்குரிய வல்லமையிலும், வரங்களிலும் குறைவுபடுதல். (மத் 17:20; மாற்கு 9:23; மாற்கு 16:15-20; லூக்கா 24:49; யோவான் 14:12-15; அப் 1:4-8; அப் 2:38-39; 2கொரி 12).

6. ஜெபிக்காமல் இருப்பது. (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16;யோவான்16:23- 26; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான்3:21-24,1யோவான் 5:14-16).

மனுஷன் தேவையில்லாமல் பாடுகளை அனுபவிக்க வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமல்ல. "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேதுரு 1:3-4) "தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது" (2கொரி 1:20).

யாக்கோபு யோபுவை ஓர் எடுத்துக்காட்டாகக் கூறியிருக்கிறார். "யோபுவின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டீர்கள். கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்" (யாக் 5:11) யாக்கோபுயோபுவை பலவீனமானவனாகவோ, உதவியற்றவனாகவோ, அவிசுவாசியாகவோ, கலகம்பண்ணுகிறவனாகவோ கர்த்தருடைய நன்மையைக் குறித்து அறியாதவனாகவோ வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை. கர்த்தருக்குப் பொறுமையோடு காத்திருக்கும் போது நமக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடமாட்டார்.

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

சொஸ்தமாக்குவேன் என்று வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவர். இவற்றையெல்லாம்வெளிப்படுத்துவதற்காகவே யாக்கோபு யோபுவைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். (யாக் 5:13-18). குணமாக்கப்பட்டவனுக்கு ஓர் எடுத்துக் காட்டாகவே யாக்கோபு யோபுவைப் பற்றிக் கூறியிருக்கிறாரேயல்லாமல் வியாதியினால் செத்துப்போனவனுக்கு எடுத்துக்காட்டாக யோபுவைப் பற்றிக் கூறவில்லை.

முடிவில் கர்த்தர் யோபுவை அதிகமாக ஆசீர்வதிக்கிறார். சோதிக்கப்படுவதற்கு முன்பாக இருந்த ஆசீர்வாதங்களைவிட, இப்போது கர்த்தர் யோபுவிற்கு அதிக ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் நமக்கும் உரியது. யோபுவிக்கு வந்த பாடுகள் கர்த்தரிடத்திலிருந்து வரவில்லை. சாத்தானிடத்திலிருந்தே வந்திருக்கிறது. (யோபு 1:6-19; யோபு 2:1-7). கர்த்தர் யோபுவை அவனுடைய பாடுகளிலிருந்து இரட்சித்திருக்கிறார். (யோபு 42:1-10). சாத்தானால் கட்டப்பட்டிருக்கிறவர்களை விடுவிப்பதற்காகவே இயேசு கிறிஸ்து வந்தார். கர்த்தர் யாரையும் கட்டி ஒடுக்குவதில்லை. நமக்குத் துன்பங்கள் வரும்போது, கர்த்தரைத் தூஷிக்கக்கூடாது. கர்த்தர் நம்முடைய மீட்பராக இருக்கிறார். நம்முடைய துன்பங்களிலிருந்து நம்மை மீட்குமாறு கர்த்தரிடத்தில் மனத்தாழ்மையோடு விண்ணப்பம் பண்ண வேண்டும். (மத் 8:17; லூக்கா 13:16; யோவான் 10:10; அப் 10:38; 1பேதுரு 2:24). சாத்தானின் கிரியைகளுக்காகக் கர்த்தரைத் துதிக்கக்கூடாது. அதேசமயத்தில் சாத்தானின் கிரியைகளுக்காகக் கர்த்தரைத் தூஷிக்கவும் கூடாது.

யோபு தேவனுக்கு எதிராகக் கூறின குற்றச்சாட்டுக்கள்

1. கர்த்தர் எடுத்தார். (யோபு 1:21). உண்மையில் கர்த்தர் யோபுவுக்குக் கொடுத்ததைச் சாத்தானே எடுத்துக் கொண்டான். (யோபு 1:6-19).
2. தேவன் கையிலே நாம் தீமையையும் பெற வேண்டும். (யோபு 2:10). ஆனால் கர்த்தர் மனுஷனைத் தீமையினால் சோதிப்பதில்லை. (யாக் 1:13-16). "தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்றுதான் நாம் ஜெபிக்க வேண்டுமே தவிர, "தேவனிடத்திலிருந்து எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்று ஜெபிக்கக்கூடாது. (மத் 6:13).
3. தேவனால் வளைந்துகொள்ளப் பட்டிருக்கிறேன். (யோபு 3:23).
4. சர்வ வல்லவரின் அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது. அவைகளின் விஷம் என் உயிரைக் குடிக்கிறது. (யோபு 6:4).
5. தேவனால் உண்டாகும் பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது. (யோபு 6:4).
6. நீர் சொப்பனங்களால் என்னைக் கலங்கப்பண்ணி, தரிசனங்களால் எனக்குத் திகிலுண்டாக்குகிறீர். (யோபு 7:14).
7. நீர் என்னை உமக்கு இலக்காக வைத்திருக்கிறீர். (யோபு 7:20).
8. என் மீறுதலை நீர் மன்னியாமலும், என் அக்கிரமத்தை நீக்காமலும் இருக்கிறீர். (யோபு 7:21).
9. அவர் புசலினால் என்னை முறிக்கிறார்; (யோபு 9:17).
10. முகாந்தரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார். (யோபு 9:17).
11. நான் மூச்சுவிட எனக்கு இடங்கொடாமல் இருக்கிறார். (யோபு 9:18).
12. கசப்பினால் என்னை நிரப்புகிறார். (யோபு 9:18).
13. சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் அவர் அழிக்கிறார். (யோபு 9:22).
14. அவர் குற்றமில்லாதவர்களின் சோதனையைப் பார்த்து நகைக்கிறார். (யோபு 9:23).

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

15. உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது (யோபு 9:24).

16. நியாயாதிபதிகளின் முகத்தை மூடிப் போடுகிறார். (யோபு 9:24).

17. என்னைச் சேற்றுப்பள்ளத்திலே அமிழ்த்துகிறார். (யோபு 9:30-31).

18. என்னை ஒடுக்குகிறார். (யோபு 10:3).

19. துன்மார்க்கரின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறார். (யோபு 10:3).

20. என்னை நிர்மூலமாக்குகிறார். (யோபு 10:7-8)

21. என்னைப் பால்போல் வார்த்து, தயிர்போல் உறையப்பண்ணுகிறார். (யோபு 10:10).

22. நான் பாவஞ்செய்தால், அதை நீர் என்னிடத்தில் விசாரித்து, என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமல் விடீர். (யோபு 10:14).

23. சிங்கத்தைப்போல என்னை வேட்டையாடுகிறீர். (யோபு 10:16).

24. நீர் உம்முடைய சாட்சிகளை எனக்கு விரோதமாய் இரட்டிக்கப்பண்ணுகிறீர்; என்மேல் உம்முடைய கோபத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர் (யோபு 10:17).

25. கள்ளருடைய கூடாரங்களில் செல்வமுண்டு; தேவனைக் கோபப் படுத்துகிறவர்களுக்குச் சாங்கோபாங்கமுண்டு; அவர்கள் கையிலே தேவன் கொண்டுவந்து கொடுக்கிறார். (யோபு 12:6).

26. அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் (யோபு 13:15).

27. நீர் உமது முகத்தை மறைத்து, என்னை உமக்குப் பகைஞனாக எண்ணுகிறீர். (யோபு 13:24).

28. மகா கசப்பான தீர்ப்புகளை என்பேரில் எழுதுகிறீர்; என் சிறுவயதின் அக்கிரமங்களை எனக்குப் பலிக்கப் பண்ணுகிறீர். (யோபு 13:26).

29. என் கால்களைத் தொழுவடித்துப் போடுகிறீர். (யோபு 13:27).

30. மனுஷன் கொண்டிருக்கும் நம்பிக்கையை அழிக்கிறீர். (யோபு 14:19).

31. என்னை இளைத்துப்போகச் செய்கிறீர். (யோபு 16:7).

32. என் கூட்டத்தையெல்லாம் பாழாக்கினீர். (யோபு 16:7).

33. நீர் என்னைச் சுருங்கிப்போகப் பண்ணினீர். (யோபு 16:8).

34. என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது (யோபு 16:9).

35. என் பேரில் பற்கடிக்கிறான் (யோபு 16:9).

36. என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான். (யோபு 16:9).

37. தேவன் என்னை அநியாயக்காரன் வசமாக ஒப்புவித்து, துன்மார்க்கரின் கையில் என்னை அகப்படப்ண்ணினார். (யோபு 16:11).

38. அவர் என்னை நருக்குகிறார். (யோபு 16:12).

39. என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்குகிறார். (யோபு 16:12).

40. என்னைத் தமக்கு இலக்காக நிறுத்துகிறார். (யோபு 16:12).

41. அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். (யோபு 16:13).

42. என் ஈரலைப் பிளந்தார். (யோபு 16:13).

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

43. என்னைத் தப்பவிடாமல் பண்ணினார். (யோபு 16:13).

44. என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார். (யோபு 16:13).

45. நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என்மேல் வரப்பண்ணினார் (யோபு 16:14).

46. பாரக்கிரமசாலியைப்போல என்மேல் பாய்ந்தார். (யோபு 16:14).

47. என் கைகளிலே கொடுமையில்லாதிருக்கையிலும், என் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், அப்படியாயிற்று. (யோபு 16:17).

48. ஜனங்களுக்குள்ளே அவர் என்னைப் பழமொழியாக வைத்தார் (யோபு 17:6).

49. தேவன் என்னைக் கவிழ்த்தார். (யோபு 19:6).

50. தம்முடைய வலையை என்மேல் வீசினார் (யோபு 19:6).

51. கொடுமை என்று கூப்பிடுகிறேன், கேட்பார் ஒருவரும் இல்லை (யோபு 19:7).

52. நியாயவிசாரணை இல்லை. (யோபு 19:7).

53. நான் கடந்து போகக்கூடாதபடிக்கு அவர் என் பாதையை வேலியடைத்தார். (யோபு 19:8).

54. என் வழியை இருளாக்கிவிட்டார். (யோபு 19:8).

55. என்னிலிருந்து என் மகிமையை அவர் உரிந்து கொண்டார். (யோபு 19:9).

56. என் சிரசின் கிரீடத்தை எடுத்துப் போட்டார்.

57. அவர் என்னை நான்குபுறத்திலும் நாசமாக்கினார், (யோபு 19:10).

58. என் நம்பிக்கையை ஒரு செடியைப்போலப் பிடுங்கிப்போட்டார்.

59. அவர் தமது கோபத்தை என் மேல் எரியப்பண்ணினார் (யோபு 19:11).

60. என்னைத் தம்முடைய சத்துருக்களில் ஒருவனாக எண்ணிக்கொள்ளுகிறார்.

61. அவருடைய தண்டுப்படைகள் ஏகமாய் வந்து, எனக்கு விரோதமாய்த் தங்கள் வழியை உயர்த்தி, என் கூடாரத்தைச் சுற்றிப் பாளயமிறங்கினார்கள். (யோபு 19:12).

62. என் சகோதரரை என்னைவிட்டுத் தூரப்படுத்தினார் (யோபு 19:13).

63. எனக்கு அறிமுகமானவர்கள் எனக்கு அந்நியராய்ப் போனார்கள். (யோபு 19:13).

64. தேவன் என் இருதயத்தை இளக்கரிக்கப் பண்ணினார் (யோபு 23:16).

65. என் நியாயத்தைத் தள்ளிவிடுகிறார். (யோபு 27:4).

66. என் ஆத்துமாவைக் கசப்பாக்குகிறார். (யோபு 27:4).

67. நான் கட்டின கட்டை அவர் அவிழ்க்கிறார். (யோபு 30:11).

68. என்னைச் சிறுமைப்படுத்துகிறார். (யோபு 30:11).

69. சேற்றிலே தள்ளப்பட்டேன் (யோபு 30:19).

70. உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறுஉத்தரவு கொடாதிருக்கிறீர் (யோபு 30:20).

71. கெஞ்சிநிற்கிறேன், என்மேல் பாராமுகமாயிருக்கிறீர். (யோபு 30:20).

72. என்மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; (யோபு 30:21).

73. உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர். (யோபு 30:21).

யோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

74. நீர் என்னைத் தூக்கி, என்னைக் காற்றிலே பறக்கவிட்டு, என்னைப் பயத்தினால் உருகிப்போகப் பண்ணுகிறீர். (யோபு 30:22).

இவையனைத்தும் யோபு கர்த்தர் மீது கூறும் குற்றச்சாட்டுக்களாகும். இவை எல்லாமே தவறான குற்றச்சாட்டுக்கள். ஏனெனில் யோபுவிற்கு உண்டான எதையும் கர்த்தர் எடுத்துப்போடவில்லை. சாத்தானே யோபுவிடத்திலிருந்து எடுத்துக் கொண்டான். (யோபு 1:12-19) சாத்தான் யோபுவைப் பயமுறுத்தி, அவனுக்கு பல தீமையான காரியங்களைச் செய்திருக்கிறான். (யோபு 2:6-7; யோபு 42:10). ஆரம்பத்தில் யோபு, தன் உதடுகளால் பாவம் செய்யவில்லை. கர்த்தரைத் தூஷிக்கவில்லை. அதன் பின்பு, யோபுவின் சிநேகிதர் வந்து, அவனுடைய பாடுகளைக் குறித்து விசாரிக்கிறார்கள். தங்களுடைய ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். அதன் பின்பே, யோபு கர்த்தரைத் தூஷிக்கிறான். கர்த்தரைத் தூஷித்ததற்காக இறுதியில் யோபு மனந்திருந்தி மன்னிப்பும் கேட்கிறான். (யோபு 40:1-6; யோபு 42:1-6).

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

3. தேவனும் சாத்தானும்

(1) பரலோகத்தில் தேவ புத்திரரின் ஆராதனை - (1:6)

யோபு 2:1 பின்னொருநாளிலே தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்துநின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான்.

"பின்னொருநாளிலே" - இரண்டாம் முறையாக தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்துநிற்கிறார்கள். (யோபு 1:6)

(2) தேவன் சாத்தானிடம் கேட்டதின் இரண்டு அம்சம் - (1:7-8)

யோபு 2:2 கர்த்தர் சாத்தானைப் பார்த்து: நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார்; சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித் திரிந்து வருகிறேன் என்றான்.

யோபு 2:3 அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: நீ என் தாசனாகிய யோபின் மேல்கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப்போல பூமியில் ஒருவனுமில்லை; முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவின போதிலும், அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்றார்.

"முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும்" - கர்த்தர் சாத்தானுக்கு ஒரு வரையறைக்குட் பட்ட அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். சாத்தானால் யோபுவைச் சோதித்துப் பார்க்க மட்டுமே முடியும். யோபுவை அழிக்கும் அதிகாரம் சாத்தானுக்குக் கொடுக்கப்படவில்லை. (யோபு 1:11; யோபு 2:6). யோபுவுக்குப் பல பிரச்சனைகள் வந்தபோதிலும் அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான்.

(3) சாத்தான் யோபுவைப் பற்றி சொன்னதன் இரண்டு அம்சம் - (1:9-11)

யோபு 2:4 சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன்ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மனுஷன் கொடுத்துவிடுவான்.

யோபு 2:5 ஆனாலும் நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான்.

"சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக" - (யோபு 1:11)

"தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன்ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும்" - இது யோபுவின் காலத்தில் மிகவும் பிரபல்யமாக இருந்த வழக்குச் சொல்லாகும். அக்காலத்தில் விலங்குகளின் தோல்களினால் பண்டமாற்று வியாபாரம் செய்தார்கள். தன்னுடைய ஜீவனுக்கு ஆதாரமாக உணவைப் பெற்றுக் கொள்வதற்கு மனுஷன் தன்னிடத்திலுள்ள எல்லாத் தோல்களையும் கொடுத்துவிடுவான் என்பது இதன் பொருளாகும்.

"அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்" - யோபுவின் சரீரத்தை வாதிப்பதற்குச் சாத்தான் கர்த்தரிடத்தில் அனுமதி கோருகிறான். அவனுடைய மாம்சம் வாதிக்கப்படும்போது, அவன் கர்த்தரைத் தூஷிப்பான் என்பது சாத்தானின் விவாதம். கர்த்தரும் சாத்தானின் வேண்டுகோளை அங்கிகரிக்கிறார். யோபுவைச் சோதிக்கச் சாத்தானுக்கு அனுமதி அளிக்கிறார். இந்தச் சோதனையின் மூலமாக மனுக்குலத்தார் அனைவருக்கும் கர்த்தர் நல்ல உபதேசங்களை அறிவிக்க விரும்புகிறார்.

யோபுவின் புஸ்தகத்திலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய சத்தியங்கள்

1. எல்லா வியாதிகளுக்கும் சாத்தானே காரணம். (யோபு 2:7; அப் 10:38).

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

2. சாத்தான் மனுஷருக்கு உபத்திரவங்களைத் தருகிறான். (யோபு 1:6-22; வெளி 12:9).

3. சாத்தான் நீதிமானைக் குற்றப் படுத்துகிறான். (யோபு 1:6-12; யோபு 2:1-8; வெளி 12:10).

4. கர்த்தர் தனக்கு அனுமதி கொடுத்திருக்கும் அளவிற்கு மட்டுமே சாத்தானால் கர்த்தருடைய பிள்ளைகளைச் சோதிக்க முடியும். (யோபு 1:12; யோபு 2:6; 1கொரி 10:13; 1பேதுரு 5:8-9).

5. தம்முடைய பிள்ளைகளைச் சோதிப்பதற்குக் கர்த்தர் சாத்தானுக்கு அனுமதி தருகிறார். (யோபு 1:6-12; யோபு 2:1-8; லூக்கா 22:31-34; 1பேதுரு 5:8-9).

6. சாத்தானால் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக வந்து நிற்க முடியும். (யோபு 1:6-12; யோபு 2:1-8; வெளி 12:10).

7. சாத்தானுக்கு உதவி புரிய பல பிரதிநிதிகள் இருக்கிறார்கள். (யோபு 1:6-22; 2கொரி 11:13-14; வெளி 12:7-12).

8. சோதனைக் காலத்தில் கர்த்தர் நீதிமானை முழுவதுமாகக் கைவிட்டுவிடமாட்டார். (யோபு 42:1-17; சங் 34:6; சங் 37:23-24; 2கொரி 4:8-12; 2கொரி 6:5-10; யாக் 5:10-11).

9. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அவர்களுடைய வியாதிகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் மீட்டு இரட்சிக்கிறார். (யோபு 42; யாக் 5:10- 11; அப் 10:38; யோவான் 10:10; 2கொரி 10:13).

10. கர்த்தருடைய அனுமதியைப் பெற்று சாத்தான் தேவபிள்ளைகளைச் சோதிக்கிறான். கர்த்தர் அவர்களைக் கைவிடாமல் இரட்சிக்கிறார். (யோபு 42; யாக் 5:10-11; சங் 91:1-12; சங் 103:1-4).

11. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவும், புடமிட்டு சுத்திகரிப்பதற்காகவும் சோதனைகளை அனுமதிக்கிறார். (யோபு 33:14-30).

12. கர்த்தர் மனுஷருக்கு வரும் உபத்திரவங்களுக்கு ஒருபோதும் காரணமானவர் அல்ல. மனுஷர் சாத்தானால் சோதிக்கப்படும் போது, அந்தச் சோதனைகளிலிருந்து அவர்களை மீட்டு இரட்சிப்பதற்குக் கர்த்தர் உதவி புரிகிறார். (யோபு 42; சங் 34:6-19; சங் 37:1-10; எபி 11:6; யாக் 1:5-8).

13. கர்த்தருடைய கிரியைகளுக்காக நாம் அவரை நியாயந்தீர்க்கக்கூடாது. (யோபு 2:10; 1கொரி 13:12).

14. மனுஷர் கர்த்தரோடு ஒத்துப்போவதே அவர் மனுஷரை மீட்கும் வழியாகும். (யோபு 33:14-30; யாக் 4:7; யாக் 5:10-16 1பேதுரு 5:8-9; அப் 10:38).

15. கர்த்தர் எல்லாவற்றிற்கும் பெரியவர். மனுஷரை உபத்திரவப்படுத்தும் எந்த அந்தகாரச் சக்திகளிலிருந்தும் கர்த்தரால் அவர்களை விடுவிக்க முடியும். (யோபு 42; யோவான் 10:10; அப் 10:38; லூக்கா 13:14; சங் 103:1-4).

16. மனுஷன் தன்னுடைய சொந்த பலத்தினால் சாத்தானை ஜெயிக்க முடியாது. (யோபு 1:6-22; யோபு 2:6-10; எபே 6:10-18; 2கொரி 10:4-7; யாக் 4:7; 1பேதுரு 5:8-9; வெளி 12:10-11).

17. மனுஷன் சோதனைக்குள் சிக்கிக் கொள்வதற்கு முன்பாகவே அவன் கர்த்தரை விசுவாசித்து, அவரையே சார்ந்திருக்க வேண்டும். (சங் 91; 2கொரி 10:4-7; எபே 6:10-18; யாக் 4:7; 1பேதுரு 5:8-9).

18. மனுஷர் பாவம் செய்யும் போதெல்லாம் அவனுக்கு வியாதி வரும் என்று நியதி எதுவுமில்லை. (யோபு 1:1-12; யோபு 2:1-10; யோவான் 9:1-3; யாக் 5:14-16).

2 அதிகாரம்

19. மனுஷருக்குத் துன்பம் வரும்போது அவர்களுடைய சிநேகிதர்கள் அவர்களைக் குற்றப்படுத்துவதற்கும், கர்த்தருடைய பராமரிப்பைத் தவறாக வியாக்கியானம் பண்ணுவதற்கும் ஆயத்தமாக இருக்கிறார்கள். (யோபு 4:1-37:24).

20. சாத்தானுடைய தாக்குதல்களைக் கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர் சந்தித்திருக்கிறார்கள். (யோபு 1:1-12; எபே 6:10-18; யோவான் 10:10; யாக் 4:7; 1பேதுரு 5:8-9).

21. மனுஷன் கர்த்தரைச் சார்ந்திருக்கும் போது, பொறுமையாய் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். (ரோமர் 5:1-11; யாக் 5:10-11).

22. மனுஷன் தன்னுடைய உபத்திரவக் காலத்தில் கர்த்தரைத் துதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். (யோபு 1:21; பிலி 4:6).

23. மனுஷனுக்கு உபத்திரவம் வரும்போது, அதற்குக் கர்த்தரே காரணமென்று அவரைக் குற்றப்படுத்துகிறான். (யோபு 42:3).

24. சாத்தான் தன்னுடைய கிரியைகள் மூலமாக மனுஷரை வஞ்சித்து, அவர்களைக் கர்த்தரைத் தூஷிக்க ஏவுகிறான். (வெளி 12:10).

25. சாத்தானின் தாக்குதல்கள் மூலமாக மனுஷனைச் சோதிப்பது கர்த்தருடைய நோக்கமும், திட்டமுமாகும். (1கொரி 10:12-13).

26. சோதனைக்காலங்களில் மனுஷர் கர்த்தருக்கு உண்மையாக இருக்கும் போதும், சாத்தானின் கிரியைகளிலிருந்து அவர் மனுஷரை இரட்சிக்கும்போதும் கர்த்தருக்கு மகிமை உண்டாகிறது. (யோவான் 10:10).

27. ஒரு மனுஷனுக்குச் சோதனை வரும்போது யோபுவைப் போல தன்னுடைய நிலைமையை நியாயப் படுத்துவது மனுஷனுடைய இயல்பாகும். (யோபு 42:1-6).

28. மனுஷருடைய சோதனைக்காலத்தில் யாரையும் குற்றப்படுத்துவதினால் ஒரு பயனுமில்லை. சில சமயங்களில் மனுஷருக்குச் சோதனைகள் வரும் போது அவர்களைத் தாழ்த்துவதற்காக அவர்கள்மீது குற்றம் கூறுவோரைக் கர்த்தர் அனுமதிக்கிறார். (யோபு 42:7-9).

29. மனுஷருடைய சோதனைக் காலங்களில் கர்த்தரைக் குற்றப்படுத்துவதினால் ஒரு பயனும் இல்லை. (யோபு 42:1-6; கலா 6:7-8).

30. மனுஷனுடைய வியாதியிலும், துன்பத்திலும் அவன் கர்த்தரைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். (யோபு 42:1-10; யாக் 5:10-11).

31. நாம் ஜெபிக்க ஆரம்பித்த உடனேயே கர்த்தர் பொதுவாக தம்மை வெளிப்படுத்தி விடுவதில்லை. ஆனாலும் விசுவாசிக்கிறவர்களுக்குக் கர்த்தர் பதில் தருகிறார். (யோபு 40:1-6; யோபு 42:1-6; லூக்கா 18:1-8).

32. மனுஷருக்குச் சோதனை வரும்போது, அவர்கள் தங்களுடைய காரியங்களை நியாயப்படுத்தி பேசுவதினால் அவர்களுக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. (யோபு 40:1-6; சங் 37:1-9; 1பேதுரு 4:12-19).

33. பக்தியுள்ளவர்களும், நீதிமான்களும் முடிவில் ஜெயம் பெறுவார்கள். (யோபு 42:1-17; எபி 10:30-36; 1பேதுரு 4:12-19).

34. நீதிமான்கள்கூட சில சமயங்களில் சோர்ந்துபோய்விடுவார்கள். (யோபு 3).

35. மனுஷருக்குச் சோதனைகள் வரும்போது நாம் அவர்களைக் குற்றப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுக்கு ஆறுதலாகப் பேச வேண்டும். (யோபு 13:1-4; யோபு 16:1-6; யோபு 19:3; யோபு 21:3; மத் 7:1-5; கலா 6:7-8).

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

36. ஐசுவரியமும், கனமும் நித்தியமானதல்ல. (யோபு 29:1-30:31).

37. கர்த்தருடைய பிள்ளைகளுக்குச் சாத்தான் சத்துருவாக இருக்கிறான். (யோபு 1:1-2:12; வெளி 12:10).

38. சோதனைகளினாலும், வியாதிகளினாலும் மனுஷர் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போய்விடக்கூடாது. (யோபு 1:1-2:12; 1கொரி 10:12-13; யாக் 5:10-11; 1பேதுரு 4:12-19).

39. ஒருவருடைய சரீர வியாதி அவருடைய ஆத்துமாவைப் பாதிக்கக்கூடாது. (யோபு 2:1-12).

40. ஒருவர் தன்னுடைய கணவனையோ, மனைவியையோ தன்னைச் சோர்வடையச் செய்யவும், கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போகவும் அனுமதிக்கக்கூடாது. (யோபு 2:1-12; 1கொரி 7:15-17).

41. பெருங்காற்றை உண்டாக்குவதற்குக் கர்த்தர் சில சமயங்களில் சாத்தானுக்கு அனுமதி கொடுக்கிறார். (யோபு 1:6-22).

42. மற்றவருக்கு உதவி புரிவதாக நினைத்து நம்முடைய சொந்தக் கருத்துக்களை வியாக்கியானம் பண்ணக்கூடாது. எப்போதுமே பரிசுத்த ஆவியானவர் ஏவும் சத்தியங்களை வேதவசனங்களின் ஆதாரத்தோடே பேசவேண்டும். (யோபு 42:7-9; 2தீமோ 3:15-17; 2தீமோ 4:1-5).

43. மனுஷருக்கு உபத்திரவம் வரும்போது, யோபுவின் சிநேகிதரைப்போல எப்போதும் அவர்களைத் தொந்தரவு பண்ணுவதற்குப் பதிலாகக் கர்த்தர் அவர்களிடத்தில் கிரியை செய்ய அனுமதிக்க வேண்டும். (யோபு 42:7-9; கலா 6:7-8).

44. துன்பம் வரும்போது கர்த்தரைத் தேட வேண்டும். வந்த துன்பத்திற்குக் கர்த்தரே காரணமென்று அவரைக் குற்றப்படுத்தக் கூடாது. (யோபு 13:15; யாக் 5:10-11).

45. உபத்திரவக்காலங்களில் கர்த்தருடைய கிருபை நமக்குப் போதுமானதாக இருக்கும். (யோபு 19:25-26; யோபு 42:1-17; 2கொரி 12:1-12; எபி 11; யாக் 5:10-11).

46. நமக்கு ஆலோசனை கூறுகிறவர்கள் எப்போதும் சரியானதைக் கூறுவார்கள் என்னும் உத்தரவாதம் இல்லை. (யோபு 42:1-9).

47. மனுஷருக்கு எவ்வளவுதான் துன்பம் வந்து சேர்ந்தாலும், சுயநீதியைத் தேடும் மாய்மாலக்காரர்கள் திருப்தியடைவதில்லை. இவர்கள் துன்பப்படுவோர்மீது ஒருபோதும் இரக்கம் காண்பிப்பதுமில்லை. (யோபு 42:7-9; அப் 7:54-60).

48. தம்முடைய பிள்ளைகளுக்கு எதிராகக் கூறப்படும் தவறான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் குறித்து கர்த்தர் கணக்கு வைத்திருக்கிறார். (யோபு 42:7-9; மத் 12:37).

49. ஒரு மனுஷனுக்குத் துன்பம் வருவதினால் அவன் துன்மார்க்கன் என்று தீர்மானம் பண்ணிவிடக் கூடாது.(யோபு 1:1-2:12; யோபு 42:1-6).

50. தங்களுடைய உபத்திரவத்தில் கர்த்தரை நோக்கி கூப்பிடுகிற அனைவருக்கும் அவர் கிருபையும், இரக்கமும் பெருத்தவராயிருக்கிறார். (சங் 103:1-19; ரோமர் 8:32; யாக் 5:10-11).

(4) யோபுவைச் சோதிக்க தேவன் சாத்தானுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அனுமதி வழங்குகிறார் - (1:12)

யோபு 2:6 அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ, அவன் உன் கையிலிருக்கிறான்; ஆகிலும் அவன் பிராணனைமாத்திரம் தப்பவிடு என்றார்.

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

4. சாத்தானும் யோபுவும் - பருக்கள் - (7:5,13,15; 16:8; 19:17; 30:17)

யோபு 2:7 அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான்.

யோபு 2:8 அவன் ஒரு ஓட்டை எடுத்து, தன்னைச் சுறண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான்.

பருக்கள் **(boils) - שְׁחִין - shekh-een' - 7822**

ஆ.பெ.சொ. - கொப்புளம், புண், பருபிளவை **(to burn; inflammation) boil** (யோபு 2:7; யாத் 9:9-11; லேவி 13:18,19,20,23; 2இராஜா 20:7; ஏசா 38:21); **botch** (உபா 28:27,35).

மனுஷருக்கு வரும் வியாதி சாத்தானுடைய கிரியை

1. சாத்தான் யோபுவின் உள்ளங்கால் தொடங்கி, அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். (யோபு 2:7)
2. கர்த்தர் யோபுவின் சிறையிருப்பை மாற்றினார். (யோபு 42:10)
3. "பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனை" இயேசு குணப்படுத்தினார். (மத் 9:32-33)
4. "பிசாசு பிடித்து குருடும், ஊமையுமான ஒருவனை" இயேசு சொஸ்தமாக்கினார். (மத் 12:22)
5. "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால்......" (மத் 12:26-28)
6. "என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்". (மத் 15:22)
7. "இயேசு பிசாசை அதட்டினார்" (மத் 17:18)
8. "ஜெபாலயத்திலே அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்". (லூக்கா 4:33)
9. "பிசாசு அவனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி" (லூக்கா 4:35)
10. "பிசாசு அவனைக் கீழே தள்ளி அலைக்கழித்தது" (லூக்கா 9:42)
11. இயேசு ஊமையாயிருந்த ஒரு பிசாசைத் துரத்தினார். (லூக்கா 11:14)
12. பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ (லூக்கா 13:11-16)
13. திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். (யோவான் 10:10)
14. இயேசு கிறிஸ்து பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித்திரிந்தார். (அப் 10:38)
15. "சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்குத் திரும்பும்படிக்கு அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு" கர்த்தர் பவுலை அழைத்திருக்கிறார். (அப் 26:18)
16. அவனைச் சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு செய்கிறேன். (1கொரி 5:5)
17. "அவர் பன்னிருவரையும் அழைத்து அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து". (மாற்கு 6:7-13)
18. ஆண்டவரே உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும், எங்களுக்குக் கீழ்ப்படிகிறது. (லூக்கா 10:9,17)

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

19. மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு. (எபி 2:14)

20. பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்.(1யோவான் 3:8).

யோபுவின் பாடுகள்

1. சாத்தான் யோபுவைக் கொடிய பருக்களால் வாதித்தான். (யோபு 2:7)

2. தன்னுடைய உபத்திரவத்தில் யோபு தன் பிறந்தநாளை சபித்தான். (யோபு 3:1-13,20)

3. தன் ஆத்துமத்தின் கசப்பினால் அங்கலாய்க்கிறான். (யோபு 3:20; யோபு 7:11; யோபு 10:1)

4. தன் மரணத்திற்கு ஆசையாய் காத்திருக்கிறான். (யோபு 3:21-23; யோபு 7:15)

5. யோபுவின் கதறுதல் வெள்ளம்போல புரண்டுபோகிறது. (யோபு 3:24)

6. யோபுவின் சஞ்சலம் கடற்கரை மணலைப் பார்க்கிலும் பாரமாயிருக்கிறது. (யோபு 6:1-3)

7. விஷம் யோபுவின் உயிரைக் குடிக்கிறது. (யோபு 6:4)

8. தேவன் தன்னை நொறுக்கி, துண்டித்துப் போடவேண்டுமென்று விரும்புகிறான். (யோபு 6:8-9)

9. தன்னைத் தப்பவிடாத நோவிலே மரத்திருப்பதாகக் கூறுகிறான். (யோபு 6:10)

10. தன்னுடைய சிநேகிதரிடத்தில் யோபுவிற்குத் தயவு கிடைக்கவில்லை. (யோபு 6:14)

11. யோபுவின் சிநேகிதர் அவனை மோசம் பண்ணுகிறார்கள். (யோபு 6:15)

12. மாயையான மாதங்கள் யோபுவின் சுதந்தரமாயிற்று. (யோபு 7:3)

13. இரவு முழுவதும் தூக்கம் வராமல் அரண்டுபுரளுகிறான். (யோபு 7:4)

14. யோபுவின் மாம்சம் பூச்சிகளினாலும், புழுதியினாலும் மூடப்பட்டிருக்கிறது. (யோபு 7:5)

15. யோபுவின் தோல் வெடித்து அருவருப்பாயிற்று.

16. யோபுவின் நாட்கள் நம்பிக்கையில்லாமல் தீவிரமாய் ஓடுகிறது. (யோபு 7:6)

17. தன் ஆவியின் வேதனையினால் பேசி ஆத்துமத்தின் கசப்பினால் அங்கலாய்க்கிறான். (யோபு 7:11)

18. சொப்பனங்களில் கலங்கிப்போய் இருக்கிறான். தரிசனங்களில் அவனுக்குத் திகில் உண்டாயிற்று. (யோபு 7:14)

19. யோபுவின் ஆத்துமா மரணத்தை விரும்புகிறது. (யோபு 7:15)

20. யோபு உயிரோடு இருக்க விரும்பவில்லை. (யோபு 7:16)

21. தனக்குத்தானே பாரமாயிருக்கிறான். (யோபு 7:20)

22. முகாந்தரமில்லாமல் அவனுக்கு அநேகக் காயங்கள் உண்டாயிற்று. (யோபு 9:17)

23. யோபுவால் மூச்சு விட முடியவில்லை. (யோபு 9:18)

24. தன் வருத்தங்களைப் பற்றிப் பயப்படுகிறான். (யோபு 9:28)

25. அவன் ஆத்துமா ஜீவனை அரோசிக்கிறது. (யோபு 10:1)

26. யோபுவின் சிநேகிதர் அவனை நிந்திக்கிறார்கள், பரியாசம் பண்ணுகிறார்கள். (யோபு 12:4)

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

27. தன் பற்களினால் தன் சதையைப் பிடுங்குகிறான். (யோபு 13:14)

28. வேதனையில் அவனுடைய நாவைக் கத்தாமல் இருக்க அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. (யோபு 13:19)

29. அவனுடைய மாம்சம் அழுகிப்போகிற வஸ்து போலவும், பொட்டரித்த வஸ்திரம் போலவும் இருக்கிறது. (யோபு 13:28)

30. யோபுவின் சிநேகிதர் அவனுக்கு விரோதமாக வார்த்தைகளைக் கோர்த்து தங்கள் தலையைத் துலுக்குகிறார்கள். (யோபு 16:4)

31. யோபுவின் மாம்சம் சுருங்கிப்போயிற்று. (யோபு 16:8)

32. அவனுடைய பிச்சு தரையில் ஊற்றப் பட்டிருக்கிறது. (யோபு 16:13)

33. அழுகிறதினால் அவன் முகம் அழுக்கடைந்தது. (யோபு 16:16)

34. மரண இருள் அவன் கண் இமைகள்மேல் உண்டாயிருக்கிறது. (யோபு 16:16)

35. யோபுவின் சுவாசம் ஒழிகிறது. (யோபு 17:1)

36. யோபுவின் சிநேகிதர் பத்து தரம் அவனை நிந்தித்தார்கள். (யோபு 19:3)

37. அவர்கள் அவனுக்குக் கடின முகம் காண்பித்தார்கள். (யோபு 19:3)

38. கொடுமையில் கூப்பிடுகிறான். கர்த்தர் அவனுக்குச் செவி கொடுக்கவில்லை என்னும் உணர்வு அவனுக்குள் உண்டாயிற்று. (யோபு 19:7)

39. அவனுக்கு நியாயவிசாரணை இல்லை. (யோபு 19:7)

40. யோபுவின் மகிமை உரிந்துபோயிற்று. (யோபு 19:9)

41. அவன் சிரசின் கிரீடம் எடுத்துப் போடப்பட்டிருக்கிறது. (யோபு 19:9)

42. யோபு கர்த்தருடைய சத்துருக்களில் ஒருவனாக எண்ணப்படுகிறான். (யோபு 19:11)

43. யோபுவின் சகோதரர் அவனை விட்டுத் தூரப்போனார்கள். (யோபு 19:13)

44. யோபுவின் பந்துஜனங்கள் அவனை விட்டு விலகிப்போனார்கள். (யோபு 19:14)

45. அவனுடைய சிநேகிதர் அவனை மறந்து விட்டார்கள். (யோபு 19:14)

46. அவனுடைய வீட்டு ஜனங்கள் அவனை அந்நியனாக எண்ணுகிறார்கள். (யோபு 19:15-16)

47. யோபுவின் சுவாசம் அவன் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது. (யோபு 19:17)

48. சிறுபிள்ளைகளும் அவனை அசட்டை பண்ணுகிறார்கள். (யோபு 19:18)

49. அவனுடைய பிராணசிநேகிதர்கள் எல்லாரும் அவனை வெறுக்கிறார்கள். (யோபு 19:19)

50. அவனுடைய எலும்புகள் மாம்சத்தில் வெளியே தெரிகிறது. (யோபு 19:20)

51. ஒருவனும் யோபுவுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை. (யோபு 19:21)

52. யோபுவின் சிநேகிதர் அவனைத் துன்பப்படுத்துகிறார்கள். (யோபு 19:22)

53. யோபுவின் நடுக்கம் அவன் மாம்சத்தைப் பிடிக்கிறது. (யோபு 21:6)

54. யோபுவின் அங்கலாய்ப்பு முரண்டுத்தனமாக எண்ணப்படுகிறது. (யோபு 23:2)

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

55. அவன் தவிப்பைப் பார்க்கிலும் அவனுடைய வாதை கடினமானது. (யோபு 23:2)

56. யோபு கர்த்தருக்குப் பயப்படுகிறான். (யோபு 23:15)

57. யோபுவின் குடல்கள் கொதித்து அமராதிருக்கிறது. (யோபு 30:27)

58. யோபுவின் தோல் கறுத்துப்போயிற்று. (யோபு 30:30)

59. அவனுடைய எலும்புகள் உஷ்ணத்தினால் காய்ந்து போயிற்று. (யோபு 30:30)

60. அவனுடைய சுரமண்டலம் புலம்பலும், அழுகிறவர்களின் ஓலமுமாயிற்று. (யோபு 30:31)

III. யோபுவின் மனைவி - தனது நேர்மையை யோபு கடைப் பிடிக்கிறான் - (19:17; 1:20)

யோபு 2:9 அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும் என்றாள்.

யோபு 2:10 அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை.

"தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும்" - தன்னுடைய குமாரர்கள் தேவனைத் தங்கள் இருதயத்தில் தூஷித்திருப்பார்களோ என்று நினைத்து, யோபு அவர்களுக்காகத் தொடர்ந்து பலிகளைச் செலுத்தி வந்தான். (யோபு 1:5). ஆனால் இப்போதோ அவனுடைய மனைவி தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும் என்று யோபுவுக்கு ஆலோசனை கூறுகிறாள். இம்மையில் நம்முடைய ஜீவனுக்கேற்ப மறுமையில் நமக்கு வெகுமதிகள் கொடுக்கப்படும். இம்மைக்குரிய காரியங்களை மட்டும் நினைத்து, நாம் சோர்வடைந்துவிடக் கூடாது. யோபு தன் மனைவியைப் பார்த்து "நீ பைத்தியக்காரி பேசுகிறதுபோல பேசுகிறாய்" என்று ஞானமாகப் பதில் கூறுகிறான்.

யோபுவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் உபதேசங்கள்

யோபு ஒரு நீதிமான். தேவனிடத்தில் பக்தியாக ஜீவிக்கிறவன். முற்பிதாக்களின் காலத்தில் அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கேற்ப யோபு கர்த்தரைச் சேவிக்கிறான். தன்னுடைய காலம் வரையிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஆராதனை பழக்கவழக்கங்களையும், தேவனுடைய வெளிப்பாடுகளையும் யோபு நன்றாக அறிந்து வைத்திருந்தான். இவன் யாக்கோபுவின் பேரன். நோவா மரித்து 278 வருஷங்களுக்குப் பின்பு, யோபு பிறந்திருக்கிறான். சேம் மரித்து, 125 வருஷங்களுக்குப் பின்பு யோபு பிறந்திருக்கிறான். இந்தக் கால அளவை நிர்ணயிப்பதற்குக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்கள் உதவி புரியும்.

1. ஜலப்பிரளயத்திற்குப் பின்பு சேம் 502 வருஷங்கள் உயிரோடு இருந்தான். (ஆதி 11:10-11) ஆபிரகாமின் காலத்தில் சேம் 150 வருஷங்கள் உயிரோடு இருந்தான்.

2. ஆபிரகாமிற்கு 100 வயதானபோது, ஈசாக்கு பிறந்தான். (ஆதி 21:5) ஈசாக்கின் காலத்தில் சேம் 50 வருஷங்கள் உயிரோடு இருந்திருக்கிறான்.

3. ஈசாக்கிற்கு 60 வயதானபோது யாக்கோபு பிறந்தான். (ஆதி 25:26) இது சேம் மரித்து 10 வருஷங்களுக்குப் பின்பும், ஆபிரகாம் மரிப்பதற்கு 15 வருஷங்களுக்கு முன்பும் நடைபெற்ற சம்பவமாகும்.

4. யாக்கோபிற்கு 85 வயதானபோது இசக்கார் பிறந்தான்.

5. இசக்காருக்கு 30 வயதானபோது யோபு பிறந்தான். (ஆதி 46:13)

6. யோபுவுக்கு சோதனைகள் வந்தபோது அவனுடைய வயது சுமார் 70 ஆகும்.

2 அதிகாரம்

இந்த வரலாற்றைக் கவனிக்கும் போது யோபுவின் காலம் ஜலப்பிரளயத்திலிருந்து 697 வருஷங்களுக்குப் பின்பு ஆரம்பமாகிறது. ஆகையினால் சேம், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, ஆகியோரின் ஆவிக்குரிய அனுபவங்களையும், அவர்களுடைய உபதேசங்களையும் யோபு தெரிந்து வைப்பதற்கு சாத்தியமிருக்கிறது. யோபுவின் புஸ்தகத்தில் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் மிகவும் முக்கியமான உபதேசங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

யோபுவின் புஸ்தகத்தில் தேவனைப் பற்றிய உபதேசம்

ஒன்றாகிய மெய்த்தேவனையே யோபு ஆராதித்தான். சர்வ வல்ல அந்தத் தேவன் யோபுவின் புஸ்தகத்தில் "எலோஹிம்" **"Elohim"** என்று அழைக்கப்பட்டிருக்கிறார். இந்தப் பெயர் தேவத்துவத்தில் இடம் பெற்றிருக்கும் திரித்துவ தேவனை விளக்குகிறது.

யோபு புஸ்தகத்தில் எலோஹிம் என்னும் பெயர் 17 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. (யோபு 1:1-2:10; யோபு 5:8; யோபு 20:29; யோபு 28:23; யோபு 32:2; யோபு 34:9; யோபு 38:7); சர்வ வல்லவர் (**the Strong One, the Almighty**) என்னும் பொருள்படும் "எல்" 'ஏஎல் என்னும் பெயர் 55 தடவைகள் பயன்படுத்தப் பட்டுள்ளது. (யோபு 5:8; யோபு 8:3,5,13,20; யோபு 9:2; யோபு 12:6; யோபு 13:3,7-8; யோபு 15:4,11,13,25; யோபு 16:11; யோபு 18:21; யோபு 19:22; யோபு 20:15,29; யோபு 21:14,22; யோபு 22:2,13,17; யோபு 23:16; யோபு 25:4; யோபு 27:2,9,11,13; யோபு 31:14, 23,28; யோபு 32:13; யோபு 33:4,6,14,29; யோபு 34:5,10,12,23,31,37; யோபு 35:2,13; யோபு 36:5,22,26; யோபு 37:5,10,14; யோபு 38:41; யோபு 40:9,19)

மேலும் யோபுவின் புஸ்தகத்தில் ஜீவனுள்ள தேவன் (**the Living God**) என்று பொருள்படும் "எலோவா" **'Elowah** என்னும் பெயர் 41 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. (யோபு 3:4,23; யோபு 4:9,17; யோபு 5:17; யோபு 6:4,8-9; யோபு 9:13; யோபு 10:2; யோபு 11:5-7; யோபு 12:4,6; யோபு 15:8; யோபு 16:20-21; யோபு 19:6,21,26; யோபு 21:9,19; யோபு 22:12,26; யோபு 24:12; யோபு 27:3,8,10; யோபு 29:2,4; யோபு 31:2,6; யோபு 33:12,26; யோபு 35:10; யோபு 36:2; யோபு 37:15,22; யோபு 39:17; யோபு 40:2) யோபுவின் காலத்தில் பலர் விக்கிரகாராதனை செய்தார்கள். ஜீவனில்லாத அந்த விக்கிரகங்களிலிருந்து ஜீவனுள்ள தேவனை வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக யோபுவின் புஸ்தகத்தில் "எலோவா" என்னும் பெயர் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கர்த்தருக்கு யோபுவின் புஸ்தகத்தில் "யெகோவா" **(Jehovah)** என்னும் பெயர் 32 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (யோபு 1:6- 9,12,21; யோபு 2:1-4,6-7; யோபு 12:9; யோபு 38:1; யோபு 40:1,3,6; யோபு 42:1,7,9-12) இந்தப் பெயர்கள் தவிர "அதோனாய்" **'Adonay** என்னும் பெயரும் ஒரு தடவை பயன்படுத்தப் பட்டுள்ளது. (யோபு 28:28).

தேவன் (God) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.-தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர்.

வல்லமை (Almighty) - אֵל - ale - 410

ஆ. பெ. சொல் - வல்லமை

தேவன் (God) - אֱלוֹהַּ - el-o'-ah - 433

ஆ.பெ.சொ.-தேவன்

கர்த்தர் (Lord) - אֲדֹנָי - ad-o-noy' - 136

ஆ.பெ.சொ.-கர்த்தர், ஆண்டவர்

கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார்

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

யோபுவின் புஸ்தகத்தில் தேவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியம்

1. சர்வ வல்லவர். (யோபு 5:9; யோபு 6:4; யோபு 9:5).
2. ஞானமுள்ளவர். (யோபு 12:13; யோபு 24:1).
3. அநந்தமானவர் (யோபு 11:7).
4. அதரிசனமானவர் (யோபு 9:11).
5. சர்வ ஆளுநர். (யோபு 5:9-13; யோபு 9:5-10).
6. சர்வ சிருஷ்டிகர் (யோபு 4:17; யோபு 10:8-11; யோபு 25:10; யோபு 38:4-11).
7. பரிசுத்தர். (யோபு 15:15-16; யோபு 25:5-6).
8. நித்தியமானவர். (யோபு 10:5).
9. ஆவியானவர். (யோபு 9:32; யோபு 10:4).
10. தங்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்புகிறவர்களை மன்னிக்கிறவர், இரக்கமுள்ளவர், கிருபையுள்ளவர். (யோபு 5:17-27; யோபு 11:13-19; யோபு 22:21-23; யோபு 33:23-28).
11. ஜெபங்களைக் கேட்டு அதற்குப் பதில் தருகிறவர். (யோபு 12:4; யோபு 22:27; யோபு 33:23-28).
12. ஜீவனையும், மரணத்தையும் ஆளுகிறவர். (யோபு 4:9; யோபு 10:12; யோபு 33:4).
13. மனுஷனுக்குத் தம்முடைய வெளிப்பாட்டின் மூலமாகத் தமது சித்தத்தை அறிவிக்கிறவர். (யோபு 4:12-17; யோபு 33:14-17).
14. மனுஷரிடமிருந்தும், தேவ தூதரிடமிருந்தும் ஆராதனையை ஏற்றுக் கொள்கிறவர்.(யோபு 1:5-6,20; யோபு 2:1-2; யோபு 38:4-7).
15. மனுஷரைப் பாதுகாக்கிறவர். (யோபு 1:12; யோபு 2:6; யோபு 7:20).
16. எல்லோரையும் நியாயம் விசாரிக்கிறவர். (யோபு 9:15; யோபு 23:7).
17. எல்லோரையும் ஆளுகை செய்கிறவர். (யோபு 12:10).
18. இரட்சிக்கிறவர். (யோபு 19:25).
19. ஆள்தத்துவப் பண்புடையவர். (யோபு 13:8).
20. பல தனிப்பட்ட கிரியைகளுக்குக் காரணகர்த்தர். (யோபு 12:9-25; யோபு 13:10-17; யோபு 15:15; யோபு 22:14; யோபு 37:5-24; யோபு 38:1-41:34).
21. மனுஷருக்கு பிரமாணங்களையும், வார்த்தைகளையும் தருகிறவர். (யோபு 22:22).
22. கர்த்தருக்கு எதிராக மனுஷரால் பாவம் செய்ய முடியும். (யோபு 1:5).
23. தம்முடைய ஜனங்களைச் சோதிப்பதற்கு அனுமதிக்கிறார். (யோபு 1:12; யோபு 2:5-8).
24. பரலோகத்தில் வாசம் பண்ணுகிறார். (யோபு 3:4; யோபு 16:19; யோபு 22:12-14).
25. மனுஷரைச் சிட்சிக்கிறார். (யோபு 5:17).
26. தமது பரிசுத்த ஆவியினால் சிருஷ்டிக்கிறார். (யோபு 33:4).
27. மனுஷரிடத்தில் நீடிய பொறுமையோடு இருக்கிறார். (யோபு 33:14-29).
28. வீணாக எதையும் கவனித்துக் கேட்கமாட்டார். (யோபு 35:13).
29. சிருஷ்டிகளைக் கட்டுப்படுத்துகிறார். (யோபு 37:5-38:41).
30. பூமிக்கு முன்பாகவே வானத்தைச் சிருஷ்டித்தார். (யோபு 38:4-7).
31. மனுஷனை ஏவுகிறார். (யோபு 32:8).

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

32. மனுஷனைவிட பெரியவர். (யோபு 33:12).

33. மனுஷரிடத்தில் பேசுகிறவர். (யோபு 33:14-29).

34. மனுஷனுடைய வழிகளின்படி அவனை விசாரிக்கிறார். (யோபு 34:11).

35. மனுஷனுடைய ஜீவனையும், வழிகளையும் காண்கிறார். (யோபு 34:21).

யோபுவின் புஸ்தகத்தில் தேவதூதரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியம்

1. தேவதூதர்கள் ஆள்தத்துவப் பண்புடையவர்கள். (யோபு 1:6; யோபு 2:1; யோபு 4:18; யோபு 38:4-7)

2. கர்த்தரை முறையாகவும், ஒழுங்காகவும் ஆராதிக்கிறார்கள். (யோபு 1:6; யோபு 2:1)

3. தூதர்களில் நல்லவர், தீயவர் என இரு பிரிவினர் உள்ளனர். (யோபு 1:16-19; யோபு 2:1-8; யோபு 4:18)

4. மனுஷனைப் போல சில தூதர்கள் விழுந்துபோனவர்கள். (யோபு 4:18)

5. மனுஷனும், பூமியும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாக தூதர்கள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறார்கள். (யோபு 38:4-7)

6. இவர்கள் தேவபுத்திரர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (யோபு 1:6; யோபு 2:1; யோபு 38:4-7)

7. இவர்கள் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறார்கள். (யோபு 1:6; யோபு 2:1)

8. இவர்கள் தேவனைவிடத் தாழ்ந்தவர்கள். (யோபு 1:6; யோபு 2:1; யோபு 38:4-7)

யோபுவின் புஸ்தகத்தில் சாத்தானைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியம்

1. சாத்தான் ஆள்தத்துவப் பண்புடையவன். (யோபு 2:6-12; யோபு 2:1-8).

2. பரலோகத்திற்கு இவனால் செல்ல முடியும். (யோபு 2:1; யோபு 2:1; வெளி 12:9-12).

3. சகோதரர்மீது குற்றம் சுமத்துகிறவன். (யோபு 2:9-11; யோபு 2:4-5; வெளி 12:10).

4. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போகிறவன். (யோபு 2:6-7; யோபு 2:1-2).

5. தேவதூதரோடு தொடர்புள்ளவன். (யோபு 2:6; யோபு 2:1).

6. தேவனுக்கு முன்பாக நிற்கிறவன். (யோபு 2:6; யோபு 2:1).

7. பூமியெங்கும் சுற்றித் திரிகிறவன். (யோபு 2:7; யோபு 2:2; 1பேதுரு 5:8).

8. தேவனோடு பேசக்கூடியவன். (யோபு 2:7-12; யோபு 2:2-6).

9. மனிதர்களை அழிப்பதற்காக அவர்களைத் தனிமைப்படுத்துகிறவன். (யோபு 2:8,12; யோபு 2:4-6).

10. நல்லோரைப் பகைக்கிறவன். (யோபு 2:8-12; யோபு 2:3-6).

11. மற்றவர்கள்மீது தேவனுடைய ஆசீர்வாதம் வருவதைப் புரிந்துகொண்டு அவர்கள்மீது பொறாமைப்படுகிறவன். (யோபு 2:10; யோபு 2:4-5).

12. தேவனுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் இடையில் ஐக்கியம் ஏற்படாதவாறு அதை அழித்துப்போட நாடுகிறவன். (யோபு 2:10-11; யோபு 2:4-6).

13. மனுஷர் கர்த்தரைத் தூஷித்து அவரை மறுதலிக்க வேண்டுமென்று விரும்புகிறவன். (யோபு 2:11; யோபு 2:5).

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

14. தம்முடைய பிள்ளைகளைத் தொடுவதற்குக் கர்த்தர் சாத்தானுக்கு வரையறைக்குட்பட்ட அதிகாரத்தையே கொடுத்திருக்கிறார். (யோபு 2:12; யோபு 2:6).

15. மனுஷருடைய ஐசுவரியங்களை அழிக்கக் கூடியவன். (யோபு 2:12-19).

16. கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்திற்குட்பட்டு, மனுஷரை அழிக்கக் கூடியவன். (யோபு 2:12-19; யோபு 2:6-10).

17. சாத்தானின் வேலைகளைச் செய்வதற்கு பூமியில் அவனுக்குப் பல பிரதிநிதிகள் இருக்கிறார்கள். (யோபு 2:15,17).

18. வானத்திலிருந்து அக்கினியை எழுப்பக் கூடியவன். (யோபு 2:16).

19. கர்த்தர் அனுமதிக்கும்போது புயற்காற்றை வரவழைக்கிறான். (யோபு 2:18-19).

20. நல்லோரை அழிக்கும் தன் முயற்சியில் சோர்ந்து போகாதவன். (யோபு 2:1-8).

21. மனுஷனுடைய சரீரங்களில் வியாதியை உண்டுபண்ணுகிறவன். (யோபு 2:7; அப் 10:38).

யோபுவின் புஸ்தகத்தில் மனுஷரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியம்

1. கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறவன். (யோபு 35:10).

2. மனுஷருடைய சந்ததி ஏற்கெனவே விழுந்து விட்டதினால் மனுஷன் ஜென்மபாவம் உடையவனாக இருக்கிறான். (யோபு 4:17-19; யோபு 14:1-4; யோபு 15:14-16; யோபு 31:33).

3. அழியக்கூடியவன். (யோபு 4:17; யோபு 16:22).

4. தான் விதைத்ததை அறுக்கிறவன். (யோபு 4:6-8; யோபு 33:26).

5. சரீரத்தில் ஜீவிக்கிறவன். (யோபு 4:19; யோபு 14:22; யோபு 32:8).

6. மனுஷன் வருத்தம் அனுபவிக்கப் பிறந்திருக்கிறான். (யோபு 5:7).

7. காட்டுக்கழுதைக்கு ஒப்பாகப் பிறந்திருக்கிறான். (யோபு 11:12).

8. ஆதாமைப்போல தன் பாவங்களை மூடப்பார்க்கிறான். (யோபு 31:33).

9. ஆவியும், சுவாசமும் வெவ்வேறானவை. (யோபு 34:14).

10. கடந்தகாலத்தில் தன்னுடைய பாவத்திலிருந்து நிவாரணம் பெறுவதற்கும், தேவனை ஆராதிப்பதற்கும் மனுஷன் மிருக ஜீவன்களைப் பலியிட்டான். (யோபு 1:5; யோபு 42:8).

11. மனுஷனுடைய ஆத்துமா படுகுழியில் இறங்காதபடிக்கு அவன் தன் மீட்கும் பொருளைத் தேடவேண்டும். (யோபு 33:28-29).

12. கர்த்தரோடு பழகி சமாதானமாய் இருக்க வேண்டும். (யோபு 22:21).

13. கர்த்தருடைய வார்த்தையினால் மனுஷன் அவரோடு பழக முடியும். (யோபு 22:22).

14. மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாய் இருக்க முடியும். (யோபு 9:2; யோபு 25:4).

15. தேவன் உத்தமனை வெறுக்கிறதில்லை. (யோபு 8:20).

16. தேவனுடைய மீட்பை மனுஷனுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்க அவனுக்குத் தேவனிடமிருந்து வியாக்கியானம் பண்ணுகிறவர் தேவை. (யோபு 33:23-28).

17. மனுஷன் தேவனுடைய பராமரிப்பை அறிந்து கொள்ளும்போது தன்னுடைய சரீரத்தில் சுகமடைகிறான். (யோபு 33:14-28).

2 அதிகாரம்

18. மனுஷன் தன் அக்கிரமத்தை விட்டு விலகி தேவனிடத்திற்குத் திரும்பி வரவேண்டும். (யோபு 22:23).

19. மனுஷர் மத்தியில் தேவனுடைய வார்த்தையை மெய்யாய் வியாக்கியானம் பண்ணுகிறவர் சொற்பம் பேராயிருக்கிறார்கள். (யோபு 33:23).

20. மன்னிக்கப்படுவதற்குப் பாவத்தை அறிக்கையிடுவது அவசியம். (யோபு 11:13-17; யோபு 33:27).

21. தங்களுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய தேவைகளுக்கு அவர்களுடைய பெற்றோரே பொறுப்பேற்க வேண்டும். (யோபு 1:5).

22. பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கர்த்தரிடத்தில் பிரதிஷ்டை பண்ண வேண்டும். (யோபு 1:5).

23. பூமியில் தேவனுக்குப் பயந்து, உத்தமராகவும், சன்மார்க்கராகவும் ஜீவிக்கிறவர்கள் கொஞ்சம்பேரே இருக்கிறார்கள். (யோபு 1:8; யோபு 2:3).

24. ஐசுவரியம் கர்த்தரால் வரும் ஆசீர்வாதமாகும். (யோபு 1:2,10).

25. நற்கிரியைகள் தேவபக்திக்கு எடுத்துக்காட்டு. (யோபு 29:12-17; யோபு 30:25; யோபு 31:13-40).

26. மனுஷருடைய ஆயுட்காலம் குறுகியது. (யோபு 7:1)

27 மனுஷனுக்கு மரிக்கும் காலம் நியமிக்கப் பட்டிருக்கிறது. (யோபு 7:1).

28. மனுஷன் ஒரு நாளில் மரித்துப் போவான். (யோபு 14:10).

29. மனுஷன் மரிக்கும்போது தன் ஆவியை விடுகிறான். (யோபு 14:10-12).

30. மரிக்கும்போது மனுஷனுடைய சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது. (யோபு 7:21; யோபு 34:15).

31. மரித்த பின்பு நல்லோரும் தீயோரும் வேறு பிரிக்கப்பட்டிருப்பார்கள். (யோபு 21:29-33).

32. துன்மார்க்கன் நித்திய தண்டனை அடைந்து, நித்தியமாக அழிந்துபோவான். (யோபு 20:7).

33. இரட்சிக்கப்படாமல் மரித்துப் போனவர்கள் பூமியின் பாதாளத்தில் தங்கியிருப்பார்கள். (யோபு 11:8; யோபு 14:13; யோபு 17:13-16). இதற்கு சீயோல் **(hell) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585** என்று பெயர். இராட்சதப் புத்திரரும் அங்கிருப்பார்கள். (யோபு 26:5-6). சீயோலும் பிரேதக்குழிகளும் வெவ்வேறானவை. (யோபு 11:8-9). துன்மார்க்கன் மரித்தப் பின்பு அவனுடைய சரீரம் கல்லறைக்குப் போகும். அவனுடைய ஆத்துமா பாதாளத்திற்குப் போகும். (யோபு 33:22).

34. நீதிமானும் துன்மார்க்கனும் உயிர்த்தெழுவார்கள். (யோபு 19:26-27; யோபு 21:30).

35. மனுஷருடைய ஆத்துமா தேவனுடைய பராமரிப்பில் இருக்கிறது. (யோபு 27:8).

36. நீதிமான் தேவனுடைய முகத்தைத் தரிசிப்பான். (யோபு 19:26-27; யோபு 33:26).

யோபுவின் புஸ்தகத்தில் தேவன், தேவதூதர்கள், சாத்தான், மனுஷன் ஆகியோரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் உபதேசங்களும், வேதாகமத்தின் மற்றப் புஸ்தகங்களில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் உபதேசங்களும் ஒத்துள்ளன. தேவனைப் பற்றிய வெளிப்பாடு முதன் முதலாக யோபுவின் புஸ்தகத்திலும், அதன் பின்பு பஞ்சாகமம் புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. ஆபிரகாமிற்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. (கலா 3:8; எபி 4:1).

2 அதிகாரம்

"இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை" - யோபு பல பாடுகளை அனுபவிக்கிறான். ஆனாலும் இதுவரையிலும் யோபு கர்த்தருக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டும் கூறவில்லை. இதற்குப் பின்பு யோபுவின் சிநேகிதர்கள் அவனைப் பார்க்க வருகிறார்கள். அவர்கள் பலவிதமான தீமையான ஆலோசனைகளையும், குற்றச்சாட்டுக்களையும் யோபுவின்மீது கூறுகிறார்கள். யோபுவின் பொறுமை மறைந்துவிடுகிறது. இதற்குப்பின்பு, யோபுவும், கர்த்தருக்கு விரோதமாகத் தன்னுடைய குற்றச் சாட்டுக்களைக் கூறுகிறான். ஆனாலும் இறுதியில் தன்னுடைய உதடுகளினால் தான் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டதாக யோபு பாவஅறிக்கை செய்கிறான். (யோபு 40:1-6; யோபு 42:1-6).

IV. யோபுவும் மூன்று நண்பர்களும் - வருகையும் ஏழு நாள் கவனிப்பும்

யோபு 2:11 யோபுடைய மூன்று சிநேகிதராகிய தேமானியனான எலிப்பாசும், சூகியனான பில்தாதும், நாகமாத்தியனான சோப்பாரும், யோபுக்கு நேரிட்ட தீமைகள் யாவையும் கேள்விப் பட்டபோது, அவனுக்காகப் பரிதபிக்கவும், அவனுக்கு ஆறுதல்சொல்லவும் ஒருவரோடொருவர் யோசனை பண்ணிக் கொண்டு, அவரவர் தங்கள் ஸ்தலங்களிலிருந்து வந்தார்கள்.

யோபு 2:12 அவர்கள் தூரத்தில் வருகையில் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, அவனை உருத்தெரியாமல் சத்தமிட்டு அழுது, அவரவர் தங்கள் சால்வையைக் கிழித்து, வானத்தைப் பார்த்து; தங்கள் தலைகள் மேல் புழுதியைத் தூற்றிக்கொண்டு,

யோபு 2:13 வந்து, அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்று கண்டு, ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையையும் பேசாமல், இரவுபகல் ஏழுநாள், அவனோடு கூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள்.

யோபுடைய மூன்று சிநேகிதர்

1. தேமானியனான எலிப்பாஸ் - இவன் ஏசாவோடும், ஏதோமோடும் தொடர்புடையவன். (ஆதி 36:4,11; 1நாளா 1:35-36,53). தேமானியர் ஞானத்தில் சிறந்தவர்கள். (எரே 49:7) மனுஷருடைய அனுபவத்தை மையமாக வைத்து, எலிப்பாஸ் பேசுகிறான். யோபுவிடம் எலிப்பாசே முதலாவதாகப் பேசுகிறான். எலிப்பாஸ் சொன்ன காரியங்களெல்லாம் நான்கு அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (யோபு 4; யோபு 5; யோபு 15; யோபு 22).

2. சூகியனான பில்தாத் - ஆபிரகாமிற்கும், கெத்தூராளுக்கும் பிறந்த இளைய குமாரனாகிய சூவாவின் சந்தியில் பில்தாத் வந்திருக்க வேண்டும். (ஆதி 25:2,6). மனுஷருடைய பாரம்பரியத்தை மையமாக வைத்து, பில்தாத் பேசுகிறான். யோபுவின் சிநேகிதரில் பில்தாத் இரண்டாவதாகப் பேசுகிறான். இவன் பேசியது மூன்று அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிறது. (யோபு 8; யோபு 18; யோபு 25).

3. நாகமாத்தியனான சோப்பார் - யூதாவின் தெற்கு எல்லைப் பகுதியிலுள்ள நாகமாவிலிருந்து இவன் வந்திருக்க வேண்டும். யோபுவின் சிநேகிதரில் இவனே கடைசியாகப் பேசியவன். மனுஷருடைய வெகுமதியை ஆதாரமாக வைத்து, சோப்பார் விவாதம் பண்ணுகிறான். இவனுடைய விவாதங்கள் இரண்டு அதிகாரங்களில் விவரிக்கப் பட்டிருக்கிறது. (யோபு 11;யோபு 20).

யோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

"அவனுக்காகப் பரிதபிக்கவும், அவனுக்கு ஆறுதல்சொல்லவும்" - யோபுவின் சிநேகிதர் இரண்டு நோக்கங்களோடு வருகிறார்கள். யோபுவிற்காக பரிதபிக்கவும், யோபுவுக்கு ஆறுதல் சொல்லவும் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் நன்றாகவே பரிதபித்தார்கள். ஆனாலும் அவர்களால் யோபுவுக்கு சிறப்பாக ஆலோசனை கூறமுடியவில்லை. ஆலோசனை கூறுவதற்குப் பதிலாக அவர்கள் யோபுவையும், கர்த்தரையும் சபிக்கிறார்கள்.

"அவரவர் தங்கள் ஸ்தலங்களிலிருந்து வந்தார்கள்" - யோபு ஊத்ஸ் தேசத்தில் இருக்கிறான். யோபுவின் சிநேகிதர் பல இடங்களிலிருந்து வர வேண்டும். அவர்களுக்கு யோபுவைக் குறித்து செய்தி அனுப்பி, அவர்கள் ஊத்ஸ் தேசத்திற்கு வருவதற்கு பல நாட்கள் ஆகியிருக்கும். இதற்குள் யோபு பல நாட்களாகப் பல பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

தன்னுடைய உணர்வுகளையும், எண்ணங்களையும் மற்றவர்களிடம் வெளிப்படுத்தும் அளவிற்கு யோபுவின் உபத்திரவம் அவனுக்குள் அதிகரித்திருக்கிறது. யோபுவின் மூன்று சிநேகிதரும் முதலில் அவன்மீது பரிதாபம் காண்பிக்கிறார்கள். அவர்கள் சத்தமிட்டு அழுகிறார்கள். தங்கள் சால்வையைக் கிழித்துக் கொள்கிறார்கள். தங்கள் தலைகள்மேல் புழுதியைத் தூற்றிக் கொள்கிறார்கள். இதன் பின்பு, அவர்கள் ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையையும் பேசாமல், இரவுபகல் ஏழுநாள், அவனோடுகூடத் தரையிலே உட்கார்ந்திருக்கிறார்கள். (யோபு 2:11-13).

"அவனை உருத்தெரியாமல்" - யோவுக்கு வந்த வியாதியினால் அவனுடைய உருவமே மாறிவிட்டது. அவனுடைய சரீரம் முழுவதும் பருக்கள் நிறைந்துள்ளது. இதனால் அவனுடைய சிநேகிதராலேயே அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அந்த அளவிற்குச் சாத்தான் யோபுவை வாதிக்கிறான்.

3 அதிகாரம்

V. **யோபுவும் அவனுடைய மூன்று நண்பர்களும் - சம்பாஷணைகள்** - (3:1-31:40)

1. யோபுவின் சம்பாஷணை

(1) பிறப்பிற்காக புலம்புதல்

யோபு 3:1 அதற்குப்பின்பு யோபு தன் வாயைத்திறந்து, தான் பிறந்த நாளைச் சபித்து,

யோபு 3:2 வசனித்துச் சொன்னது என்னவென்றால்:

யோபு 3:3 நான் பிறந்தநாளும் ஒரு ஆண்பிள்ளை உற்பத்தியாயிற்றென்று சொல்லப்பட்ட ராத்திரியும் அழிவதாக.

யோபு 3:4 அந்த நாள் அந்தகாரப் படுவதாக; தேவன் உயரத்திலிருந்து அதை விசாரியாமலும், ஒளி அதின்மேல் பிரகாசியாமலும்,

யோபு 3:5 அந்தகாரமும் மரணஇருளும் அதைக் கறைப்படுத்தி, மப்பு அதை மூடி, மந்தாரநாளின் பயங்கரங்கள் அதை அருக்களிப்பாக்குவதாக.

யோபு 3:6 அந்த ராத்திரியை அந்தகாரம் பிடிப்பதாக; வருஷத்தின் நாட்களில் அது சந்தோஷப்படுகிற நாளாயிராமலும் மாதங்களின் கணக்கிலே அதுவராமலும் போவதாக.

யோபு 3:7 அந்த ராத்திரி தனிமையாயிருப்பதாக; அதிலே கெம்பீரசத்தம் இல்லாமற்போவதாக.

யோபு 3:8 நாளைச் சபிக்கிறவர்களும், லிவியாதானை எழும்பப் பண்ணத் தக்கவர்களும், அதைச் சபிப்பார்களாக.

யோபு 3:9 அதின் அஸ்தமனகாலத்தில் தோன்றிய நட்சத்திரங்கள் இருண்டு, அது எதிர்பார்த்திருந்த வெளிச்சம் உண்டாகாமலும், விடியற்காலத்து வெளுப்பை அது காணாமலும் இருப்பதாக.

யோபு 3:10 நான் இருந்த கர்ப்பத்தின் வாசலை அது அடைக்காமலும், என் கண்கள் காண்கிற வருத்தத்தை மறைத்துவிடாமலும் இருந்ததே.

"அதற்குப்பின்பு" - யோபுவின் சிநேகிதர்கள் யோபுவைப் பார்க்க வந்திருக்கிறார்கள். அவர்கள் யோபுவிற்காக அழுதார்கள். ஏழு நாட்களுக்கு ஒன்றும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருக்கிறார்கள். இவற்றிற்குப் பின்பு யோபு தன் வாயைத்திறந்து, தான் பிறந்த நாளைச் சபிக்கிறான்.

யோபு தன் பிறந்தநாளைச் சபித்தது

1. நான் பிறந்தநாள் அழிவதாக. (யோபு 3:3).
2. ஒரு ஆண்பிள்ளை உற்பத்தியாயிற்றென்று சொல்லப்பட்ட ராத்திரி அழிவதாக.
3. அந்த நாள் அந்தகாரப்படுவதாக (யோபு 3:4).
4. தேவன் உயரத்திலிருந்து அதை விசாரியாமல் இருப்பாராக.
5. ஒளி அதின்மேல் பிரகாசியாமல் இருப்பதாக.
6. அந்தகாரமும் மரணஇருளும் அதைக் கறைப்படுத்துவதாக. (யோபு 3:5).
7. மப்பு அதை மூடுவதாக.
8. மந்தாரநாளின் பயங்கரங்கள் அதை அருக்களிப்பாக்குவதாக.
9. அந்த ராத்திரியை அந்தகாரம் பிடிப்பதாக. (யோபு 3:6).
10. வருஷத்தின் நாட்களில் அது சந்தோஷப் படுகிற நாளாயிராமல் போவதாக.
11. மாதங்களின் கணக்கிலே அதுவராமல் போவதாக.
12. அந்த ராத்திரி தனிமையாயிருப்பதாக (யோபு 3:7).

யோபு - தொகுப்புரை

3 அதிகாரம்

13. அதிலே கெம்பீரசத்தம் இல்லாமற் போவதாக.

14. நாளைச் சபிக்கிறவர்களும், லிவியாதானை எழும்பப்பண்ணத் தக்கவர்களும், அதைச் சபிப்பார்களாக. (யோபு 3:8).

15. அதின் அஸ்தமனகாலத்தில்தோன்றிய நட்சத்திரங்கள் இருண்டு போவதாக. (யோபு 3:9).

16. அது எதிர்பார்த்திருந்த வெளிச்சம் உண்டாகாமல் போவதாக.

17. விடியற்காலத்து வெளுப்பை அது காணாமல் இருப்பதாக.

யோபு தன் பிறந்தநாளைச் சபிப்பிதற்குக் காரணம்

1. அவன் இருந்த கர்ப்பத்தின் வாசலை அது அடைக்கவில்லை.
2. அவன் கண்கள் காண்கிற வருத்தத்தை அது மறைக்கவில்லை.

(2) குழந்தைப் பருவத்திற்காகப் புலம்புதல்

யோபு 3:11 நான் கர்ப்பத்தில்தானே அழியாமலும், கர்ப்பத்திலிருந்து புறப்படுகிற போதே சாகாமலும் போனதென்ன?

யோபு 3:12 என்னை ஏந்திக் கொள்ள மடியும், நான் பாலுண்ண ஸ்தனங்களும் உண்டாயிருந்ததென்ன?

யோபு 3:13 அப்படியில்லாதிருந்தால், அசையாமல் கிடந்து அமர்ந்திருந்து,

யோபு 3:14 பாழ்நிலங்களில் தங்களுக்கு மாளிகைகளைக் கட்டின பூமியின் ராஜாக்களோடும் மந்திரிமார்களோடும்,

யோபு 3:15 அல்லது, பொன்னை உடையவர்களும், தங்கள் வீடுகளை வெள்ளியினால் நிரப்பினவர்களுமான பிரபுக்களோடுங் கூட நான் இப்பொழுது தூங்கி இளைப்பாறுவேனே.

யோபு 3:16 அல்லது, வெளிப்படாத முதிராப்பிண்டம் போலவும், வெளிச்சத்தைக் காணாத சிசுக்கள்போலவும் இருப்பேனே.

யோபு 3:17 துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது; பெலனற்று விடாய்த்துப்போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள்.

யோபு 3:18 கட்டுண்டிருந்தவர்கள் அங்கே ஏகமாக அமைந்திருக்கிறார்கள்; ஒடுக்குகிறவனுடைய சத்தம் அங்கேகேட்கப்படுகிறதில்லை.

யோபு 3:19 சிறியவனும் பெரியவனும் அங்கே சரியாயிருக்கிறார்கள்; அடிமை தன் எஜமானுக்கு நீங்கலாயிருக்கிறான்.

"சாகாமலும் போனதென்ன?" - சாவது என்பதற்கு **"give up the ghost"** என்றுபொருள்படும் எபிரெய வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோபுவின் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் ஐந்து தடவைகளும் (யோபு 3:11; யோபு 10:18; யோபு 11:20; யோபு 13:19; யோபு 14:10), ஆதியாகமம் புஸ்தகத்தில் நான்கு தடவைகளும் (ஆதி 25:8,17; ஆதி 35:29; ஆதி 49:33) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் இந்த வாக்கியம் வேதாகமத்தின் மற்றப் புஸ்தகங்களிலும் காணப்படுகிறது. (எரே 15:9; புல 1:19; மத் 27:50; மாற்கு 15:37-39; லூக்கா 23:46; யோவான் 19:30; அப் 5:5,10; அப் 12:23). செத்துப்போதல் என்பதற்கு உள்ளான மனுஷன் புறம்பான மனுஷனிலிருந்து வெளியேறி பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ போவது என்றும் அதே சமயத்தில் மரித்துப் போன சரீரம் மண்ணுக்குத் திரும்புவது என்றும் பொருள். ஒரு மனுஷனுடைய சரீர மரணத்தின்போது அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் அந்தச் சரீரத்தைவிட்டுப் பிரியும். (2கொரி 5:8; பிலி 1:21- 24; யாக் 2:26.

யோபு - தொகுப்புரை

3 அதிகாரம்

செத்துப்போகிறவர்கள் (யோபு 3:14-19)

1. ராஜாக்கள்
2. மந்திரிமார்கள்
3. பிரபுக்கள்
4. சிறுபிள்ளைகள்
5. துன்மார்க்கர்
6. பெலனற்று விடாய்த்துப்போனவர்கள்.
7. கட்டுண்டிருந்தவர்கள்.
8. சிறியவர்.
9. பெரியவர்
10. அடிமை

மரணத்தோடு முடிவு பெறும் மனுஷனுடைய கிரியைகள்

1. ஆளுகை (யோபு 3:14)
2. ஆலோசனை
3. வீடுகளைக் கட்டுவது.
4. ஐசுவரியம் (யோபு 3:15)
5. குடும்பங்கள் (யோபு 3:16)
6. துன்மார்க்கம் (யோபு 3:17)
7. களைப்பு
8. ஒடுக்கப்படுதல் (யோபு 3:18,19)

(3) வாலிபப் பருவத்திற்காகப் புலம்புதல்

யோபு 3:20 மரணத்துக்கு ஆசையாய்க் காத்திருந்து, புதையலைத் தேடுகிறதுபோல அதைத்தேடியும் அடையாமற் போகிறவர்களும்,

யோபு 3:21 பிரேதக்குழியைக் கண்டு பிடித்ததினால் மிகவும் களிகூர்ந்து,

யோபு 3:22 அதற்காகச் சந்தோஷப்படுகிற நிர்ப்பாக்கியருமாகிய இவர்களுக்கு வெளிச்சமும், மனச்சஞ்சலமுள்ள இவர்களுக்கு ஜீவனும் கொடுக்கப் படுகிறதினால் பலன் என்ன?

யோபு 3:23 தன் வழியைக் காணக்கூடாத படிக்கு, தேவனால் வளைந்துகொள்ளப் பட்டவனுக்கு வெளிச்சத்தினால் பலன் என்ன?

யோபு 3:24 என் போஜனத்துக்கு முன்னே எனக்குப் பெருமூச்சு உண்டாகிறது; என் கதறுதல் வெள்ளம்போல் புரண்டு போகிறது.

யோபு 3:25 நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது.

யோபு 3:26 எனக்குச் சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது.

யோபுவின் மனசஞ்சலத்திற்குக் காரணம்

1. யோபுவின் வாழ்வில் ஏற்பட்ட துயரம்.
2. ஆத்துமாவின் கசப்பு.
3. ஜீவனைவிட மரணம் நன்மையாகத் தெரிவது. (யோபு 3:21)
4. முடிவற்ற துயரம்.
5. பிரேதக் குழி தன்னுடைய உபத்திரவத்திற்கு முடிவுதரும் என்று நினைப்பது. (யோபு 3:22)
6. யோபுவின் ஜீவன் தேவனால் வளைந்து கொள்ளப்பட்டிருப்பது. (யோபு 3:23)
7. இரவும் பகலும் பாடுகளும், வேதனைகளும் வருவது. (யோபு 3:24)

யோபு - தொகுப்புரை

3 அதிகாரம்

“நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது” - யோபுவிற்கு உபத்திரவம் வந்தபோது தன்னுடைய உபத்திரவம் நீங்காது, அது தொடரும் என்று நினைத்தான். அவனுக்கு முதலாவது துன்பம் வந்தபோது அடுத்த துன்பமும் வருமோ என்று பயந்தான். அவன் பயந்ததுபோலவே அவனுடைய வாழ்வில் அடுத்தடுத்து துன்பங்கள் வந்தன.

யோபு - தொகுப்புரை

4 அதிகாரம்

2. எலிப்பாசின் சம்பாஷணை

(1) அவனுடைய பேசும் ஆர்வம்

யோபு 4:1 அப்பொழுது தேமானியனாகிய எலிப்பாஸ் பிரதியுத்தரமாக:

யோபு 4:2 நாங்கள் உம்முடனே பேசத்துணிந்தால், ஆயாசப்படுவீரோ? ஆனாலும் பேசாமல் அடக்கிக்கொள்ளத் தக்கவன் யார்?

எலிப்பாசின் பிரதியுத்தரம்

யோபுவின் சிநேகிதர் ஏழு நாட்களுக்கு ஒன்றும் பேசாமல் மௌனமாக இருக்கிறார்கள். அதன் பின்பு யோபு தன் பிறந்தநாளைச் சபிக்கிறான். இதற்குப் பின்பு எலிப்பாஸ் முதலாவது நபராகத் தன்னுடைய ஆலோசனைகளைக் கூறுகிறான். எலிப்பாசின் பிரதியுத்தர விவரம் வருமாறு:

1. நீர் அநேகருக்குப் புத்தி சொல்லி, இளைத்த கைகளைத் திடப்படுத்தினீர் (யோபு 4:3-4).

2. துன்பம் உமக்கு நேரிட்டபடியினால் ஆயாசப்படுகிறீர். (யோபு 4:5-6).

3. யோபு துன்மார்க்கன். இரகசியமாகப் பாவம் செய்தவன். ஆகையினால் அவன் விதைத்த தீவினையை அறுக்கிறான். (யோபு 4:7-11)

4. யோபுவின் துன்மார்க்கத்தின் நிமித்தமாக கர்த்தர் அவனைத் தண்டித்து நீதி செய்திருக்கிறார். (யோபு 4:12-21)

5. யோபு நீதிமானாக இருந்தால் கர்த்தர் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு அவனை விடுவித்திருப்பார். (யோபு 5:1-2)

6. மனுஷன் வருத்தம் அனுபவிக்கப் பிறந்திருக்கிறான். (யோபு 5:6-7)

7. யோபு கர்த்தரைத் தேடினால் கர்த்தர் அவனை விடுவிப்பார். (யோபு 5:8-16)

8. யோபுவைத் தேவனே தண்டிக்கிறார். (யோபு 5:17-27).

எலிப்பாஸ் மனுஷருடைய அனுபவத்தின் மூலமாக இந்தக் காரியங்களையெல்லாம் கூறுகிறான்.

"நாங்கள் உம்முடனே பேசத்துணிந்தால், ஆயாசப்படுவீரோ?" - தாங்கள் கூறும் ஆலோசனை யோபுவிற்கு வருத்தமாக இருக்குமோ என்று எலிப்பாஸ் தெரிந்து கொள்ள விரும்புகிறான். ஆனாலும் யோபுவின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தராமல் அவனுடைய மூன்று சிநேகிதரும் ஒருவர் பின் ஒருவராகப் பேசுகிறார்கள். மூன்றுபேருமே யோபுவைக் கடிந்து கூறுகிறார்கள்.

2) யோபுவின் பழைய கால நன்மைகளைக் குறித்து நான்கு அம்சங்கள்

யோபு 4:3 இதோ, நீர் அநேகருக்குப் புத்தி சொல்லி, இளைத்த கைகளைத் திடப்படுத்தினீர்.

யோபு 4:4 விழுகிறவனை உம்முடைய வார்த்தைகளால் நிற்கப்பண்ணி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தினீர்.

யோபுவைப் பற்றிய நற்சாட்சி

1. அநேகருக்குப் புத்தி சொல்லியிருக்கிறான்.

2. இளைத்த கைகளைத் திடப்படுத்தியிருக்கிறான்.

3. விழுகிறவனை தன்னுடைய வார்த்தைகளால் நிற்கப் பண்ணியிருக்கிறான். (யோபு 4:4).

4. தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தியிருக்கிறான்.

எலிப்பாஸ் ஆரம்பத்தில் யோபுவைப் புகழ்ந்து கூறுகிறான். அவனுடைய நற்குணங்களை எடுத்துப் பேசுகிறான். அதன் பின்பு, கொஞ்சம் கொஞ்சமாக எலிப்பாஸ் யோபுவைக் குற்றப்படுத்தி அவனுடைய மனதைப் புண்படுத்துகிறான்.

4 அதிகாரம்

(3) எட்டு அம்ச குற்றச்சாட்டு - யோபு விதைத்ததை அறுக்கிறான்

யோபு 4:5 இப்பொழுதோ துன்பம் உமக்கு நேரிட்டபடியினால் ஆயாசப்படுகிறீர்; அது உம்மைத் தொட்டதினால் கலங்குகிறீர்.

யோபு 4:6 உம்முடைய தேவபக்தி உம்முடைய உறுதியாயும், உம்முடைய வழிகளின் உத்தமம்உம்முடைய நம்பிக்கையாயும் இருக்க வேண்டியதல்லவோ?

யோபுவின்மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள்

1. தீவினையை விதைத்து அதையே அறுக்கிறீர். (யோபு 4:5-11).
2. நீர் குற்றமில்லாதவன் அல்ல. (யோபு 4:7).
3. நீர் சன்மார்க்கனல்ல.
4. நீர் தீவினையை விதைத்தீர். (யோபு 4:8).
5. நீர் தேவனை நாடி உம்முடைய நியாயத்தைத் தேவனிடத்தில் ஒப்புவிக்க வில்லை. (யோபு 5:8).
6. தேவன் உம்மைத் தண்டிக்கிறார். (யோபு 5:17).
7. நீர் ஏழு பொல்லாப்பு செய்திருக்கிறீர். (யோபு 5:19).
8. நீர் நீதிமானாக இருந்தால் நாவின் சவுக்குக்கு மறைக்கப்பட்டிருப்பீர். (யோபு 5:21-22).
9. உம்முடைய வாயின் வார்த்தைகள் பலமான காற்றைப்போல் உள்ளன. (யோபு 8:2).
10. தேவன் உம்மை நியாயந்தீர்க்கிறார். (யோபு 8:3).
11. உம்முடைய பிள்ளைகள் தங்கள் பாவங்களின் நிமித்தம் செத்துப் போனார்கள். (யோபு 8:4).
12. நீர் சுத்தமும், செம்மையுமானவர் அல்ல. (யோபு 8:6-7).
13. நீர் தேவனை மறந்துவிட்டீர். (யோபு 8:13).
14. நீர் மாயக்காரராய் இருக்கிறீர்.
15. நீர் பொல்லாதவனாக இருக்கிறீர். (யோபு 8:20).
16. நீர் உம்மையே நீதிமானாக்கப் பார்க்கிறீர். யோபு 11:2).
17. நீர் ஒரு பொய்யர். (யோபு 11:3).
18. நீர் ஒரு பரியாசக்காரர்.
19. உம்முடைய சொல் சுத்தமென்றும், தேவரீருடைய பார்வைக்குத் துப்புரவானவன் என்றும் உம்மைப் பற்றி நீர் தவறாகக் கூறுகிறீர். (யோபு 11:4).
20. உம்முடைய அக்கிரமத்திற்கு ஏற்றபடி தேவன் உம்மை இன்னும் தண்டிக்கவில்லை. (யோபு 11:6).
21. தேவன் உம்முடைய துன்மார்க்கத்தை அறிந்திருக்கிறார். (யோபு 11:1-12).
22. நீர் கர்த்தரைத் தேடி உம்முடைய பாவத்தைவிட்டு விலகி வந்தால், கர்த்தர் உம்முடைய பாடுகளை அகற்றிப்போடுவார். (யோபு 11:13-19; யோபு 22:23).
23. வீணான ஞானத்தைப் பேசுகிறீர். (யோபு 15:2).
24. உம்முடைய வயிற்றைக் கொண்டல் காற்றினால் (கிழக்குக்காற்று) நிரப்புகிறீர்.
25. பிரயோஜனமில்லாத வார்த்தைகளைப் பேசுகிறீர். (யோபு 15:3).
26. தேவனுக்கு முன்பாகப் பயப்படாமலும், ஜெபம் பண்ணாமலும் இருக்கிறீர். (யோபு 15:4).

4 அதிகாரம்

27. உம்முடைய வாய் உம்முடைய அக்கிரமத்தைச் சொல்லிக் காட்டுகிறது. (யோபு 15:5).

28. உம்முடைய நாவு தந்திரமுள்ளது.

29. உம்முடைய வாயே உம்மைக் குற்றவாளி என்று தீர்க்கிறது. (யோபு 15:6).

30. பர்வதங்களுக்கு முன்னே நீர் உருவாக்கப்படவில்லை. (யோபு 15:7).

31. உம்மை மூடி மறைக்க ஞானத்தைப் பயன்படுத்துகிறீர். (யோபு 15:8).

32. உம்முடைய தகப்பனைப் பார்க்கிலும் பெரிய வயதுள்ளவர்கள் இருக்கிறார்கள். (யோபு 15:10).

33. அறியப்படாத இரகசியம் எதுவும் உம்மிடத்தில் இல்லை. (யோபு 15:11).

34. தேவனுக்கு விரோதமாக உம்முடைய ஆவி எழும்புகிறது. (யோபு 15:12-13).

35. நீர் பரிசுத்தமாக இல்லை. (யோபு 15:14-15)

36. அநியாயத்தைத் தண்ணீரைப் போலக் குடிக்கிறீர். (யோபு 15:16).

37. துன்மார்க்கனாக இருக்கிறீர். (யோபு 15:20-35).

38. உம்மை நீர் நீதிமானாக்கும் வார்த்தைகள் ஒருபோதும் முடிவதில்லை. (யோபு 18:2).

39. உம்முடைய சிநேகிதரை மிருகங்களைப் போல நினைக்கிறீர். (யோபு 18:3).

40. உம்முடைய துன்மார்க்கத்தினால் உம்முடைய கூடாரத்தின் வெளிச்சம் அந்தகாரப்படுகிறது. (யோபு 18:5-21).

41. உம்மைப் போன்ற துன்மார்க்கரின் சந்தோஷம் சிறிதுகாலமே இருக்கும். (யோபு 20:5-29).

42. நீர் நீதிமானாக இருப்பதாகவும், அது கர்த்தருக்கு நன்மை உண்டாகும் என்றும் உம்மைப் பற்றி தவறாக நினைக்கிறீர். (யோபு 22:3).

43. உம்முடைய பொல்லாப்பு பெரியது. (யோபு 22:5).

44. உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாதது.

45. முகாந்தரமில்லாமல் உம்முடைய சகோதரர் கையில் அடகுவாங்கி, ஏழைகளின் வஸ்திரங்களைப் பறித்துக் கொண்டீர். (யோபு 22:6).

46. விடாய்த்தவனுக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை. (யோபு 22:7).

47. பசித்தவனுக்குப் போஜனம் கொடுக்கவில்லை.

48. விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர். (யோபு 22:9).

49. தாய் தகப்பன் இல்லாதவர்களின் புயங்களை முறித்துப்போட்டீர்.

50. உம்முடைய துன்மார்க்கத்தின் நிமித்தம் நீர் பாடுகளை அனுபவிக்கிறீர். (யோபு 22:10).

51. உம்முடைய பாவங்களைக் கர்த்தரிடமிருந்து மறைக்கப்பார்க்கிறீர். (யோபு 22:13).

52. அக்கிரமக்காரரின் வழிகளையும், முடிவையும் நீர் ஆராய்ந்து பார்ப்பதில்லை. (யோபு 22:15-16).

53. நீர் கர்த்தரிடத்தில் பழகி, சமாதானமாக இருந்தால் உமக்கு நன்மை வரும். (யோபு 22:21-23).

54. உம்முடைய அக்கிரமத்தை நீர் தூரமாக்கினால் திரும்பக் கட்டப்படுவீர். (யோபு 22:23).

55. மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாய் இருக்க முடியாது. (யோபு 25:4-6).

56. மீறுதல் இல்லாத சுத்தன், குற்றமற்றவன், என்னில் அக்கிரமம் இல்லை என்று உம்மைப் பற்றித் தவறாகக் கூறுகிறீர். (யோபு 33:9).

4 அதிகாரம்

57. கர்த்தர் உம்மைத் தமக்குச் சத்துருவாக எண்ணிக் கொள்கிறார் என்று தவறாகக் கூறுகிறீர். (யோபு 33:10-13).

58. கர்த்தருக்கு நீர் செவி கொடுக்காததினால் உமக்கு இந்தப் பாடுகள் வந்திருக்கிறது. (யோபு 33:14-28).

59. நான் நீதிமான் என்றும், தேவன் என் நியாயத்தைத் தள்ளிவிட்டார் என்றும் தவறாகக் கூறுகிறீர். (யோபு 34:5).

60. பரியாசம் பண்ணுவதைத் தண்ணீரைப் போல குடிக்கிறீர். (யோபு 34:7).

61. அக்கிரமக்காரரோடே கூடிக் கொள்கிறீர். (யோபு 34:8).

62. தேவன்மேல் பிரியம் வைக்கிறது மனுஷனுக்குப் பிரயோஜனமல்ல என்கிறீர். (யோபு 34:9).

63. புத்தியில்லாமல் பேசுகிறீர்.

64. உம்முடைய வார்த்தையில் ஞானமில்லை. (யோபு 34:35).

65. அக்கிரமக்காரருக்கு மறுஉத்தரவு கூறுகிறீர். (யோபு 34:36).

66. உம்முடைய பாவத்தோடே மீறுதலைக் கூட்டினீர். (யோபு 34:37).

67. தேவனுக்கு விரோதமாக உம்முடைய வார்த்தைகளை அதிகரித்தீர்.

68. உம்முடைய நீதி தேவனுடைய நீதியைப் பார்க்கிலும் பெரியது என்கிறீர். (யோபு 35:2).

69. பாவத்திலிருந்து சுத்திகரிக்கப் படுவதற்கு விரோதமாகப் பேசுகிறீர். (யோபு 35:3).

70. நீர் ஒரு பாவி (யோபு 35:8).

71. உம்முடைய வாயை வீணாய் திறக்கிறீர். (யோபு 35:16).

72. நீர் ஒரு துன்மார்க்கன் (யோபு 36:17).

(4) துன்மார்க்கர் விதைத்ததை அறுப்பார்கள் - யோபு விதைத்ததையே அறுக்கிறான்

யோபு 4:7 குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ? சன்மார்க்கர் அதம்பண்ணப் பட்டது எப்போ? இதை நினைத்துப்பாரும்.

யோபு 4:8 நான் கண்டிக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள்.

யோபு 4:9 தேவனுடைய சுவாசத்தினாலே அவர்கள் அழிந்து, அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகிறார்கள்.

யோபு 4:10 சிங்கத்தின் கெர்ச்சிப்பும், துஷ்டசிங்கத்தின்முழக்கமும் அடங்கும்; பாலசிங்கங்களின் பற்களும் தகர்ந்துபோம்.

யோபு 4:11 கிழச்சிங்கம் இரையில்லாமையால் மாண்டுபோம், பாலசிங்கங்கள் சிதறுண்டுபோம்.

"தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள்" - துன்மார்க்கர் தங்களுடைய துன்மார்க்கத்தை விதைக்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கத்தின் பலனையே அறுப்பார்கள். தேவனுடைய சுவாசத்தினாலே அவர்கள் அழிந்து போவார்கள். அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகிறார்கள். சிங்கத்தின் கெர்ச்சிப்பும், துஷ்டசிங்கத்தின் முழக்கமும் அடங்கும்; பாலசிங்கங்களின் பற்களும் தகர்ந்துபோம். கிழச்சிங்கம் இரையில்லாமையால் மாண்டுபோம், பாலசிங்கங்கள் சிதறுண்டுபோம். (யோபு 4:9-11)

யோபு - தொகுப்புரை

4 அதிகாரம்

(5) யோபுவின் துன்மார்க்கத்திற்காக தேவன் அவனை நீதியாகத் தண்டிக்கிறார்

யோபு 4:12 இப்போதும் ஒரு வார்த்தை என்னிடத்தில் இரகசியமாய் அறிவிக்கப் பட்டது, அதினுடைய மெல்லிய ஓசை என் செவியில் விழுந்தது.

யோபு 4:13 மனுஷர்மேல் அயர்ந்த நித்திரை இறங்குகையில், இராத் தரிசனங்களில் பலவித தோற்றங்கள் உண்டாகும்போது,

யோபு 4:14 திகிலும் நடுக்கமும் என்னைப் பிடித்தது, என் எலும்புகளெல்லாம் நடுங்கினது.

யோபு 4:15 அப்பொழுது ஒரு ஆவி என் முகத்துக்கு முன்பாகக் கடந்தது, என் உடலின் மயிர் சிலிர்த்தது.

யோபு 4:16 அது ஒரு உருப்போல என் கண்களுக்குமுன் நின்றது, ஆனாலும் அதின் ரூபம் இன்னதென்று விளங்க வில்லை; அமைதலுண்டாயிற்று, அப்பொழுது நான் கேட்ட சத்தமாவது:

யோபு 4:17 மனுஷன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? மனுபுத்திரன் தன்னை உண்டாக்கினவரைப் பார்க்கிலும் சுத்தமாயிருப்பானோ?

யோபு 4:18 கேளும், அவர் தம்முடைய பணிவிடைக்காரரிடத்தில் நம்பிக்கை வைப்பதில்லை; தம்முடைய தூதரின் மேலும் புத்தியீனத்தைச் சுமத்துகிறாரே.

யோபு 4:19 புழுதியில் அஸ்திபாரம்போட்டு, மண் வீடுகளில் வாசம்பண்ணி, பொட்டுப்பூச்சியால் அரிக்கப்படுகிறவர்கள் மேல் அவர் நம்பிக்கை வைப்பது எப்படி?

யோபு 4:20 காலைமுதல் மாலை வரைக்கும் மடிந்து, கவனிப்பார் ஒருவருமில்லாமல், நித்திய அழிவடைகிறார்கள்.

யோபு 4:21 அவர்களிலிருக்கிற அவர்களுடைய மேன்மை போய் விடுமல்லவோ? ஞானமடையாமல் சாகிறார்களே என்று சொன்னான்.

ஓர் ஆவியைத் தரிசித்த அனுபவம்

1. ஒரு வார்த்தை என்னிடத்தில் இரகசியமாய் அறிவிக்கப்பட்டது.
2. அதினுடைய மெல்லிய ஓசை என் செவியில் விழுந்தது.
3. இராத்தரிசனங்களில் பலவித தோற்றங்கள் உண்டாயிற்று. (யோபு 4:13).
4. திகில் என்னைப் பிடித்தது (யோபு 4:14)
5. நடுக்கம் என்னைப் பிடித்தது.
6. என் எலும்புகளெல்லாம் நடுங்கினது.
7. ஒரு ஆவி என் முகத்துக்கு முன்பாகக் கடந்தது. (யோபு 4:15).
8. என் உடலின் மயிர் சிலிர்த்தது.
9. அது ஒரு உருப்போல என் கண்களுக்குமுன் நின்றது, ஆனாலும் அதின் ரூபம் இன்னதென்று விளங்க வில்லை (யோபு 4:16).
10. அமைதலுண்டாயிற்று, அப்பொழுது நான் கேட்ட சத்தமாவது: " மனுஷன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? மனுபுத்திரன் தன்னை உண்டாக்கினவரைப் பார்க்கிலும் சுத்தமாயிருப்பானோ?" (யோபு 4:17).

"மனுஷன்" (mortal man) - மூலபாஷையில் இந்த வார்த்தை அழிந்துபோகும் மனுஷன் என்று பொருள் படுமாறு உள்ளது. மனுஷனுடைய சரீரம் மண்ணால் ஆனது. அது மண்ணுக்குத் திரும்பும். மனுஷனுடைய சரீர மரணத்தின் போது, அவனுடைய சரீரம் மட்டுமே மரிக்கும். (யாக் 2:26) அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் நித்திய காலமாக உயிரோடு இருக்கும். (1பேதுரு 3:4).

யோபு - தொகுப்புரை

4 அதிகாரம்

"தம்முடைய தூதரின்மேலும் புத்தியீனத்தைச் சுமத்துகிறாரே" - தேவதூதர்கள் விழுந்து போனதும், மனுஷர் விழுந்துபோனதும் வரலாற்றில் நடைபெற்ற சம்பவமாகும். லூசிபரோடு தேவதூதர்கள் விழுந்து போனார்கள். யோபுவின் காலத்தில் விழுந்து போன தூதர்கள் மனுஷக்குமாரத்திகளை விவாகம் செய்து, இராட்சதரைப் பெற்றெடுத்தார்கள். நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்திற்கு முன்பும், பின்பும் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்.

தேவகுமாரர் மனுஷக் குமாரத்திகளோடே கூடுகிறதினால் இராட்சதர் பிறந்தார்கள். (ஆதி 6:4) ஸ்திரீயின் வித்து இந்த உலகத்திற்கு வரவிடாமல் தடுப்பதற்கு சாத்தான் மேற்கொண்ட முயற்சிகளில் இதுவும் ஒன்று.

"அவர்களிலிருக்கிற அவர்களுடைய மேன்மை" - மனுஷருடைய மேன்மை அவர்களுடைய சரீரத்தில் இல்லை. அது அவர்களுடைய ஆவியில் உள்ளது. அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் மூலமாக அந்த மேன்மை வெளிப்படுகிறது.

"ஞானமடையாமல் சாகிறார்களே" - இந்த வாக்கியம் மனுஷனுடைய சரீர மரணத்தைக் குறிக்கிறது. உள்ளான மனுஷன் புறம்பான மனுஷனைவிட்டு வேறுபிரிவதைக் குறிக்கிறது. (யாக் 2:26).

யோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

(6) வசைமொழியின் நான்கு அம்சம் - யோபு துன்மார்க்கனாய் இருப்பதினால் தேவன் அவனுடைய ஜெபத்திற்கு செவிகொடுக்கவில்லை

யோபு 5:1 இப்போது கூப்பிடும், உமக்கு உத்தரவு கொடுப்பார் உண்டோ பார்ப்போம்? பரிசுத்தவான்களில் யாரை நோக்கிப் பார்ப்பீர்?

யோபு 5:2 கோபம் நிர்மூடனைக் கொல்லும்; பொறாமை புத்தியில்லாதவனை அதம்பண்ணும்.

"கூப்பிடும்" - எலிப்பாஸ் யோபுவைப் பார்த்து கர்த்தரிடத்தில் ஜெபிக்குமாறு கூறுகிறான். யோபு பக்தியுள்ளவனாக இருந்தால் கர்த்தர் அவனுக்குப் பதில் கொடுப்பார் என்று ஏளனமாகப் பேசுகிறான். கர்த்தரிடத்தில் அவருடைய பிள்ளைகள் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது கர்த்தர் நிச்சயமாகவே பதில் கொடுப்பார். பதில் கிடைக்கவில்லை என்றால், அங்கு ஏதோ பிரச்சனை இருக்கிறது என்றுதான் பொருள். அங்கு ஆத்துமாவை அழிக்கும் பாவம் தடையாக இராவிட்டாலும், அவிசுவாசம் என்னும் பாவம் நமது ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதைத் தடுத்து விடும். (ரோமர் 14:23; எபி 11:6; எபி 12:1-2; யாக் 1:5-8).

எலிப்பாஸ் யோபுவிடம் கூறிய குற்றச்சாட்டுக்கள்

1. இப்போது கூப்பிடும், உமக்கு உத்தரவு கொடுப்பார் உண்டோ பார்ப்போம்?.
2. பரிசுத்தவான்களில் யாரை நோக்கிப் பார்ப்பீர்?
3. கோபம் நிர்மூடனைக் கொல்லும்.
4. பொறாமை புத்தியில்லாதவனை அதம் பண்ணும். (யோபு 5:2).

"பரிசுத்தவான்களில் யாரை நோக்கிப் பார்ப்பீர்?" - இந்த வாக்கியத்தில் பரிசுத்தவான்கள் என்பது கர்த்தருடைய தூதர்களைக் குறிக்கும். இது மனுஷர் மத்தியிலே காணப்படும் பரிசுத்தவான்களைக் குறிக்காது. (யோபு 4:18; யோபு 15:15; உபா 33:2)

(7) துன்மார்க்கர் விதைத்ததை அறுப்பதன் எட்டு அம்சம் - யோபுவைப் போல துன்மார்க்கர்கள்பாடு அனுபவிக்க வேண்டும்

யோபு 5:3 நிர்மூடன் ஒருவன் வேரூன்றுகிறதை நான் கண்டு உடனே அவன் வாசஸ்தலத்தைச் சபித்தேன்.

யோபு 5:4 அவன் பிள்ளைகள் இரட்சிப்புக்குத் தூரமாகி, தப்பு விப்பாரில்லாமல், வாசலிலே நொறுக்கப்பட்டார்கள்.

யோபு 5:5 பசித்தவன் அவன் விளைச்சலை முட்செடிகளுக் குள்ளுமிருந்து பறித்துத் தின்றான்; பறிகாரன் அவன் ஆஸ்தியை விழுங்கினான்.

துன்மார்க்கனுடைய அறுவடை

1. நிர்மூடன் ஒருவன் வேரூன்றுகிறதை நான் கண்டேன்.
2. அவன் வாசஸ்தலத்தைச் சபித்தேன். (யோபு 5:3).
3. அவன் பிள்ளைகள் இரட்சிப்புக்குத் தூரமாக இருக்கிறார்கள். (யோபு 5:4).
4. தப்புவிப்பாரில்லாமல் இருக்கிறார்கள்.
5. வாசலிலே நொறுக்கப்பட்டார்கள்.
6. பசித்தவன் அவன் விளைச்சலை பறித்துத் தின்றான். (யோபு 5:5).
7. முட்செடிகளுக்குள்ளுமிருந்து பறித்துத் தின்றான்.
8. பறிகாரன் அவன் ஆஸ்தியை விழுங்கினான்.

யோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

(8) தவிர்க்க முடியாத தீங்கு

யோபு 5:6 தீங்கு புழுதியிலிருந்து உண்டாகிறதுமில்லை; வருத்தம் மண்ணிலிருந்து முளைக்கிறதுமில்லை.

யோபு 5:7 அக்கினிப்பொறிகள் மேலே பறக்கிறதுபோல, மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்.

"தீங்கு புழுதியிலிருந்து உண்டாகிறதுமில்லை" - ஒவ்வொரு தீங்கிற்கும் ஒவ்வொரு வருத்தத்திற்கும் ஒரு காரணம் உள்ளது என்று எலிப்பாஸ் விவாதம் பண்ணுகிறான்.

(9) தேவனைத் தேடுமாறு யோபுவுக்கு ஆலோசனை - தேவனுடைய மகத்துவம்

யோபு 5:8 ஆனாலும் நான் தேவனை நாடி, என் நியாயத்தை தேவனிடத்தில் ஒப்புவிப்பேன்.

யோபு 5:9 ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.

யோபு 5:10 தாழ்ந்தவர்களை உயரத்தில் வைத்து, துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார்.

யோபு 5:11 அவர் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, வெளிநிலங்களின் மேல் தண்ணீர்களை வருவிக்கிறார்.

யோபு 5:12 தந்திரக்காரரின் கைகள் காரியத்தை முடிய நடத்தக் கூடாதபடிக்கு, அவர்களுடைய உபாயங்களை அவர் அபத்தமாக்குகிறார்.

யோபு 5:13 அவர் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்; திரியாவரக்காரரின் ஆலோசனை கவிழ்க்கப்படும்.

யோபு 5:14 அவர்கள் பகற்காலத்திலே அந்தகாரத்துக்குள்ளாகி, மத்தியான வேளையிலே இரவில், தடவுகிறதுபோல தடவித் திரிகிறார்கள்.

யோபு 5:15 ஆனாலும் எளியவனை அவர்கள் வாயிலிருக்கிற பட்டயத்துக்கும், பெலவானின் கைக்கும் விலக்கி இரட்சிக்கிறார்.

யோபு 5:16 அதினால் தரித்திரனுக்கு நம்பிக்கை உண்டு; தீமையானது தன் வாயைமூடும்.

துன்பத்திலும், ஆசீர்வாதத்திலும் மனுஷர் செய்ய வேண்டிய காரியங்கள்

1. தேவனை நாடவேண்டும்.
2. நம்முடைய நியாயத்தை தேவனிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்.

மனுஷர் மத்தியில் கர்த்தருடைய மகத்துவமான கிரியைகள்

1. தாழ்ந்தவர்களை உயரத்தில் வைக்கிறார். (யோபு 5:10)
2. துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார். (யோபு 5:10)
3. அவர் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணுகிறார். (யோபு 5:11).
4. வெளி நிலங்களின் மேல் தண்ணீர்களை வருவிக்கிறார்.
5. தந்திரக்காரரின் கைகள் காரியத்தை முடிய நடத்தக்கூடாதபடிக்கு, அவர்களுடைய உபாயங்களை அவர் அபத்தமாக்குகிறார். (யோபு 5:12).
6. அவர் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார். (யோபு 5:13).
7. திரியாவரக்காரரின் ஆலோசனையைக் கவிழ்த்துப்போடுகிறார்.
8. அவர்கள் பகற்காலத்திலே அந்தகாரத்துக்குள்ளாகுகிறார்கள். (யோபு 5:14).

5 அதிகாரம்

9. மத்தியான வேளையிலே இரவில், தடவுகிறது போல தடவித் திரிகிறார்கள்.

10. எளியவனை அவர்கள் வாயிலிருக்கிற பட்டயத்துக்கும், பெலவானின் கைக்கும் விலக்கி இரட்சிக்கிறார். (யோபு 5:15).

தரித்திரனுக்கும், எளியவனுக்கும், தேவையுள்ளவனுக்கும், ஒடுக்கப்பட்டிருக்கிறவனுக்கும் நம்பிக்கையும், மீட்பும் உண்டாகும் விதமாகக் கர்த்தர் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்கிறார். (யோபு 5:16).

(10) தேவன் யோபுவைச் சிட்சிக்கிறார் - சிட்சிப்பதனால் ஏற்படும் விளைவு

யோபு 5:17 இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்; ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்.

யோபு 5:18 அவர்காயப்படுத்திக் காயங்கட்டுகிறார்; அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது.

யோபு 5:19 ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது.

யோபு 5:20 பஞ்சகாலத்திலே அவர் உம்மை மரணத்துக்கும், யுத்தத்திலே பட்டயத்தின் வெட்டுக்கும் விலக்கி மீட்பார்.

யோபு 5:21 நாவின் சவுக்குக்கும் மறைக்கப்படுவீர்; பாழாக்குதல் வரும் போதும் பயப்படாமலிருப்பீர்.

யோபு 5:22 பாழாக்குதலையும் பஞ்சத்தையும் பார்த்து நகைப்பீர்; காட்டு மிருகங்களுக்கும் பயப்படாமலிருப்பீர்.

யோபு 5:23 வெளியின் கல்லுகளோடும் உமக்கு உடன்படிக்கையிருக்கும்; வெளியின் மிருகங்களும் உம்மோடே சமாதானமாயிருக்கும்.

யோபு 5:24 உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்கக் காண்பீர்; உம்முடைய வாசஸ்தலத்தை விசாரிக்கும் போது குறைவைக் காணமாட்டீர்.

யோபு 5:25 உம்முடைய சந்தானம் பெருகி, உம்முடைய சந்ததியார் பூமியின் பூண்டுகளைப்போல இருப்பார்கள் என்பதை அறிந்து கொள்வீர்.

யோபு 5:26 தானியம் ஏற்றகாலத்திலே அம்பாரத்தில் சேருகிறதுபோல, முதிர் வயதிலே கல்லறையில் சேருவீர்.

யோபு 5:27 இதோ, நாங்கள் ஆராய்ந்து அறிந்தது இதுதான்; காரியம் இப்படியிருக்கிறது; இதை நீர் கேட்டு உமக்கு நன்மையுண்டாக அறிந்து கொள்ளும் என்றான்.

"தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்" - தேவன் யோபுவைத் தண்டிப்பதாகவும், அதனால் யோபு சந்தோஷமடைய வேண்டுமென்றும் எலிப்பாஸ் கூறுகிறான். கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணக்கூடாது என்றும் அறிவுரை கூறுகிறான். ஆனால் கர்த்தர் யோபுவைத் தண்டிக்கவில்லை. சாத்தானே யோபுவை உபத்திரவப்படுத்தி நெருக்குகிறான்.

"சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்" - இந்த வாக்கியம் எபி 12:5 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

எலிப்பாஸ் கூறும் கர்த்தருடைய கிரியைகள்

1. அவர்காயப்படுத்துகிறார். (யோபு 5:18).
2. காயங்கட்டுகிறார்.
3. அவர் அடிக்கிறார்.
4. அவருடைய கை ஆற்றுகிறது.

5 அதிகாரம்

5. இக்கட்டுகளுக்கு நீங்கலாக்குகிறார். (யோபு 5:19).

6. பொல்லாப்பிலிருந்து பாதுகாக்கிறார்.

7. மரணத்துக்கு விலக்கி மீட்கிறார். (யோபு 5:20).

8. யுத்தத்திலே பட்டயத்தின் வெட்டுக்கு விலக்கி மீட்கிறார்.

9. நாவின் சவுக்குக்கு மறைக்கிறார்.

10. பாழாக்குதலின் பயத்திலிருந்து தப்புவிக்கிறார். (யோபு 5:21).

11. பாழாக்குதலையும் பஞ்சத்தையும் பார்த்து நகைக்க வைக்கிறார். (யோபு 5:22).

12. காட்டுமிருகங்களினால் உண்டாகும் பயத்தை அகற்றுகிறார்.

13. சிருஷ்டிப்பில் சமாதானம் உண்டு பண்ணுகிறார். (யோபு 5:23).

14. வெளியின் மிருகங்களிடையே உள்ள பகையை நிறுத்துகிறார்.

15. ஒருவனுடைய வீட்டில் சமாதானத்தைத் தருகிறார். (யோபு 5:24).

16. பாவத்திலிருந்து விலக்குகிறார்.

17. சந்தானத்தைப் பெருகப் பண்ணுகிறார். (யோபு 5:25).

18. சந்ததியார் பூமியின் பூண்டுகளைப்போல இருக்க வைக்கிறார்.

19. முதிர்வயதுவரை பாதுகாக்கிறார். (யோபு 5:26).

20. தானியம் ஏற்றகாலத்திலே அம்பாரத்தில் சேர உதவி புரிகிறார்.

கர்த்தர் விலக்கும் பொல்லாப்புக்கள்

1. வியாதி (யோபு 5:18)

2. பஞ்சம் (யோபு 5:20,22)

3. யுத்தம் (யோபு 5:20)

4. புறங்கூறுதல் (யோபு 5:21)

5. அழிவு (யோபு 5:21- 22)

6. வெளியின் மிருகங்கள் (யோபு 5:22-23)

7. பாவம் (யோபு 5:24)

"குறைவைக் காணமாட்டீர்" - இந்த வாக்கியத்திற்கு பாவம் செய்ய மாட்டீர் என்று பொருள். மனுஷரை அவர்களுடைய பாவங்களிலிருந்தும், மீறுதல்களிலிருந்தும் மீட்டு அவர்களை பழைய ஆசீர்வாத நிலைக்குத் திருப்ப வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். (வெளி 21:3-7). இதுவே கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் நோக்கமாகும். (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 22:3).

"முதிர்வயதிலே கல்லறையில் சேருவீர்" - தானியம் ஏற்ற காலத்தில் அம்பாரத்தில் சேரும். அதுபோல கர்த்தருடைய பிள்ளைகளும் முதிர் வயதிலே கல்லறையில் சேருவார்கள். பூரண ஆயுசு முடியும்மட்டும் ஜீவித்து இயற்கை மரணம் அடைவார்கள். (சங் 91).

6 அதிகாரம்

3. எலிப்பாசுக்கு யோபு கூறிய பதில்

(1) தாங்கமுடியாத துக்கம்

யோபு 6:1 யோபு பிரதியுத்தரமாக:

யோபு 6:2 என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும்.

யோபு 6:3 அப்பொழுது அது கடற்கரை மணலைப்பார்க்கிலும் பாரமாயிருக்கும்; ஆகையால் என் துக்கம் சொல்லிமுடியாது.

யோபு 6:4 சர்வவல்லவரின் அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது; அவைகளின் விஷம் என் உயிரைக் குடிக்கிறது; தேவனால் உண்டாகும் பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது.

யோபு 6:5 புல்லிருக்கிற இடத்திலே காட்டுக்கழுதை கத்துமோ? தனக்குத் தீவனமிருக்கிற இடத்திலே எருது கதறுமோ?

யோபு 6:6 ருசியில்லாத பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ? முட்டையின் வெள்ளைக்கருவில் சுவை உண்டோ?

யோபு 6:7 உங்கள் வார்த்தைகளை என் ஆத்துமா தொடமாட்டேன் என்கிறது; அவைகள் அரோசிகமான போஜனம்போல இருக்கிறது.

"என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு" - யோபு தன் சஞ்சலத்தையும் நிர்ப்பந்தத்தையும் தராசிலே நிறுக்குமாறு கூறுகிறான். அவை கடற்கரை மணலைப் பார்க்கிலும் பாரமாயிருக்கும் என்பது யோபுவின் கருத்து. தன்னுடைய சிநேகிதரிடம் யோபு தான் அனுபவிக்கும் சஞ்சலத்தையும், வேதனையையும் விவரித்துக் கூறுகிறான். ஆனால் யோபுவின் சகோதரரோ அவனுடைய சஞ்சலத்தைப் புரிந்து கொள்ளவில்லை. யோபுவுக்கு ஆறுதல் கூறுவதற்குப் பதிலாக அவன்மீது குற்றம்சுமத்துகிறார்கள். தன்மீது குற்றம் சுமத்துவதற்கு முன்பாக உண்மை நிலவரத்தை நன்றாகப் புரிந்து கொள்ளுமாறு யோபு தன் சிநேகிதரிடம் கூறுகிறான்.ஆனால் யோபுவின் சிநேகிதருக்கோ அவன்மீது உண்மையான இரக்கமோ வருத்தமோ இல்லை.

சஞ்சலம் (grief) - כעס - kah'-as - 3708

ஆ.பெ.சொ. - கோபப்படுதல், குரோதம், விசனப்படுதல், விசாரம், கோபம், துயரம், துக்கம், சஞ்சலம், எரிச்சல் **(vexation; anger; grief; indignation; provocation; sorrow)** (யோபு 6:2; 1சாமு 1:16; சங் 6:7; சங் 31:9; நீதி 17:25; பிர 1:18; பிர 2:23).

"என் துக்கம் சொல்லிமுடியாது" - யோபுவின் துக்கத்தை விவரித்துக் கூறுவதற்கு அவனிடம் போதுமான வார்த்தைகள்கூட இல்லை. ஆகையினால் அவன் தன்னுடைய பிறந்தநாளையே சபிக்கிறான். (யோபு 3:1-26).

"சர்வவல்லவரின் அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது" - யோபுவின் பேச்சுகளில் கர்த்தரைப் பற்றி தவறான கருத்துக்கள் உள்ளன. தனக்கு சாத்தான் கொடுத்த உபத்திரவங்களைக் கர்த்தரே கொடுத்திருப்பதாக நினைக்கிறான். (யோபு 1:21; யோபு 2:10). தன்னுடைய நிந்தையின் நிமித்தம் யோபு கர்த்தர்மீது தவறாகக் குற்றம் சுமத்துகிறான். இந்த நிகழ்ச்சிக்குப் பின்பு யோபுவின் வார்த்தைகளில் ஒருசிலவே கர்த்தருக்குப் புகழுரையாக உள்ளன. மற்றவையெல்லாமே குற்றச்சாட்டுக்கள் தான்.

கர்த்தரைப் பற்றிய அவதூறான கருத்துக்கள்

1. சர்வவல்லவரின் அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது (யோபு 6:4).

6 அதிகாரம்

2. அவருடைய அம்புகளின் விஷம் என் உயிரைக் குடிக்கிறது.

3. தேவனால் உண்டாகும் பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு இதுபோன்ற அநியாயத்தைச் செய்யமாட்டார். சாத்தானே யோபுவைச் சோதிக்கிறவன். ஆனால் யோபுவோ தன்னைக் கர்த்தர் சோதிப்பதாகத் தவறாக நினைக்கிறான். (யோபு 1:12-19; யோபு 2:7).

"புல்லிருக்கிற இடத்திலே காட்டுக்கழுதை கத்துமோ?" - காட்டுக்கழுதை கத்துவது, எருது கதறுவது, ஆகியவை அவற்றின் பசிக்கும், தாகத்துக்கும் அடையாளமாகும். யோபு இவற்றை உவமையாகக் கூறி, தன்னுடைய மகாப்பெரிய துக்கத்தையும் தனக்கு விரைவில் வரவேண்டிய மீட்பின் ஆறுதலையும் அறிவிக்கிறான்.

"ருசியில்லாத பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ?" - உணவில் உப்பில்லை என்றால் அது சுவையாக இராது. அதுபோலவே மனுஷனுக்குப் பாடுகளும், உபத்திரவங்களும், புலம்பலும் இருந்தால் வாழ்வு சுவையாக இராது. இவையெல்லாம் முடிந்து அவனுக்கு ஆறுதல் வந்தால்தான் அவனுடைய வாழ்வு சுவையாக இருக்கும். யோபு தன் பாடுகளிலிருந்து விடுதலை பெற்று, தன்னுடைய ஜீவனை ருசிக்க விரும்புகிறான். எலிப்பாசின் பேச்சுக்களும் உப்பில்லாத பதார்த்தத்தைப் போல ருசியில்லாமல் இருக்கிறது. தன் சிநேகிதரின் வார்த்தைகள் யோபுவுக்கு அரோசிகமான போஜனம்போல் இருக்கிறது. (யோபு 6:6-7).

முட்டையின் வெள்ளைக்கரு **(white of an egg) - רִיר - reer - 7388**

ஆ.பெ.சொ. - வெள்ளை **"spittle"** நுரை (1சாமு 21:13)

(2) தன்னுடைய துக்கத்தில் தன்னை அழித்து விடுமாறு யோபு தேவனிடம் ஜெபிக்கிறான்

யோபு 6:8 ஆ, என் மன்றாட்டு எனக்கு அருளப்பட்டு, நான் வாஞ்சிப்பதை தேவன் எனக்குத் தந்து,

யோபு 6:9 தேவன் என்னை நொறுக்கச் சித்தமாய், தம்முடைய கையை நீட்டி என்னைத் துண்டித்துப்போட்டால் நலமாயிருக்கும்.

யோபு 6:10 அப்பொழுதாவது எனக்கு ஆறுதல் இருக்குமே; அப்பொழுது என்னைத் தப்பவிடாத நோவிலே மரத்திருப்பேன்; பரிசுத்தருடைய வார்த்தைகளை நான் மறைத்து வைக்க வில்லை, அவர் என்னைத் தப்பவிடாராக.

யோபு 6:11 நான் காத்துக்கொண்டிருக்க என் பெலன் எம்மாத்திரம்? என் ஜீவனை நீடித்திருக்கப்பண்ண என் முடிவு எப்படிப்பட்டது?

யோபு 6:12 என் பெலன் கற்களின் பெலனோ? என் மாம்சம் வெண்கலமோ?

யோபு 6:13 எனக்கு உதவியானது ஒன்றும் இல்லையல்லவோ? சகாயம் என்னைவிட்டு நீங்கிற்றே.

"என்னைத் துண்டித்துப்போட்டால் நலமாயிருக்கும்" - யோபு மூன்றாவது அதிகாரத்தில் தன் பிறந்தநாளை சபிக்கிறான். இந்த அதிகாரத்திலோ தனக்கு மரணம் விரைவில் சம்பவிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறான். கர்த்தர் இதுபோன்ற ஜெபத்திற்கெல்லாம் பதில்கொடுக்கமாட்டார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைக் கொன்றுபோடமாட்டார். சாத்தானே திருடவும், அழிக்கவும் கொல்லவும்வந்திருக்கிறான். (யோவான்10:10; எபி 2:14-15). மரணம் ஒரு சத்துரு. (1கொரி 15:26). தம்முடைய பிள்ளைகளை அழிக்க வேண்டுமென்று சத்துரு ஜெபித்தால் கர்த்தர் அந்த ஜெபத்திற்குப் பதில் கொடுக்கமாட்டார். மனுஷன் பாவம்செய்யும் போது அவன் அதற்கான பாடுகளை அனுபவித்து மரித்துப் போகிறான். கர்த்தர் பூமியில் ராஜ்யபாரம் பண்ணும்போது மரணமே இருக்காது. (வெளி 21:3-7).

6 அதிகாரம்

“அப்பொழுதாவது எனக்கு ஆறுதல் இருக்குமே” - தனக்கு மரணம் வந்தால் அது ஆறுதலாக இருக்குமென்று யோபு நினைக்கிறான். தன்னுடைய நோவும், பாடுகளும் மரணத்தில் ஒழிந்துபோகும் என்பது யோபுவின் எண்ணம். யோபு பரிசுத்தருடைய வார்த்தைகளை மறைத்துவைக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தைகளை யோபு விசுவாசிக்கிறான்.

“என் ஜீவனை நீடித்திருக்கப்பண்ண என் முடிவு எப்படிப்பட்டது?” - யோபுவின் சரீர ஆரோக்கியம் சீரழிந்து விட்டது. அவனுடைய மாம்சம் அழுகிப்போயிற்று. அவனிடத்தில் பலனில்லை. ஆகையினால் அவனுடைய ஜீவன் இனிமேல் நீடிக்காது என்பது யோபுவின் எண்ணம். கர்த்தரைத் தூஷிப்பதற்கு முன்பாக தான் மரித்துப் போக வேண்டுமென்று யோபு விரும்புகிறான். யோபுவின் ஞானமும் அவனை விட்டு அகன்றுபோயிற்று. இனிமேல் தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று தீர்மானம் பண்ணி, யோபு மரித்துப்போக விரும்புகிறான். (யோபு 6:11-13).

(3) தன்னுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளாததற்காக யோபு தன் நண்பர்களைக் கடிந்து கொள்கிறான்

யோபு 6:14 உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் தயைகிடைக்க வேண்டும்; அவனோ சர்வவல்லவருக்குப் பயப்படாதே போகிறான்.

யோபு 6:15 என் சகோதரர் காட்டாறு போல மோசம்பண்ணுகிறார்கள்; ஆறுகளின் வெள்ளத்தைப்போலக் கடந்து போகிறார்கள்.

யோபு 6:16 அவைகள் குளிர்காலப் பனிக்கட்டியினாலும், அதில் விழுந்திருக்கிறஉறைந்தமழையினாலும் கலங்கலாகி,

யோபு 6:17 உஷ்ணங்கண்டவுடனே தங்கள் வற்றி, அனல்பட்டவுடனே தங்கள் ஸ்தலத்தில் உருவழிந்துபோகின்றன.

யோபு 6:18 அவைகளுடைய வழிகளின் போக்குகள் இங்குமங்கும் பிரியும்; அவைகள் விருதாவிலே பரவி ஒன்றும் இல்லாமற்போகும்.

யோபு 6:19 தேமாவின் பயணக்காரர் தேடி, சேபாவின் பயணக்கூட்டங்கள் அவைகள் மேல் நம்பிக்கை வைத்து,

யோபு 6:20 தாங்கள் இப்படி நம்பினதினாலே வெட்கப்படுகிறார்கள்; அவ்விடமட்டும் வந்து கலங்கிப் போகிறார்கள்.

யோபு 6:21 அப்படியே நீங்களும் இப்பொழுது ஒன்றுக்கும் உதவாமற் போனீர்கள்; என் ஆபத்தைக் கண்டு பயப்படுகிறீர்கள்.

யோபு தன் சிநேகிதர்மீது கூறும் குற்றங்கள்

1. அவர்கள் தயை காண்பிக்கவில்லை. (யோபு 6:14,27).
2. சர்வவல்லவருக்குப் பயப்படாதே போகிறார்கள். (யோபு 6:14).
3. காட்டாறுபோல மோசம் பண்ணுகிறார்கள் (யோபு 6:15).
4. தங்களுடைய நம்பிக்கை அற்றுப் போனதினால் வெட்கப்படுகிறார்கள். (யோபு 6:20).
5. யோபுவைக் குறித்து வெட்கப்படுகிறார்கள்.
6. இப்பொழுது ஒன்றுக்கும் உதவாமற் போனார்கள். (யோபு 6:21).
7. யோபுவுக்கு அவர்கள் உதவி புரியவில்லை. (யோபு 6:22-23).
8. அவர்களுடைய விவாதங்கள் மாயையானவை. (யோபு 6:26).
9. யோபுவுக்கு ஆறுதல் கூறாமல் கடிந்து கூறுகிறார்கள்.
10. திக்கற்றவன் மேல் விழுகிறார்கள். (யோபு 6:27).
11. தங்கள் சிநேகிதனுக்குப் படுகுழியை வெட்டுகிறார்கள்.

யோபு - தொகுப்புரை

6 அதிகாரம்

12. யோபுவின் வார்த்தைகளை அவர்கள் நம்பவில்லை. (யோபு 6:28-30).

13. அவர்களுடைய ஞானம் அவர்களோடு சாகும். (யோபு 12:2).

14. அவர்களைப்போல யோபுவுக்கும் புத்தியுண்டு (யோபு 12:3).

15. யோபுவின் சிநேகிதர் அவனை நிந்திக்கிறார்கள். (யோபு 12:4).

16. உத்தமனாகிய நீதிமானைப் பரியாசம் பண்ணுகிறார்கள்.

17. பொய்யைப் பிணைக்கிறார்கள். (யோபு 13:4).

18. காரியத்திற்கு உதவாத வைத்தியர்களாக இருக்கிறார்கள்.

19. அவர்கள் பேசாமல் இருந்தால் அதுவே அவர்களுக்கு ஞானமாக இருக்கும். (யோபு 13:5).

20. தேவனைக் குறித்து தவறாகப் பேசுகிறார்கள். (யோபு 13:7).

21. தேவனைப் பரியாசம் பண்ணுகிறார்கள். (யோபு 13:9).

22. அவர்களுடைய மேட்டிமைகள் சேற்றுக் குவியல்களுக்குச் சமானம். (யோபு 13:12).

23. அவர்கள் அலட்டுண்டாக்குகிற தேற்றரவாளர்கள். (யோபு 16:2).

24. அநேகக் காரியங்களை விருதாவாகப் பேசுகிறார்கள்.

25. யோபுவுக்கு எதிராக வார்த்தைகளைக் குவிக்கிறார்கள். (யோபு 16:4).

26. யோபுவின் துக்கத்தைக் குறைப்பதற்கு அவர்கள் முயற்சி செய்யவில்லை. (யோபு 16:5).

27. யோபுவின் சிநேகிதர் அவனைப் பரியாசம் பண்ணுகிறார்கள். (யோபு 16:20).

28. யோபுவின் சிநேகிதர் பரியாசம் பண்ணுகிறவர்கள் மட்டுமே ஆவார்கள். (யோபு 17:2).

29. யோபுவைத் தொடர்ந்து குற்றப் படுத்துகிறார்கள்.

30. யோபுவின் சிநேகிதரில் ஞானமுள்ளவன் ஒருவனும் இல்லை. (யோபு 17:10).

31. அவர்கள் யோபுவின் ஆத்துமாவை வருத்தப்படுத்துகிறார்கள். (யோபு 19:2).

32. தங்கள் வார்த்தைகளால் யோபுவை நொறுக்குகிறார்கள்.

33. அவர்கள் யோபுவைப் பத்துதரம் நிந்தித்தார்கள். (யோபு 19:3).

34. அவர்களுக்கு வெட்கமில்லை.

35. அவர்கள் யோபுவிக்குக் கடின முகம் காண்பித்தார்கள்.

36. அவர்கள் யோபுவிக்கு விரோதமாக பெருமை பாராட்டினார்கள். (யோபு 19:5).

37. யோபுவின் சிநேகிதர் அவனை மறந்து விட்டார்கள். (யோபு 19:14).

38. அவர்கள் யோபுவை வெறுக்கிறார்கள். (யோபு 19:19).

39. அவர்கள் யோபுவிற்கு இரக்கம் காண்பிக்கவில்லை. (யோபு 19:21).

40. அவர்கள் யோபுவைத் துன்பப் படுத்துகிறார்கள். (யோபு 19:22).

41. அவர்கள் யோபுவின் மாம்சத்தைத் திருப்திப்படுத்தவில்லை.

42. அவர்கள் யோபுவைத் தொடர்ந்து பரியாசம் பண்ணுகிறார்கள். (யோபு 21:3).

42. அவர்கள் யோபுவிற்கு விரோதமாக அநியாயமாய் ஆலோசனை கொண்டிருக்கிறார்கள். (யோபு 21:27).

44. யோபுவின் சிநேகிதருடைய மறுமொழிகளில் உண்மைக்கேடு இருக்கிறது. (யோபு 21:34)

6 அதிகாரம்

"தேமாவின் பயணக்காரர் தேடி" - யோபு 6:19-20 ஆகிய வசனங்களில் நாடோடிகளாகத் திரியும் தேமாவின் பயணக்காரரைப் பற்றி யோபு குறிப்பிடுகிறான். இவர்கள் தங்கள் தாகத்திற்குக் குளிர்கால பனிக்கட்டிகளை நம்புகிறார்கள். ஆனால் அவற்றின்மீது உஷ்ணம் பட்டவுடனே அவை உருகி ஓடிவிடுகின்றன. (யோபு 6:15-18). இதனால் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. யோபு தன்னுடைய நிலைமையை தேமாவின் பயணக்காரர் பனிக்கட்டியை நம்பி அவமானப்பட்டதோடு ஒப்பிட்டுக் கூறுகிறான். யோபுவின் சிநேகிதர் பனிக்கட்டியைப்போல ஒன்றுக்கும் உதவாதவர்களாக இருக்கிறார்கள். (யோபு 6:21).

(4) யோபு தன்னுடைய தனித் தன்மையைக் காத்துக் கொள்கிறான்

யோபு 6:22 எனக்கு ஏதாகிலும் கொண்டு வாருங்கள் என்றும், உங்கள் ஆஸ்தியிலிருந்து எனக்கு யாதொரு வெகுமானம் கொடுங்கள் என்றும்;

யோபு 6:23 அல்லது சத்துருவின் கைக்கு என்னைத் தப்புவியுங்கள், வல்லடிக்காரரின் கைக்கு என்னை நீங்கலாக்கி மீட்டு விடுங்கள் என்றும் நான் சொன்னதுண்டோ?

யோபுவின் சுயாதீனத்தன்மை

1. தனக்கு ஏதாகிலும் கொண்டு வாருங்கள் என்று யோபு சொல்லவில்லை.
2. அவர்களுடைய ஆஸ்தியிலிருந்து தனக்கு யாதொரு வெகுமானம் கொடுங்கள் என்று யோபு சொல்லவில்லை.
3. சத்துருவின் கைக்கு தன்னைத் தப்புவியுங்கள் என்று யோபு சொல்லவில்லை. (யோபு 6:23).
4. வல்லடிக்காரரின் கைக்கு தன்னை நீங்கலாக்கி மீட்டு விடுங்கள் என்று யோபு சொல்லவில்லை.

இந்த வசனத்தில் யோபு தன்னுடைய சுயாதீனத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். அவன் தன்னுடைய சிநேகிதரைச் சார்ந்திருக்கவில்லை. தனக்கு உதவி புரிய வேண்டுமென்னும் நிர்ப்பந்தமும் யோபுவின் சிநேகிதருக்கு இல்லை. தன் சிநேகிதரின் உதவியில்லாமலேயே தன்னால் தன்னைச் சுயமாகக் கவனித்துக் கொள்ள முடியுமென்று யோபு நினைக்கிறான்.

(5) தன்னுடைய நண்பர்களின் கசப்பான வார்த்தைகளுக்காக யோபு அவர்களைக் கடிந்து கொள்கிறான்

யோபு 6:24 எனக்கு உபதேசம் பண்ணுங்கள், நான் மவுனமாயிருப்பேன்; நான் எதிலே தவறினேனோ அதை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

யோபு 6:25 செம்மையான வார்த்தைகளில் எவ்வளவு வல்லமை உண்டு? உங்கள் கடிந்துகொள்ளுதலி னால் காரியம் என்ன?

யோபு 6:26 கடிந்துகொள்ள நீங்கள் வார்த்தைகளை யோசித்து, நம்பிக்கையற்ற வனுடைய வார்த்தைகளைக் காற்றிலே விட்டுவிடுகிறீர்களோ?

யோபு 6:27 இப்படிச் செய்து திக்கற்றவன் மேல் நீங்கள் விழுந்து, உங்கள் சிநேகிதனுக்குப் படுகுழியை வெட்டுகிறீர்கள்.

யோபு தன் சிநேகிதரிடம் கூறும் விண்ணப்பம்

1. எனக்கு உபதேசம்பண்ணுங்கள், நான் மவுனமாயிருப்பேன்.
2. நான் எதிலே தவறினேனோ அதை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

6 அதிகாரம்

யோபு தன் சிநேகிதரைக் கடிந்து கொள்ளும் வார்த்தைகள்

1. செம்மையான வார்த்தைகளில் வல்லமை உண்டு. ஆனால் யோபுவின் சிநேகிதருடைய கடிந்துகொள்ளுதலினால் ஒரு பயனும் இல்லை.
2. கடிந்துகொள்ள அவர்கள் வார்த்தைகளை யோசித்து, நம்பிக்கையற்றவனுடைய வார்த்தைகளைக் காற்றிலே விட்டு விடுகிறார்கள். (யோபு 6:26).
3. திக்கற்றவன் மேல் அவர்கள் விழுகிறார்கள். (யோபு 6:27).
4. தங்கள் சிநேகிதனுக்குப் படுகுழியை வெட்டுகிறார்கள்.

(6) தன்னை நம்புமாறு யோபு தன்னுடைய நண்பர்களிடம் கூறுகிறான்

யோபு 6:28 இப்போதும் உங்களுக்குச் சித்தமானால் என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது நான் பொய் சொல்லுகிறேனோ என்று உங்களுக்குப் பிரத்தியட்சமாய் விளங்கும்.

யோபு 6:29 நீங்கள் திரும்புங்கள்; அக்கிரமம் காணப்படாதிருக்கும்; திரும்புங்கள் என் நீதி அதிலே விளங்கும்.

யோபு 6:30 என் நாவிலே அக்கிரமம் உண்டோ? என் வாய் ஆகாதவைகளைப் பகுத்தறியாதோ?

யோபு தன்சிநேகிதரிடம் கூறும் விண்ணப்பம்

1. என்னைத் தனியாக விட்டுவிடுங்கள்
2. நான் பொய்சொல்லுகிறேனோ என்று என்னை நோக்கிப் பாருங்கள்.
3. நீங்கள் உங்கள் விவாதத்திற்கு திரும்புங்கள்.
4. என்னுடைய விவாதத்தில் அக்கிரமம் காணப்படாதிருக்கும். (யோபு 6:29).
5. என்னுடைய விவாதத்திற்குத் திரும்புங்கள். என் நீதி அதிலே விளங்கும்.

7 அதிகாரம்

(7) யோபு மரிக்க விரும்புகிறான் - அவனுடைய துயரத்தின் பன்னிரெண்டு அம்சங்கள்

யோபு 7:1 பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவோ? அவன் நாட்கள் ஒரு கூலிக்காரன் நாட்களைப்போல் இருக்கிறதல்லவோ?

யோபு 7:2 ஒரு வேலையாள் நிழலை வாஞ்சித்து, ஒரு கூலிக்காரன் தன் கூலியை வரப்பார்த்திருக்கிறதுபோல,

யோபு 7:3 மாயையான மாதங்கள் என்னுடைய சுதந்தரமாகி, சஞ்சலமான ராத்திரிகள் எனக்குக் குறிக்கப்பட்டது.

யோபு 7:4 நான் படுத்துக்கொள்ளுகிற போது, எப்பொழுது எழுந்திருப்பேன்? இராக்காலம் எப்பொழுது முடியும் என்று சொல்லி, கிழக்கு வெளுக்குமட்டும் அரண்டு புரளுகிறதினால் எனக்குப் போதுமென்று போகிறது.

யோபு 7:5 என் மாம்சம் பூச்சிகளினாலும், அடைபற்றின புழுதியினாலும் மூடப் பட்டிருக்கிறது; என் தோல் வெடித்து அருவருப்பாயிற்று.

யோபு 7:6 என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது; அவைகள் நம்பிக்கையில்லாமல் முடிந்துபோகும்.

யோபு 7:7 என் பிராணன் காற்றைப் போலிருக்கிறதென்றும், என் கண்கள் இனி நன்மையைக் காணப்போகிறதில்லையென்றும் நினைத்தருளும்.

யோபு 7:8 இப்போது என்னைக் காண்கிறவர்களின் கண்கள் இனி என்னைக் காண்பதில்லை; உம்முடைய கண்கள் என்மேல் நோக்கமாயிருக்கிறது; நானோ இல்லாமற்போகிறேன்.

யோபு 7:9 மேகம் பறந்துபோகிறதுபோல, பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான்.

யோபு 7:10 இனி தன் வீட்டுக்குத் திரும்பான், அவன் ஸ்தலம் இனி அவனை அறியாது.

"பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவோ?" - (எபி 9:27)

ஜீவிய காலத்தின் ஒப்புமை

1. அவன் நாட்கள் ஒரு கூலிக்காரன் நாட்களைப்போல் இருக்கிறது. (யோபு 7:1)
2. ஒரு வேலையாள் நிழலை வாஞ்சிக்கிறது போல இருக்கிறது. (யோபு 7:2; யோபு 14:6)
3. ஒரு கூலிக்காரன் தன் கூலியை வரப்பார்த்திருக்கிறது போல இருக்கிறது.
4. மனுஷனுடைய நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது. (யோபு 7:6)
5. மேகம் பறந்துபோகிறதுபோல இருக்கிறது. (யோபு 7:9)
6. கடந்துபோன நேற்றைய நாளைப் போல உள்ளது. (யோபு 8:9)
7. பூமியின்மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது. (யோபு 8:9; யோபு 14:2)
8. மனுஷனுடைய நாட்கள் அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது (யோபு 9:25)
9. வேகமாய் ஓடுகிற கப்பல்களைப்போல இருக்கிறது. (யோபு 9:26)
10. இரையின்மேல் பாய்கிற கழுகைப்போலக் கடந்து போகிறது.
11. பூவைப்போலப் பூத்து அறுக்கப்படுகிறது. (யோபு 14:2)
12. சொப்பனத்தைப் போல இருக்கிறது. (யோபு 20:8)

7 அதிகாரம்

13. இரவில் தோன்றும் தரிசனத்தைப் போல இருக்கிறது.

"ஒரு வேலையாள் நிழலை வாஞ்சித்து" - தன்னுடைய வேலை முடியும் நேரத்தை வேலையாள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். நிழல் என்பது மாலை நேரத்தின் நிழலைக் குறிக்கும். அப்போது அவனுடைய வேலையும் நிறைவு பெறும்.

"பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான்" - ஆனாலும் மரித்தோர் அனைவரும் உயிரோடு எழுந்திருப்பார்கள். (வெளி 20:11-15)

பாதாளம் (hell) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம் (the place of departed spirits)

கல்லறை (grave) - קֶבֶר - keh'-ber, kib-raw' - 6913

ஆண்பால் பெயர்ச்சொல் - கல்லறை, குகை, பிரேதக்குழி, புதைக்கிற ஸ்தானம்

(8) தனக்கு அநீதி இழைக்கப் பட்டதாக யோபு தேவனிடம் குற்றம் சுமத்துகிறான்

யோபு 7:11 ஆகையால் நான் என் வாயை அடக்காமல், என் ஆவியின் வேதனையினால் பேசி, என் ஆத்துமத்தின் கசப்பினால் அங்கலாய்ப்பேன்.

யோபு 7:12 தேவரீர் என்மேல் காவல் வைக்கிறதற்கு நான் சமுத்திரமோ? நான் ஒரு திமிங்கிலமோ?

யோபு 7:13 என் கட்டில் எனக்கு ஆறுதல் கொடுக்கும் என்றும், என் படுக்கை என் தவிப்பை ஆற்றும் என்றும் நான் சொல்வேனாகில்,

யோபு 7:14 நீர் சொப்பனங்களால் என்னைக் கலங்கப்பண்ணி, தரிசனங்களால் எனக்குத் திகிலுண்டாக்குகிறீர்.

யோபு 7:15 அதினால் என் ஆத்துமா, நெருக்குண்டு சாகிறதையும், என் எலும்புகளோடே உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும், மரணத்தையும் விரும்புகிறது.

யோபு 7:16 இப்படியிருக்கிறதை அரோசிக்கிறேன்; எந்நாளும் உயிரோடிருக்க விரும்பேன், என்னை விட்டுவிடும்; என் நாட்கள் மாயைதானே.

யோபு 7:17 மனுஷனை நீர் ஒரு பொருட்டாக எண்ணுகிறதற்கும், அவன்மேல் சிந்தை வைக்கிறதற்கும்,

யோபு 7:18 காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கும், நிமிஷந்தோறும் அவனைச் சோதிக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம்?

யோபு 7:19 நான் என் உமிழ்நீரை விழுங்காதபடி எத்தனைகாலம் என்னை நெகிழாமலும், என்னை விடாமலும் இருப்பீர்.

யோபு 7:20 மன்னுயிரைக் காப்பவரே, பாவஞ் செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன? நான் எனக்குத் தானே பாரமாயிருக்கும்படிக்கு, நீர் என்னை உமக்கு இலக்காக வைத்தது என்ன?

யோபு 7:21 என் மீறுதலை நீர் மன்னியாமலும், என் அக்கிரமத்தை நீக்காமலும் இருக்கிறது என்ன? இப்பொழுதே மண்ணில் படுத்துக் கொள்வேன்; விடியற்காலத்திலே என்னைத் தேடுவீரானால் நான் இரேன் என்றான்.

யோபு முறையிடுவதற்குக் காரணம்

1. அவன் தன் வாயை அடக்கவில்லை.
2. அவன் ஆவியின் வேதனையினால் பேசுகிறான்.

யோபு - தொகுப்புரை

7 அதிகாரம்

3. அவன் தன் ஆத்துமத்தின் கசப்பினால் அங்கலாய்க்கிறான்.

கர்த்தருடைய கிரியைகளின் நிமித்தம் யோபுவின் முறையீடுகள்

1. நான் சமுத்திரமோ? (யோபு 7:12)
2. நான் ஒரு திமிங்கிலமோ?
3. என் கட்டில் எனக்கு ஆறுதல் கொடுக்கும் என்றும், என் படுக்கை என் தவிப்பை ஆற்றும் என்றும் நான் சொல்வேனோ
4. நீர் சொப்பனங்களால் என்னைக் கலங்கப் பண்ணி, தரிசனங்களால் எனக்குத் திகிலுண்டாக்குகிறீர். (யோபு 7:13- 14).
5. என் ஆத்துமா, நெருக்குண்டு சாகிறது.
6. நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும், மரணத்தையும் விரும்புகிறேன். (யோபு 7:15).
7. என் ஜீவன் இப்படியிருக்கிறதை அரோசிக்கிறேன். (யோபு 7:16).
8. எந்நாளும் உயிரோடிருக்க விரும்பேன்.
9. என்னை விட்டுவிடும்.
10. என் நாட்கள் மாயை.
11. மனுஷனை நீர் ஒரு பொருட்டாக எண்ணுகிறதற்கு அவன் எம்மாத்திரம். (யோபு 7:17)
12. அவன்மேல் சிந்தை வைக்கிறதற்கு அவன் எம்மாத்திரம்.
13. காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கு அவன் எம்மாத்திரம். (யோபு 7:18)
14. நிமிஷந்தோறும் அவனைச் சோதிக்கிறதற்கு அவன் எம்மாத்திரம்?
15. நான் என் உமிழ்நீரை விழுங்காதபடி எத்தனைகாலம் என்னை நெகிழ விடாமல் இருப்பீர்.
16. எத்தனைகாலம் என்னை விட்டு அகலாமல் இருப்பீர். (யோபு 7:19)
17. நான் பாவஞ் செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன? (யோபு 7:20)
18. நான் எனக்குத் தானே பாரமாயிருக்கும்படிக்கு, நீர் என்னை உமக்கு இலக்காக வைத்தது என்ன?
19. என் மீறுதலை நீர் மன்னியாமல் இருக்கிறது என்ன? (யோபு 7:21)
20. என் அக்கிரமத்தை நீக்காமல் இருக்கிறது என்ன?

திமிங்கிலம் **(whale) תַּנִּין - tan-neen', tan-neem' - 8577**

ஆ.பெ.சொ. - மலைப் பாம்பு, வலுசர்ப்பம், முதலை, ஆந்தை, மச்சம், திமிங்கலம் **(crocodile; dragon; sea monster)** (யாத் 7:9)

"நீர் சொப்பனங்களால் என்னைக் கலங்கப் பண்ணி" - யோபு கர்த்தரை ஓர் ஆவியாகவும், அவர் தன்னை கலங்கப் பண்ணுகிறார் என்றும், தனக்கு திகில் உண்டாக்குகிறார் என்றும் கூறுகிறான். கர்த்தர் அவனைக் கலங்கப் பண்ணவில்லை. சாத்தானே யோபுவைக் கலங்கப் பண்ணுகிறான். யோபு தவறுதலாகச் சாத்தானின் கிரியைகளைக் கர்த்தரின் கிரியைகளாகக் கூறுகிறான்.

"அவன் எம்மாத்திரம்?" - மனுஷன் கர்த்தருடைய சிருஷ்டிகளில் ஒருவன். ஆனாலும் கர்த்தர் ஒவ்வொரு தனி மனுஷனையும் முக்கியத்துவம் கொடுத்து விசாரிக்கிறார். ஆனால் யோபுவோ தனி மனுஷனுடைய முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல் அலட்சியமாகப் பேசுகிறான். (யோபு 7:17-18) ஒவ்வொரு மனுஷனுடைய ஆத்துமாவும் கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றது.

யோபு - தொகுப்புரை

7 அதிகாரம்

"பாவஞ் செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன?" - யோபு பல காரியங்களைக் கூறிவிட்டு, இறுதியில் தான் பாவம் செய்ததை அங்கிகரிக்கிறான்.

"விடியற்காலத்திலே என்னைத் தேடுவீரானால் நான் இரேன்" - யோபு விரைவில் மரித்துப் போவதைக் குறித்து இவ்வாறு கூறுகிறான். அவனுடைய பாடுகளும், வியாதியும் மிகவும் அதிகமாக இருப்பதினால் தன்னால் காலைவரையில்கூட உயிரோடு இருக்க முடியாது என்பது யோபுவின் எண்ணம்.

யோபு - தொகுப்புரை

8 அதிகாரம்

4. பில்தாத்தின் சம்பாஷணை

(1) யோபுவின் வார்த்தைகளுக்காக அவனைக் கடிந்து கொள்கிறான்

யோபு 8:1 அப்பொழுது சூகியனான பில்தாத் பிரதியுத்தரமாக:

யோபு 8:2 நீர் எந்தமட்டும் இப்படிப் பட்டவைகளைப் பேசுவீர்? எதுவரைக்கும் உம்முடைய வாயின் வார்த்தைகள் பலமான காற்றைப்போலிருக்கும்?

"பில்தாத் பிரதியுத்தரமாக" - யோபு எலிப்பாசின் குற்றச்சாட்டுக்குப் பதில் கூறி முடித்த பின்பு, சூகியனான பில்தாத் தன்னுடைய குற்றச்சாட்டுக்களைக் கூற ஆரம்பிக்கிறான். யோபுவின் வார்த்தைகள் பலமான காற்றைப் போல உள்ளதாகக் கூறுகிறான். (யோபு 7:1-2). யோபுவின் பிள்ளைகள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால் அவர்கள் மரித்துப் போனார்கள் என்றும், யோபுவும் பாவம் செய்ததினால் அவனுக்கு இவ்வளவு பாடுகள் வந்திருக்கிறது என்றும் பில்தாத் குற்றம் சுமத்துகிறான். (யோபு 7:3-7). யோபுவுக்கு வந்திருக்கும் காரியங்களை முந்தின தலைமுறையாரிடத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பில்தாத் கூறுகிறான். (யோபு 7:8-12). இந்தக் குற்றச்சாட்டுக்கள் தவிர யோபு ஒரு மாய்மாலக்காரன் என்றும், அவன் கர்த்தரை மறந்துவிட்டான் என்றும் கர்த்தர் நீதிமானை அழிக்காமல், துன்மார்க்கனை மட்டுமே அழிப்பான் என்றும் பில்தாத் யோபுவின்மீது குற்றம் சாட்டுகிறான். (யோபு 7:13-22).

"பலமான காற்று" - யோபுவின் மூன்று சிநேகிதருமே காற்றை ஓர் உவமையாகப் பயன்படுத்துகிறார்கள்.

1. எலிப்பாசின் முதலாவது பேச்சைக் குறித்து யோபு கூறும்போது "கடிந்துகொள்ள நீங்கள் வார்த்தைகளை யோசித்து, நம்பிக்கையற்றவனுடைய வார்த்தைகளைக் காற்றிலே விட்டுவிடுகிறீர்களோ?" என்று கூறுகிறான். (யோபு 6:26).

2. தன் பிராணன் காற்றைப் போலிருக்கிறது என்று யோபு கூறுகிறான். (யோபு 7:7).

3. யோபுவினுடைய வாயின் வார்த்தைகள் பலமான காற்றைப் போல் இருப்பதாகப் பில்தாத் கூறுகிறான். (யோபு 8:2).

4. யோபு காற்றைப் போன்ற நியாயங்களைச் சொல்லி தன் வயிற்றைக் கொண்டல் காற்றால் நிரப்புவதாக எலிப்பாஸ் கூறுகிறான். (யோபு 15:2).

5. துன்மார்க்கரும், ஐசுவரியவான்களும் பெருங்காற்று பறக்கடிக்கிற பதரைப்போல இருக்கிறார்கள் என்று யோபு கூறுகிறான். (யோபு 21:18; யோபு 27:21) பயங்கரங்கள் காற்றைப்போல தன் ஆத்துமாவை பின்தொடருகிறது என்றும் (யோபு 30:15), கர்த்தர் தன்னைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டார் (யோபு 30:22) என்றும் யோபு கூறுகிறான்.

(2) யோபுவையும் அவனுடைய குமாரர்களையும் அவர்களுடைய துன்மார்க்கத்திற்காகக் கடிந்து கொள்கிறான்

யோபு 8:3 தேவன் நியாயத்தைப் புரட்டுவாரோ? சர்வவல்லவர் நீதியைப் புரட்டுவாரோ?

யோபு 8:4 உம்முடைய பிள்ளைகள் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்திருந்தாலும் அவர்களுடைய பாதகத்தின் ஆக்கினைக்கு அவர்களை அவர் ஒப்புக்கொடுத்திருந்தாலும்,

யோபு - தொகுப்புரை

8 அதிகாரம்

யோபு 8:5 நீர் தேவனை ஏற்கனவே தேடி, சர்வவல்லவரை நோக்கி விண்ணப்பஞ் செய்து,

யோபு 8:6 சுத்தமும் செம்மையுமாய் இருந்தீரேயானால், அப்பொழுது அவர் உமக்காக விழித்து நீதியுள்ள உம்முடைய வாசஸ்தலத்தைச் சாங் கோபாங்கமாக்குவார்.

யோபு 8:7 உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்.

"தேவன் நியாயத்தைப் புரட்டுவாரோ?" - தேவன் தம்முடைய நீதியையும், நியாயத்தையும் புரட்டமாட்டார். யோபுவின் பிள்ளைகள் பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை அவர்களுடைய பாதகத்தின் ஆக்கினைக்கு ஒப்புக் கொடுத்திருப்பதாகப் பில்தாத் குற்றம் சுமத்துகிறான். (யோபு 8:3-4).

"நீர் தேவனை ஏற்கனவே தேடி" - யோபுவை விட யோபுவின் பிள்ளைகள் அதிகமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் மரித்துப் போனார்கள். யோபு இன்னும் உயிரோடு இருக்கிறான் என்பது பில்தாத்தின் குற்றச்சாட்டு. யோபு சுத்தமும் செம்மையுமாய் இருந்தானென்றால், அப்பொழுது கர்த்தர் அவனுடைய வாசஸ்தலத்தைச் சாங்கோபாங்கமாக்குவார் என்றும் பில்தாத் அறிவுரை கூறுகிறான். (யோபு 8:5-7).

(3) பாரம் பரியத்திலிருந்தும் இயற்கையிலிருந்தும் கற்றுக் கொள்ளுமாறு யோபுவுக்கு வேண்டுகோள் விடுகிறான்

யோபு 8:8 ஆகையால், நீர் முந்தின தலைமுறையாரிடத்தில் விசாரித்து, அவர்கள் முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்துபாரும்.

யோபு 8:9 நாம் நேற்று உண்டானவர்கள், ஒன்றும் அறியோம்; பூமியின்மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது.

யோபு 8:10 அவர்கள் உமக்கு உபதேசித்து, உமக்குத் தெரிவித்து, தங்கள் இருதயத்திலிருக்கும் நியாயங்களை வெளிப்படுத்துவார்கள் அல்லவோ?

யோபு 8:11 சேறில்லாமல் நாணல் ஓங்கி வளருமோ? தண்ணீரில்லாமல் கோரைப்புல் முளைக்குமோ?

யோபு 8:12 அது இன்னும் பச்சையாயிருக்கும்போதே, அறுக்கப் படாதிருந்தும் மற்ற எந்தப் புல்லைப்பார்க்கிலும் சீக்கிரமாய் வாடிப்போம் அல்லவோ?

"நீர் முந்தின தலைமுறையாரிடத்தில் விசாரித்து" - முந்தின தலைமுறையாரைப் போல இப்போது இருக்கிறவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று பில்தாத் கூறுகிறான். (யோபு 8:9-10) மேலும் இயற்கையே நம் எல்லோருக்கும் நல்ல உபாத்தியாயர் என்பது பில்தாத்தின் ஆலோசனை. (யோபு 8:11-12).

(4) யோபுவை மாயக்காரன் என்று கூறி நிந்திக்கிறான்

யோபு 8:13 தேவனை மறக்கிற எல்லாருடைய வழிகளும் அப்படியே இருக்கும்; மாயக்காரரின் நம்பிக்கை அழிந்துபோம்.

யோபு 8:14 அவனுடைய வீண் எண்ணம் அற்றுப்போய், அவனுடைய நம்பிக்கை சிலந்திப்பூச்சி வீடு போலிக்கும்.

யோபு 8:15 ஒருவன் அதின் வீட்டின்மேல் சாய்ந்தால், அது நிலைக்கமாட்டாது, அதைப் பிடித்தால், அது நிற்காது.

யோபு 8:16 வெயில் எரிக்காததற்கு முன்னே அவன் பச்சைச்செடி, அதின் கொடிகள் அவன் தோட்டத்தின்மேலே படரும்;

யோபு 8:17 அதின் வேர்கள் கற்குவியலில் சிக்கி, கற்பாறையை நாடும்.

8 அதிகாரம்

யோபு 8:18 அது அதினிடத்தில் இராத படிக்கு நிர்மூலமானபின், அது இருந்த இடம் உன்னை நான் கண்டதில்லை யென்று மறுதலிக்கும்.

யோபு 8:19 இதோ, அவன் வழியின் மகிழ்ச்சி இப்படியே போகிறது; ஆனாலும் வேறே பேர் மண்ணிலிருந்து முளைப்பார்கள்.

யோபு 8:20 இதோ, தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை, பொல்லாதவர்களுக்குக் கை கொடுக்கிறதுமில்லை.

யோபு 8:21 இனி அவர் உம்முடைய வாயை நகைப்பினாலும், உம்முடைய உதடுகளைக் கெம்பீரத்தினாலும் நிரப்புவார்.

யோபு 8:22 உம்மைப் பகைக்கிறவர்கள் வெட்கத்தால் மூடப்படுவார்கள்; துன்மார்க்கருடைய கூடாரம் அழிந்துபோகும் என்றான்.

"தேவனை மறக்கிற எல்லாருடைய வழிகளும் அப்படியே இருக்கும்" - இந்த வாக்கியத்தை யோபு 8:11-12 ஆகிய வசனங்களின் அடிப்படையில் வியாக்கியானம் கூற வேண்டும். தேவனை மறந்து போகிறவர்களுடைய வாழ்வு நிலையில்லாமல் இருக்கும். மாயக்காரருக்கும் நம்பிக்கை இருக்காது. (யோபு 8:13-14).

"மாயக்காரரின் நம்பிக்கை அழிந்துபோம்" - மாயக்காரர் தங்களைப் பற்றி மாய்மாலமாகக் கூறுவார்கள். இவர்கள் ஏமாற்றுக்காரர்கள். தங்களுடைய தந்திரங்களை மறைத்து, தங்களை ஞானிபோல காண்பிப்பார்கள். ஏமாற்றிப் பிழைத்துக் கொள்ளலாம் என்பது இவர்களுடைய எண்ணம். ஆனால் கர்த்தருக்கு முன்பாக மனுஷரின் மாய்மாலம் நிர்மூலமாகும்.

மாயக்காரரின் நம்பிக்கை

1. அவனுடைய நம்பிக்கை சிலந்திப்பூச்சி வீடுபோலிக்கும்.
2. அவன் நம்பிக்கை பச்சைச்செடி போலவும், அதன் கொடிகள் போலவும் இருக்கும். வெயில் வந்தவுடன் அவை கருகிப்போகும். (யோபு 8:11- 12,16-19).

"தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை" - யோபு உத்தமனல்ல. அவன் பாவம் செய்திருப்பதினால் தேவனிடத்திலிருந்து அவனுக்குக் கிருபை கிடைக்கவில்லை என்று பில்தாத் குற்றம் சுமத்துகிறான்.

"அவர் உம்முடைய வாயை நகைப்பினாலும், உம்முடைய உதடுகளைக் கெம்பீரத்தினாலும் நிரப்புவார்" - இப்போதுள்ள நிலைமையில் பில்தாத் யோபுவை இவ்வாறு புகழ்ந்து கூறவில்லை. யோபு தன்னுடைய பாவத்தை விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால் யோபு 8:20- 22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நற்காரியங்கள் அவனுடைய வாழ்வில் சம்பவிக்கும் என்று பில்தாத் கூறுகிறான்.

9 அதிகாரம்

5. பில்தாத்திற்கு யோபுவின் பதிலுரை

(1) தேவனுக்கு முன்பாக மனுஷனால் நீதிமானாக இருக்கமுடியாது

யோபு 9:1 அதற்கு யோபு பிரதியுத்தரமாக:

யோபு 9:2 ஆம், காரியம் இப்படியிருக்கிறது என்று அறிவேன்; தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி?

யோபு 9:3 அவர் அவனோடே வழக்காடச் சித்தமாயிருந்தால், ஆயிரத்தில் ஒன்றுக்காகிலும் அவருக்கு உத்தரவு சொல்லமாட்டானே.

யோபு 9:4 அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரமமுள்ளவர்; அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்?

"அதற்கு யோபு பிரதியுத்தரமாக" - பில்தாத் தன்னுடைய குற்றச்சாட்டுக்களைக் கூறி முடித்துவிட்டான். அதன் பின்பு யோபு அவனுக்குப் பிரதியுத்தரமாகப் பேசுகிறான். தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அவருக்கு முன்பாக மனுஷன் எப்படி நீதிமானாக இருக்க முடியும் என்பது தனக்குத் தெரியவில்லை என்று யோபு அறிவித்து விடுகிறான். (யோபு 9:1-12). தேவனிடம் ஜெபம் பண்ணப் போவதாகக் கூறுகிறான். (யோபு 9:13-15) ஆனாலும் தன்னுடைய ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் கொடுப்பாரா என்று தான் சந்தேகப்படுவதாக யோபு அறிவிக்கிறான். (யோபு 9:16). தன்னுடைய துயரத்திற்குக் கர்த்தரே காரணமென்று யோபு கர்த்தர்மீது குற்றம் சுமத்துகிறான். (யோபு 9:17-18) கர்த்தர் தனக்கு அநீதி செய்துவிட்டதாகவும், தனக்கு அவர் உதவி புரியவில்லை என்றும் யோபு கூறுகிறான். (யோபு 9:19-21) மேலும் கர்த்தர் தனக்கு இரக்கம் காண்பிக்கவில்லை என்றும், துன்மார்க்கரோடே சேர்ந்து கொண்டார் என்றும் யோபு கர்த்தரைக் குறித்து குற்றம் சுமத்துகிறான். (யோபு 9:22-24). கர்த்தருடைய கிரியைகளையும் யோபு குற்றப்படுத்துகிறான். (யோபு 9:25-10:17). முடிவில் யோபு தான் பிறந்ததற்காகப் புலம்பி, தன்னுடைய மரணத்தை எதிர்நோக்கி இருப்பதாக அறிவிக்கிறான்.(யோபு 10:18-22).

"தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி?" - தேவனுக்கு முன்பாக மனுஷனால் நீதிமானாக இருக்க முடியும். ஆனால் அது எப்படியென்பது யோபுவுக்குத் தெரியவில்லை. மனுஷருடைய பாவங்கள் அநேகம். கர்த்தர் மனுஷருடைய பாவங்களை நினைத்துப் பார்த்தால் நம்மால் அவருக்குப் பதில் கூறமுடியாது. மனுஷன் தொடர்ந்து பாவம் செய்துகொண்டே போகிறான். மனுஷனுடைய பாவத்தின் மிகுதியினால் அவன் பாதாளத்திற்குப் போவதற்கு ஆயத்தமாக இருக்கிறான். இந்தப் பாவங்களெல்லாம் மனுஷனைவிட்டு அகற்றப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் விசுவாசம் வைத்து, நம்முடைய பாவங்களெல்லாம் அவருடைய இரத்தத்தினால் கழுவப்படவேண்டும். (மத் 26:28; அப் 3:19; ரோமர் 3:21-25; 1யோவான் 1:7-9; வெளி 1:5; வெளி 5:9-10) அப்போது பாவம் செய்யாத ஒரு மனுஷனைப்போல கர்த்தருடைய பார்வையில் மனுஷன் நீதிமானாக்கப்படுகிறான். (ரோமர் 5:1; 2கொரி 1:9-10; 2கொரி 5:17-21; எபே 2:8-9; தீத்து 2:11-14; தீத்து 3:5; எபி 7:25; 1யோவான் 1:9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18). யோபுவுக்குப் பாடுகள் வருவதற்கு முன்பாக அவனும் கர்த்தருடைய சமுகத்தில் நீதிமானாகவே இருந்தான். (யோபு 1:1,5,8-10, 22; யோபு 2:3,9-10) ஆனால் அவனுக்குப் பாடுகள் வந்த பின்போ தேவனுக்கு முன்பாகத் தன்னால் எப்படி நீதிமானாக இருக்கமுடியும் என்னும் சந்தேகம் வந்துவிடுகிறது.

கர்த்தரைப் பற்றிய சத்தியம்

1. கர்த்தர் மனுஷனை நியாயம் விசாரிக்கிறார். (யோபு 9:2).
2. கர்த்தர் மனுஷனைப் பாவத்தின் நிமித்தமாகக் குற்றப்படுத்துகிறார். (யோபு 9:3).
3. அவர் எப்போதும் சரியானதையே செய்கிறார்.

9 அதிகாரம்

4. அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர் (யோபு 9:4,19).

5. பெலத்தில் பராக்கிரமமுள்ளவர்.

6. அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் ஒருவனுமில்லை. யார்?

7. அவர் பர்வதங்களைச் சடிதியாய்ப் பேர்க்கிறார் (யோபு 9:5).

8. அவர் சூரியனுக்குக் கட்டளையிட அது உதிக்காதிருக்கும்; அவர் நட்சத்திரங்களை மறைத்துப் போடுகிறார். (யோபு 9:6).

9. அவர் சூரியனுக்குக் கட்டளைடுகிறார். (யோபு 9:7).

10. அவர் நட்சத்திரங்களை மறைத்துப் போடுகிறார்.

11. அவர் வானங்களை விரிக்கிறார். (யோபு 9:8).

12. சமுத்திர அலைகளின்மேல் நடக்கிறார்.

13. அவர் துருவச்சக்கர நட்சத்திரங் களையும், மிருகசீரிஷத்தையும், அறுமீனையும், தட்சண மண்டலங்களையும் உண்டாக்கினவர். (யோபு 9:9).

14. ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களைச் செய்கிறார். (யோபு 9:10).

15. எண்ணிமுடியாத அதிசயங்களை அவர் செய்கிறார்.

16. அவர் அதரிசனமானவர். (யோபு 9:11).

17. அவர் சர்வ வல்லவர். (யோபு 9:12).

18. தம்முடைய கோபத்தை வெளிப் படுத்துகிறார். அதனால் அகங்காரிகள் தாழ்மையடைகிறார்கள். (யோபு 9:13).

19. அவர் எல்லோரையும் நியாயம் விசாரிக்கிறார். (யோபு 9:15).

20. அவர் ஒரு மனுஷனல்ல. (யோபு 9:32).

21. அவர் துன்மார்க்கனை அறிகிறார். (யோபு 10:7).

22. அவருடைய கையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. (யோபு 10:7).

23. அவர் மனுஷனைச் சிருஷ்டித்தார். (யோபு 10:8-9,11-12).

24. மனுஷருடைய பாவங்களைக் குறித்து கணக்கு வைத்திருக்கிறார். (யோபு 10:14).

25. தம்முடைய நிபந்தனைகள் நிறைவேறும் வரையிலும் அவர் பாவங்களை மன்னிப்பதில்லை. (யோபு 10:14).

26. தமது அதிசய வல்லமையை மனுஷனுக்கு விளங்கப்பண்ணுகிறார். (யோபு 10:16).

(2) தேவனுடைய வல்லமையின் பன்னிரெண்டு அம்சம்

யோபு 9:5 அவர் பர்வதங்களைச் சடிதியாய்ப் பேர்க்கிறார்; தம்முடைய கோபத்தில் அவைகளைப் புரட்டிப் போடுகிறார்.

யோபு 9:6 பூமியின் தூண்கள் அதிரத் தக்கதாய் அதை அதின் ஸ்தானத்தினின்று அசையப் பண்ணுகிறார்.

யோபு 9:7 அவர் சூரியனுக்குக் கட்டளையிட அது உதிக்காதிருக்கும்; அவர் நட்சத்திரங்களை மறைத்துப் போடுகிறார்.

யோபு 9:8 அவர் ஒருவரே வானங்களை விரித்து, சமுத்திர அலைகளின்மேல் நடக்கிறவர்.

யோபு 9:9 அவர் துருவச்சக்கர நட்சத்திரங்களையும், மிருக சீரிஷத்தையும், அறுமீனையும், தட்சண மண்டலங்களையும் உண்டாக்கினவர்.

யோபு - தொகுப்புரை

9 அதிகாரம்

யோபு 9:10 ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.

யோபு 9:11 இதோ, அவர் என் அருகில் போகிறார், நான் அவரைக் காணேன்; அவர் கடந்துபோகிறார், நான் அவரை அறியேன்.

யோபு 9:12 இதோ, அவர் பறித்துக்கொண்டு போகிறார், அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார்?

யோபு புஸ்தகத்தில் வானவியல் (Cosmology) சிந்தனைகள்

1. பூமியதிர்ச்சி (யோபு 9:5-6)
2. சூரிய உதயமும், அஸ்தமனமும். (யோபு 9:7; யோபு 36:32)
3. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் (யோபு 9:7)
4. ஆகாயவிரிவு (யோபு 9:8)
5. உத்தர மண்டலம். (யோபு 26:7)
6. பூமி அந்தரத்தில் தொங்குவது. (யோபு 26:7)
7. வார்க்கப்பட்ட கண்ணாடியைப் போல கெட்டியான ஆகாய மண்டலங்கள் (யோபு 37:18)
8. பூமியின் அஸ்திபாரங்கள்(யோபு 38:4)
9. சமுத்திரத்தின் அளவு (யோபு 38:8-11)
10. பகலும் இரவும் (யோபு 38:12)
11. சமுத்திரத்திலுள்ள நீரூற்றுக்கள் (யோபு 38:16)
12. பூமியின் சிருஷ்டிகள் (யோபு 38:39-41; யோபு 39:1-30; யோபு 40:15-24)

யோபு புஸ்தகத்தில் நட்சத்திர மண்டலம் (Astronomy) பற்றிய சிந்தனைகள்

1. துருவ நட்சத்திரங்கள், மிருகசீரிஷம், அறுமீன், தட்சண மண்டலம் (யோபு 9:7-8)
2. பூமிக்கு முன்பாக நட்சத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட்டது. (யோபு 38:7)
3. வான்மண்டலத்தின் ஆளுகைகள் (யோபு 38:31-33)

யோபு புஸ்தகத்தில் புவியியல் (Geography) பற்றிய சிந்தனைகள்

1. பிரயாணம் (யோபு 21:29)
2. நான்கு திசைகள் (யோபு 23:8-9)
3. பூமியின் உருண்டை வடிவம் (யோபு 26:10).

யோபு புஸ்தகத்தில் வானிலை ஆய்வு (Meteorology) பற்றிய சிந்தனைகள்

1. மின்னல், மேகம், காற்று (யோபு 37:21-23)
2. புயல்காற்று (யோபு 1:16-19; யோபு 27:20-21; யோபு 36:32-33; யோபு 37:1-4)
3. பனி (யோபு 38:28)
4. மழை (யோபு 36:27-28; யோபு 38:28)
5. மேகமண்டலம் (யோபு 36:27-29)
6. மின்னலும், இடியும் (யோபு 37:3-5)
7. பனிமழையும், கல்மழையும் (யோபு 37:6; யோபு 38:22)
8. வடதிசையில் குளிர் (யோபு 37:9)
9. உறைந்த பனிக்கட்டி (யோபு 37:10; யோபு 38:29)
10. அதிகாலையின் வெளுப்பு (யோபு 38:12-14)
11. ஒளியும், இருளும் (யோபு 38:19-20)

9 அதிகாரம்

12. கடல் அலைகள் (யோபு 9:8)

யோபு புஸ்தகத்தில் சுரங்கவியல் (Mining operations) பற்றிய சிந்தனைகள்

1. தங்கம், வெள்ளி மேலும் மற்ற உலோகங்களைப் பூமியிலிருந்து தோண்டி எடுப்பது. (யோபு 28:1-5)

2. விலையுயர்ந்த கற்களைப் பூமியிலிருந்து தோண்டியெடுப்பது. (யோபு 28:6-11, 16,18-19)

யோபு புஸ்தகத்தில் எழுத்தியல் (Writing and engraving) பற்றிய சிந்தனைகள்

1. எழுதப்பட்ட வார்த்தைகள், புஸ்தகத்தில் வரையப்பட்டும், கருங்கல்லிலே உளிவெட்டாகவும், ஈய எழுத்தாகவும் பதிக்கப்படுதல். (யோபு 19:23-24)

2. யோபு தன்னுடைய வழக்கை எழுதி கொடுக்க விரும்புகிறான். (யோபு 31:35-36)

யோபு புஸ்தகத்தில் பிரயாணம் (Modes of travel) பற்றிய சிந்தனைகள்

1. பயணக்காரர் (Caravans) (யோபு 6:15-20)

2. ஓடுகிறவர் (Runners) (யோபு 9:25)

3. கப்பல்கள் (யோபு 9:26)

யோபு புஸ்தகத்தில் இராணுவக்கலை (Military art) பற்றிய சிந்தனைகள்

1. விஷமுள்ள அம்பு (யோபு 6:4)

2. கேடகம், அம்புகள் மற்ற ஆயுதங்கள் (யோபு 15:26; யோபு 16:12-14; யோபு 20:24)

3. சேனைகள் (யோபு 19:12)

4. குதிரைகள் (யோபு 39:19-25)

யோபு புஸ்தகத்தில் மேலே கூறப்பட்டிருக்கும் சிந்தனைகள் தவிர, மருத்துவம் (யோபு 13:4; ஆதி 50:2), இசை (யோபு 21:12; யோபு 30:9,31), வேட்டையாடுதல் (யோபு 18:7-13), விவசாயம் (யோபு 15:33; யோபு 20:17; யோபு 24:6,11; யோபு 29:6; யோபு 31:38-40) ஆகியவற்றைப் பற்றிய சிந்தனைகளும் உள்ளன.

"நான் அவரை அறியேன்" - தேவன் அதரிசனமானவர் என்பதை யோபு இவ்வாறு கூறுகிறான்.

(3) தேவனுக்கு யோபுவால் மறுமொழி கொடுக்க இயலாது ஆனால் அவரிடம் ஜெபிக்க முடியும்

யோபு 9:13 தேவன் தம்முடைய கோபத்தைத் திருப்பமாட்டார்; ஒருவருக்கொருவர் துணைநிற்கிற அகங்காரிகள் அவருக்கு அடங்க வேண்டும்.

யோபு 9:14 இப்படியிருக்க, அவருக்கு மறுமொழி கொடுக்கவும், அவரோடே வழக்காடும் வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளவும் நான் எம்மாத்திரம்?

யோபு 9:15 நான் நீதிமானாயிருந்தாலும் அவரோடே வழக்காடாமல், என் நியாயாபதியினிடத்தில் இரக்கத்துக்குக் கெஞ்சுவேன்.

"தேவன் தம்முடைய கோபத்தைத் திருப்பமாட்டார்" - தேவனுடைய கோபம் தன்மீது பற்றி எரிவதாகவும், அது ஒருபோதும் குறையாது என்றும் யோபு நினைக்கிறான். கர்த்தருக்குத் தன்னால் பதில் கூறமுடியாது என்றும், கர்த்தருடைய சமூகத்தில் தான் தொடர்ந்து ஜெபிக்கப் போவதாகவும் யோபு தீர்மானம் பண்ணுகிறான். (யோபு 9:13-15).

யோபு - தொகுப்புரை

9 அதிகாரம்

(4) யோபுவின் குழப்பம் - ஜெபத்திற்கு பதில் கிடைத்ததில் சந்தேகம்

யோபு 9:16 நான் கெஞ்ச, அவர் எனக்கு உத்தரவு அருளினாலும், அவர் என் விண்ணப்பத்துக்குச் செவிகொடுத்தார் என்று நம்பேன்.

"அவர் எனக்கு உத்தரவு அருளினாலும்" - கர்த்தர் உத்தரவு அருளினாலும் அது கர்த்தருடைய உத்தரவு தான் என்று யோபு நம்பமாட்டானாம். இப்படிப்பட்ட அவிசுவாசத்தோடு ஜெபம் பண்ணுவதினால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

(5) தேவன் தன்னைக் கசப்பினால் நிரப்புவதாக யோபு தேவன்மீது குற்றம் சாட்டுகிறான்

யோபு 9:17 அவர் புசலினால் என்னை முறிக்கிறார்; முகாந்தரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார்.

யோபு 9:18 நான் மூச்சுவிட எனக்கு இடங்கொடாமல், கசப்பினால் என்னை நிரப்புகிறார்.

"முகாந்தரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார்" - இது தவறான கருத்து. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக் காயங்களை உண்டாக்கமாட்டார். மனுஷனுக்குக் காயங்களையும், வியாதிகளையும் சாத்தானே கொடுக்கிறான்.(மத் 7:7-11; லூக்கா 11:9-13).

யோபு தேவனைக் குறித்துக் கூறும் தவறான கருத்துக்கள்

1. அவர் புசலினால் என்னை முறிக்கிறார். (யோபு 9:17).
2. முகாந்தரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார்.
3. நான் மூச்சுவிட எனக்கு இடங் கொடுக்கவில்லை. (யோபு 9:18).
4. கசப்பினால் என்னை நிரப்புகிறார். (யோபு 9:18).
5. சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் அவர் அழிக்கிறார். (யோபு 9:22).
6. அவர் குற்றமில்லாதவர்களின் சோதனையைப் பார்த்து நகைக்கிறார். (யோபு 9:23).
7. உலகத்தைத் துன்மார்க்கர் கையில் விட்டிருக்கிறார். (யோபு 9:24).
8. நியாயாதிபதிகளின் முகத்தை மூடிப் போடுகிறார் (யோபு 9:24).
9. தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையில் மத்தியஸ்தன் இல்லை. (யோபு 9:33).
10. தமது மிலாற்றை என்மீது வைக்கிறார். (யோபு 9:34).
11. அவருடைய பயங்கரம் என்னைக் கலங்கப்பண்ணுகிறது.
12. எனக்குக் காரணத்தை அறிவிக்காமல் என்னைக் குற்றவாளியென்று தீர்க்கிறார். (யோபு 10:2).
13. என்னை ஒடுக்குகிறார். (யோபு 10:3).
14. தம்முடைய கைகளின் கிரியையை வெறுக்கிறார்.
15. துன்மார்க்கரின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறார்.
16. என்னை நிர்மூலமாக்குகிறார். (யோபு 10:8).
17. என்னைப் பால்போல் வார்க்கிறார். (யோபு 10:10).
18. என்னைத் தயிர்போல் உறையப் பண்ணுகிறார்.
19. சிங்கத்தைப்போல என்னை வேட்டையாடுகிறார். (யோபு 10:16).
20. சாட்சிகளை எனக்கு விரோதமாய் இரட்டிக்கப்பண்ணுகிறார். (யோபு 10:17).

9 அதிகாரம்

21. நான் சற்று இளைப்பாறக்கூடாதபடி அவர் என்னைவிட்டு ஓயாமல் இருக்கிறார். (யோபு 10:22).

தன்னுடைய பாடுகளில் யோபு கர்த்தரைக் குறித்து தவறான கருத்துக்களைக் கூறுகிறான். சாத்தானே யோபுவிற்குப் பாடுகளைக் கொடுக்கிறவன். (யோபு 1:12-19; யோபு 2:6-7).

"கசப்பினால் என்னை நிரப்புகிறார்" - இது உண்மையான வார்த்தையல்ல. இது உண்மை என்றால் யோபு இப்போது உயிரோடு இருக்க முடியாது. கர்த்தர்மீது குற்றம் கூறுவதே பாவம். யோபு பாவத்திற்கு மேல் பாவமாகத் தன்மீது குவித்துக் கொள்கிறான். நம்மிடத்தில் எந்தக் கசப்பும் யார்மீதும் இருக்கக்கூடாது. (எபே 4:31; எபி 12:15).

(6) அநீதி, உதவியின்மை ஆகியவற்றைப் பற்றி யோபுவின் முறையீடு

யோபு 9:19 பெலத்தைப் பார்த்தால், அவரே பெலத்தவர்; நியாயத்தைப் பார்த்தால், என் பட்சத்தில் சாட்சி சொல்லுகிறவன் யார்?

யோபு 9:20 நான் என்னை நீதிமானாக்கினாலும் என் வாயே என்னைக் குற்றவாளியாக்கும்; நான் உத்தமன் என்று சொன்னாலும், நான் மாறுபாடானவன் என்று அது சாட்சிகொடுக்கும்.

யோபு 9:21 நான் உத்தமனென்றாலும் என் உள்ளத்தை நான் அறியேன்; என் ஜீவனை அரோசிப்பேன்.

யோபு புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் "ஆல்" "If's" என்னும் நிபந்தனைகள்

1. நான் கெஞ்சினால் (யோபு 9:16)
2. பெலத்தைப் பார்த்தால் (யோபு 9:19)
3. நியாயத்தைப் பார்த்தால்.
4. நான் என்னை நீதிமானாக்கினால் (யோபு 9:20)
5. நான் உத்தமன் என்று சொன்னால்,
6. என் அங்கலாய்ப்பை நான் மறந்தால் (யோபு 9:27)
7. நான் பொல்லாதவனாய் இருந்தால் (யோபு 9:29)
8. நான் சுத்தம் பண்ணினால் (யோபு 9:30)
9. நான் பாவம் செய்தால் (யோபு 10:14)

(7) தேவன் தன்னிடத்தில் இரக்கமில்லாமல் இருக்கிறார் ஆனால் துன்மார்க்கரைத் தண்டிப்பதில்லை என்று யோபு தேவனிடத்தில் முறையிடுகிறான்

யோபு 9:22 ஒரு காரியம் உண்டு, அதைச் சொல்லுகிறேன்; சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் அவர் அழிக்கிறார்.

யோபு 9:23 சவுக்கானது அசுப்பிலே வாதித்துக் கொல்லும்போது, அவர் குற்றமில்லாதவர்களின் சோதனையைப் பார்த்து நகைக்கிறார்.

யோபு 9:24 உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது; அதிலி ருக்கிற நியாயாதிபதிகளின் முகத்தை மூடிப்போடுகிறார்; அவர் இதைச் செய்கிறதில்லையென்றால், பின்னை யார் இதைச் செய்கிறார்.

"சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் அவர் அழிக்கிறார்" - இது கர்த்தருடைய கிரியை அல்ல. சாத்தானே ஜனங்களை அழிக்கிறவன். (யோவான் 10:10).

"அவர் குற்றமில்லாதவர்களின் சோதனையைப் பார்த்து நகைக்கிறார்" - யாராவது ஒருவன் கர்த்தரை மறுதலித்து அவரைப் பார்த்து நகைத்தால் கர்த்தரும் பதிலுக்கு அவனைப் பார்த்து நகைப்பார். மற்றப்படி கர்த்தர் குற்றமில்லாதவர்களின் சோதனையைப் பார்த்து நகைக்கிறவர் அல்ல. (நீதி 1:23-33; உபா 28:63).

யோபு - தொகுப்புரை

9 அதிகாரம்

"உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது" - கர்த்தர் துன்மார்க்கர் கையில் உலகத்தைக் கொடுக்கவில்லை. கர்த்தர் ஆதாமிடம் உலகத்தைக் கொடுத்த போது அவன் பாவம் செய்யாதவனாக இருந்தான். ஆனால் அதன்பின்பு, அவன் சாத்தானுக்குக் கீழ்ப்படிந்து பாவம் செய்தான். (ஆதி 1:26-31; ஆதி 3:1-19; ரோமர் 5:12-21). லூசிபரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். (ஏசா 14:12-14; எசே 28:11-17)

(8) தேவனிடத்தில் யோபுவின் முறையிடும் குற்றச்சாட்டும்

யோபு 9:25 என் நாட்கள் அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது; அவைகள் நன்மையைக் காணாமல் பறந்துபோம்.

யோபு 9:26 அவைகள் வேகமாய் ஓடுகிற கப்பல்களைப்போலவும், இரையின்மேல் பாய்கிற கழுகைப்போலவும் கடந்து போகிறது.

யோபு 9:27 என் அங்கலாய்ப்பை நான் மறந்து, என் முகத்தின் துக்கத்தை மாற்றி, திடன்கொள்வேன் என்று சொன்னால்,

யோபு 9:28 என் வருத்தங்களைப் பற்றிப் பயமாயிருக்கிறேன்; என்னைக் குற்றமில்லாதவனாக எண்ணமாட்டீர் என்று அறிவேன்.

யோபு 9:29 நான் பொல்லாதவனாயிருந்தால், விருதாவாய்ப் போராடவேண்டியது என்ன?

யோபு 9:30 நான் உறைந்த மழைத் தண்ணீரில் முழுகி, என் கைகளைச் சவுக்காரத்தினால் சுத்தம்பண்ணினாலும்,

யோபு 9:31 நீர் என்னைச் சேற்றுப்பள்ளத்திலே அமிழ்த்துவீர்; அப்பொழுது என் வஸ்திரமே என்னை அருவருக்கும்.

யோபு கர்த்தரிடத்தில் முறையிடுவதும், கர்த்தருக்கு எதிராகக்கூறும் குற்றச்சாட்டுக்களும்

1. என் நாட்கள் அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது (யோபு 9:25).
2. அவைகள் பறந்துபோம்.
3. அவைகள் நன்மையைக் காணாது.
4. அவைகள் வேகமாய் ஓடுகிற கப்பல்களைப் போல இருக்கிறது. (யோபு 9:26).
5. இரையின்மேல் பாய்கிற கழுகைப்போல கடந்து போகிறது.
6. என்னைக் குற்றமில்லாதவனாக எண்ணமாட்டீர் (யோபு 9:28)
7. என் அங்கலாய்ப்பை நான் மறந்தாலும் எனக்கு நன்மை இல்லை. (யோபு 9:27)
8. என் முகத்தின் துக்கத்தை மாற்றினாலும் எனக்கு நன்மை இல்லை.
9. என் வருத்தங்களைப்பற்றிப் பயமாயிருந்தாலும் எனக்கு நன்மை இல்லை. (யோபு 9:28)
10. நான் பொல்லாதவனாயிருந்தால், விருதாவாய்ப் போராடவேண்டியது என்ன? (யோபு 9:29)
11. நீர் என்னைச் சேற்றுப்பள்ளத்திலே அமிழ்த்துவீர். (யோபு 9:31).
12. என் வஸ்திரமே என்னை அருவருக்கும்.

"அஞ்சற்காரர்" - ராஜாக்கள் காலத்தில் தகவல்களை அனுப்புவதற்கு வேகமாக ஓடுகிற அஞ்சற்காரரை வைத்திருந்தார்கள். எரேமியாவின் காலத்தில் இதுபோன்ற அஞ்சற்காரர்கள் இருந்திருக்கிறார்கள். (எரே 51:31).

யோபு - தொகுப்புரை

9 அதிகாரம்

(9) மத்தியஸ்தர் இல்லாமல் இருப்பதினால் யோபுவால் தேவனுக்குப் பதில்கூற முடியவில்லை

யோபு 9:32 நான் அவருக்குப் பிரதியுத்தரம் சொல்லுகிறதற்கும், நாங்கள் கூடி நியாயத்திற்கு வருகிறதற்கும், அவர் என்னைப்போல மனுஷன் அல்லவே.

யோபு 9:33 எங்கள் இருவர்மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே.

மத்தியஸ்தன் (daysman) - יָכַח - yaw-kahh' - 3198

வினைச்சொல் - வழக்காடு, கூடிந்துகொள், நியமி, தண்டி, தண்டனை செய், கண்டி, தீர்ப்புச்செய், தர்க்கி, சிட்சி, மத்தியஸ்தனாயிரு, நியாயத்தைத் தெரியக்காட்டு (to be right; argue; decide; justify; convict; dispute; judge; maintain; plead; rebuke; reason) - தேவனுக்கும், மனுஷனுக்கும் இயேசு கிறிஸ்து மத்தியஸ்தராயிருக்கிறார் என்னும் சத்தியம் அக்காலத்தில் யோபுவிற்கு வெளிப்படுத்தப்படவில்லை. (1தீமோ 2:4-5).

(10) தேவன் தன்னைக் கலங்கப் பண்ணுவதாக யோபு தேவனைக் குற்றப்படுத்துகிறான்

யோபு 9:34 அவர் தமது மிலாற்றை என்னை விட்டு அகற்றுவாராக; அவருடைய பயங்கரம்என்னைக் கலங்கப் பண்ணாதிருப்பதாக.

யோபு 9:35 அப்பொழுது நான் அவருக்குப் பயப்படாமல் பேசுவேன்; இப்பொழுதோ அப்படிச் செய்ய இடமில்லை.

10 அதிகாரம்

(11) யோபு தன்னுடைய கசப்பினால், தேவன் அநீதி செய்கிறார் என்றும் துன்மார்க்கருக்கு உதவி செய்கிறார் என்றும் குற்றப்படுத்துகிறான்

யோபு 10:1 என் ஆத்துமா ஜீவனை அரோசிக்கிறது, நான் என் துயரத்துக்கு எனக்குள்ளே இடங்கொடுத்து, என் மனச் சஞ்சலத்தினாலே பேசுவேன்.

யோபு 10:2 நான் தேவனை நோக்கி: என்னைக் குற்றவாளியென்று தீர்க்காதிரும்; நீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர், அதை எனக்குத் தெரியப்படுத்தும் என்பேன்.

யோபு 10:3 நீர் என்னை ஒடுக்கி, உம்முடைய கைகளின் கிரியையை வெறுத்து, துன்மார்க்கரின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறதுஉமக்குநன்றாயிருக்குமோ?

யோபுவின் ஆத்துமா

1. அரோசிக்கும் ஜீவன்.
2. குற்றச்சாட்டுக்கள் நிரம்பியது.
3. துயரமுள்ளது.
4. தேவனுக்கு எதிராக முறையிடுவது. (யோபு 10:2-3)

"மனச்சஞ்சலம்" - இந்த வாக்கியம் யோபுவின் புஸ்தகத்தில் 7 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யோபு 10:1; யோபு 3:20; யோபு7:11; யோபு 9:18; யோபு 13:26; யோபு 21:25; யோபு 23:2).

மனச்சஞ்சலம் அடைந்தவர்கள்

1. யோபு (யோபு 3:20; யோபு 7:11; யோபு 9:18; யோபு 10:1; யோபு 13:26; யோபு 21:25; யோபு 23:2)
2. ஏசா - ஆசீர்வாதத்தை இழந்தபோது (ஆதி 27:34)
3. இஸ்ரவேல் - எகிப்து தேசத்தில் அடிமையாக இருந்தபோது (யாத் 1:14)
4. நகோமி - தன் குடும்பத்தாரை இழந்தபோது. (ரூத் 1:20)
5. அன்னாள் - குழந்தையில்லாத மலடியாக இருந்தபோது. (1சாமு 1:10)
6. இஸ்ரேல் - யுத்தத்தில் தோல்வியுற்றதினால் (2இராஜா 14:26)
7. மொர்தெகாய் - ஆமான் நிமித்தமாக (எஸ் 4:1)
8. யூதா - தோல்வியுற்றபோது (புல 1:4)
9. எரேமியா - யூதா, எருசலேம் ஆகியவற்றின் அழிவின் நிமித்தம் (புல 3:15)
10. பேதுரு - தன்னுடைய பாவத்தின் நிமித்தம் (மத் 26:75)

யோபு தேவன்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. என்னைக் குற்றவாளியென்று தீர்க்கிறீர்.
2. நீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர்.
3. நீர் என்னை ஒடுக்குகிறீர். (யோபு 10:3).
4. உம்முடைய கைகளின் கிரியையை வெறுக்கிறீர்.
5. துன்மார்க்கரின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறீர்.

(12) தேவன் தன்னை நிர்மூலமாக்குவதாக யோபு குற்றம் சாட்டுகிறான்

யோபு 10:4 மாம்சக் கண்கள் உமக்கு உண்டோ? மனுஷன் பார்க்கிற பிரகாரமாய்ப் பார்க்கிறீரோ?

10 அதிகாரம்

யோபு 10:5 நீர் என் அக்கிரமத்தைக் கிண்டிக் கிளப்பி, என் பாவத்தை ஆராய்ந்து விசாரிக்கிறதற்கு,

யோபு 10:6 உம்முடைய நாட்கள் ஒரு மனுஷனுடைய நாட்களைப்போலவும், உம்முடைய வருஷங்கள் ஒரு புருஷனுடைய ஜீவகாலத்தைப்போலவும் இருக்கிறதோ?

யோபு 10:7 நான் துன்மார்க்கன் அல்ல என்பது உமக்குத் தெரியும்; உம்முடைய கைக்கு என்னைத் தப்புவிக்கிறவன் இல்லை.

யோபு 10:8 உம்முடைய கரங்கள் என்னையும் எனக்குரிய எல்லாவற்றையும் உருவாக்கிப் படைத்திருந்தும், என்னை நிர்மூலமாக்குகிறீர்.

"நான் துன்மார்க்கன் அல்ல என்பது உமக்குத் தெரியும்" - கர்த்தர் நீதியானவர் என்பதை யோபு அறிந்திருக்கிறான். ஆகையினால் அவர் யோபுவைக் காரணமில்லாமல் வாதிக்க மாட்டார். சாத்தானே தன்னை வாதிக்கிறான் என்பதை யோபு புரிந்து கொள்ளவில்லை. கர்த்தர் தன்னை அநியாயமாகத் தண்டிப்பதாக யோபு புலம்புகிறான். (யோபு 1:22; யோபு 2:9-10). கர்த்தருடைய கைக்கு யாரையும் யாராலும் தப்புவிக்க முடியாது. இங்கு யோபு கூறுவது மெய்தான். ஆனால் இந்த வாக்கியத்தை ஆதாரமாக வைத்து, கர்த்தர் தன்னை வாதிப்பதாகக் கூறுகிறான். தன்னுடைய வாதையிலிருந்து யாராலும் தனக்கு உதவி புரிய முடியாது என்று வாதிடுகிறான். கர்த்தரால் மட்டுமே தன்னை இந்த வாதையிலிருந்து தப்புவிக்க முடியும் என்றும், ஆனால் அவர் தமது வல்லமையைப் பயன்படுத்தி தன்னைத் தப்புவிக்கவில்லை என்றும் யோபு கர்த்தர்மீது குற்றம் சுமத்துகிறான்.

"உம்முடைய கரங்கள் என்னையும் எனக்குரிய எல்லாவற்றையும் உருவாக்கிப் படைத்திருந்தும்" - கர்த்தர் ஆதாமையும், ஏவாளையும் மட்டுமே தம்முடைய கரங்களினால் சிருஷ்டித்தார். யோபு மனுஷருடைய சந்ததியில் பிறந்திருக்கிறான். ஆனாலும் எல்லோரும் கர்த்தருடைய சிருஷ்டிகளாகவே இருக்கிறோம்.

(13) உதவிக்காக யோபு தேவனிடம் ஜெபம் பண்ணுகிறான். ஆயினும் தேவன் தமது கோபத்தை தன்மீது கூட்டுவதாக யோபு குற்றப் படுத்துகிறான்

யோபு 10:9 களிமண்போல உன்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப் போகப்பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும்.

யோபு 10:10 நீர் என்னைப் பால்போல் வார்த்து, தயிர்போல் உறையப்பண்ணினீர் அல்லவோ?

யோபு 10:11 தோலையும் சதையையும் எனக்குத் தரித்து, எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர்.

யோபு 10:12 எனக்கு ஜீவனைத் தந்ததும் அல்லாமல், தயவையும் எனக்குப் பாராட்டினீர்; உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது.

யோபு 10:13 இவைகள் உம்முடைய உள்ளத்தில் மறைந்திருந்தாலும், இது உமக்குள் இருக்கிறது என்று அறிவேன்.

யோபு 10:14 நான் பாவஞ்செய்தால், அதை நீர் என்னிடத்தில் விசாரித்து, என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமல் விடீர்.

யோபு 10:15 நான் துன்மார்க்கனாயிருந்தால் எனக்கு ஐயோ! நான் நீதிமானாயிருந்தாலும் என் தலையை நான் எடுக்கமாட்டேன்; அவமானத்தால் நிரப்பப்பட்டேன்; நீர் என் சிறுமையைப் பார்த்தருளும், அது அதிகரிக்கிறது.

யோபு - தொகுப்புரை

10 அதிகாரம்

யோபு 10:16 சிங்கத்தைப்போல என்னை வேட்டையாடி, எனக்கு விரோதமாய் உமது அதிசய வல்லமையை விளங்கப் பண்ணுகிறீர்.

யோபு 10:17 நீர் உம்முடைய சாட்சிகளை எனக்கு விரோதமாய் இரட்டிக்கப் பண்ணுகிறீர்; என்மேல் உம்முடைய கோபத்தை அதிகரிக்கப் பண்ணுகிறீர்; போராட்டத்தின்மேல் போராட்டம் அதிகரிக்கிறது.

"உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது" - யோபு கர்த்தரைப் பற்றி ஒருசில நல்வார்த்தைகளைக் கூறினாலும் சீக்கிரமாகவே அவரைக் கடிந்து கூற ஆரம்பித்து விடுகிறான். அவனுடைய பாடுகள் அவனைத் தொடர்ந்து வாதித்ததினால் அவனால் கர்த்தரைக் குறித்து நல்லவிதமாகச் சிந்திக்க முடியவில்லை. (யோபு 10:16-17,20).

வல்லமையை விளங்கப்பண்ணுதல்

(increaseth) - גָּאָה - gaw-aw' - 1342

வினைச்சொல் - மகிமையாயிரு, ஆழுமாயிரு, வல்லமையாயிரு, வளர் **(to rise up, grow up, be exalted triumphantly)**

"உம்முடைய சாட்சிகளை எனக்கு விரோதமாய் இரட்டிக்கப்பண்ணுகிறீர்" - இந்த வாக்கியத்தில் சாட்சிகள் என்பது யோபுவின் வியாதிகளையும், வாதைகளையும், பாடுகளையும் குறிக்கும்.

(14) யோபு தனது பிறப்பிற்காக புலம்புகிறான் - தனது மரணத்தைக் குறித்து எதிர்பார்த்து அஞ்சுகிறான்

யோபு 10:18 நீர் என்னைக் கர்ப்பத்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன? ஒரு கண்ணும் என்னைக் காணாதபடி, நான் அப்பொழுதே ஜீவித்துப்போனால் நலமாமே.

யோபு 10:19 நான் ஒருக்காலும் இல்லாதது போலிருந்து, கர்ப்பத்திலிருந்து பிரேதக் குழிக்குக் கொண்டுபோகப்பட்டிருப்பேன்.

யோபு 10:20 என் நாட்கள் கொஞ்சமல்லவோ?

யோபு 10:21 காரிருளும் மரணாந்தகாரமுமான இருண்ட தேசமும், இருள்சூழ்ந்த ஒழுங்கில்லாத மரணாந்தகாரமுள்ள தேசமும், ஒளியும் இருளாகும் தேசமுமாகிய, போனால் திரும்பிவராததேசத்துக்கு, நான் போகுமுன்னே,

யோபு 10:22 நான் சற்று இளைப்பாறும்படி நீர் என்னைவிட்டு ஓய்ந்திரும் என்றான்.

"நான் அப்பொழுதே ஜீவித்துப்போனால் நலமாமே" - யோபு மறுபடியும் மறுபடியும் தன்னுடைய பிறப்பையும், தன்னுடைய பிறந்த நாளையும் சபிக்கிறான்.

மரணத்தை விளக்கும் வாக்கியம்

1. போனால் திரும்பிவராததேசம்.
2. காரிருள் சூழ்ந்த தேசம்.
3. மரணாந்தகாரமான தேசம்
4. இருண்ட தேசம். (யோபு 10:22)
5. இருள்சூழ்ந்த ஒழுங்கில்லாத தேசம்.
6. ஒளியும் இருளாகும் தேசம்

11 அதிகாரம்

6. சோப்பாரின் சம்பாஷணை

(1)யோபுவின் ஐந்து பாவங்களுக்காக அவனைக் குற்றப்படுத்துகிறான்

யோபு 11:1 அப்பொழுது நாகமாத்தியனாகிய சோப்பார் பிரதியுத்தரமாக:

யோபு 11:2 ஏராளமான வார்த்தைகளுக்கு உத்தரவு சொல்லவேண்டாமோ? வாய்ச்சாலகன் நீதிமானாய் விளங்குவானோ?

யோபு 11:3 உம்முடைய வீம்பு வார்த்தைகளுக்கு மனுஷர் மவுனமாயிருப்பார்களோ? நீர் பரியாசம்பண்ணும்போது, ஒருவரும் உம்மை வெட்கப்படுத்த வேண்டாமோ?

யோபு 11:4 என் சொல் சுத்தம் என்றும், நான் தேவரீருடைய பார்வைக்குத் துப்புரவானவன் என்றும் நீர் சொல்லுகிறீர்.

சோப்பாரின் பிரதியுத்தரம்

எலிப்பாஸ், பில்தாத் ஆகியோர் யோபுவிடம் தங்களுடைய குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறார்கள். யோபுவும் அவர்களுக்குப் பதில் கூறியிருக்கிறான். இதன் பின்பு, யோபுவின் மற்றொரு சிநேகிதனான சோப்பார் தன்னுடைய குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறான். சோப்பாரின் குற்றச்சாட்டுக்களின் விவரம் வருமாறு:

1. யோபு பாவம் செய்திருக்கிறான். (யோபு 11:1-4).
2. யோபுவின் பாவங்களுக்கு ஏற்ற தண்டனை இன்னும் அவனுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. (யோபு 11:5-6)
3. தேவனுக்கு முன்பாக மனுஷன் உதவியற்றவனாக இருக்கிறான். (யோபு 11:7-12)
4. தான் பாவம் செய்வதை யோபு நிறுத்திவிட்டு, கர்த்தரிடத்தில் ஜெபித்தால் அவன் ஆசீர்வதிக்கப்படுவான். (யோபு 11:20).

யோபுவின்மீது கூறப்படும் பாவக் குற்றச்சாட்டுக்கள்

1. அதிகமான பேச்சு (நீதி 10:19)
2. சுயநீதி
3. பொய்கூறுதல் (யோபு 11:3)
4. பரியாசம் பண்ணுதல்
5. தவறான வார்த்தைகள் (யோபு 11:4)

யோபுவின் பதிலுரை

1. என் சொல் சுத்தம்.
2. நான் தேவரீருடைய பார்வைக்குத் துப்புரவானவன்.

"தேவரீருடைய பார்வை" - தன்னைக் குற்றப்படுத்தும் தன் சிநேகிதரின் பார்வைக்கு யோபு துப்புரவானவனாக இல்லை. ஆனால் கர்த்தருடைய பார்வையில் தான் துப்புரவானவன் என்று யோபு கருதுகிறான். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். (1சாமு 16:7).

(2) யோபு விதைத்ததை இன்னும் போதுமான அளவு அறுக்கவில்லை என்று சோப்பார் கூறுகிறான்

யோபு 11:5 ஆனாலும் தேவன் பேசி, உமக்கு விரோதமாய்த் தம்முடைய உதடுகளைத் திறந்து,

யோபு 11:6 உமக்கு ஞானத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தினால் நலமாயிருக்கும்; உள்ளபடி பார்த்தால், அது இரட்டிப்புள்ளதாயிருக்கிறது; ஆகையால் உம்முடைய அக்கிரமத்திற்கேற்றபடி தேவன் உம்மைத் தண்டிக்கவில்லையென்று அறிந்துகொள்ளும்.

யோபு - தொகுப்புரை

11 அதிகாரம்

"தேவன் பேசி" - தேவன் தமது வாயைத் திறந்து, யோபுவுக்கு விரோதமாகப் பேசவேண்டுமென்று சோப்பார் விரும்புகிறான். யோபு தன் சிநேகிதருக்குச் செவிகொடுக்கா விட்டாலும், கர்த்தருக்குச் செவி கொடுப்பான் என்பது சோப்பாரின் நம்பிக்கை. சோப்பாரின் எண்ணம் சரியானது. கர்த்தர் யோபுவிடம் பேச ஆரம்பித்தவுடனேயே யோபு கர்த்தருக்கு எதிராகக்கூறின தன்னுடைய பாவங்களுக்காக உடனடியாக மன்னிப்பைக் கோருகிறான். (யோபு 40:1-7; யோபு 42:1-7).

தேவன் ஓர் ஆள்தத்துவப் பண்புடைய நபர்

யோபுவின் புஸ்தகத்தில் தேவன் ஓர் ஆள்தத்துவப் பண்புடைய நபராகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறார். அவர் அதரிசனமான மாயையானவர் என்று யோபுவின் புஸ்தகத்தில் எங்கும் கூறப்படவில்லை. வேதாகமத்திலுள்ள புஸ்தகங்களில் யோபுவின் புஸ்தகத்திலேயே முதன் முதலாக தேவன் ஒரு நபராக அறியப்பட்டிருக்கிறார். (யோபு 13:8; எபி 1:3). யோபுவும், அவனுடைய சிநேகிதரும் கர்த்தருக்குச் சரீர அவயவங்கள் இருப்பதாகவும், அவருக்கு ஆத்துமாவும், ஆவியும் உள்ளதாகவும் இந்தப் புஸ்தகத்தில் கூறியிருக்கிறார்கள். முற்பிதாக்களுக்கு தேவன் தரிசனம் கொடுத்ததையும் இவர்கள் அறிந்திருக்கிறார்கள். தேவனுடைய பிரத்தியட்சமான தரிசனத்தை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் பெற்றிருந்தார்கள்.

"அது இரட்டிப்புள்ளதாயிருக்கிறது" - தேவனுடைய ஞானம் இரட்டிப்புள்ளது மட்டுமல்ல. அது அளவிட முடியாதது. (எபே 3:10; ரோமர் 11:33; சங் 104:24).

(3) தேவனுடைய சர்வ ஞானமும் சர்வ வல்லமையும்

யோபு 11:7 தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ?

யோபு 11:8 அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக்கூடியது என்ன?

யோபு 11:9 அதின் அளவு பூமியைப் பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப் பார்க்கிலும் அகலமுமாயிருக்கிறது.

யோபு 11:10 அவர் பிடித்தாலும், அவர் அடைத்தாலும், அவர் நியாயத்தில் கொண்டுவந்து நிறுத்தினாலும், அவரைத் தடைபண்ணுகிறவன் யார்?

யோபு 11:11 மனுஷருடைய மாயத்தை அவர் அறிவார்; அக்கிரமத்தை அவர் கண்டும், அதைக் கவனியாதிருப்பாரோ?

யோபு 11:12 புத்தியில்லாத மனுஷன் காட்டுக் கழுதைக்குட்டிக்கு ஒப்பாகப் பிறந்திருந்தாலும், பெருநெஞ்சுள்ளவனாயிருக்கிறான்.

தேவனை அறிவது

யோபு 11:7 ஆவது வசனத்தில் "தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ?" என்று கேட்கப்பட்டிருக்கும் கேள்விக்கு பலர் தேவனை அறிய முடியாது என்றே பதில் கூறுகிறார்கள். தேவனை ஒரு பரிசோதனைச் சாலையில் அறிந்து கொள்ள முடியாது. தொலைநோக்கியில் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் பார்ப்பதுபோல தேவனைப் பார்க்க முடியாது. ஆனாலும் தேவன் அறியக்கூடாதவர் அல்ல. அவரோடு நாம் தனிப்பட்ட முறையில் ஐக்கியம் வைத்துக் கொண்டால் தேவனை நம்மால் அறிய முடியும். தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பார். வேதாகமத்தில் தேவன் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வசனங்கள் தேவனைப் பற்றி விளக்கிக் கூறுகின்றன. அதிகக் கல்வி கற்ற பெரிய ஞானிகளால்கூட தேவனைக் காணமுடியாமல் போகலாம். ஆனாலும் தங்களுடைய உள்ளத்தில் கர்த்தரை விசுவாசிக்கும் சாதாரண ஜனங்களால்கூட கர்த்தரை அறிந்து கொள்ள முடியும்.

11 அதிகாரம்

"அதின் அளவு பூமியைப்பார்க்கிலும் நீளமும்......" - இந்த வாக்கியத்தில் அதின் அளவு என்பது தேவனைப் பற்றிய ஞானத்தின் அளவைக் குறிக்கும்.

"காட்டுக் கழுதை" - மனுஷனுடைய பலவீனம், சோம்பேறித்தனம், அடங்காக்குணம் ஆகியவற்றை இந்த வாக்கியம் விளக்குகிறது.

(4) ஜெபித்து, பாவம் செய்வதை விட்டு விட்டால் தேவன் ஆசீர்வதிப்பார் என்று சோப்பார் யோபுவுக்கு கூறுகிறான்

யோபு 11:13 நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி, உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரித்தால் நலமாயிருக்கும்.

யோபு 11:14 உம்முடைய கையிலே அக்கிரமம் இருந்தால், அதைத் தூரத்தில் அகற்றிவிட்டு, அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்க வொட்டாதிரும்.

யோபு 11:15 அப்பொழுது உம்முடைய முகத்தை மாசில்லாமல் ஏறெடுத்து, பயப்படாமல் திடன்கொண்டிருப்பீர்.

யோபு 11:16 அப்பொழுது நீர் வருத்தத்தை மறந்து, கடந்துபோன தண்ணீரைப்போல அதை நினைப்பீர்.

யோபு 11:17 அப்பொழுது உம்முடைய ஆயுசுகாலம் பட்டப்பகலைப்பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்; இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப்போலிருப்பீர்.

யோபு 11:18 நம்பிக்கை உண்டாயிருக் கிறதினால் திடனாயிருப்பீர்; தோண்டி ஆராய்ந்து சுகமாய்ப் படுத்துக் கொள்வீர்.

யோபு 11:19 பயப்படுத்துவாரில்லாமல் நித்திரை செய்வீர்; அநேகர் உமது முகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணுவார்கள்.

ஆசீர்வதிக்கப்படுவதற்கு சோப்பார் கூறும் நிபந்தனைகள்

1. நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்த வேண்டும்.
2. உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரிக்க வேண்டும்.
3. உம்முடைய கையிலே அக்கிரமம் இருந்தால், அதைத் தூரத்தில் அகற்றிவிடவேண்டும். (யோபு 11:14)
4. அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்க வொட்டாதிருக்க வேண்டும்.

தேவனுடைய ஆசீர்வாதங்களின் அம்சங்கள்

1. யோபு 11:13-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளைக் கடைப்பிடித்தால்...... உம்முடைய முகத்தை மாசில்லாமல் ஏறெடுப்பீர். (யோபு 11:15).
2. பயப்படாமலிருப்பீர்.
3. திடன்கொண்டிருப்பீர்.
4. வருத்தத்தை மறப்பீர். (யோபு 11:16).
5. கடந்துபோன தண்ணீரைப்போல அதை நினைப்பீர்.
6. உம்முடைய ஆயுசுகாலம் பட்டப் பகலைப் பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும். (யோபு 11:17).
7. நீரும் பட்டப்பகலைப்பார்க்கிலும் பிரகாசமாயிருப்பீர்.
8. இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப் போலிருப்பீர்.
9. நம்பிக்கை உண்டாயிருக்கிறதினால் திடனாயிருப்பீர் (யோபு 11:18).
10. தோண்டி ஆராய்ந்து சுகமாய்ப் படுத்துக்கொள்வீர்.
11. பயப்படுத்துவாரில்லாமல் நித்திரை செய்வீர். (யோபு 11:19).

யோபு - தொகுப்புரை

11 அதிகாரம்

12. அநேகர் உமது முகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணுவார்கள்.

(5) யோபு துன்மார்க்கன் என்று சோப்பார் அறிவிக்கிறான்

யோபு 11:20 துன்மார்க்கருடைய கண்கள் பூத்துப்போய், அவர்கள் அடைக்கலம் அவர்களை விட்டொழிந்து, அவர்கள் நம்பிக்கை சாகிறவன் சுவாசம்போல் அழிந்துபோகும் என்றான்.

துன்மார்க்கர்மீது வரும் சாபங்கள்

1. துன்மார்க்கருடைய கண்கள் பூத்துப்போகும்.
2. அவர்கள் அடைக்கலம் அவர்களை விட்டொழிந்துபோகும்.
3. அவர்கள் நம்பிக்கை சாகிறவன் சுவாசம்போல் அழிந்துபோகும்.

12 அதிகாரம்

7. சோப்பாருக்கு யோபுவின் பதிலுரை

(1) யோபுவின் வஞ்சகப் புகழ்ச்சி - தான் தாழ்ந்தவன் என்பதை மறுக்கிறான்

யோபு 12:1 யோபு பிரதியுத்தரமாக:

யோபு 12:2 ஆம், நீங்களே ஞானமுள்ள ஜனங்கள்; உங்களுடனே ஞானம் சாகும்.

யோபு 12:3 உங்களைப்போல எனக்கும் புத்தியுண்டு; உங்களிலும் நான் தாழ்ந்தவன் அல்ல; இப்படிப்பட்டவைகளை அறியாதவன் யார்?

யோபுவின் பிரதியுத்தரம்

இது யோபுவின் நான்காவது பிரதியுத்தரமாகும். சோப்பாரின் குற்றச்சாட்டுக்கு யோபு இந்த அதிகாரத்தில் பிரதியுத்தரம் கூறுகிறான். யோபுவின் பிரதியுத்தரத்தினுடைய விவரம் வருமாறு:

1. யோபு தன் சிநேகிதரைவிட தாழ்ந்தவரல்ல. அவர்களுக்குள்ள ஞானத்தைப் போல தனக்கும் ஞானம் உள்ளது. (யோபு 12:1-3; யோபு 13:1-3)
2. அவர்களுடைய பதில் ஞானமில்லை. நீதிமானை அவர்கள் தூஷிக்கிறார்கள். (யோபு 12:4-5)
3. தன்னுடைய பாடுகளுக்குத் தான் எந்தத் தீவினையையும் விதைக்கவில்லை. (யோபு 12:6)
4. தேவனைக் குறித்தும், இயற்கையைக் குறித்தும் நாம் விசாரித்துக் கேட்டுப் பார்க்க முடியும். (யோபு 12:7-13:3)
5. யோபுவின் சிநேகிதர் பொய்யைப் பிணைக்கிறவர்கள். (யோபு 13:4)
6. தன்னுடைய சிநேகிதர்கள் தன்னை இனிமேல் குற்றம் சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். (யோபு 13:5-13)
7. யோபு இனிமேல் தேவனையே நம்பியிருப்பான் அல்லது மரித்துப் போவான். (யோபு 13:14-18)
8. யோபுவின் வாழ்க்கையில் ஏராளமான பாடுகள் உள்ளன. (யோபு 13:19-14:22).

"நீங்களே ஞானமுள்ள ஜனங்கள்" - இந்த வாக்கியத்தை யோபு வஞ்சகப் புகழ்ச்சியாக (irony) பயன்படுத்துகிறான். யோபுவின் சிநேகிதர் ஞானமில்லாதவர்கள் என்று யோபு வஞ்சகப் புகழ்ச்சியாகக் கூறுகிறான்.

(2) ஒரு மனுஷன் தாழ்ந்திருக்கும்போது மற்றவர்களுடைய மனப் பான்மைகளை யோபு கூறுகிறான்

யோபு 12:4 என் சிநேகிதரால் நான் நிந்திக்கப்பட்டு, தேவனை நோக்கிப் பிரார்த்திப்பேன்; அவர் எனக்கு மறுஉத்தரவு அருளுவார்; உத்தமனாகிய நீதிமான் பரியாசம்பண்ணப்படுகிறான்.

யோபு 12:5 ஆபத்துக்குள்ளானவன் சுகமாயிருக்கிறவனுடைய நினைவில் இகழ்ச்சியடைகிறான்; காலி டறினவர்களுக்கு இது நேரிடும்.

"அவர் எனக்கு மறுஉத்தரவு அருளுவார்" - யோபு இன்னும் கர்த்தரை விசுவாசிக்கிறான். தன்னுடைய ஜெபத்திற்கு அவர் மறுஉத்தரவு அருளுவார் என்னும் விசுவாசம் யோபுவின் உள்ளத்தை விட்டு அகலவில்லை.

(3) தேவன் துன்மார்க்கரோடு உடன்பட்டிருக்கிறார் என்று யோபு தேவனைக் குற்றப்படுத்துகிறான்

யோபு 12:6 கள்ளருடைய கூடாரங்களில் செல்வமுண்டு; தேவனைக் கோபப் படுத்துகிறவர்களுக்குச் சாங் கோபாங்கமுண்டு; அவர்கள் கையிலே தேவன் கொண்டுவந்து கொடுக்கிறார்.

12 அதிகாரம்

யோபு தேவன்மீது கூறும் தவறான குற்றச்சாட்டுக்கள்

1. கள்ளருடைய கூடாரங்களில் செல்வமுண்டு.
2. தேவனைக் கோபப் படுத்துகிறவர்களுக்குச் சாங் கோபாங்கமுண்டு(பாதுகாப்பு உண்டு).
3. கள்ளருடைய கையிலே தேவன் கொண்டு வந்து கொடுக்கிறார்.

(4) தேவனுடைய மகத்துவத்தின் முப்பது அம்சங்கள் - (38:1-41:34)

யோபு 12:7 இப்போதும் நீ மிருகங்களைக் கேட்டுப்பார், அவைகள் உனக்குப் போதிக்கும் ஆகாயத்துப் பறவைகளைக் கேள், அவைகள் உனக்கு அறிவிக்கும்.

யோபு 12:8 அல்லது பூமியை விசாரித்துக் கேள், அது உனக்கு உபதேசிக்கும்; சமுத்திரத்தின் மச்சங்களைக் கேள், அவைகள் உனக்கு விவரிக்கும்.

யோபு 12:9 கர்த்தருடைய கரம் இதைச் செய்ததென்று இவைகளெல்லா வற்றினாலும் அறியாதவன் யார்?

யோபு 12:10 சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது.

யோபு 12:11 வாயானது போஜனத்தை ருசிபார்க்கிறதுபோல, செவியானது வார்த்தைகளைச் சோதித்துப் பார்க்கிறதல்லவா?

யோபு 12:12 முதியோரிடத்தில் ஞானமும் வயதுசென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே.

யோபு 12:13 அவரிடத்தில் ஞானமும் வல்லமையும் எத்தனை அதிகமாய் இருக்கும்? அவருக்குத்தான் ஆலோசனையும் புத்தியும் உண்டு.

யோபு 12:14 இதோ, அவர் இடித்தால் கட்ட முடியாது; அவர் மனுஷனை அடைத்தால் விடுவிக்கமுடியாது.

யோபு 12:15 இதோ, அவர் தண்ணீர்களை அடக்கினால் எல்லாம் உலர்ந்துபோம்; அவர் அவைகளை வரவிட்டால், பூமியைக் கீழதுமேலதாக்கும்.

யோபு 12:16 அவரிடத்தில் பெலனும் ஞானமுமுண்டு; மோசம்போகிறவனும் மோசம் போக்குகிறவனும், அவர் கையின் கீழிருக்கிறார்கள்.

யோபு 12:17 அவர் ஆலோசனைக்காரரைச் சிறைபிடித்து, நியாயாதிபதிகளை மதியயக்குகிறார்.

யோபு 12:18 அவர் ராஜாக்களுடைய கட்டுகளை அவிழ்த்து, அவர்கள் இடுப்புகளைக் கச்சைகட்டுகிறார்.

யோபு 12:19 அவர் மந்திரிகளைச் சிறை பிடித்துக்கொண்டுபோய், பெலவான்களைக் கவிழ்த்துப் போடுகிறார்.

யோபு 12:20 அவர் நம்பிக்கையுள்ளவர்களுடைய வாக்கை விலக்கி, முதிர்வயதுள்ளவர்களின் ஆலோசனையை வாங்கிப்போடுகிறார்.

யோபு 12:21 அவர் பிரபுக்களின்மேல் இகழ்ச்சி வரப்பண்ணுகிறார்; பலவான்களின் கச்சையைத் தளர்ந்து போகப்பண்ணுகிறார்.

யோபு 12:22 அவர் அந்தகாரத்திலி ருக்கிற ஆழங்களை வெளியரங்கமாக்கி, மரண இருளை வெளிச்சத்தில் கொண்டு வருகிறார்.

யோபு 12:23 அவர் ஜாதிகளைப் பெருகவும் அழியவும் பண்ணுகிறார்; அவர் ஜாதிகளைப் பரவவும் குறுகவும் பண்ணுகிறார்.

யோபு - தொகுப்புரை

12 அதிகாரம்

யோபு 12:24 அவர் பூமியிலுள்ள ஜனத்தினுடைய அதிபதிகளின் நெஞ்சை அகற்றிப்போட்டு, அவர்களை வழியில்லாத அந்தரத்திலே அலையப்பண்ணுகிறார்.

யோபு 12:25 அவர்கள் வெளிச்சமற்ற இருளிலே தடவித்திரிகிறார்கள்; வெறித்தவர்களைப் போல அவர்களைத் தடுமாறித் திரியப்பண்ணுகிறார்.

அறிவின் ஆதாரம்

1. காட்டிலுள்ள மிருகங்கள்
2. ஆகாயத்துப் பறவைகள்
3. பூமி
4. சமுத்திரத்தின் மச்சங்கள்

சோப்பாரின் குற்றச்சாட்டுக்குத் தான் பதில் கூற வேண்டிய அவசியமில்லை என்று யோபு கூறுகிறான். சோப்பார் காட்டு மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியையும், சமுத்திரத்தின் மச்சங்களையும் பார்த்தால், ஓர் இயற்கையின் நியதி தெரிய வரும். வலுவானவர்கள் பலவீனமானவர்களை ஒடுக்குகிறார்கள். தேவனும் பலவீனமானவர்களைக் காப்பாற்றுவதில்லை என்னும் பொருளில் யோபு கூறுகிறான். ஆனால் யோபுவின் குற்றச்சாட்டில் உண்மையில்லை.

தேவனுடைய மகத்துவம்

1. கர்த்தர் சகலத்தையும் சிருஷ்டித்தார். (யோபு 12:7-9).
2. எல்லா ஜீவராசிகளையும் ஆளுகை செய்கிறார். (யோபு 12:10).
3. சகல மனுஷரின் ஆவியும் அவர் கையில் இருக்கிறது.
4. கர்த்தரிடத்தில் ஞானமும், வல்லமையும் உள்ளது. (யோபு 12:13).
5. கர்த்தரிடத்தில் ஆலோசனையும், புத்தியும் உள்ளது.
6. அவர் இடிக்கிறார். (யோபு 12:14).
7. அவர் மனுஷனை அடைத்தால் அவனை விடுவிக்கமுடியாது.
8. அவர் தண்ணீர்களை அடக்குகிறார். (யோபு 12:15).
9. ஆறுகளை உலர்ந்துபோகச் செய்கிறார்.
10. மழையை அனுப்புகிறார்.
11. பூமியைக் கீழதுமேலதாக்குகிறார்.
12. அவரிடத்தில் பெலனும் ஞானமுமுண்டு. (யோபு 12:16).
13. மோசம்போகிறவனும் மோசம் போக்குகிறவனும், அவர் கையின் கீழிருக்கிறார்கள்.
14. அவர் ஆலோசனைக்காரரைச் சிறைபிடிக்கிறார்.
15. நியாயாதிபதிகளை மதிமயக்குகிறார். (யோபு 12:17).
16. அவர் ராஜாக்களுடைய கட்டுகளை அவிழ்க்கிறார். (யோபு 12:18).
17. அவர்கள் இடுப்புகளைக் கச்சை கட்டுகிறார்.
18. அவர் மந்திரிகளைச் சிறைபிடித்துக் கொண்டுபோகிறார். (யோபு 12:19).
19. பெலவான்களைக் கவிழ்த்துப் போடுகிறார்.
20. அவர் நம்பிக்கையுள்ளவர்களுடைய வாக்கை விலக்குகிறார். (யோபு 12:20).
21. முதிர் வயதுள்ளவர்களின் ஆலோசனையை வாங்கிப்போடுகிறார்.
22. அவர் பிரபுக்களின்மேல் இகழ்ச்சி வரப்பண்ணுகிறார் (யோபு 12:21).

யோபு - தொகுப்புரை

12 அதிகாரம்

23. பலவான்களின் கச்சையைத் தளர்ந்து போகப்பண்ணுகிறார்.

24. அவர் அந்தகாரத்திலிருக்கிற ஆழங்களை வெளியரங்கமாக்குகிறார். (யோபு 12:22).

25. மரண இருளை வெளிச்சத்தில் கொண்டுவருகிறார்.

26. அவர் ஜாதிகளைப் பெருகவும் அழியவும் பண்ணுகிறார்.(யோபு 12:23).

27. அவர் ஜாதிகளைப் பரவவும் குறுகவும் பண்ணுகிறார்.

28. அவர் பூமியிலுள்ள ஜனத்தினுடைய அதிபதிகளின் நெஞ்சை அகற்றிப் போடுகிறார். (யோபு 12:24).

29. அவர்களை வழியில்லாத அந்தரத்திலே அலையப்பண்ணுகிறார்.

30. வெறித்தவர்களைப் போல அவர்களைத் தடுமாறித் திரியப்பண்ணுகிறார். (யோபு 12:25).

"முதியோர்" - இந்த வார்த்தை தேவனைக் குறிக்கும். இந்த அதிகாரத்தில் தேவனுடைய கிரியைகள் கூறப்பட்டுள்ளன. (யோபு 12:7-25). கர்த்தரைப் பற்றி "நீங்காத நித்திய கர்த்தத்துவம்" என்று தானி 7:9-14,22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் "முதியோர்" என்னும் வார்த்தை வயதில் முதிர்ந்தவர்களையும் குறிக்கலாம்.

"அவர் அந்தகாரத்திலிருக்கிற ஆழங்களை வெளியரங்கமாக்கி" - பல சமயங்களில் கர்த்தர் வெளிப்படுத்தும் சத்தியங்களை மனுஷரால் புரிந்து கொள்ள முடியவில்லை. கர்த்தருடைய சிருஷ்டிப்பு, இனிமேல் வரப்போகும் காரியங்கள் ஆகியவற்றைக் கர்த்தர் வெளிப்படுத்தியிருந்தும் மனுஷருக்கு அவற்றில் பல இன்னும் மறைபொருளாகவே உள்ளன. இந்த வாக்கியத்தில் "மரண இருள்" என்பது மனுஷனுடைய நிலைமையையும்,மனுஷனுடைய அறிவில் உள்ள அந்தகாரத்தையும் குறிக்கும். அந்தகாரத்திலுள்ள காரியங்களைக் கர்த்தரால் மட்டுமே வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

"ஜனத்தினுடைய அதிபதிகளின் நெஞ்சை அகற்றிப்போட்டு" - ஜனங்களை ஆளுகை செய்கிறவர்களுடைய ஞானத்தையும், ஆலோசனையையும் கர்த்தர் அகற்றிப் போடுகிறார். இதனால் அவர்கள் உதவியற்றவர்களாகவும், இனிமேல் செய்வது என்னவென்று அறியாமல் திகைக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணும் அதிபதிகளுக்கு மட்டுமே இந்தப் பிரச்சனை வருகிறது. அதிபதிகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், அவரே அவர்களுடைய ஆலோசனைக் கர்த்தராக இருந்து அவர்களுக்கு உதவிபுரிவார்.

13 அதிகாரம்

(5) யோபு தன்னுடைய தாழ்மையை மறுபடியும் மறுக்கிறான் - தன்னுடைய நண்பர்கள் பொய் கூறுபவர்கள் என்றும் காரியத்திற்கு உதவாத வைத்தியர்கள் என்றும் கூறுகிறான்

யோபு 13:1 இதோ, இவைகளெல்லாவற்றையும் என் கண் கண்டு, என் காது கேட்டு அறிந்திருக்கிறது.

யோபு 13:2 நீங்கள் அறிந்திருக்கிறதை நானும் அறிந்திருக்கிறேன்; நான் உங்களுக்குத் தாழ்ந்தவன் அல்ல.

யோபு 13:3 சர்வவல்லவரோடே நான் பேசினால் நல்லது; தேவனோடே நியாயத்திற்காக வழக்காட விரும்புவேன்.

யோபு 13:4 நீங்கள் பொய்யைப் பிணைக்கிறவர்கள்; நீங்கள் எல்லாரும் காரியத்துக்குவாத வைத்தியர்கள்.

"இவைகளெல்லாவற்றையும்" - யோபு 12:7-25 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தேவனுடைய கிரியைகள் அனைத்தையும்.

"நான் உங்களுக்குத் தாழ்ந்தவன் அல்ல" - யோபு தன் சிநேகிதருக்குத் தாழ்ந்தவன் அல்ல. அவர்களுக்குள்ளதுபோலவே தனக்கும் போதுமான அளவு ஞானமுள்ளது என்று விவாதம் பண்ணுகிறான்.(யோபு 12:3).

"தேவனோடே நியாயத்திற்காக வழக்காட விரும்புவேன்" - தன்னுடைய சிநேகிதருக்குத் தன்மீது எவ்வித இரக்கமும் இல்லை என்று யோபு நினைக்கிறான். ஆகையினால் அவர்களோடு வழக்காடுவதற்குப் பதிலாகத் தேவனோடு நேரடியாக வழக்காட விரும்புகிறான். யோபுவின் சிநேகிதர் அவன்மீது பலவிதமான குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள். அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை என்பது யோபுவின் எண்ணம். அவர்கள் பொய்யைப் பிணைக்கிறவர்கள். அவர்கள் எல்லாரும் காரியத்துக்குவாத வைத்தியர்கள். (யோபு 13:3-4).

"பொய்" - இந்த வார்த்தை யோபுவின் மீது கூறப்படும் தவறான குற்றச்சாட்டுக்களைக் குறிக்கிறது. யோபுவின் சிநேகிதருக்கு யோபுவைப் பற்றியோ, சாத்தானின் கிரியைகளைப் பற்றியோ, கர்த்தரின் சித்தத்தைப் பற்றியோ ஒன்றும் தெரியவில்லை. யோபு ஒரு மாய்மாலக்காரன் என்றும், தன்னுடைய பாவங்களுக்காகக் கர்த்தரிடமிருந்து தண்டனையை அனுபவிக்கிறான் என்றும் யோபுவின் சிநேகிதர் கூறுகிறார்கள். இவையெல்லாமே பொய் என்பது யோபுவின் குற்றச்சாட்டு.

"காரியத்துக்குவாத வைத்தியர்கள்" - யோபுவுக்கு ஆறுதல் கூறுவதற்காகவே அவனுடைய சிநேகிதர்கள் வந்தார்கள். ஆனால் ஆறுதல் கூறுவதற்குப் பதிலாக அவன்மீது அடுக்கடுக்காகக் குற்றம் கூறுகிறார்கள். யோபுவின் சிநேகிதரால் அவனுக்கு எந்த ஆறுதலும் உண்டாகவில்லை. அவர்கள் காரியத்துக்குவாத வைத்தியர்கள் போல இருக்கிறார்கள்.

(6) தன்னைத் தனிமையாக விட்டு விடுமாறும், தேவன் தமக்குப் பிரியமானதைத் தன்னிடத்தில் செய்யட்டும் என்றும் யோபு தன்னுடைய நண்பர்களிடம் கூறுகிறான்

யோபு 13:5 நீங்கள் பேசாமலிருந்தால் நலமாகும்; அது உங்களுக்கு ஞானமாயிருக்கும்.

யோபு 13:6 நீங்கள் என் நியாயத்தைக் கேட்டு, என் உதடுகள் சொல்லும் விசேஷங்களைக் கவனியுங்கள்.

யோபு 13:7 நீங்கள் தேவனுக்காக நியாயக்கேடாய்ப் பேசி, அவருக்காக வஞ்சகமாய் வசனிக்கவேண்டுமோ?

யோபு 13:8 அவருக்கு முகதாட்சிணியம் பண்ணுவீர்களோ? தேவனுக்காக வழக்காடுவீர்களோ?

13 அதிகாரம்

யோபு 13:9 அவர் உங்களை ஆராய்ந்து பார்த்தால் அது உங்களுக்கு நலமாயிருக்குமோ? மனுஷனைப் பரியாசம் பண்ணுகிறதுபோல அவரைப் பரியாசம் பண்ணுவீர்களோ?

யோபு 13:10 நீங்கள் அந்தரங்கமாய் முகதாட்சிணியம்பண்ணினால், அவர் உங்களை எவ்விதத்திலும் கண்டிப்பார்.

யோபு 13:11 அவருடைய மகத்துவம் உங்களைத் திடுக்கிடப்பண்ணாதோ? அவருடைய பயங்கரம் உங்களைப் பிடிக்க மாட்டாதோ?

யோபு 13:12 உங்கள் பேரை நினைக்கப் பண்ணும் அடையாளங்கள் சாம்பலுக்குச் சரி; உங்கள் மேட்டிமைகள் சேற்றுக் குவியல்களுக்குச் சமானம்.

யோபு 13:13 நீங்கள் மவுனமாயிருங்கள், நான் பேசுகிறேன், எனக்கு வருகிறது வரட்டும்.

"நீங்கள் பேசாமலிருந்தால் நலமாகும்" - யோபுவின் சிநேகிதர் பேசும்போது அவர்களுடைய மதியீனம் வெளிப்படுகிறது. அவர்கள் ஒன்றும் பேசாமல் இருந்தாலே அது யோபுவிக்கு ஆறுதலாக இருக்கும். "பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான். தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்" என்று நீதிமொழிகளில் கூறப்பட்டிருக்கிறது. (நீதி 17:28)

"அந்தரங்கமாய் முகதாட்சிணியம் பண்ணினால்" - மனுஷரை ஏமாற்றுவது போல கர்த்தரை ஏமாற்ற முடியாது. யோபுவின் சிநேகிதர் முகதாட்சிணியம் பண்ணுகிறார்கள். அவர்கள் யோபுவை ஒரு நீதிமானாகக் காண வேண்டும். ஆனால் அவர்களோ அவனை ஒரு பாவியாகக் காண்கிறார்கள். இதற்காகக் கர்த்தர் அவர்களைக் கண்டிப்பார் என்று யோபு கூறுகிறான்.

(7) மரணபரியந்தம் தான் தேவனையே நம்புவதாக அறிவிக்கிறான் - தேவனிடத்தில் தன்னுடைய நம்பிக்கையையும் பக்தியையும் வெளிப்படுத்துகிறான்

யோபு 13:14 நான் என் பற்களினால் என் சதையைப் பிடுங்கி, என் பிராணனை என் கையிலே வைப்பானேன்?

யோபு 13:15 அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்.

யோபு 13:16 அவரே என் இரட்சிப்பு; மாயக்காரனோ அவர் சந்நிதியில் சேரான்.

யோபு 13:17 என் வசனத்தையும், நான் சொல்லிக் காண்பிக்கிறதையும், உங்கள் செவிகளால் கவனமாய்க் கேளுங்கள்.

யோபு 13:18 இதோ, என் நியாயங்களை அணியணியாக வைத்தேன்; என் நீதி விளங்கும் என்று அறிவேன்.

"என் பற்களினால் என் சதையைப் பிடுங்கி" - இந்த வாக்கியம் அக்காலத்தில் எபிரெயர் மத்தியில் கூறப்படும் வழக்குச் சொல்லாக இருக்க வேண்டும். கர்த்தருடைய கரங்களில் தன்னுடைய ஜீவன் உள்ளது என்பது இந்த வாக்கியத்தின் பொருள்.

"அவரே என் இரட்சிப்பு" - தன்னுடைய வழிகள் நீதியானவை என்று யோபு நினைக்கிறான். கர்த்தரைத் தன்னுடைய இரட்சிப்பு என்று அறிவித்ததினால் கர்த்தர் தன்னை நீதிமானாகக் காண்பார் என்பது யோபுவின் எண்ணம். மாயக்காரரால் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரமுடியாது. கர்த்தர் அவர்களை நியாயம் விசாரிப்பார். (யோபு 13:16-18).

13 அதிகாரம்

(8) தன்னை நியாயமாக நடத்துமாறு யோபு தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான்

யோபு 13:19 என்னோடே வழக்காட வேண்டுமென்று இருக்கிறவன் யார்? நான் மவுனமாயிருந்தால் ஜீவித்துப் போவேனே.

யோபு 13:20 இரண்டு காரியங்களை மாத்திரம் எனக்குச் செய்யாதிருப்பீராக; அப்பொழுது உமது முகத்துக்கு முன்பாக ஒளித்துக்கொள்ளாதிருப்பேன்.

யோபு 13:21 உம்முடைய கையை என்னை விட்டுத் தூரப்படுத்தும்; உம்முடைய பயங்கரம் என்னைக் கலங்கப் பண்ணாதிருப்பதாக.

யோபு 13:22 நீர் கூப்பிடும், நான் உத்தரவு கொடுப்பேன்; அல்லது நான் பேசுவேன்; நீர் எனக்கு மறுமொழி சொல்லும்.

யோபு 13:23 என் அக்கிரமங்களும் பாவங்களும் எத்தனை? என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும்.

யோபு 13:24 நீர் உமது முகத்தை மறைத்து, என்னை உமக்குப் பகைஞனாக எண்ணுவானேன்?

யோபு 13:25 காற்றடித்த சருகை நொறுக்குவீரோ? காய்ந்துபோன துரும்பைப் பின்தொடருவீரோ?

யோபு 13:26 மகா கசப்பான தீர்ப்புகளை என்பேரில் எழுதுகிறீர்; என் சிறுவயதின் அக்கிரமங்களை எனக்குப் பலிக்கப் பண்ணுகிறீர்.

யோபு 13:27 என் கால்களைத் தொழுவடித்துப்போட்டு, என் வழிகளையெல்லாம் காவல்பண்ணுகிறீர்; என் காலடிகளில் அடையாளத்தைப் போடுகிறீர்.

யோபு 13:28 இப்படிப்பட்டவன் அழுகிப் போகிற வஸ்துபோலவும், பொட்டரித்த வஸ்திரம்போலவும் அழிந்துபோவான்.

"நான் மவுனமாயிருந்தால் ஜீவித்துப் போவேனே" - யோபுவின் சார்பில் அவன் மட்டுமே பேசுகிறான். அவனுடைய சிநேகிதர் மூவரும் யோபுவிற்கு எதிராகவே பேசுகிறார்கள். அவர்களுக்கு யோபு பதில் கூறவில்லையென்றால், அவர்களுடைய குற்றச்சாட்டுக்களின் நிமித்தம் தான் மரித்துப் போக வேண்டியது வரும் என்று யோபு அறிவிக்கிறான்.

யோபு தேவனிடம் ஏறெடுக்கும் விண்ணப்பம் (யோபு 13:20-21)

1. உம்முடைய கையை என்னைவிட்டுத் தூரப்படுத்தும்.
2. உம்முடைய பயங்கரம் என்னைக் கலங்கப்பண்ணாதிருப்பதாக.

தன்னுடைய விண்ணப்பத்திற்குக் கர்த்தர் செவிகொடுத்தால் தானும் கர்த்தரிடத்தில் பேசுவதாக யோபு அறிவிக்கிறான். (யோபு 13:22).

"என் அக்கிரமங்களும் பாவங்களும் எத்தனை?" - ஒரு மனுஷனுக்கும் அவனுடைய அக்கிரமங்களின் எண்ணிக்கையும், பாவங்களின் எண்ணிக்கையும் தெரியாது. நாம் செய்த பாவங்கள் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் கர்த்தரிடத்தில் அவற்றை அறிக்கையிடும் போது கர்த்தர் நம்முடைய பாவங்களையெல்லாம் மன்னிப்பதற்குக் கிருபையும், இரக்கமும் மிகுந்தவராக இருக்கிறார். நாம் கர்த்தரால் நீதிமானாக்கப் படுவோம்.(லூக்கா 18:13-14;ரோமர் 10:9-10).

"என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும்" - நம்முடைய பாவங்களைப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உணர்த்திக் காண்பிக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நம்முடைய பாவங்கள் அனைத்தும் நமக்கு உணர்த்தப்பட வேண்டும். (யோவான் 16:7-11; எபி 4:12-13).

யோபு - தொகுப்புரை

13 அதிகாரம்

யோபு தேவன்மீது கூறும் தவறான குற்றச்சாட்டுக்கள்

1. நீர் உமது முகத்தை எனக்கு மறைக்கிறீர். (யோபு 13:24).
2. என்னை உமக்குப் பகைஞனாக எண்ணுகிறீர்.
3. காற்றடித்த சருகை நொறுக்குவது போல என்னை நொறுக்குகிறீர். (யோபு 13:25).
4. காய்ந்துபோன துரும்பைப்போல என்னைப் பின்தொடருகிறீர்.
5. மகா கசப்பான தீர்ப்புகளை என்பேரில் எழுதுகிறீர்.
6. என் சிறுவயதின் அக்கிரமங்களை எனக்குப் பலிக்கப் பண்ணுகிறீர். (யோபு 13:26).
7. என் கால்களைத் தொழுவடித்துப் போடுகிறீர். (யோபு 13:27).
8. என் வழிகளையெல்லாம் காவல் பண்ணுகிறீர்.
9. என் காலடிகளில் அடையாளத்தைப் போடுகிறீர்.
10. நான் அழுகிப்போகிற வஸ்துபோலவும், பொட்டரித்த வஸ்திரம்போலவும் அழிந்து போகிறேன். (யோபு 13:28).

"என் கால்களைத் தொழுவடித்துப்போட்டு" - சிறைக்கைதிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனை. அவர்கள் அசைமுடியாதவாறு இரண்டு கால்களும் தொழுமரத்தில் கட்டப்பட்டிருக்கும். (நீதி 7:22). எரேமியாவும் (எரே 20:2; எரே 29:2-6), பவுலும், சீலாவும் (அப் 16:24) தொழுமரத்தில் கட்டப் பட்டிருந்தார்கள். பவுல் இங்கு தன்னுடைய பாடுகளைக் கூறுகிறார். தொழுமரத்தில் கட்டப்பட்டவனைப் போல தான் பாடுகளை அனுபவிப்பதாக யோபு கூறுகிறான். (யோபு 33:11) கால்களில் தொழுவடித்துப் போடப் பட்டால் அதின் அடையாளம் கால்களில் காணப்படும். ஒருவேளை யோபு தனக்கு வந்திருக்கும் பாடுகளின் அடையாளத்தைக் குறித்து "என் காலடிகளில் அடையாளத்தைப் போடுகிறீர்" என்று கூறியிருக்க வேண்டும்.

14 அதிகாரம்

(9) மனுஷனைக் குறித்து யோபுவின் தத்துவம் - இப்போதும் இனிமேல்

யோபு 14:1 ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.

யோபு 14:2 அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலை நிற்காமல் ஓடிப்போகிறான்.

யோபு 14:3 ஆகிலும் இப்படிப்பட்டவன்மேல் நீர் உம்முடைய கண்களைத் திறந்து வைத்து, உம்முடைய நியாயத்துக்கு என்னைக் கொண்டுபோவீரோ?

யோபு 14:4 அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை.

யோபு 14:5 அவனுடைய நாட்கள் இம்மாத்திரம் என்று குறிக்கப் பட்டிருக்கையால், அவனுடைய மாதங்களின் தொகை உம்மிடத்தில் இருக்கிறது; அவன் கடந்துபோகக்கூடாத எல்லையை அவனுக்கு ஏற்படுத்தினீர்.

யோபு 14:6 அவன் ஒரு கூலி க்காரனைப் போல் தன் நாளின் வேலையாயிற்று என்று ரம்பியப்படுமட்டும் அவன் ஓய்ந்திருக்கும்படி உமது பார்வையை அவனைவிட்டு விலக்கும்.

யோபு 14:7 ஒரு மரத்தைக் குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப்போடப் பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்;

யோபு 14:8 அதின் வேர் தரையிலே பழையதாகி, அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும்,

யோபு 14:9 தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம்போலக் கிளைவிடும்.

யோபு 14:10 மனுஷனோவென்றால் செத்த பின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே?

யோபு 14:11 தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப் போகிறது போல,

யோபு 14:12 மனுஷன் படுத்துக் கிடக்கிறான், வானங்கள் ஒழிந்து போகுமளவும் எழுந்திருக்கவும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை.

யோபு 14:13 நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்.

யோபு 14:14 மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப் பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.

யோபு 14:15 என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக.

யோபு 14:16 இப்பொழுது என் நடைகளை எண்ணுகிறீர்; என் பாவத்தின் மேலல்லவோ கவனமாயிருக்கிறீர்.

யோபு 14:17 என் மீறுதல் ஒரு கட்டாகக் கட்டப்பட்டு முத்திரைபோடப்பட்டிருக்கிறது, என் அக்கிரமத்தை ஒருமிக்கச் சேர்த்தீர்.

யோபு 14:18 மலைமுதலாய் விழுந்து கரைந்துபோம்; கன்மலை தன் இடத்தைவிட்டுப் பேர்ந்துபோம்.

யோபு 14:19 தண்ணீர் கற்களைக் குடையும்; ஜலப்பிரவாகம் பூமியின் தூளில் முளைத்ததை மூடும்; அப்படியே மனுஷன் கொண்டிருக்கும் நம்பிக்கையை அழிக்கிறீர்.

யோபு - தொகுப்புரை

14 அதிகாரம்

யோபு 14:20 நீர் என்றைக்கும் அவனைப் பெலனாய் நெருக்குகிறதினால் அவன் போய்விடுகிறான்; அவன் முகரூபத்தை மாறப்பண்ணி அவனை அனுப்பிவிடுகிறீர்.

யோபு 14:21 அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்.

யோபு 14:22 அவன் மாம்சம் அவனிலிருக்குமளவும் அதற்கு நோவிருக்கும்; அவன் ஆத்துமா அவனுக்குள்ளிருக்கு மட்டும் அதற்குத் துக்கமுண்டு என்றான்.

மனுஷனைப் பற்றிய சத்தியம்

1. ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன்.
2. வாழ்நாள் குறுகினவன் (ஆதி 47:9).
3. சஞ்சலம் நிறைந்தவன்
4. அவன் பூவைப்போல பூக்கிறான். (யோபு 14:2).
5. அவன் பூலைப்போல அறுப்புண்கிறான்.
6. நிழலைப்போல ஓடிப்போகிறான்.
7. அவன் நிழலைப் போல நிலைநிற்பதில்லை.

"மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே?" - இயேசு கிறிஸ்துவிற்கு முந்திய காலத்தில் மரித்தவர்களின் ஆத்துமாக்கள் பாதாளத்திற்குச் சென்றன. நீதிமான்களுடைய ஆத்துமாக்களும், துன்மார்க்கருடைய ஆத்துமாக்களும் பாதாளத்திலேயே இருந்தன. (லூக் 16:19-31) இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்த பின்பு, பாதாளத்திற்குச் சென்று அங்கு காவலிலிருந்த நீதிமான்களின் ஆவிகளை விடுவித்து, தம்மோடு பரலோகத்திலிருந்து அழைத்துச் சென்றார். அதன் பின்பு மரித்துப்போகும் நீதிமான்களின் ஆவிகள் பாதாளத்திற்குச் செல்வதில்லை. (சங் 16:10; எபே 4:8-10; எபி 2:14-15). நேரடியாகப் பரலோகத்திற்குச் சென்று விடும். தங்களுடைய சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்காக அவை பரலோகத்தில் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11). துன்மார்க்கர் மரித்தவுடன் அவர்களுடைய ஆவியும், ஆத்துமாவும் எப்போதும்போல பாதாளத்திற்கே செல்கிறது. அங்கு தங்களுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காக அவை காத்துக் கொண்டிருக்கிறது.

"வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கவும் இல்லை" - ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவிலும், துன்மார்க்கரின் சரீரங்கள் உயிர்த்தெழும்போதும், வானமும், பூமியும் புதுப்பிக்கப்படும். (2பேதுரு 3:10-13; வெளி 20:4-6,11-15). அப்போது வானமும், பூமியும் ஒரு நிலைமையிலிருந்து வேறொரு நிலைமைக்கு மாறும். இனிமேல் பழைய நிலைமை இராது. புதிய வானத்திலும், புதிய பூமியிலும் நீதி நித்தியமாக ஆளுகை செய்யும். (ரோமர் 8:21-25; எபி 1:1-12; எபி 12:25-29; 2பேதுரு 3:10-13; வெளி 20:11-15; வெளி 21:1-7)

"எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்" - மரித்தோர் உயிர்த்தெழுவதற்குத் தேவன் ஒருகுறிப்பிட்ட காலத்தை நியமித்து வைத்திருக்கிறார். ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பாக நீதிமான்கள் உயிர்த்தெழவேண்டுமென்றும், ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப்பின்பு, துன்மார்க்கர் உயிர்த்தெழவேண்டுமென்றும் கர்த்தர் ஒரு காலத்தை நிர்ணயம் பண்ணியிருக்கிறார். (வெளி 20:4-6,11-15).

"மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?" - மனுஷனுக்கு இந்த ஜீவனில் சம்பவிக்கப்போவது சரீர மரணமாகும். இதன்பின்பு நீதிமானும், துன்மார்க்கரும் மறுபடியும் உயிர்த்தெழுந்து, நித்திய காலமாக ஜீவிப்பார்கள். நீதிமான்கள் கர்த்தரோடு பரலோகத்திலும், துன்மார்க்கர் சாத்தானோடு நரகத்திலும் நித்திய காலமாக ஜீவிப்பார்கள். (தானி 12:2; யோவான் 5:28-29; 1கொரி 15; வெளி 20:4-6,11-15).

14 அதிகாரம்

மனுஷருக்கு வரும் மாறுதல்கள்

எல்லா மனுஷருக்கும் அவர்களுடைய ஜீவியங்களில் இரண்டு விதமான மாற்றங்கள் உண்டாகும். அவையாவன:

1. மனுஷனுடைய சரீர மரணத்தின்போது ஒருமாற்றம் உண்டாகிறது. அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் அவன் மரிக்கும் போது அவனுடைய சரீரத்தை விட்டுப் பிரிந்து செல்கிறது. (எபி 9:27; யாக் 2:26). நீதிமான்களுடைய ஆவியும், ஆத்துமாவும் பரலோகத்தில் தங்களுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11) துன்மார்க்கருடைய ஆவியும், ஆத்துமாவும் பாதாளத்தில் தங்களுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (சங் 9:17; ஏசா 14:9; லூக்கா 16:19-31).

2. மனுஷருடைய சரீரம் உயிர்த்தெழும்போது அவனுக்கு இரண்டாவது மாறுதல் உண்டாகிறது. மனுஷன் மரிக்கும்போது அவனை விட்டுப்பிரிந்து போன ஆவியும், ஆத்துமாவும் மறுபடியுமாக அவனுடைய உயிர்த்தெழுந்த சரீரத்தோடு சேரும். அதன் பின்பு அந்த மனுஷன் தன் உயிர்த்தெழுந்த சரீரத்தில் தன்னுடைய ஆவியோடும், ஆத்துமாவோடும் நித்திய காலமாய் ஜீவிப்பான். (தானி 12:2; யோவான் 5:28-29; 1கொரி 15; 1தெச 4:13-16; வெளி 20:4-6,11-15).

"என் மீறுதல் ஒரு கட்டாகக் கட்டப்பட்டு முத்திரைபோடப்பட்டிருக்கிறது" - தற்காலத்தில் பூட்டு பயன்படுத்தப்படுவது போன்று, அக்காலத்தில் முத்திரை பயன்படுத்தப்பட்டது. பணத்தையும், ஆவணங்களையும் அக்காலத்தில் முத்திரையிடுவது வழக்கம். முத்திரையிடப்பட்ட பின்பு அது பாதுகாப்பாக இருக்கும். யோபுவின் பாவங்களும் எண்ணப்பட்டு முத்திரையிடப் பட்டிருக்கிறது. பொக்கிஷத்தைக் காவல் காப்பது போல கர்த்தர் யோபுவின் பாவங்களை எண்ணித் தொகையேற்றி முத்திரையிட்டு வைத்திருக்கிறார் என்று யோபு கூறுகிறான். (யோபு 14:16-17)

நித்திய ஜீவனைப் பற்றி யோபுவின் உபதேசம்

மனுஷனைவிட ஒரு மரத்திற்கு நம்பிக்கை உள்ளதாக யோபு கூறுகிறான். (யோபு 14:7-10) மரத்தை வெட்டிப் போட்டாலும் அது திரும்பத் தழைக்கும். ஆனால் மனுஷனோ செத்த பின்பு ஒழிந்து போகிறான் என்பது யோபுவின் உபதேசம். மனுஷனுடைய மரணத்தைக் குறிப்பதற்கு யோபு "ஜீவித்துப் போன பின்பு" "gives up the ghost" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறான். (யோபு 14:10-12).

கர்த்தர் தன்னைப் பாதாளத்தில் ஒழித்து வைத்திருக்க வேண்டும் என்றும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தன்னைத் திரும்பவும் நினைக்க வேண்டுமென்றும் யோபு கூறுகிறான். (யோபு 14:13). ஒருசிலர் இந்த வாக்கியத்திற்குத் தவறாக வியாக்கியானம் கூறுகிறார்கள். மரித்தோர் நித்திரை நிலைமையில் இருப்பதாக இதற்கு விளக்கம் கூறுகிறார்கள். அப்படியொரு நித்திரை நிலைமை வேதாகமத்தில் எங்கும் கூறப்படவில்லை. மனுஷன் மரிக்கும்போது அவனுடைய சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது. (ஆதி 3:19; பிர 3:19-21) அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் மனுஷனுடைய சரீரத்தைவிட்டுப் பிரிந்து போகிறது. (யாக் 2:26).

மனுஷன் "வானங்கள் ஒழிந்துபோகும் அளவும் எழுந்திருக்கிறதுமில்லை" என்று யோபு கூறுகிறான். (யோபு 14:12). அக்காலத்திலேயே மனுஷருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது என்பது தெரியவருகிறது. குறித்த காலத்தில் மனுஷன் உயிர்த்தெழுவான். (யோபு 14:13). "மனுஷன் செத்த பின்பு பிழைப்பானோ" என்னும் வாக்கியமும் அவன் மறுபடியும் பிழைப்பான் என்னும் விசுவாசத்தையே இங்கு வெளிப்படுத்துகிறது. (யோபு 14:14).

14 அதிகாரம்

"மலைமுதலாய் விழுந்து கரைந்துபோம்" - யோபு இங்கு பூமியதிர்ச்சிகளையும், ஜலப்பிரளயங்களையும் (யோபு 14:19), தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் கிரியைகளையும் (யோபு 14:20-22) கூறுகிறான்.

மனுஷனுடைய தன்மையைப் பத்தி யோபுவின் உபதேசம்

மனுஷனுடைய பௌதீக தன்மையையும், ஆவிக்குரிய தன்மையையும் யோபு விளக்குகிறான். மனுஷனுடைய ஆவியும், ஆத்துமாவும் அவனுக்குள் இருக்கிறது. மனுஷனுடைய சரீரம், அவனுடைய ஆவி, ஆத்துமா ஆகியவற்றிற்கு வெளியில் இருக்கிறது. மரிக்கும்போது பௌதீக சரீரம் மட்டுமே மண்ணுக்குத் திரும்பும். (ஆதி 2:7; ஆதி 3:19; பிர 3:19-21) உள்ளான மனுஷன் ஆவிக்குரியவன். அதில் அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் உள்ளது. மனுஷருடைய சரீரத்திற்குள் ஜீவிக்குமாறு ஆவியும், ஆத்துமாவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. (ஆதி 2:7). மனுஷருடைய மரணத்தின் போது அவனுடைய உள்ளான மனுஷன் மரித்துப்போன சரீரத்தை விட்டு வெளியேறுகிறான். அவன் செய்த நன்மை, தீமைக்குத் தகுந்த பிரகாரம் அவனுடைய ஆத்துமா பரலோகத்திற்கோ, அல்லது பாதாளத்திற்கோ செல்கிறது. மரணத்திலிருந்து அவன் மறுபடியும் உயிர்த்தெழும் வரையிலும் மனுஷருடைய ஆவியும், ஆத்துமாவும் உணர்வுள்ளதாகவே இருக்கும். நீதிமானின் ஆத்துமாக்கள் பரலோகத்திலும், 2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11), துன்மார்க்கரின் ஆத்துமாக்கள் பாதாளத்திலும் (ஏசா 14:9; லூக்கா 16:19:31; வெளி 20:11-15) மரித்துப் போகாமல் உணர்வோடிருக்கும்.

யோபு - தொகுப்புரை

15 அதிகாரம்

8. எலிப்பாசின் சம்பாஷணை

(1) யோபுவின் பாவங்களுக்காக அவனைக் குற்றப்படுத்துகிறான்

யோபு 15:1 அப்பொழுது தேமானியனாகிய எலிப்பாஸ் பிரதியுத்தரமாக:

யோபு 15:2 ஞானவான் காற்றைப்போன்ற நியாயங்களைச் சொல்லி, தன் வயிற்றைக் கொண்டல்காற்றினால் நிரப்பி,

யோபு 15:3 பிரயோஜனமில்லாத வார்த்தைகளாலும், உபயோகமில்லாத வசனங்களாலும் தர்க்கிக்கலாமோ?

யோபு 15:4 நீர் பயபக்தியை வீணென்று சொல்லி, தேவனுக்கு முன்பாக ஜெபத் தியானத்தைக் குறையப் பண்ணுகிறீர்.

யோபு 15:5 உம்முடைய வாய் உம்முடைய அக்கிரமத்தைச் சொல்லிக்காட்டுகிறது; நீர் தந்திரமுள்ளவர்களின் நாவைத் தெரிந்துகொண்டீர்.

யோபு 15:6 நான் அல்ல, உம்முடைய வாயே உம்மைக் குற்றவாளி என்று தீர்க்கிறது; உம்முடைய உதடுகளே உமக்கு விரோதமாகச் சாட்சியிடுகிறது.

யோபு 15:7 மனுஷரில் முந்திப் பிறந்தவர் நீர்தானோ? பர்வதங்களுக்கு முன்னே உருவாக்கப்பட்டீரோ?

யோபு 15:8 நீர் தேவனுடைய இரகசிய ஆலோசனையைக் கேட்டு, ஞானத்தை உம்மிடமாய்ச் சேர்த்துக்கொண்டீரோ?

யோபு 15:9 நாங்கள் அறியாத எந்தக் காரியத்தை நீர் அறிந்திருக்கிறீர்? எங்களுக்கு விளங்காத எந்தக் காரியமாவது உமக்கு விளங்கியிருக்கிறதோ?

யோபு 15:10 உம்முடைய தகப்பனைப் பார்க்கிலும் பெரிய வயதுள்ள நரைத்தோரும் விருத்தாப்பியரும் எங்களுக்குள் இருக்கிறார்களே.

யோபு 15:11 தேவன் அருளிய ஆறுதல்களும், உம்மோடே சொல்லப்படுகிற மிருதுவான பேச்சும் உமக்கு அற்பகாரியமாயிருக்கிறதோ?

யோபு 15:12 உம்முடைய இருதயம் உம்மை எங்கே கொண்டுபோகிறது? உம்முடைய கண்கள் நெறித்துப்பார்க்கிறது என்ன?

யோபு 15:13 தேவனுக்கு விரோதமாக உம்முடைய ஆவியை எழுப்பி, உம்முடைய வாயிலிருந்து வசனங்களைப் புறப்படப் பண்ணுகிறீர்.

யோபு 15:14 மனுஷனானவன் பரிசுத்தமாயிருக்கிறதற்கும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் நீதிமானாயிருக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம்?

யோபு 15:15 இதோ, தம்முடைய பரிசுத்தவான்களையும் அவர் நம்புகிறதில்லை; வானங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல.

யோபு 15:16 அநியாயத்தைத் தண்ணீரைப் போலக் குடிக்கிற மனுஷன் எத்தனை அதிகமாய் அருவருப்பும் அசுத்தமுமாயிருக்கிறான்?

எலிப்பாஸின் பிரதியுத்தரம்

யோபுவின் மூன்று சிநேகிதரும் அவன்மீது குற்றம் கூறுகிறார்கள். யோபுவும், அவர்கள் மூவருக்குமே பிரதியுத்தரம் கூறுகிறான். அதன் பின்பு, முதலாவதாக எலிப்பாஸ் மறுபடியுமாக பேசுகிறான். எலிப்பாஸின் பிரதியுத்தர விவரம் வருமாறு:

1. யோபு 15 பாவங்களைச் செய்திருக்கிறான். (யோபு 15:1-16)

2. துன்மார்க்கர்மீது தேவன் 20 நியாயத்தீர்ப்புக்களை அனுப்புகிறார்.

3. யோபு ஒரு துன்மார்க்கன். துன்மார்க்கருக்கு வரும் நியாயத் தீர்ப்புக்கள் யோபுவுக்கும் வந்துள்ளது. (யோபு 15:17-35).

15 அதிகாரம்

எலிப்பாஸ் கூறும் யோபுவின் பாவங்கள்

1. காற்றைப்போன்ற நியாயங்களைச் சொல்லுகிறான். (யோபு 15:2)
2. தன் வயிற்றைக் கொண்டல்காற்றினால் நிரப்புகிறான்.
3. பிரயோஜனமில்லாத வார்த்தைகளால் தர்க்கிக்கிறான். (யோபு 15:3)
4. உபயோகமில்லாத வசனங்களால் தர்க்கிக்கிறான்.
5. பயபக்தியை வீணென்று சொல்லுகிறான். (யோபு 15:4)
6. தேவனுக்கு முன்பாக ஜெபத்தியானத்தைக் குறையப் பண்ணுகிறான்.
7. அக்கிரமத்தைச் சொல்லிக்காட்டுகிறான். (யோபு 15:5)
8. தந்திரமுள்ளவர்களின் நாவைத் தெரிந்துகொண்டான்.
9. யோபுவினுடைய வாயே அவனைக் குற்றவாளி என்று தீர்க்கிறது (யோபு 15:6)
10. பூமியிலுள்ள பெரிய மனுஷனைப் போல யோபு தன்னைக் காண்பித்துக் கொள்கிறான். (யோபு 15:7)
11. ஞானத்தை விலக்கிவிட்டான் (யோபு 15:8)
12. தனக்கு எல்லாக் காரியமும் விளங்கத்தக்க பெரிய ஞானம் இருப்பதாகக் கூறுகிறான்.(யோபு 15:9)
13. யோபுவின் இருதயம் பெருமை உடையது. (யோபு 15:12)
14. யோபுவின் கண்கள் நெறித்துப்பார்க்கிறது
15. தேவனுக்கு விரோதமாக தன்னுடைய ஆவியை எழுப்புகிறான். (யோபு 15:13)

(2) வரலாற்றின்மீது எலிப்பாசின் கவனம் - துன்மார்க்கனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டு - யோபு வேதனைப் படுவதினால் அவன் துன்மார்க்கனாய் இருக்கவேண்டும்

யோபு 15:17 உமக்குக் காரியத்தைத் தெரியப் பண்ணுவேன், என்னைக் கேளும்; நான் கண்டதை உமக்கு விவரித்துச் சொல்லுவேன்.

யோபு 15:18 ஞானிகள் தங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டு மறைக்காமல் அறிவித்ததையே நான் சொல்லுவேன்.

யோபு 15:19 அவர்களுக்குமாத்திரம் பூமி அளிக்கப்பட்டது; அந்நியர் அவர்கள் நடுவே கடந்துபோக இடமில்லை.

யோபு 15:20 துன்மார்க்கன் உயிரோடிருக்கிற நாளெல்லாம் துன்பத்தால் வாதிக்கப்படுகிறான்; பலவந்தம்பண்ணுகிறவனுக்கு அவன் வருஷங்களின் தொகை மறைக்கப் பட்டிருக்கிறது.

யோபு 15:21 பயங்கரமான சத்தம் அவன் காதுகளில் தொனிக்கிறது; அவன் சமாதானமாயிருக்கையில் பாழாக்கிறவன் அவன்மேல் வருவான்.

யோபு 15:22 இருளிலிருந்து திரும்பிவர அவனுக்கு நம்பிக்கையில்லாமல், பதிவிருக்கிறவர்களின் பட்டயத்துக்கு அவன் பயப்படுகிறான்.

யோபு 15:23 அப்பம் எங்கே கிடைக்கும் என்று அவன் அலைந்து திரிகிறான்; அந்தகாரநாள் தனக்குச் சமீபித்திருக்கிறதை அறிவான்.

யோபு 15:24 இக்கட்டும் நெருக்கமும் அவனைக் கலங்கப்பண்ணி, யுத்தசன்னத்தனான ராஜாவைப்போல அவனை மேற்கொள்ளும்.

யோபு 15:25 அவன் தேவனுக்கு விரோதமாகக் கைநீட்டி, சர்வவல்லவருக்கு விரோதமாகப் பராக்கிரமம் பாராட்டுகிறான்.

15 அதிகாரம்

யோபு 15:26 கடினக்கழுத்தோடும், பருத்த குமிழுள்ள தன் கேடயங்களோடும் அவருக்கு எதிராக ஓடுகிறான்.

யோபு 15:27 அவன் முகத்தைக் கொழுப்பு மூடியிருக்கிறது; அடிவயிறு தொந்தி விட்டிருக்கிறது.

யோபு 15:28 ஆனாலும் பாழான பட்டணங்களிலும், குடிபோன கற்குவியலான வீடுகளிலும் வாசம் பண்ணுவான்.

யோபு 15:29 அவன் ஐசுவரியவானாவதுமில்லை, அவன் ஆஸ்தி நிலைப்பதுமில்லை; அப்படிப் பட்டவர்களின் செல்வம் பூமியில் நீடித்திருப்பதில்லை.

யோபு 15:30 இருளுக்கு அவன் தப்புவதில்லை; அக்கினி ஜுவாலை அவனுடைய கிளையைக் காய்ந்துபோகப் பண்ணும்; அவருடைய வாயின் சுவாசத்தால் அற்றுப்போவான்.

யோபு 15:31 வழிதப்பினவன் மாயையை நம்பானாக; நம்பினால் மாயையே அவன் பலனாயிருக்கும்.

யோபு 15:32 அது அவன் நாள் வருமுன்னே அவனுக்குப் பூரணமாய்ப் பலிக்கும்; அவனுடைய கொப்புப் பச்சைகொள்வதில்லை.

யோபு 15:33 பிஞ்சுகள் உதிர்ந்து போகிற திராட்சச்செடியைப்போலவும், பூக்கள் உதிர்ந்து போகிற ஒலிவமரத்தைப் போலவும் அவன் இருப்பான்.

யோபு 15:34 மாயக்காரரின் கூட்டம் வெறுமையாய்ப் போம்; பரிதானம் வாங்கினவர்களின் கூடாரங்களை அக்கினி பட்சிக்கும்.

"ஞானிகள் தங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டு மறைக்காமல் அறிவித்தது" - வேதாகமம் எழுதப்படுவதற்கு முன்பாக ஆதாமின் காலத்திலிருந்து யோபுவின்காலம் வரையிலும் சத்தியம் வாய்மொழியாக ஒவ்வொரு சந்ததியாகக் கடந்த வந்திருக்கிறது.

"அந்நியர் அவர்கள் நடுவே கடந்துபோக இடமில்லை" - முற்பிதாக்கள் மிகவும் எளிமையாக ஜீவித்தார்கள். புறஜாதியார் அந்நிய தெய்வங்களை அவர்கள் மத்தியில் கொண்டு வரவில்லை.

துன்மார்க்கர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு

1. துன்மார்க்கன் உயிரோடிருக்கிற நாளெல்லாம் துன்பத்தால் வாதிக்கப் படுகிறான்.
2. பலவந்தம்பண்ணுகிறவனுக்கு அவன் வருஷங்களின் தொகை மறைக்கப் பட்டிருக்கிறது.
3. பயங்கரமான சத்தம் அவன் காதுகளில் தொனிக்கிறது. (யோபு 15:21).
4. அவன் சமாதானமாயிருக்கையில் பாழாக்கிறவன் அவன்மேல் வருவான்.
5. இருளிலிருந்து திரும்பிவர அவனுக்கு நம்பிக்கையில்லை. (யோபு 15:22).
6. பதிவிருக்கிறவர்களின் பட்டயத்துக்கு அவன் பயப்படுகிறான்.
7. அப்பம் எங்கே கிடைக்கும் என்று அவன் அலைந்து திரிகிறான். (யோபு 15:23).
8. அந்தகாரநாள் தனக்குச் சமீபித்திருக்கிறதை அறிவான்.
9. இக்கட்டும் நெருக்கமும் அவனைக் கலங்கப்பண்ணுகிறது. (யோபு 15:24).

யோபு - தொகுப்புரை

15 அதிகாரம்

10. வெற்றி கிடைக்குமென்னும் நிச்சயம் இல்லாமலேயே யுத்தம் பண்ணுகிறான். (யோபு 15:25-27).

11. தனியாக ஜீவிக்கிறான். (யோபு 15:28).

12. பல துன்பங்களை அனுபவிக்கிறான்.

13. அவன் ஐசுவரியவானாவதில்லை (யோபு 15:29).

14. அவன் ஆஸ்தி நிலைப்பதில்லை.

15. அவனுடைய செல்வம் பூமியில் நீடித்திருப்பதில்லை.

16.இருளில் ஜீவிக்கிறான். (யோபு 15:30).

17. ஒரு மரத்தைப் போல தேவன் அவனை அழித்துப் போடுகிறார்18. மாயையை நமபுகிறான். (யோபு 15:31).

18. மாயையை நம்புகிறான். (யோபு 15:31).

19. கனிதராமல் இருக்கிறான். (யோபு 15:32-33).

20. அவனுடைய ஜீவியம் உதிர்ந்து போகிறது. (யோபு 15:33).

"பருத்த குமிழுள்ள தன் கேடயங்கள்" - வட்டமான கேடயங்களில் பல குமிழ்கள் இருக்கும். இவை கனமான உலோகத்தால் செய்யப்பட்டவை. தேவனுக்கு எதிராக இந்தக் குமிழ்களால் ஒன்றும் பண்ண முடியாது.

"குடிபோன கற்குவியலான வீடுகள்" - கிழக்கு தேசத்தில் மண் சுவர்களான சிறிய வீடுகள் இருக்கும். வீட்டின்மீது புல் அல்லது வைக்கோலை வைத்து கூரை போட்டிருப்பார்கள். இந்தக் கூரை மழைக்குத் தாங்காது. மண்சுவரும் மழையில் கரைந்துபோகும்.

யோபு – தொகுப்புரை

16 அதிகாரம்

9. எலிப்பாசுக்கு யோபுவின் பதில்வுரை

(1) அலட்டுண்டாக்கிற தேற்றரவாளரைக் கடிந்து கொள்கிறான்

யோபு 16:1 யோபு பிரதியுத்தரமாக:

யோபு 16:2 இப்படிப்பட்ட அநேகங் காரியங்களை நான் கேட்டிருக்கிறேன்; நீங்கள் எல்லாரும் அலட்டுண்டாக்கிற தேற்றரவாளர்.

யோபு 16:3 காற்றைப்போன்ற வார்த்தைகளுக்கு முடிவிராதோ? இப்படி நீ உத்தரவுசொல்ல உனக்குத் துணிவு உண்டானதென்ன?

யோபு 16:4 உங்களைப்போல நானும் பேசக்கூடும்; நான் இருக்கும் நிலைமையில் நீங்கள் இருந்தால், நான் உங்களுக்கு விரோதமாக வார்த்தைளைக் கோத்து, உங்களுக்கு எதிரே என் தலையைத் துலுக்கவுங்கூடும்.

யோபு 16:5 ஆனாலும் நான் என் வாயினால் உங்களுக்குத் திடன் சொல்லுவேன், என் உதடுகளின் அசைவு உங்கள் துக்கத்தை ஆற்றும்.

யோபு 16:6 நான் பேசினாலும் என் துக்கம் ஆறாது; நான் பேசாமலிருந்தாலும் எனக்கு என்ன ஆறுதல்?

யோபுவின் பிரதியுத்தரம்

எலிப்பாஸ் இரண்டாம் முறையாக யோபுவின்மீது குற்றம்சூறி முடித்துவிடுகிறான். அதற்கு யோபு கூறும் பிரதியுத்தரத்தின் விவரம் வருமாறு:

1. தன்னுடைய சிநேகிதர் அலட்டுண்டாக்கிற தேற்றரவாளராக இருக்கிறார்கள். (யோபு 16:1-6)
2. தேவனையும், மனுஷனையும் குற்றம் கூறுகிறான். (யோபு 16:7-14)
3. தன்னுடைய பாடுகளுக்குத் தகுந்த அநியாயம் தன்னிடத்தில் இல்லையென்று வாதிடுகிறான். (யோபு 16:15-22)
4. தேவனுக்கு எதிராகக் குற்றம் கூறுகிறான். (யோபு 17:1-16).

(2) தேவனுக்கும் மனுஷனுக்கும் எதிராக யோபுவின் குற்றச்சாட்டு

யோபு 16:7 இப்போது அவர் என்னை இளைத்துப்போகச் செய்தார்; என் கூட்டத்தையெல்லாம் பாழாக்கினீர்.

யோபு 16:8 நீர் என்னைச் சுருங்கிப்போகப் பண்ணினது அதற்குச் சாட்சி; என் மெலிவு என்னில் அத்தாட்சியாக நின்று, என் முகத்துக்கு முன்பாக உத்தரவு சொல்லும்.

யோபு 16:9 என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என் பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான்.

யோபு 16:10 எனக்கு விரோதமாகத் தங்கள் வாயை விரிவாய்த் திறந்தார்கள்; நிந்தையாக என்னைக் கன்னத்தில் அடித்தார்கள்; எனக்கு விரோதமாக ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள்.

யோபு 16:11 தேவன் என்னை அநியாயக் காரன் வசமாக ஒப்புவித்து, துன்மார்க்கரின் கையில் என்னை அகப்படப்பண்ணினார்.

யோபு 16:12 நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன்; அவர் என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார்.

யோபு 16:13 அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்; என் ஈரலைத் தப்பவிடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார்.

யோபு – தொகுப்புரை

16 அதிகாரம்

யோபு 16:14 நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை என்மேல் வரப்பண்ணினார்; பராக்கிரமசாலி யைப்போல என்மேல் பாய்ந்தார்.

தேவனுக்கு எதிராக யோபு கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. அவர் என்னை இளைத்துப்போகச் செய்தார்.
2. என் கூட்டத்தையெல்லாம் பாழாக்கினார்.
3. என்னைச் சுருங்கிப்போகப் பண்ணினார். (யோபு 16:8).
4. தம்முடைய கோபத்தால் என்னைப் பீறிப் போடுகிறார். (யோபு 16:9).
5. எனக்கு எதிராகப் பற்கடிக்கிறார்.
6. தேவன் என்னை அநியாயக்காரன் வசமாக ஒப்புவித்தார். (யோபு 16:11).
7. துன்மார்க்கரின் கையில் என்னை அகப்படப்பண்ணினார்.
8. அவர் என்னை நருக்கினார். (யோபு 16:12).
9. என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கினார்.
10. என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார்.
11. அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். (யோபு 16:13).
12. என் ஈரலைப் பிளந்தார்.
13. என்னைத் தப்பவிடவில்லை.
14. என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார்.
15. நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை என்மேல் வரப்பண்ணினார்.
16. பராக்கிரமசாலியைப்போல என்மேல் பாய்ந்தார். (யோபு 16:14).

யோபு மனுஷருக்கு விரோதமாகவும் குற்றம் கூறுகிறான். (யோபு 16:9-10). தேவனுக்கு எதிராக யோபு கூறும் குற்றச்சாட்டுக்கள் எதுவும் உண்மையாக இருக்க முடியாது. கர்த்தர் தன்னைச் சாத்தானிடத்தில் சோதிப்பதற்கு ஒப்புக்கொடுத்துவிட்டார் என்று யோபு கூறினால் அதுமட்டுமே மெய்யான வார்த்தையாக இருக்கும். ஏனெனில் யோபுவின் எல்லாப் பாடுகளுக்கும் சாத்தானே காரணம். (யோபு 1:12-19; யோபு 2:7-8). கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை வாதிக்கமாட்டார். வாதிக்க வேண்டிய அவசியம் எதுவும் அவருக்கு இல்லை. சாத்தானே தேவனுக்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் சத்துருவாக இருக்கிறான். ஆகையினால் நமக்கு வரும் பாடுகள் கர்த்தரால் வருகின்றது என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. (மத் 7:7-11; லூக்கா 11:9-13).

யோபு மனுஷர்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. என் சத்துரு (குறிப்பாக எலிப்பாஸ்) கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான்.
2. எனக்கு விரோதமாகத் தங்கள் (எலிப்பாசும், மற்ற சிநேகிதரும்) வாயை விரிவாய்த் திறந்தார்கள். (யோபு 16:10).
3. நிந்தையாக என்னைக் கன்னத்தில் அடித்தார்கள்.
4. எனக்கு விரோதமாக ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள்.

"என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி" - ஒரு வலுவான மிருகம் தன்னுடைய இரையைத் தேடும்போது அதன் பிடரியைப் பிடித்து நொறுக்கும். கர்த்தர் அதுபோல தன்னைப் பிடித்து நொறுக்குவதாக யோபு கூறுகிறான்.

"என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார்" - வில்லை நாணேற்றி, அம்பு எய்யும்போது ஒரு இலக்கைக் குறிபார்த்து எய்வார்கள். கர்த்தர் தன்னை ஒரு இலக்காக நியமித்திருப்பதாக யோபு கர்த்தர்மீது குற்றம் சுமத்துகிறான். (யோபு 16:13). கர்த்தர் தம்மீது விஷம் தோய்ந்த அம்பை எய்ததாக ஏற்கெனவே யோபு கர்த்தர் மீது குற்றம் சுமத்தியிருக்கிறான். (யோபு 6:4). இப்போதோ கர்த்தர் தன் ஈரலைப் பிளந்து தன்னுடைய பிச்சை தரையில் ஊற்றிவிட்டதாகக் கர்த்தர்மீது குற்றம் சுமத்துகிறான். (யோபு 16:13; புல 2:11).

யோபு - தொகுப்புரை

16 அதிகாரம்

(3) தான் அனுபவிக்கும் பாடுகள் தன்னுடைய துன்மார்க்கத்தின் விளைவினால் வந்ததல்ல என்று யோபு கூறுகிறான்

யோபு 16:15 நான் இரட்டுச்சேலையைத் தைத்து, என் தோளின்மேல் போர்த்துக் கொண்டேன்; என் மகிமையைப் புழுதியிலே போட்டுவிட்டேன்.

யோபு 16:16 அழுகிறதினால் என் முகம் அழுக்கடைந்தது; மரண இருள் என் கண்ணிமைகளின் மேல் உண்டாயிருக்கிறது.

யோபு 16:17 என் கைகளிலே கொடுமையில்லாதிருக்கையிலும், என் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், அப்படியாயிற்று.

யோபு 16:18 பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே; என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக.

யோபு 16:19 இப்போதும் இதோ, என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது, எனக்குச் சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார்.

யோபு 16:20 என் சிநேகிதர் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்; என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது.

யோபு 16:21 ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறதுபோல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்.

யோபு 16:22 குறுகின வருஷங்களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பிவராத வழியே போவேன்.

யோபுவின் பாடுகள் (யோபு 16:15-20)

1. நான் இரட்டுச்சேலையைத்தைத்து, என் தோளின்மேல் போர்த்துக்கொண்டேன்.
2. என் மகிமையைப் புழுதியிலே போட்டுவிட்டேன்.
3. அழுகிறதினால் என் முகம் அழுக்கடைந்தது. (யோபு 16:16)
4. மரண இருள் என் கண்ணிமைகளின் மேல் உண்டாயிருக்கிறது
5. என் சிநேகிதர் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள் (யோபு 16:20)
6. என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது.

யோபுவின் பிரதியுத்தரம்

1. என் கைகளிலே கொடுமையில்லா திருக்கிறது.
2. என் ஜெபம் சுத்தமாயிருக்கிறது.

யோபுவின் விண்ணப்பம்

1. பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே.
2. என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக.

யோபுவின் நற்குணத்திற்குச் சாட்சிகள்

1. யோபுவின் சாட்சி பரலோகத்திலி ருக்கிறது.
2. யோபுவிற்குச் சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிற கர்த்தர்.

"நான் திரும்பிவராத வழியே போவேன்" - யோபு இங்கு தன் சரீர மரணத்தைக் குறிப்பிடுகிறான். ஆனாலும் யோபு மறுபடியும் உயிர்த்தெழுவது நிச்சயம். (யோவான் 5:28-29; 1கொரி 15; பிலி 3:20-21).

17 அதிகாரம்

(4) யோபுவின் துக்கமும் தேவனிடத்தில் குற்றச்சாட்டும்

யோபு 17:1 என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக்குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது.

யோபு 17:2 பரியாசம்பண்ணுகிறவர்கள் என்னிடத்தில் இல்லையோ? அவர்கள் செய்யும் அநியாயங்களை என் கண் பார்த்துக்கொண்டிருக்கிறது.

யோபு 17:3 தேவரீர் என் காரியத்தை மேல் போட்டுக்கொண்டு, எனக்காகப் பிணைப்படுவீராக; வேறே யார் எனக்குக் கைகொடுக்கத்தக்கவர்?

யோபு 17:4 நீர் அவர்கள் இருதயத்துக்கு ஞானத்தை மறைத்தீர்; ஆகையால் அவர்களை உயர்த்தாதிருப்பீர்.

யோபு 17:5 எவன் தன் சிநேகிதருக்குக் கேடாகத் துரோகம் பேசுகிறானோ, அவன் பிள்ளைகளின் கண்களும் பூத்துப் போகும்.

யோபு 17:6 ஜனங்களுக்குள்ளே அவர் என்னைப் பழமொழியாக வைத்தார்; அவர்கள் முகத்துக்குமுன் நான் அருவருப்பானேன்.

யோபு 17:7 இதினிமித்தம் என் கண்கள் சஞ்சலத்தினால் இருளடைந்தது; என் அவயவங்களெல்லாம் நிழலைப்போலிருக்கிறது.

யோபு 17:8 சன்மார்க்கர் இதற்காகப் பிரமிப்பார்கள்; குற்றமில்லாதவன் மாயக்காரனுக்கு விரோதமாக எழும்புவான்.

யோபு 17:9 நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்; சுத்தமான கைகளுள்ளவன் மேன்மேலும் பலத்துப் போவான்.

யோபு 17:10 இப்போதும் நீங்கள் எல்லாரும் போய்வாருங்கள்; உங்களில் ஞானமுள்ள ஒருவனையும் காணேன்.

யோபு 17:11 என் நாட்கள் போயிற்று; என் இருதயத்தில் எனக்கு உண்டாயிருந்த சிந்தனைகள் அற்றுப்போயிற்று.

யோபு 17:12 அவைகள் இரவைப் பகலாக்கிற்று; இருளை வெளிச்சம் தொடர்ந்து வரும் என்று எண்ணச்செய்தது.

யோபு 17:13 அப்படி நான் காத்துக் கொண்டிருந்தாலும், பாதாளம் எனக்கு வீடாயிருக்கும்; இருளில் என் படுக்கையைப் போடுவேன்.

யோபு 17:14 அழிவைப்பார்த்து, நீ எனக்குத் தகப்பன் என்கிறேன்; புழுக்களைப் பார்த்து, நீங்கள் எனக்குத் தாயும் எனக்குச் சகோதரியும் என்கிறேன்.

யோபு 17:15 என் நம்பிக்கை இப்போது எங்கே? நான் நம்பியிருந்ததைக் காண்பவன் யார்?

யோபு 17:16 அது பாதாளத்தின் காவலுக்குள் இறங்கும்; அப்போது தூளில் ஏகமாய் இளைப்பாறுவோம் என்றான்.

யோபுவின் துயரம்

1. என் சுவாசம் ஒழிகிறது.
2. என் நாட்கள் முடிகிறது.
3. பிரேதக்குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது
4. பரியாசம் பண்ணுகிறவர்கள் என்னிடத்தில் இருக்கிறார்கள். (யோபு 17:2).
5. அவர்கள் செய்யும் அநியாயங்களை என் கண் பார்த்துக்கொண்டிருக்கிறது.
6. என் காரியத்தை மேல் போட்டுக்கொள்ளும். (யோபு 17:3).
7. எனக்காகப் பிணைப்படுவீராக
8. எனக்குக் கைகொடும்.

17 அதிகாரம்

9. நீர் அவர்கள் இருதயத்துக்கு என் வருத்தத்தை மறைத்தீர். (யோபு 17:4).

10. ஜனங்களுக்குள்ளே அவர் என்னைப் பழமொழியாக வைத்தார் (யோபு 17:6).

11. என் கண்கள் சஞ்சலத்தினால் இருளடைந்தது (யோபு 17:7).

12. என் அவயவங்களெல்லாம் நிழலைப் போலிருக்கிறது.

13. சன்மார்க்கர் இதற்காகப் பிரமிப்பார்கள் (யோபு 17:8).

14. என் நாட்கள் போயிற்று (யோபு 17:11).

15. என் இருதயத்தில் எனக்கு உண்டாயிருந்த சிந்தனைகள் அற்றுப்போயிற்று.

16. அவைகள் இரவைப் பகலாக்கிற்று (யோபு 17:12).

17. நான் காத்துக்கொண்டிருந்தாலும், பாதாளம் எனக்கு வீடாயிற்று. (யோபு 17:13).

18. இருளில் என் படுக்கையைப் போடுகிறேன்.

19. அழிவு எனக்குத் தகப்பனும், புழுக்கள் எனக்கு தாயும், சகோதரியுமாயிருக்கிறார்கள். (யோபு 17:14).

20. எனக்கு நம்பிக்கையில்லை. (யோபு 17:15).

அருவருப்பு (tabret) - תֹּפֶת - to'-feth - 8611

பெண்பால் பெயர்ச்சொல் - அருவருப்பு, துப்புதல் (drum)

"நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்" - இந்த வாக்கியம் யோபுவுக்காகக் கூறப்பட்டாலும் இது எல்லா நீதிமானுக்கும் பொருந்தும்.

"அவைகள் இரவைப் பகலாக்கிற்று" - யோபுவின் மனதில் குழப்பம் அதிகமாயிற்று. ஆகையினால் யோபுவால் இரவில் நித்திரை செய்ய முடியவில்லை. பகல் பொழுதைவிட இரவு பொழுது யோபுவிற்கு அதிகமாய் இருப்பது போல தோன்றுகிறது.

"அழிவைப்பார்த்து, நீ எனக்குத் தகப்பன் என்கிறேன்" - யோபுவின் நம்பிக்கையெல்லாம் அற்றுப் போயிற்று. விரைவில் தன்னுடைய சரீரம் புதைகுழியில் புதைக்கப்படும் என்று யோபு நினைக்கிறான். தன்னுடைய சரீரம் அழிந்து அதைப் புழுக்கள் தின்று போடும் என்று நினைக்கிறான். எபிரெய மொழியில் புழுக்கள் பெண்பாலாக இருப்பதினால் இந்த வசனத்தில் அது தாய்க்கும், சகோதரிக்கும் ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. (யோபு 17:14-16).

18 அதிகாரம்

10. பில்தாத்தின் சம்பாஷணை

(1) யோபுவின்மீது கடிந்துரை

யோபு 18:1 அப்பொழுது சூகியனான பில்தாத் பிரதியுத்தரமாக:

யோபு 18:2 நீங்கள் எந்தமட்டும் பேச்சுகளை முடிக்காதிருப்பீர்கள்? புத்திமான்களாயிருங்கள்; நாங்களும் பேசட்டும்.

யோபு 18:3 நாங்கள் மிருகங்களைப்போல எண்ணப்பட்டு, உங்கள் பார்வைக்குத் தீழ்ப்பானவர்களாயிருப்பானேன்?

யோபு 18:4 கோபத்தினால் உம்மைத் தானே பீறுகிற உமது நிமித்தம் பூமி பாழாய்ப் போகுமோ? கன்மலை தன்னிடத்தை விட்டுப் பேருமோ?

பில்தாத்தின் பிரதியுத்தரம்

யோபு எலிப்பாசிற்குப் பிரதியுத்தரம் கூறி முடித்திருக்கிறான். அதற்கு அடுத்தபடியாக பில்தாத் தன்னுடைய இரண்டாவது சம்பாஷணையை ஆரம்பிக்கிறான். யோபுவின் மீது ஏழு விதமான குற்றச்சாட்டுக்களையும், (யோபு 18:1-4), துன்மார்க்கர்மீது 30 விதமான அழிவுகளையும் (யோபு 18:5-21) பில்தாத் தன்னுடைய பிரதியுத்தரத்தில் கூறுகிறான். யோபுவிக்குப் பலவிதமான பாடுகள் வருவதினால் அவனும் ஒரு துன்மார்க்கன் என்று பில்தாத் தீர்மானம் செய்கிறான்.

பில்தாத் யோபுவின்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. நீங்கள் எந்தமட்டும் பேச்சுகளை முடிக்காதிருப்பீர்கள்?
2. புத்திமான்களாயிருங்கள்; நாங்களும் பேசட்டும்.
3. நாங்கள் மிருகங்களைப்போல எண்ணப் படுகிறோம். (யோபு 18:3)
4. உங்கள் பார்வைக்குத் தீழ்ப்பானவர்களாயிருக்கிறோம்.
5. கோபத்தினால் உம்மைத்தானே பீறுகிறீர். (யோபு 18:4)
6. உமது நிமித்தம் பூமி பாழாய்ப் போகாது.
7. கன்மலை தன்னிடத்தை விட்டுப் பேராது.

(2) துன்மார்க்கரின் அழிவு

யோபு 18:5 துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்துபோம்; அவன் அடுப்பின் நெருப்பும் அவிந்துபோம்.

யோபு 18:6 அவன் கூடாரத்தில் வெளிச்சம் அந்தகாரப்படும்; அவன் விளக்கு அவனுடனே அணைந்துபோம்.

யோபு 18:7 அவன் பெலனாய் நடந்த நடைகள் குறைந்துபோம் அவன் ஆலோசனை அவனை விழப்பண்ணும்.

யோபு 18:8 அவன் தன் கால்களினால் வலையில் அகப்பட்டு, வலைச்சிக்கலி லே நடக்கிறான்.

யோபு 18:9 கண்ணி அவன் குதிகாலைப் பிடிக்கும்; பறிகாரர் அவனை மேற்கொள்வார்கள்.

யோபு 18:10 அவனுக்காகச் சுருக்கு தரையிலும், அவனுக்காகக் கண்ணி வழியிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

யோபு 18:11 சுற்றிலுமிருந்துண்டாகும் பயங்கரங்கள் அவனைத் திடுக்கிடப் பண்ணி, அவன் கால்களைத் திசை தெரியாமல் அலையப்பண்ணும்.

யோபு 18:12 அவன் பெலனைப் பட்டினி தின்று போடும்; அவன் பக்கத்தில் கேடு ஆயத்தப்பட்டு நிற்கும்.

யோபு 18:13 அது அவன் அங்கத்தின் பலத்தைப் பட்சிக்கும்; பயங்கரமான மரணமே அவன் அவயவங்களைப் பட்சிக்கும்.

யோபு - தொகுப்புரை

18 அதிகாரம்

யோபு 18:14 அவன் நம்பிக்கை அவன் கூடாரத்திலிருந்து வேரோடே பிடுங்கப்படும்; அது அவனைப் பயங்கர ராஜாவினிடத்தில் துரத்தும்.

யோபு 18:15 அவனுக்கு ஒன்றுமில்லாமற் போனதினால், பயங்கரம் அவன் கூடாரத்தில் குடியிருக்கும்; கந்தகம் அவன் வாசஸ்தலத்தின்மேல் தெளிக்கப் படும்.

யோபு 18:16 கீழே இருக்கிற அவன் வேர்கள் அழிந்துபோகும்; மேலே இருக்கிற அவன் கிளைகள் பட்டுப்போகும்.

யோபு 18:17 அவன் நினைக்கும் நினைப்புப் பூமியிலிருந்தழியும், வீதிகளில் அவன் பேரில்லாமற்போகும்.

யோபு 18:18 அவன் வெளிச்சத்திலிருந்து இருளில் துரத்திவிடப்பட்டு, பூலோகத்திலிருந்து தள்ளுண்டு போவான்.

யோபு 18:19 அவன் ஜனத்துக்குள்ளே அவனுக்குப் புத்திரனும் இல்லை பௌத்திரனும் இல்லை; அவன் வீட்டில் மீதியாயிருக்கத்தக்கவன் ஒருவனும் இல்லை.

யோபு 18:20 அவன் காலத்தோர் அவன் நாளுக்காகத் திடுக்கிட்டதுபோல, பின்னடியாரும் பிரமிப்பார்கள்.

யோபு 18:21 அக்கிரமக்காரன் குடியிருந்த ஸ்தானங்கள் இவைகள்தான்; தேவனை அறியாமற்போனவனுடைய ஸ்தலம் இதுவே என்பார்கள் என்றான்.

"விளக்கு" - கிழக்கு தேசத்தில் விளக்கு என்பது ஜீவனையும், இருள் என்பது அழிவையும் குறிக்கும் வாக்கியமாகும். பலவீடுகளில் இரவு முழுவதும் விளக்கு எரிந்து கொண்டே இருக்கும். விளக்கு எரிவது அவர்களுடைய செழுமைக்கு எடுத்துக்காட்டு. விளக்கு அணைவது அவர்களுடைய துக்கத்திற்கு அடையாளம். வேதவாக்கியத்தில் மனுஷனுடைய ஜீவனைக் குறிப்பதற்கு விளக்கு என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. விளக்கை அணைப்பது என்பது மரணத்திற்கு அடையாளம். (யோபு 18:5-6; யோபு 21:17; நீதி 13:9; நீதி 20:20; நீதி 24:20). யோபுவின் புஸ்தகத்தில் 31 இடங்களில் விளக்கைப் பற்றியும், 28 இடங்களில் இருளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இவையெல்லாமே உவமைப் பயன்பாடுகளாகும். இருள் என்பது மகாப் பெரிய சாபத்திற்கு அடையாளம். (யோபு 3:4-6; யோபு 5:14; யோபு 10:21-22; யோபு 15:22-23,30; யோபு 17:13; யோபு 18:18; யோபு 19:8; யோபு 20:26; யோபு 22:11; யோபு 23:17; யோபு 28:3; யோபு 29:3) ஒளி என்பது ஆசீர்வாதத்திற்கு அடையாளம். (யோபு 3:20,23; யோபு 12:22; யோபு 22:28; யோபு 25:3; யோபு 29:3; யோபு 30:26; யோபு 38:15).

துன்மார்க்கனுடைய அழிவு

1. துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்து போம். (யோபு 18:5).
2. அவன் அடுப்பின் நெருப்பும் அவிந்துபோம்.
3. அவன் கூடாரத்தில் வெளிச்சம் அந்தகாரப் படும். (யோபு 18:6).
4. அவன் விளக்கு அவனுடனே அணைந்துபோம்.
5. அவன் பெலனாய் நடந்த நடைகள் குறைந்துபோம். (யோபு 18:7).
6. அவன் ஆலோசனை அவனை விழப்பண்ணும்.
7. அவன் தன் கால்களினால் வலையில் அகப்படுவான். (யோபு 18:8).
8. வலைச்சிக்கலிலே நடக்கிறான்.
9. கண்ணி அவன் குதிகாலைப் பிடிக்கும். (யோபு 18:9)
10. பறிகாரர் அவனை மேற்கொள்வார்கள்.
11. அவனுக்காகச் சுருக்கு தரையில் வைக்கப்பட்டிருக்கிறது. (யோபு 10:10)
12. அவனுக்காகக் கண்ணி வழியில் வைக்கப் பட்டிருக்கிறது.

18 அதிகாரம்

13. சுற்றிலுமிருந்துண்டாகும் பயங்கரங்கள் அவனைத் திடுக்கிடப்பண்ணும். (யோபு 18:11).

14. அவன் கால்களைத் திசைதெரியாமல் அலையப்பண்ணும்.

15. அவன் பெலனைப் பட்டினி தின்று போடும். (யோபு 18:12).

16. அவன் பக்கத்தில் கேடு ஆயத்தப்பட்டு நிற்கும்.

17. அது அவன் அங்கத்தின் பலத்தைப் பட்சிக்கும். (யோபு 18:13).

18. பயங்கரமான மரணமே அவன் அவயவங்களைப் பட்சிக்கும்.

19. அவன் நம்பிக்கை அவன் கூடாரத்திலிருந்து வேரோடே பிடுங்கப் படும். (யோபு 18:14).

20. அது அவனைப் பயங்கர ராஜாவினிடத்தில் துரத்தும்.

21. அவனுக்கு ஒன்றுமில்லாமற்போனதினால், பயங்கரம் அவன் கூடாரத்தில் குடியிருக்கும். (யோபு 18:15).

22. கந்தகம் அவன் வாசஸ்தலத்தின்மேல் தெளிக்கப்படும்.

23. வேர்கள் அழிந்துபோகும். (யோபு 18:16).

24. கிளைகள் பட்டுப்போகும்.

25. அவன் நினைக்கும் நினைப்பு பூமியிலிருந்தழியும். (யோபு 18:17).

26. வீதிகளில் அவன் பேரில்லாமற்போகும்.

27. அவன் வெளிச்சத்திலிருந்து இருளில் துரத்திவிடப்படுவான். (யோபு 18:18).

28. பூலோகத்திலிருந்து தள்ளுண்டு போவான்.

29. அவன் ஜனத்துக்குள்ளே அவனுக்குப் புத்திரனும் இல்லை பௌத்திரனும் இல்லை; அவன் வீட்டில் மீதியாயிருக்கத்தக்கவன் ஒருவனும் இல்லை. (யோபு 18:19).

30. அவன் காலத்தோர் அவன் நாளுக்காகத் திடுக்கிட்டதுபோல, பின்னடியாரும் பிரமிப்பார்கள். (யோபு 18:20).

"பயங்கர ராஜா" - மரணத்தைக் குறிக்கும் அடையாள வார்த்தை. (யோபு 18:11). வேதாகமத்தில் மரணம் என்பது ஒரு பயங்கரமான நிகழ்ச்சியாகவே கூறப் பட்டிருக்கிறது. கர்த்தர் ஆதியில் மனுஷனைச் சிருஷ்டித்த போது அவன் நித்திய காலமாகத் தன் சரீரத்தில் ஜீவிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே சிருஷ்டித்தார். ஆனால் மனுஷனுடைய பாவத்தின் நிமித்தமாக அவனுக்கு மரணம் வந்துவிடுகிறது.

"கீழே இருக்கிற அவன் வேர்கள் அழிந்து போகும்" - கிழக்கு தேசத்துப் பாஷைகளில் வேர், தளைகள், கிளைகள், விருட்சங்கள் ஆகியவை சாபங்களையும், ஆசீர்வாதங்களையும் விளக்கும் வாக்கியமாகும். இந்த வாக்கியத்தில் வேர்களும், கிளைகளும் துன்மார்க்கருடைய அழிவுக்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. வேர்கள் அழிந்து போவது போலவும், கிளைகள் பட்டுப் போவதுபோலவும் துன்மார்க்கன் நிர்மூலமாவான். (யோபு 18:16-17; யோபு 5:3; யோபு 8:17; யோபு 18:16; யோபு 29:19; யோபு 31:8). பசுமையான கனிதரும் விருட்சம் நீதிமானுக்கு அடையாளமாகவும், கனிதராத பட்டுப்போன மரம் துன்மார்க்கனுக்கு அடையாளமாகவும் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. (சங் 1:3-4; சங் 52:8; சங் 92:12; எரே 17:5-8).

"வீதிகளில் அவன் பேரில்லாமற்போகும்" - யோபுவின் நாட்களில் வீதிகளில் மனுஷர் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசும்போது அந்த ஊரிலுள்ள நல்லவர்களைப் பற்றிப்பேசுவது வழக்கம். அவர்களுடைய நற்கிரியைகளைப் பற்றி ஜனங்கள் சந்தோஷமாகப் பேசுவார்கள். இது நீதிமானுக்கு மட்டுமே கிடைக்கும் வெகுமதி. துன்மார்க்கனைப் பற்றி யாரும் சந்தோஷமாகப் பேசுவதில்லை.

யோபு - தொகுப்புரை

18 அதிகாரம்

"அவன் வெளிச்சத்திலிருந்து இருளில் துரத்திவிடப்பட்டு" - துன்மார்க்கன் மரித்தவுடன் ஜனங்கள் அவனை விரைவில் மறந்து போவார்கள். துன்மார்க்கனுடைய பேர்சொல்ல அவனுடைய குடும்பமும் தழைக்காது. (யோபு 18:19). யோபு தன் குமாரரையும், குமாரத்திகளையும், சம்பத்துக்களையும் இழந்து விட்டான். ஆகையினால் யோபுவும் ஒரு துன்மார்க்கன் என்று பில்தாத் கூறுகிறான்.

19 அதிகாரம்

11. பில்தாத்திற்கு யோபுவின் பதிலுரை

(1) தன்னுடைய நண்பர்கள்மீது கடிந்துரை

யோபு 19:1 யோபு பிரதியுத்தரமாக:

யோபு 19:2 நீங்கள் எந்தமட்டும் என் ஆத்துமாவை வருத்தப்படுத்தி, வார்த்தைகளினால் என்னை நொறுக்குவீர்கள்?

யோபு 19:3 இப்போது பத்துதரம் என்னை நிந்தித்தீர்கள்; நீங்கள் எனக்குக் கடினமுகம் காண்பிக்கிறதினால் உங்களுக்கு வெட்கமில்லை.

யோபு 19:4 நான் தப்பிநடந்தது மெய்யானாலும், என் தப்பிதம் என்னோடேதான் இருக்கிறது.

யோபு 19:5 நீங்கள் எனக்கு விரோதமாகப் பெருமைபாராட்டி, எனக்கு நிந்தையாக என்னைக் கடிந்துகொள்ள வேண்டும் என்றிருப்பீர்களாகில்,

யோபுவின் பிரதியுத்தரம்

பில்தாத் யோபுவை ஒரு துன்மார்க்கன் என்று விவரித்துக் கூறுகிறான். யோபு ஆறாவது தடவையாகத் தன்னுடைய பிரதியுத்தரத்தைக் கூறுகிறான். யோபுவினுடைய பிரதியுத்தரத்தின் விவரம் வருமாறு:

1. தன்னுடைய சிநேகிதர்கள் தன்னுடைய ஆத்துமாவை வருத்தப்படுத்தி தங்கள் வார்த்தைகளினால் தன்னை நொறுக்குகிறார்கள். (யோபு 19:1-5).
2. யோபு தேவனுக்கு எதிராக மேலும் பல குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறான். (யோபு 19:6-13)
3. தன்னுடைய உறவினர்கள், சிநேகிதர்கள், ஊழியக்காரர்கள் ஆகியோருக்கு எதிராக யோபு குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறான். (யோபு 19:14-20)
4. தனக்கு இரங்க வேண்டுமென்று தன் சிநேகிதரிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். (யோபு 19:21-22).
5. தன்னுடைய பாடுகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்படவேண்டும். (யோபு 19:23-24).
6. கர்த்தர்மீது குற்றம் சுமத்தினாலும் யோபு இன்னும் கர்த்தரை விசுவாசிக்கிறான். (யோபு 19:25-27).
7. தன்னுடைய பாடுகளுக்கு தானே காரணமென்று யோபு முடிவாகக் கூறுகிறான். (யோபு 19:28-29).

"பத்துதரம்" - இது ஒரு உருவக வாக்கியமாகும். யோபுவின் சிநேகிதர் இதுவரையிலும் அவனை ஐந்துதரம் மட்டுமே நிந்தித்திருக்கிறார்கள். ஆனால் அதிகமாகப் பாடுகளை அனுபவிக்கும் யோபுவிற்கு ஐந்துதரம் என்பது பத்துதரமாகத் தெரிகிறது.

"நான் தப்பிநடந்தது மெய்யானாலும்" - தான் தப்பு செய்ததை யோபு இன்னும் முழுமையாக அங்கிகரிக்கவில்லை. தான் எந்தத் தப்பும் செய்யவில்லை என்பதே யோபுவினுடைய இருதயத்தின் எண்ணமாகும். இந்தச் சூழ்நிலையில் தனக்கு இப்படிப்பட்ட பாடுகள் வந்திருப்பதை நினைத்து யோபு மிகுந்த ஆச்சரியமடைகிறான்.

"நீங்கள் எனக்கு விரோதமாகப் பெருமை பாராட்டி" - தன்னுடைய சிநேகிதர் தனக்கு இரக்கம் காண்பிக்க வேண்டுமென்று யோபு எதிர்பார்க்கிறான். ஆனால் அவர்களோ யோபுவிற்கு விரோதமாகக் குற்றம் சுமத்துகிறார்கள். யோபுவை நியாயந் தீர்க்கிறார்கள். யோபுவின் பாடுகளுக்கு அவனுடைய பாவங்களே காரணமென்று மூன்று சிநேகிதரும் வலியுறுத்துகிறார்கள்.

19 அதிகாரம்

(2) தன்னுடைய பாடுகளுக்கு காரணம் தேவனே என்னும் குற்றச்சாட்டு

யோபு 19:6 தேவன் என்னைக் கவிழ்த்து, தம்முடைய வலையை என்மேல் வீசினார் என்று அறியுங்கள்.

யோபு 19:7 இதோ, கொடுமை என்று கூப்பிடுகிறேன், கேட்பார் ஒருவரும் இல்லை; கூக்குரலிடுகிறேன்; நியாய விசாரணை இல்லை.

யோபு 19:8 நான் கடந்து போகக்கூடாத படிக்கு அவர் என் பாதையை வேலியடைத்து, என் வழியை இருளாக்கி விட்டார்.

யோபு 19:9 என்னிலிருந்து என் மகிமையை அவர் உரிந்துகொண்டு, என் சிரசின் கிரீடத்தை எடுத்துப்போட்டார்.

யோபு 19:10 அவர் என்னை நான்குபுறத்திலும் நாசமாக்கினார், நான் அற்றுப்போகிறேன்; என் நம்பிக்கையை ஒரு செடியைப்போலப் பிடுங்கிப்போட்டார்.

யோபு 19:11 அவர் தமது கோபத்தை என் மேல் எரியப்பண்ணினார்; என்னைத் தம்முடைய சத்துருக்களில் ஒருவனாக எண்ணிக்கொள்ளுகிறார்.

யோபு 19:12 அவருடைய தண்டுப்படைகள் ஏகமாய் வந்து, எனக்கு விரோதமாய்த் தங்கள் வழியை உயர்த்தி, என் கூடாரத்தைச் சுற்றிப் பாளயமிறங்கினார்கள்.

யோபு 19:13 என் சகோதரரை என்னைவிட்டுத் தூரப்படுத்தினார்; எனக்கு அறிமுகமானவர்கள் எனக்கு அந்நியராய்ப் போனார்கள்.

யோபு தேவன்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. தேவன் என்னைக் கவிழ்த்தார்.
2. தம்முடைய வலையை என்மேல் வீசினார்.
3. இதோ, கொடுமை என்று கூப்பிடுகிறேன், கேட்பார் ஒருவரும் இல்லை. (யோபு 19:7)
4. கூக்குரலிடுகிறேன்; நியாயவிசாரணை இல்லை.
5. நான் கடந்து போகக்கூடாதபடிக்கு அவர் என் பாதையை வேலி யடைத்தார். (யோபு 19:8).
6. என் வழியை இருளாக்கிவிட்டார்.
7. என்னிலிருந்து என் மகிமையை அவர் உரிந்துகொண்டார். (யோபு 19:9).
8. என் சிரசின் கிரீடத்தை எடுத்துப்போட்டார்.
9. அவர் என்னை நான்குபுறத்திலும் நாசமாக்கினார். (யோபு 19:10).
10. என் நம்பிக்கையை ஒரு செடியைப்போலப் பிடுங்கிப்போட்டார்.
11. அவர் தமது கோபத்தை என் மேல் எரியப்பண்ணினார். (யோபு 19:11).
12. என்னைத் தம்முடைய சத்துருக்களில் ஒருவனாக எண்ணிக்கொள்ளுகிறார்.
13. அவருடைய தண்டுப்படைகள் எனக்கு விரோதமாய் ஏகமாய் வந்தது. (யோபு 19:12).
14. எனக்கு விரோதமாய்த் தங்கள் வழியை உயர்த்தினார்கள்.
15. என் கூடாரத்தைச் சுற்றிப் பாளயமிறங்கினார்கள்.
16. என் சகோதரரை என்னைவிட்டுத் தூரப்படுத்தினார். (யோபு 19:13).
17. எனக்கு அறிமுகமானவர்கள் எனக்கு அந்நியராய்ப் போனார்கள்.

(3) தன் மனைவி, வேலையாட்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டு

யோபு 19:14 என் பந்துஜனங்கள் விலகிப் போனார்கள்; என் சிநேகிதர் என்னை மறந்துவிட்டார்கள்.

யோபு - தொகுப்புரை

19 அதிகாரம்

யோபு 19:15 என் வீட்டு ஜனங்களும், என் வேலைக்காரிகளும், என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள்; அவர்கள் பார்வைக்கு நான் பரதேசியானேன்.

யோபு 19:16 நான் என் வேலைக்காரனைக் கூப்பிடுகிறபோது அவன் எனக்கு உத்தரவுகொடான்; என் வாயினால் நான் அவனைக் கெஞ்சவேண்டியதாயிற்று.

யோபு 19:17 என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது; என் கர்ப்பத்தின் பிள்ளைகளுக்காகப் பரிதபிக்கிறேன்.

யோபு 19:18 சிறுபிள்ளைகளும் என்னை அசட்டைபண்ணுகிறார்கள்; நான் எழுந்தால், அவர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள்.

யோபு 19:19 என் பிராணசிநேகிதர் எல்லாரும் என்னை வெறுக்கிறார்கள்; நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதிகளானார்கள்.

யோபு 19:20 என் எலும்புகள் என் தோலோடும் என் மாம்சத்தோடும் ஒட்டிக் கொண்டிருக்கிறது என் பற்களை மூடக் கொஞ்சம் தோல்மாத்திரம் தப்பினது.

யோபு மற்றவர்கள்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. என் பந்துஜனங்கள் விலகிப் போனார்கள். (யோபு 19:14)
2. என் சிநேகிதர் என்னை மறந்து விட்டார்கள்.
3. என் வீட்டு ஜனங்கள் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள் (யோபு 19:15).
4. என் வேலைக்காரிகளும், என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள்.
5. அவர்கள் பார்வைக்கு நான் பரதேசியானேன்.
6. நான் என் வேலைக்காரனைக் கூப்பிடுகிற போது அவன் எனக்கு உத்தரவுகொடான். (யோபு 19:16).
7. என் வாயினால் நான் அவனைக் கெஞ்சவேண்டியதாயிற்று.
8. என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது. (யோபு 19:17).
9. என் கர்ப்பத்தின் பிள்ளைகளுக்காகப் பரிதபிக்கிறேன்.
10. சிறுபிள்ளைகளும் என்னை அசட்டை பண்ணுகிறார்கள். (யோபு 19:18).
11. நான் எழுந்தால், அவர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள்.
12. என் பிராணசிநேகிதர் எல்லாரும் என்னை வெறுக்கிறார்கள். (யோபு 19:19).
13. நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதிகளானார்கள்.
14. என் எலும்புகள் என் தோலோடும் என் மாம்சத்தோடும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. (யோபு 19:20).
15. என் பற்களை மூடக் கொஞ்சம் தோல்மாத்திரம் தப்பினது.

யோபுவிற்கு விரோதமாகத் திரும்பியவர்கள்

1. பந்துஜனங்கள்
2. சிநேகிதர்
3. வேலைக்காரிகள் (யோபு 19:15)
4. வேலைக்காரர் (யோபு 19:16)
5. மனைவி (யோபு 19:17)
6. பிள்ளைகள் (யோபு 19:18)
7. பிராண சிநேகிதர். (யோபு 19:19)

19 அதிகாரம்

"என் வீட்டு ஜனங்களும், என் வேலைக்காரிகளும்" - புயல்காற்றில் யோபுவின் வீடு அழிந்துபோயிற்று. யோபு 1:18-19) ஆனாலும் அவனுடைய வேலைக்காரிகளும், அவனுடைய மனைவியும் அந்த அழிவிலிருந்து தப்பித்திருக்கிறார்கள். (யோபு 19:15-17).

"என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது" - யோபுவின் மனைவி அவனுக்கு விரோதமாக இருக்கிறாள். அவனுடைய ஜீவனை விடுமாறு அவனைச் சபிக்கிறாள். யோபுவின் சுவாசம்கூட அவனுடைய மனைவிக்குப் பிடிக்கவில்லை. யோபுவின் மனைவிக்கு அவன்மீது பிரியமில்லை. ஆனாலும் யோபு தன் பிள்ளைகள் நிமித்தம் அவளிடத்தில் பரிதபிக்கிறான். (யோபு 2:9; யோபு 31:10).

"சிறுபிள்ளைகளும் என்னை அசட்டை பண்ணுகிறார்கள்" - யோபுவை எல்லோருமே அசட்டை பண்ணுகிறார்கள். சிறுபிள்ளைகள் பெரியோரை எதிர்பார்த்து ஜீவிக்கிறவர்கள். அவர்கள்கூட யோபுவை அசட்டை பண்ணுகிறார்கள். ஒருவேளை அந்த சிறுபிள்ளைகளின் பெற்றோர் அவர்களிடம் யோபுவைப் பற்றி ஏளனமாகப் பேசியிருக்க வேண்டும். அல்லது துன்மார்க்கனுடைய அழிவிற்கு அவர்கள் யோபுவை ஓர் எடுத்துக்காட்டாக தங்கள் பிள்ளைகளிடம் கூறியிருக்க வேண்டும்.

(4) தன்மீது இரக்கம் காண்பிக்குமாறு யோபு தன் நண்பர்களை வேண்டுகிறான்

யோபு 19:21 என் சிநேகிதரே, எனக்கு இரங்குங்கள், எனக்கு இரங்குங்கள்; தேவனுடைய கை என்னைத் தொட்டது.

யோபு 19:22 தேவனைப்போல நீங்களும் என்னைத் துன்பப்படுத்துவானேன்? என் மாம்சம் பட்சிக்கப்பட்டாலும் நீங்கள் திருப்தியற்றிருக்கிறதென்ன?

"என் சிநேகிதரே, எனக்கு இரங்குங்கள்" - யோபு தன்னுடைய சிநேகிதரிடத்தில் தன் உள்ளத்திலிருந்து கெஞ்சுகிறான். தனக்கு இரங்குமாறு கூறுகிறான். ஆனால் அவர்களோ அவன்மீது இரக்கம் காண்பிக்கவில்லை. அதற்குப் பதிலாகக் கடுஞ்சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். யோபுவின் துன்மார்க்கத்தை சோப்பார் வலியுறுத்துகிறான். (யோபு 20:1-28). எலிப்பாஸ் யோபுவை ஒரு மாய்மாலக்காரன் என்று கூறுகிறான். (யோபு 22:1-9) யோபு துன்மார்க்கனாகவே கருதப்படுகிறான். (யோபு 22:12-30). தேவனுக்கு முன்பாக யாரும் நீதிமானாகவும், சுத்தமுள்ளவனாகவும் இருக்க முடியாது என்பது பில்தாத்தின் விவாதம். நட்சத்திரங்கள்கூட தேவனுடைய பார்வையில் சுத்தமானவை அல்ல. யோபுவும், தேவனுடைய பார்வையில் அருவருப்பானவன் என்பது பில்தாத் யோபுவின்மீது கூறும் குற்றச்சாட்டாகும். (யோபு 25:1-6).

"தேவனுடைய கை என்னைத் தொட்டது" - தன்னுடைய துன்பங்களுக்குச் சாத்தானே காரணம் என்று கூறுவதற்குப் பதிலாக தேவனே காரணமென்று யோபு தேவன்மீது தவறாகக் குற்றம் சுமத்துகிறான். (யோபு 19:21-22; யோபு 1:12-19; யோபு 2:6-8; யோபு 42:10).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்துவதில்லை

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்துவதற்காகத் தொடுவதில்லை. தேவனுடைய கரம் குணப்படுத்தும், இரட்சிக்கும். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் மறுபடியும் ஆளுகை செய்ய வரும்போது இங்கு வியாதி, வேதனை, மரணம், துன்பம் ஆகியவை இராது. (வெளி 21:1-7). ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் வியாதி இராது. (ஏசா 33:24; ஏசா 35:3-6). தம்முடைய சித்தம் பூமியில் செய்யப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தம்மை விசுவாசிக்கும் பிள்ளைகளிடம் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். (மத் 7:7-11; மத் 8:17; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 10:10; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; 2கொரி 12; எபி 2:1-7; யாக் 5:14-16; 1யோவான் 3:21-23; 1யோவான் 5:13-14; 2யோவான் 1:2) யோபு கூறுவதுபோல கர்த்தர் ஒருபோதும்

19 அதிகாரம்

தம்முடைய பிள்ளைகளை அழிப்பதற்காக அவர்களைத் தமது கரத்தால் தொடுவதில்லை. (யோபு 19:22) தேவனுடைய கரம் அவருடைய சத்துருக்களுக்கு மாத்திரமே விரோதமாக எழும்பும். (உபா 2:15; நியா 2:15; 1சாமு 5:6-11; 1சாமு 7:13) தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாகத் தேவன் ஒருபோதும் தம்முடைய கரத்தை நீட்டுவதில்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய கரம் எல்லா மனுஷரையும் சொஸ்தமாக்கும் கிரியையை மாத்திரம் செய்திருக்கிறது. (அப் 4:30; அப் 11:21; யாக் 4:7; யாக் 5:10-16; 1பேதுரு 5:8-9).

(5) தன்னுடைய அனுபவங்களை ஒரு புஸ்தகத்தில் எழுதவேண்டுமென்று யோபு விண்ணப்பம் செய்கிறான்

யோபு 19:23 ஆ, நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒருபுஸ்தகத்தில் வரையப்பட்டு,

யோபு 19:24 அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளிவெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும்.

யோபுவின் விண்ணப்பம்

1. நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்.
2. அவைகள் ஒருபுஸ்தகத்தில் வரையப்பட்டால் நலமாயிருக்கும்.
3. அவைகள் என்றைக்கும் நிலைக்க கருங்கல்லிலே உளிவெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும். (யோபு 19:24)

(6) தன்னுடைய பாடுகளுக்குக் காரணம் தேவனே என்று குற்றம் சாட்டினாலும் யோபு இன்னும் தேவனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறான்

யோபு 19:25 என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

யோபு 19:26 இந்த என் தோல்முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்.

யோபு 19:27 அவரை நான் பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது.

தீர்க்கதரிசன எண் - 1

“என் மீட்பர் உயிரோடிருக்கிறார்........ அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார்......” (யோபு 19:25-27) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார்.
2. என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். (யோபு 19:26).
3. அவரை நான் பார்ப்பேன் (யோபு 19:27).

உறவின்முறை மீட்பர்

இதற்கான எபிரெய வார்த்தை “கால்” גָּאַל - gaw-al' - 1350 (redeemer) - என்பதாகும். ஒருவனுடைய சொத்தை மீட்பதற்கு அல்லது அதை விலைக்கு வாங்குவதற்கு உரிமை உள்ளவன். (லேவி 25:25-26,48-49; லேவி 27:12-20,31; ரூத் 4:4-6; சங் 69:18; சங் 72:14; ஒசி 13:14; மீகா 4:10). பொதுவாக மீட்பர் என்னும் வார்த்தை கர்த்தரையே குறிக்கும். (சங் 19:14; சங் 78:35; நீதி 23:11; ஏசா 41:14; ஏசா 43:14; ஏசா 44:6,24; ஏசா 47:4; ஏசா 48:17; ஏசா 49:7,26; ஏசா 54:5,8; ஏசா 59:20; ஏசா 60:16; ஏசா 63:16; எரே 50:34) கடைசி நாட்களில் கர்த்தர் பூமியின்மீது நிற்பார். (ஏசா 2:2-4; ஏசா 59:20; சக 13:6; சக 14:4-8,16-21; வெளி 19:11-21; வெளி 20:1-10). யோபு உயிர்த்தெழுந்த பின்பு கர்த்தரைப் பார்ப்பான். (லூக்கா 24:39; அப் 1:11; 1கொரி 15:1-54; பிலி 3:20-21; சக 13:6).

யோபு - தொகுப்புரை

19 அதிகாரம்

(7) யோபு தன்னுடைய சொந்த ஜீவியத்திற்கு தானே பொறுப்பு எடுத்துக்கொள்கிறான்

யோபு 19:28 காரியத்தின் மூலம் எனக்குள் கண்டுபிடிக்கப்படுகையில், நாம் ஏன் அவனைத் துன்பப்படுத்துகிறோம் என்று நீங்கள் சொல்லவேண்டியதாமே.

யோபு 19:29 பட்டயத்துக்குப் பயப்படுங்கள்; நியாயத்தீர்ப்பு உண்டென்கிறதை நீங்கள் அறியும்பொருட்டு, மூர்க்கமானது பட்டயத்தினால் உண்டாகும் ஆக்கினையை வரப்பண்ணும் என்றான்.

20 அதிகாரம்

12. சோப்பாரின் சம்பாஷணை – துன்மார்க்கர் மாய்மாலக்காரர் ஆகியோரின்மீது நியாயத்தீர்ப்பு – யோபு துன்மார்க்கனும் மாய்மாலக் காரனும் என்னும் குற்றச்சாட்டு

யோபு 20:1 அப்பொழுது நாகமாத்தியனான சோப்பார் பிரதியுத்தரமாக:

யோபு 20:2 இதற்காக மறுஉத்தரவு கொடுக்க என் சிந்தனைகள் என்னை ஏவுகிறபடியால் நான் தீவிரித்துச் சொல்லுகிறேன்.

யோபு 20:3 நிந்தித்தேன் என்று நான் கடிந்து கொள்ளப்பட்டதைக் கேட்டேன்; ஆனாலும் உணர்வினால் என் ஆவி பிரதியுத்தரம் சொல்ல என்னை ஏவுகிறது.

யோபு 20:4 துன்மார்க்களின் கெம்பீரம் குறுகினது என்பதையும், மாயக்காரனின் சந்தோஷம் ஒரு நிமிஷம்மாத்திரம் நிற்கும் என்பதையும்,

யோபு 20:5 அவர் மனுஷனைப் பூமியில் வைத்த ஆதிகாலமுதல் இப்படியிருக்கிறது என்பதையும் நீர் அறியீரோ?

யோபு 20:6 அவனுடைய மேன்மை வானபரியந்தம் உயர்ந்தாலும், அவனுடைய தலை மேகங்கள்மட்டும் எட்டினாலும்,

யோபு 20:7 அவன் தன் மலத்தைப்போல என்றைக்கும் அழிந்துபோவான்; அவனைக் கண்டவர்கள், அவன் எங்கே? என்பார்கள்.

யோபு 20:8 அவன் ஒரு சொப்பனத்தைப் போல் பறந்துபோய்க் காணப் படாதவனாவான்; இரவில் தோன்றும் தரிசனத்தைப்போல் பறக்கடிக்கப்படுவான்.

யோபு 20:9 அவனைப் பார்த்த கண் இனி அவனைப் பார்ப்பதில்லை; அவன் இருந்த ஸ்தலம் இனி அவனைக் காண்பதில்லை.

யோபு 20:10 அவன் பிள்ளைகள் எளிமையானவர்களின் சகாயத்தைத் தேடுவார்கள்; அவன் பறித்ததை அவன் கைகள் திரும்பக் கொடுக்க வேண்டியதாகும்.

யோபு 20:11 அவன் எலும்புகள் அவனுடைய வாலவயதின் பாவங்களினால் நிறைந்திருந்து, அவனோடேகூட மண்ணிலே படுத்துக்கொள்ளும்.

யோபு 20:12 பொல்லாப்பு அவன் வாயிலே இனிமையாயிருப்பதால், அவன் அதைத் தன் நாவின்கீழ் அடக்கி,

யோபு 20:13 அதை விடாமல் பதனம் பண்ணி, தன் வாய்க்குள்ளே வைத்துக் கொண்டிருந்தாலும்,

யோபு 20:14 அவன் போஜனம் அவன் குடல்களில் மாறி, அவனுக்குள் விரியன் பாம்புகளின் பிச்சாய்ப்போகும்.

யோபு 20:15 அவன் விழுங்கின ஆஸ்தியைக் கக்குவான்; தேவன் அதை அவன் வயிற்றிலிருந்து வெளியே தள்ளி விடுவார்.

யோபு 20:16 அவன் விரியன்பாம்புகளின் விஷத்தை உறிஞ்சுவான்; விரியனின் நாக்கு அவனைக் கொல்லும்.

யோபு 20:17 தேனும் நெய்யும் ஓடும் வாய்க்கால்களையும் ஆறுகளையும் அவன் காண்பதில்லை.

யோபு 20:18 தான் பிரயாசப்பட்டுத் தேடினதை அவன் விழுங்காமல் திரும்பக் கொடுப்பான்; அவன் திரும்பக் கொடுக்கிறது அவன் ஆஸ்திக்குச் சரியாயிருக்கும்; அவன் களிகூராதிருப்பான்.

யோபு 20:19 அவன் ஒடுக்கி, ஏழைகளைக் கைவிட்டு, தான் கட்டாத வீட்டைப் பறித்தபடியினாலும்,

20 அதிகாரம்

யோபு 20:20 தன் வயிறு திருப்தியற்றிருந்தபடியினாலும், அவன் இச்சித்த காரியங்களில் அவனுக்கு ஒன்றும் இருப்பதில்லை.

யோபு 20:21 அவன் போஜனத்தில் ஒன்றும் மீதியாவதில்லை; ஆகையால் அவன் ஆஸ்தி நிலைநிற்பதில்லை.

யோபு 20:22 அவன் வேண்டுமென்கிற பரிபூரணம் அவனுக்கு வந்தபின், அவனுக்கு வியாகுலம் உண்டாகும்; சிறுமைப்படுகிற ஒவ்வொருவருடைய கையும் அவன்மேல் வரும்.

யோபு 20:23 தன் வயிற்றை நிரப்பத்தக்கது இன்னும் அவனுக்கு இருந்தாலும், அவர் அவன்மேல் தமது கோபத்தின் உக்கிரத்தை வரவிட்டு, அவன் போஜனம்பண்ணுகையில், அதை அவன்மேல் சொரியப்பண்ணுவார்.

யோபு 20:24 இருப்பு ஆயுதத்துக்கு அவன் தப்பியோடினாலும் உருக்குவில் அவனை உருவ எய்யும்.

யோபு 20:25 உருவின பட்டயம் அவன் சரீரத்தையும், மின்னுகிற அம்பு அவன் பிச்சையும் உருவிப்போம்; பயங்கரங்கள் அவன்மேல் வரும்.

யோபு 20:26 அவன் ஒளிக்கும் இடங்களில் காரிருள் அடங்கியிருக்கும்; அவியாத அக்கினி அவனைப் பட்சிக்கும்; அவன் கூடாரத்தில் மீதியாயிருக்கிறவன் தீங்கு அநுபவிப்பான்.

யோபு 20:27 வானங்கள் அவன் அக்கிரமத்தை வெளிப்படுத்தி, பூமி அவனுக்கு விரோதமாக எழும்பும்.

யோபு 20:28 அவன் வீட்டின் சம்பத்துப் போய்விடும்; அவருடைய கோபத்தின் நாளிலே அவைகள் கரைந்துபோகும்.

யோபு 20:29 இதுவே தேவனால் துன்மார்க்கனுக்குக் கிடைக்கும் பங்கும், அவன் செய்கைக்கு தேவனால் அவனுக்கு வரும் சுதந்தரமுமாம் என்றான்.

சோப்பாரின் பிரதியுத்தரம்

யோபு பில்தாத்தின் இரண்டாவது சம்பாஷனைக்குப் பிரதியுத்தரம் கூறி முடித்த பின்பு, சோப்பார் பேச ஆரம்பிக்கிறான். துன்மார்க்கர்மீதுவரும் நியாயத்தீர்ப்புக்களைக் குறித்து சோப்பார் விவரிக்கிறான். யோபுவும், நியாயந்தீர்க்கப்படுவதினால் அவனும் ஒரு துன்மார்க்கன் என்று சோப்பார் தீர்மானம் பண்ணுகிறான். (யோபு 20:1-29).

"மனுஷன்" - இதற்கான எபிரெய வார்த்தை "ஆதாம்" (adam) என்பதாகும். ஆதாமின் காலத்திலிருந்து யோபுவின் காலம் வரையிலும் உள்ள இடைப்பட்ட காலம் சுமார் 2,375 வருஷங்களாகும். சோப்பார் இந்த வருஷங்களில் நிகழ்ந்த மனுஷருடைய அனுபவங்களை எடுத்துக் கூறுகிறான்.

மனுஷன் (man) - אָדָם - aw-dawm' - 120

ஆ.பெ.சொ.-மனுஷன், ஆதாம், நரஜீவன், மனிதன், ஜனம்.

"அவனுடைய மேன்மை வானபரியந்தம் உயர்ந்தாலும்" - துன்மார்க்கர் வானபரியந்தம் உயர்ந்தாலும் முடிவில் அவர்கள் நித்தியமாக அழிந்து போவார்கள். (யோபு 20:6-9).

"எலும்புகள் அவனுடைய வாலவயதின் பாவங்களினால் நிறைந்திருந்து" - ஒருவன் தன்னுடைய வாலிப வயதில் செய்யும் பாவங்களின் விளைவுகள் அவன் மரிக்கும் வரையிலும் அவனைப் பின்தொடரும்.

"பொல்லாப்பு அவன் வாயிலே இனிமையாயிருப்பதால்" - பாவம் செய்யும் போது, அது அவனுக்கு இனிமையாக இருந்த போதிலும் முடிவில் அது அவனுடைய குடல்களில் பாம்பின் விஷத்தைப்போல மாறும். (யோபு 20:12-16).

யோபு - தொகுப்புரை

20 அதிகாரம்

“இதுவே தேவனால் துன்மார்க்கனுக்குக் கிடைக்கும் பங்கு” - துன்மார்க்கருக்கு வரும் நியாயத்தீர்ப்பே யோபுவுக்கும் வந்திருக்கிறது. ஆகையினால் யோபுவும் ஒரு துன்மார்க்கன். அவனுடைய துன்மார்க்கத்திற்கு அவன் நியாயமாய் தண்டிக்கப்பட்டிருக்கிறான் என்பது சோப்பாரின் பிரதியுத்தரத்தினுடைய முடிவாகும்.

21 அதிகாரம்

13. சோப்பாருக்கு யோபுவின் பதிலுரை

(1) தான் பேசுவதைக் கேட்டு அதன்பின்பு தன்னைப் பரியாசம் பண்ணுமாறு யோபு தன் நண்பர்களிடம் கூறுகிறான்

யோபு 21:1 யோபு பிரதியுத்தரமாக:

யோபு 21:2 என் வசனத்தைக் கவனமாய்க் கேளுங்கள்; இது நீங்கள் என்னைத் தேற்றரவுபண்ணுவது போல இருக்கும்.

யோபு 21:3 நான் பேசப்போகிறேன், சகித்திருங்கள், நான் பேசினபின்பு பரியாசம்பண்ணுங்கள்.

யோபு 21:4 நான் மனுஷனைப்பார்த்தா அங்கலாய்க்கிறேன்? அப்படியானாலும் என் ஆவி விசனப்படாதிருக்குமா?

யோபு 21:5 என்னைக் கவனித்துப் பாருங்கள், அப்பொழுது நீங்கள் பிரமித்து, உங்கள் வாயைக் கையால் பொத்திக் கொள்வீர்கள்.

யோபு 21:6 இதை நான் நினைக்கையில் கலங்குகிறேன்; நடுக்கம் என் மாம்சத்தைப்பிடிக்கும்.

யோபுவின் பிரதியுத்தரம்

சோப்பார் தன்னுடைய பிரதியுத்தரத்தைக் கூறி முடித்தபின்பு யோபு மறுபடியும் பேசுகிறான். தன்னுடைய பேச்சை மிகவும் கவனமாகக் கேட்குமாறு தன்னுடைய சிநேகிதருக்குக் கூறுகிறான். (யோபு 21:1-6). யோபுவின் பிரதியுத்தர விவரம் வருமாறு;

1. துன்மார்க்கரில் அநேகர் செழிப்புடன் இருக்கிறார்கள். அவர்களில் பலர் தண்டிக்கப்படவில்லை. (யோபு 21:7-15)
2. துன்மார்க்கரில் சிலர் செழுமையான வாழ்வோடு மரித்துப் போனார்கள். மேலும் நீதிமானும், துன்மார்க்கனும் ஒன்று போலவே மரிக்கிறார்கள். (யோபு 21:16-26).
3. தன்னுடைய சிநேகிதர் தன்னைத் துன்மார்க்கன் என்று தீர்மானம் பண்ணக்கூடாது. (யோபு 21:27-34).

(2) துன்மார்க்கரின் செல்வம்

யோபு 21:7 துன்மார்க்கர் ஜீவித்து விருத்தராகி, வல்லவராவானேன்?

யோபு 21:8 அவர்களோடுங்கூட அவர்கள் சந்ததியார் அவர்களுக்கு முன்பாகவும், அவர்கள் பிள்ளைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாகவும் திடப்படுகிறார்கள்

யோபு 21:9 அவர்கள் வீடுகள் பயமில்லாமல் பத்திரப்பட்டிருக்கும்; தேவனுடைய மிலாறு அவர்கள்மேல் வருகிறதில்லை.

யோபு 21:10 அவர்களுடைய எருது பொலிந்தால், வீணாய்ப்போகாது; அவர்களுடைய பசு சினை அழியாமல் ஈனுகிறது.

யோபு 21:11 அவர்கள் தங்கள் குழந்தைகளை ஒரு மந்தையைப்போல வெளியே போகவிடுகிறார்கள்; அவர்கள் பிள்ளைகள் குதித்து விளையாடுகிறார்கள்.

யோபு 21:12 அவர்கள் தம்புரையும் சுரமண்டலத்தையும் எடுத்துப் பாடி, கின்னரத்தின் ஓசைக்குச் சந்தோஷப் படுகிறார்கள்.

யோபு 21:13 அவர்கள் செல்வவான்களாய்த் தங்கள் நாட்களைப் போக்கி, ஒருக்ஷணப்பொழுதிலே பாதாளத்தில் இறங்குகிறார்கள்.

யோபு 21:14 அவர்கள் தேவனை நோக்கி: எங்களைவிட்டு விலகியிரும், உம்முடைய வழிகளை அறிய விரும்போம்;

21 அதிகாரம்

யோபு 21:15 சர்வவல்லவரை நாம் சேவிக்க அவர் யார்? அவரை நோக்கி ஜெபம் பணிணுவதினால் நமக்குப் பிரயோஜனம் என்ன என்கிறார்கள்.

துன்மார்க்கரின் செழிப்பு

1. துன்மார்க்கர் நீடித்து ஜீவிக்கிறார்கள். (யோபு 21:7).
2. விருத்தராகிறார்கள்.
3. வல்லவராகிறார்கள்.
4. அவர்களோடுங்கூட அவர்கள் சந்ததியார் அவர்களுக்கு முன்பாகத் திடப் படுகிறார்கள். (யோபு 21:8).
5. அவர்கள் பிள்ளைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாகத் திடப்படுகிறார்கள்.
6. அவர்கள் வீடுகள் பயமில்லாமல் பத்திரப்பட்டிருக்கிறது. (யோபு 21:9).
7. தேவனுடையபிலாறு அவர்கள்மேல் வருகிறதில்லை.
8. அவர்களுடைய எருது பொலிந்தால் வீணாய்ப்போகாது. (யோபு 21:10).
9. அவர்களுடைய பசு சினை அழியாமல் ஈனுகிறது.
10. அவர்கள் தங்கள் குழந்தைளை ஒரு மந்தையைப் போல வெளியே போகவிடுகிறார்கள். (யோபு 21:11).
11. அவர்கள் பிள்ளைகள் குதித்து விளையாடுகிறார்கள்.
12. அவர்கள் இசையில் சந்தோஷப் படுகிறார்கள். (யோபு 21:12).
13. அவர்கள் செல்வவான்களாய்த் தங்கள் நாட்களைப் போக்குகிறார்கள். (யோபு 21:13).
14. ஒருக்ஷணப்பொழுதிலே பாதாளத்தில் இறங்குகிறார்கள்.
15. தங்கள் வாழ்நாள் முழுவதும் கர்த்தரை மறுதலித்தாலும் அவர்களுக்கு ஒரு தீங்கும் நேரிடுவதில்லை. (யோபு 21:14-15).

(3) துன்மார்க்கரும் நல்லவரும் அவர்கள் விவாதங்கள் போலவே அழிந்து போவார்கள்

யோபு 21:16 ஆனாலும் அவர்கள் வாழ்வு அவர்கள் கையிலிராது; துன்மார்க்கரின் ஆலோசனை எனக்குத் தூரமாயிருப்பதாக.

யோபு 21:17 எத்தனைச் சடுதியில் துன்மார்க்கரின் விளக்கு அணைந்து போம்; அவர் தமது கோபத்தினால் வேதனைகளைப் பகிர்ந்துகொடுக்கையில், அவர்கள் ஆபத்து அவர்கள்மேல் வரும்.

யோபு 21:18 அவர்கள் காற்று முகத்திலிருக்கிற துரும்பைப் போலவும், பெருங்காற்று பறக்கடிக்கிற பதரைப்போலவும் இருக்கிறார்கள்.

யோபு 21:19 தேவன் அவனுடைய அக்கிரமத்தை அவன் பிள்ளைகளுக்கு வைத்து வைக்கிறார்; அவன் உணரத் தக்கவிதமாய் அதை அவனுக்குப் பலிக்கப் பண்ணுகிறார்.

யோபு 21:20 அவனுடைய அழிவை அவனுடைய கண்கள் காணும், சர்வவல்லவருடைய உக்கிரத்தைக் குடிப்பான்.

யோபு 21:21 அவன் மாதங்களின் தொகை குறுக்கப்படும்போது, அவனுக்குப் பிற்பாடு அவன் வீட்டைப்பற்றி அவனுக்கு இருக்கும் விருப்பமென்ன?

யோபு 21:22 உயர்ந்தோரை நியாயந் தீர்க்கிற தேவனுக்கு அறிவை உணர்த்த யாராலாகும்?

யோபு 21:23 ஒருவன் நிர்வாகத்தோடும் சுகத்தோடும் வாழ்ந்து குறையற்ற பெலனுள்ளவனாய்ச் சாகிறான்.

யோபு - தொகுப்புரை

21 அதிகாரம்

யோபு 21:24 அவனுடைய பால் பாத்திரங்கள் பாலால் நிரம்பியிருக்கிறது, அவன் எலும்புகளில் ஊன் புஷ்டியாயிருக்கிறது.

யோபு 21:25 வேறொருவன் ஒரு நாளாவது சந்தோஷத்தோடே சாப்பிடாமல், மனக்கிலேசத்தோடே சாகிறான்.

யோபு 21:26 இருவரும் சமமாய் மண்ணிலே படுத்துக் கொள்ளுகிறார்கள்; புழுக்கள் அவர்களை மூடும்.

ஆசீர்வாதத்தைப் பற்றி மனுஷருடைய வியாக்கியானம்

சில சமயங்களில் கர்த்தர் துன்மார்க்கரைத் தண்டிப்பதில்லை. துன்மார்க்கரின் வாழ்வு நீதிமானின் வாழ்வைப் போலவே செழித்திருக்கிறது. ஒருவனுடைய செழிப்பின் நிமித்தமாக அவனை நீதிமான் என்று நியாயந்தீர்க்க முடியாது. (யோபு 21:16-26).

நீதிமான்கள் செழித்திருப்பார்கள் என்றும், துன்மார்க்கர் பாடுகளை அனுபவிப்பார்கள் என்றும் ஜனங்கள் பொதுவாக நினைக்கிறார்கள். மனுஷனுக்குத் துன்பம் வரும்போது, அவன் ஏதோ பாவம் செய்து விட்டான் என்று தீர்மானம் பண்ணி விடுகிறார்கள். நீதிமான்களும் சில சமயங்களில் பாடுகளை அனுபவிக்கிறார்கள். ஆகையினால் ஒரு மனுஷனுக்குப் பாடுகள் வரும் பொழுது அவனைத் துன்மார்க்கன் என்று உடனடியாகத் தீர்மானம் பண்ணிவிடாமல் அவனுடைய பாடுகளுக்கான காரணத்தை நிதானித்து அறிய வேண்டும்.

"குறையற்ற பெலனுள்ளவனாய்ச் சாகிறான்" - நல்லோரும், தீயோரும் பல சமயங்களில் நீடித்த நாள் வாழ்ந்து, எவ்விதக் குறைவும் இல்லாமல் மரித்துப் போகிறார்கள். துன்மார்க்கனும், நீதிமானும் எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் ஒருநாள் மரித்துப் போக வேண்டும். (யோபு 21:23-26). நீதிமானும், துன்மார்க்கனும் சாகும் போது புழுக்கள் அவர்களைத் தின்றுபோடும். (யோபு 19:26) இது யோபுவின் மரணத்தையும் குறிக்கலாம். யோபு 19:25-27 ஆகிய வசனங்கள் வருங்கால உயிர்த்தெழுதலையும், அப்போது உயிர்த்தெழுந்தவர்கள் கர்த்தரைத் தங்கள் கண்களால் காண்பதையும் குறிக்கிறது.

(4) தாங்கள் சொன்னதைச் சிந்தித்துப் பார்க்குமாறு யோபு தன் நண்பர்களிடம் கூறுகிறான்

யோபு 21:27 இதோ, நான் உங்கள் நினைவுகளையும், நீங்கள் என்னைப் பற்றி அநியாயமாய்க் கொண்டிருக்கும் ஆலோசனைகளையும் அறிவேன்.

யோபு 21:28 பிரபுவினுடைய வீடு எங்கே? துன்மார்க்கருடைய கூடாரம் எங்கே? என்று சொல்லுகிறீர்கள்.

யோபு 21:29 வழிநடந்து போகிறவர்களை நீங்கள் கேட்கவில்லையா, அவர்கள் சொல்லும் குறிப்புகளை நீங்கள் அறியவில்லையா?

யோபு 21:30 துன்மார்க்கன் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்படுகிறான்; அவன் கோபாக்கினையின் நாளுக்கென்று கொண்டு வரப்படுகிறான்.

யோபு 21:31 அவன் வழியை அவன் முகத்துக்கு முன்பாகத் தூண்டிக் காண்பிக்கிறவன் யார்? அவன் செய்கைக்குத்தக்க பலனை அவனுக்குச் சரிக்கட்டுகிறவன் யார்?

யோபு 21:32 அவன் கல்லறைக்குக் கொண்டு வரப்படுகிறான்; அவன் கோரி காக்கப்பட்டிருக்கும்.

யோபு 21:33 பள்ளத்தாக்கின் புல்பத்தைகள் அவனுக்கு இன்பமாயிருக்கும்; அவனுக்கு முன்னான எண்ணிறந்த ஜனங்கள் போனதுபோல, அவனுக்குப் பின்னாக ஒவ்வொருவரும் அவ்விடத்துக்குச் செல்லுவார்கள்.

யோபு - தொகுப்புரை

21 அதிகாரம்

யோபு 21:34 நீங்கள் வீணான ஆறுதலை எனக்குச் சொல்லுகிறது என்ன? உங்கள் மறுமொழிகளில் உண்மைக்கேடு இருக்கிறது என்றான்.

"துன்மார்க்கன் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்படுகிறான்" - துன்மார்க்கருக்கு வருங்காலத்தில் நிச்சயமாகவே நியாயத்தீர்ப்பு உண்டு.

துன்மார்க்கரும், சன்மார்க்கரும் தாங்கள் மரித்தபின்பு உயிர்த்தெழுந்து தங்களுடைய கிரியைகளுக்குத் தகுந்தபடி வெகுமதிகளையோ அல்லது தண்டனையையோ கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொள்வார்கள்.

"வீணான ஆறுதல்" - துன்மார்க்கரும் செழிப்போடு இருக்கிறார்கள் என்பது வீணான ஆறுதலாகும். ஏனெனில் அவர்களுடைய இறுதி முடிவு அழிவு.

யோபு - தொகுப்புரை

22 அதிகாரம்

14. எலிப்பாசின் சம்பாஷணை

(1) யோபு ஒரு மாயக்காரன் என்று கூறுகிறான்

யோபு 22:1 அப்பொழுது தேமானியனான எலிப்பாஸ் பிரதியுத்தரமாக:

யோபு 22:2 ஒரு மனுஷன் விவேகியாயிருந்து தனக்குத் தான் பிரயோஜன மாயிருக்கிறதினால் தேவனுக்கும் பிரயோஜனமாயிருப்பானோ?

யோபு 22:3 நீர் நீதிமானாயிருப்பதினால் சர்வ வல்லவருக்கு நன்மையுண்டாகுமோ? நீர் உம்முடைய வழிகளை உத்தமமாக்குகிறது அவருக்கு ஆதாயமாயிருக்குமோ?

யோபு 22:4 அவர் உமக்குப் பயந்து உம்மோடே வழக்காடி, உம்மோடே நியாயத்துக்கு வருவாரோ?

எலிப்பாஸின் பிரதியுத்தரம்

சோப்பாரின் குற்றச்சாட்டுக்களுக்கு யோபு பிரதியுத்தரம் கூறி முடித்தபின்பு, எலிப்பாஸ் தன்னுடைய கடைசி சம்பாஷணையைக் கூறுகிறான். எலிப்பாஸினுடைய பிரதியுத்தரத்தின் விவரம் வருமாறு:

1. யோபு ஒரு மாய்மாலக்காரன். (யோபு 22:1-4)
2. யோபு ஒரு பாவி (யோபு 22:5-9)
3. யோபு விதைத்ததை அறுக்கிறான். (யோபு 22:10-11)
4. தன் பாவங்களை மூடுகிறான். (யோபு 22:12-14)
5. யோபு ஒரு துன்மார்க்கன். (யோபு 22:15-20)
6. யோபு மனந்திரும்பினால் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வான். (யோபு 22:21-30).

"தேவனுக்கும் பிரயோஜன மாயிருப்பானோ?" - தேவன் மனுஷனைச் சார்ந்திருக்கவில்லை. யோபு நீதிமானாக இருந்தாலும், துன்மார்க்கனாக இருந்தாலும், விவேகியாக இருந்தாலும், மதியீனனாக இருந்தாலும் அதனால் தேவனுக்கு ஒரு பயனும் இல்லை. மனுஷனுடைய விவேகம் அவனுக்கு மட்டுமே பிரயோஜனம் உள்ளது. அதுபோலவே மனுஷனுடைய நீதி மனுஷனுக்கு மட்டுமே பயனுள்ளது. (யோபு 22:2-3). தேவன் மனுஷனுக்குப் பயப்படுவதில்லை. அவர் நீதியாக நியாயம் விசாரிக்கிறார். (யோபு 22:4). ஆகையினால், தேவனுடைய பார்வையில் யோபு எந்தவிதத்திலும் விசேஷித்தவன் அல்ல. எலிப்பாஸ் பொதுவான காரியங்களைக் கூறி முடித்த பின்பு யோபுவின் பாவங்களையும் ஒவ்வொன்றாகக் கூறுகிறான். (யோபு 22:5-9)

(2) யோபுவின் எட்டு பாவங்களைக் குறித்து குற்றம் சுமத்துகிறான்

யோபு 22:5 உம்முடைய பொல்லாப்பு பெரியதும், உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாதவைகளுமாய் இருக்கிறதல்லவோ?

யோபு 22:6 முகாந்தரமில்லாமல் உம்முடைய சகோதரர் கையில் அடகு வாங்கி, ஏழைகளின் வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டீர்.

யோபு 22:7 விடாய்த்தவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடாமலும், பசித்தவனுக்கு போஜனம் கொடாமலும் போனீர்.

யோபு 22:8 பலவானுக்கே தேசத்தில் இடமுண்டாயிற்று; கனவான் அதில் குடியேறினான்.

யோபு 22:9 விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர்; தாய்தகப்பன் இல்லாதவர்களின் புயங்கள் முறிக்கப்பட்டது.

22 அதிகாரம்

எலிப்பாஸ் யோபுவிற்கு எதிராகக் கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. உம்முடைய பொல்லாப்பு பெரியது. (யோபு 22:5)
2. உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாதவை. (யோபு 22:6).
3. முகாந்தரமில்லாமல் உம்முடைய சகோதரர் கையில் அடகுவாங்கினீர்.
4. ஏழைகளின் வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டீர்.
5. விடாய்த்தவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடாமல் போனீர். (யோபு 22:7).
6. பசித்தவனுக்கு போஜனம் கொடாமல் போனீர்.
7. விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர் (யோபு 22:9).
8. தாய்தகப்பன் இல்லாதவர்களின் புயங்களை முறித்துப் போட்டீர்.

எலிப்பாஸ் யோபுவைப் பற்றிக் கூறும் காரியங்கள்

யோபு இரக்கமற்றவன் என்று எலிப்பாஸ் கூறுகிறான். ஏழைகளின் வஸ்திரங்களை அடகாக வாங்கக்கூடாது. வாங்கினாலும் அதை இரவிற்குள் திருப்பிக் கொடுத்து விடவேண்டும் என்று மோசேயின் பிரமாணம் கூறுகிறது. (யாத் 22:26-27). ஆனால் யோபுவோ முகாந்தரமில்லாமல் தன்னுடைய சகோதரர் கையில் அடகு வாங்கி, ஏழைகளின் வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டதாக எலிப்பாஸ் குற்றம் கூறுகிறான். ஏழைகளைத் திருடி யோபு செல்வந்தனாகி விட்டான். தாகத்திற்குத் தண்ணீரும், பசித்தவனுக்குப் போஜனமும் கொடுக்கவில்லை. (யோபு 22:7-9). இதனால் யோபு ஒரு சாதாரண மனுஷன் தான். அவன் எந்தவிதத்திலும் கர்த்தருடைய பார்வையில் விசேஷித்தவன் அல்ல. ஏழைகளை ஒடுக்கியே யோபு செல்வந்தனாகி விட்டான். (யோபு 22:8). இவ்வாறாக, எலிப்பாஸ் யோபுவைப் பற்றிக்கூறுகிறான். ஆனால் யோபு எலிப்பாஸின் குற்றச்சாட்டுக்களை அங்கிகரிக்க வில்லை. எலிப்பாஸ் கூறும் குற்றங்கள் தன்னிடத்தில் இல்லை என்று யோபு திட்டவட்டமாக மறுத்துக் கூறுகிறான். (யோபு 24:2-25, யோபு 29:12-17; யோபு 31:16-40).

"தாய்தகப்பன் இல்லாதவர்களின் புயங்கள் முறிக்கப்பட்டது" - வேதாகமத்தில் புயம் என்பது பெலத்திற்கு அடையாளம். (சங் 10:15; சங் 89:13; சங் 98:1; எசே 30:21). தாய்தகப்பன் இல்லாதவர்களின் புயங்களை முறிப்பது என்பது அவர்களுடைய ஆதரவையும், உதவியையும் அழித்துப் போடுவது என்று பொருள்.

(3) யோபு தான் விதைத்ததை அறுப்பதாகக் கூறுகிறான்

யோபு 22:10 ஆகையால் கண்ணிகள் உம்மைச் சூழ்ந்திருக்கிறது; அசுப்பிலே உமக்கு வந்த பயங்கரம் உம்மைக் கலங்கப் பண்ணுகிறது.

யோபு 22:11 நீர் பார்க்கக்கூடாதபடிக்கு இருள் வந்தது, ஜலப்பிரவாகம் உம்மை மூடுகிறது.

யோபுவிற்கு வரும் துயரங்களாக எலிப்பாஸ் கூறுவது

1. கண்ணிகள் உம்மைச் சூழ்ந்திருக்கிறது.
2. அசுப்பிலே உமக்கு வந்த பயங்கரம் உம்மைக் கலங்கப் பண்ணுகிறது.
3. நீர் பார்க்கக்கூடாதபடிக்கு இருள் வந்தது.
4. ஜலப்பிரவாகம் உம்மை மூடுகிறது.

(4) யோபு தன்னுடைய பாவங்களை மூடுவதாகக் கூறுகிறான்

யோபு 22:12 தேவன் பரலோகத்தின் உன்னதங்களிலிருக்கிறார் அல்லவோ? நட்சத்திரங்களின் உயரத்தைப் பாரும், அவைகள் எத்தனை உயரமாயிருக்கிறது.

யோபு - தொகுப்புரை

22 அதிகாரம்

யோபு 22:13 நீர்: தேவன் எப்படி அறிவார், அந்தகாரத்துக்கு அப்புறத்திலிருக்கிறவர் நியாயம் விசாரிக்கக்கூடுமோ?

யோபு 22:14 அவர் பாராத படிக்கு மேகங்கள் அவருக்கு மறைவாயிருக்கிறது; பரமண்டலங்களின் சக்கரத்திலே அவர் உலாவுகிறார் என்று சொல்லுகிறீர்.

"தேவன் எப்படி அறிவார்" - யோபு தன் பாவங்களை மூடி மறைப்பதாக எலிப்பாஸ் குற்றம் கூறுகிறான். (யோபு 22:13-14).

(5) யோபுவைத் துன்மார்க்கருடைய பிரிவில் சேர்க்கிறான்

யோபு 22:15 அக்கிரம மாந்தர் பூர்வத்தில் நடந்த மார்க்கத்தைக் கவனித்துப் பார்த்தீரோ?

யோபு 22:16 காலம் வருமுன்னே அவர்கள் வாடிப்போனார்கள்; அவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் வெள்ளம் புரண்டது.

யோபு 22:17 தேவன் அவர்கள் வீடுகளை நன்மையால் நிரப்பியிருந்தாலும், அவர்கள் அவரை நோக்கி: எங்களைவிட்டு விலகும், சர்வவல்லவராலே எங்களுக்கு என்ன ஆகும் என்றார்கள்.

யோபு 22:18 ஆகையால் துன்மார்க்கரின் ஆலோசனை எனக்குத் தூரமாயிருப்பதாக.

யோபு 22:19 எங்கள் நிலைமை நிர்மூலமாகாமல், அவர்களுக்கு மீதியானதையோ அக்கினி பட்சித்ததென்பதை நீதிமான்கள் கண்டு சந்தோஷப்படுகிறார்கள்.

யோபு 22:20 குற்றமில்லாதவன் அவர்களைப் பார்த்து நகைக்கிறான்.

"அக்கிரம மாந்தர் பூர்வத்தில் நடந்த மார்க்கத்தைக் கவனித்துப் பார்த்தீரோ?" - நோவாவின் ஜலப்பிரளயத்தைக் குறிப்பிட்டு எலிப்பாஸ் யோபுவின் துன்மார்க்கத்தை நிரூபிக்க முயற்சி பண்ணுகிறான். (யோபு 22:15-16). ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலத்தவர்கள் துன்மார்க்கமாக ஜீவித்ததினால் கர்த்தர் அவர்களை அழித்துப் போட்டார். (ஆதி 6).

"எங்களைவிட்டு விலகும்" - ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலத்தவர்கள் கர்த்தரைவிட்டு விலகி ஜீவித்தார்கள். இதனால் அவர்கள் ஜலப்பிரளயத்தினால் அழிந்தார்கள். அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும்பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 1:18-32)

"நீதிமான்கள் கண்டு சந்தோஷப் படுகிறார்கள்" - துன்மார்க்கர் தண்டிக்கப் படுவதையும், அழிந்து போவதையும் நீதிமான்கள் கண்டு சந்தோஷப்படுகிறார்கள். அதுபோலவே யோபு தண்டிக்கப்படுவதைப் பார்த்து அவனுடைய சிநேகிதர் சந்தோஷப்படுகிறார்கள்.

(6) யோபு மனந்திரும்பினால் மட்டுமே அவனுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும் என்று கூறுகிறான்

யோபு 22:21 நீர் அவரோடே பழகி சமாதானமாயிரும்; அதினால் உமக்கு நன்மைவரும்.

யோபு 22:22 அவர் வாயினின்று பிறந்த வேதப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு, அவர் வார்த்தைகளை உம்முடைய இருதயத்தில் வைத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

யோபு 22:23 நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால், திரும்பக் கட்டப்படுவீர்; அக்கிரமத்தை உமது கூடாரத்துக்குத் தூரமாக்குவீர்.

22 அதிகாரம்

யோபு 22:24 அப்பொழுது தூளைப்போல் பொன்னையும், ஆற்றுக் கற்களைப்போல் ஓப்பீரின் தங்கத்தையும் சேர்த்து வைப்பீர்.

யோபு 22:25 அப்பொழுது சர்வவல்லவர் தாமே உமக்குப் பசும்பொன்னும், உமக்குச் சொக்கவெள்ளியுமாயிருப்பார்.

யோபு 22:26 அப்பொழுது சர்வவல்லவர் மேல் மனமகிழ்ச்சியாயிருந்து, தேவனுக்கு நேராக உம்முடைய முகத்தை ஏறெடுப்பீர்.

யோபு 22:27 நீர் அவரை நோக்கி விண்ணப்பம்பண்ண, அவர் உமக்குச் செவிகொடுப்பார்; அப்பொழுது நீர் உம்முடைய பொருத்தனைகளைச் செலுத்துவீர்.

யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்; உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.

யோபு 22:29 மனுஷர் ஒடுக்கப்படும்போது திடப்படக் கடவர்கள் என்று நீர் சொல்ல, தாழ்ந்தோர் ரட்சிக்கப்படுவார்கள்.

யோபு 22:30 குற்றமற்றிராதவனையுங் கூடத் தப்புவிப்பார்; உம்முடைய கைகளின் சுத்தத்தினிமித்தம் அவன் தப்பிப்போவான் என்றான்.

தேவனோடு பழகுதல்

யோபு பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். அதற்கு அவனுடைய பாவங்களே காரணம். தன்னுடைய பாவங்களிலிருந்து யோபு மனந்திருந்தி, தேவனோடே பழகி, சமாதானமாக இருந்தால் அவனுக்கு நன்மை வரும். யோபு மனந்திருந்தினால் கர்த்தர் அவனை மன்னித்து, ஆசீர்வதிப்பார் என்று எலிப்பாஸ் கூறுகிறான். (யோபு 22:21-30) இது நியாயமான பிரதியுத்தரம் போலவே தெரிகிறது. ஆனாலும் யோபு பாவம் செய்ததினால் இங்கு தண்டிக்கப்படவில்லை. ஆகையினால் இந்த உபதேசம் இங்கு தேவையற்றது. தேவனோடு பழகுதல் என்பதற்கு இவ்வாறு பொருள் கூறவேண்டும்.

1. தேவனோடு சமாதானமாக இருப்பது. (யோபு 22:21).
2. தேவனுடைய வாயினின்று பிறந்த வேதப்பிரமாணத்தை ஏற்றுக்கொள்வது. (யோபு 22:22).
3. தேவனுடைய வார்த்தைகளை தன்னுடைய இருதயத்தில் வைத்துக்கொள்வது.
4. சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்புவது. (யோபு 22:23).
5. அக்கிரமத்தை தனது கூடாரத்துக்குத் தூரமாக்குவது.

தேவனோடு பழகுவதால் வரும் ஆசீர்வாதங்கள்

1. அதினால் உமக்கு நன்மைவரும் (யோபு 22:21).
2. திரும்பக் கட்டப்படுவீர் (யோபு 22:23).
3. தூளைப்போல் பொன்னைச் சேர்த்து வைப்பீர். (யோபு 22:24).
4. சர்வவல்லவர் தாமே உமக்குப் பசும்பொன்னாயிருப்பார். (யோபு 22:25).
5. அவர் உமக்குச் சொக்கவெள்ளியுமாயிருப்பார்.
6. சர்வவல்லவர்மேல் மன மகிழ்ச்சியாயிருப்பீர். (யோபு 22:26)
7. தேவனுக்கு நேராக உம்முடைய முகத்தை ஏறெடுப்பீர். (யோபு 22:27).
8. நீர் அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்.

யோபு - தொகுப்புரை

22 அதிகாரம்

9. அவர் உமக்குச் செவிகொடுப்பார்.

10. நீர் உம்முடைய பொருத்தனைகளைச் செலுத்துவீர்.

11. நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும். (யோபு 22:28).

12. உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.

13. மனுஷர் ஒடுக்கப்படும்போது நீர் அவர்களுக்கு உதவி புரிவீர். (யோபு 22:29).

14. தாழ்ந்தோருக்கு உதவி புரிவீர்.

15. குற்றமற்றிராதவனைத் தப்புவிப்பீர். (யோபு 22:30).

23 அதிகாரம்

15. எலிப்பாசுக்கு யோபுவின் பதிலுரை

(1) தேவனிடமிருந்து நியாயமான விசாரணை வரும் என்னும் ஆவல்

யோபு 23:1 யோபு பிரதியுத்தரமாக:

யோபு 23:2 இன்றையதினமும் என் அங்கலாய்ப்பு முரண்டுத்தனமாக எண்ணப்படுகிறது; என் தவிப்பைப் பார்க்கிலும் என் வாதை கடினமானது.

யோபு 23:3 நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்ந்து,

யோபு 23:4 என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய்வைத்து, காரியத்தை ருபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்.

யோபு 23:5 அவருடைய மறுமொழிகளை நான் அறிந்து, அவர் எனக்குச் சொல்வதை உணர்ந்துகொள்ளுவேன்.

யோபுவின் பிரதியுத்தரம்

எலிப்பாஸ் தன்னுடைய குற்றச்சாட்டைக் கூறி முடித்துவிடுகிறான். தன்னுடைய பாவங்களிலிருந்து யோபு மனந்திருந்த வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறான். இதற்கு யோபுவின் பிரதியுத்தர விவரம் வருமாறு:

1. என்னுடைய நியாயத்தைத் தேவனுக்கு முன்பாக வரிசையாக வைப்பேன். (யோபு 23:1-5).
2. தேவன் எனக்கு தயை வைப்பார். (யோபு 23:6-7)
3. தேவனுக்கு முன்பாக என்னுடைய வழக்கைக் கூறுவதற்குத் தேவனைத் தேடுவேன். (யோபு 23:8-9).
4. நான் குற்றமற்றவன். (யோபு 23:10-12)
5. தேவனுடைய வழிகள் திரும்பாதவை. (யோபு 23:12-24:1).
6. துன்மார்க்கருடைய பாவம் என்னிடத்தில் காணப்படவில்லை. (யோபு 24:2-25).

யோபுவின் அங்கலாய்ப்பு

1. என் அங்கலாய்ப்பு முரண்டுத்தனமாக எண்ணப்படுகிறது. (யோபு 23:2)
2. என் தவிப்பைப்பார்க்கிலும் என் வாதை கடினமானது.
3. நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும். (யோபு 23:3).
4. நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேருவேன்.
5. என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய்வைப்பேன். (யோபு 23:4).
6. காரியத்தை ருபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்.
7. அவருடைய மறுமொழிகளை நான் அறிவேன். (யோபு 23:5).
8. அவர் எனக்குச் சொல்வதை உணர்ந்து கொள்ளுவேன்.

(2) நியாய விசாரணையில் நல்ல முடிவு ஏற்படும் என்னும் யோபுவின் நம்பிக்கை

யோபு 23:6 அவர் தம்முடைய மகா வல்லமையின்படியே என்னோடே வழக்காடுவாரோ? அவர் அப்படிச் செய்யாமல் என்மேல் தயை வைப்பார்.

23 அதிகாரம்

யோபு 23:7 அங்கே சன்மார்க்கன் அவரோடே வழக்காடலாம்; அப்பொழுது என்னை நியாயந்தீர்க்கிறவரின் கைக்கு என்றைக்கும் நீங்கலாய்த் தப்புவித்துக் கொள்வேன்.

"அவர் தம்முடைய மகா வல்லமையின்படியே என்னோடே வழக்காடுவாரோ?" - கர்த்தர் நீதியாய் நியாயம் விசாரிப்பார் என்று யோபு நம்புகிறான். தன்னைக் கர்த்தர் தண்டனையிலிருந்து தப்புவிப்பார். தனக்கு எதிராகக் கர்த்தர் தம்முடைய வல்லமையைப் பிரயோகிக்காமல், தனக்கு தயவும், இரக்கமும் காண்பிப்பார் என்று யோபு கூறுகிறான். (யோபு 23:6-7).

(3) யோபு தேவனைத் தேடுகிறான்

யோபு 23:8 இதோ, நான் முன்னாகப் போனாலும் அவர் இல்லை; பின்னாகப் போனாலும் அவரைக் காணேன்.

யோபு 23:9 இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன்; வலதுபுறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்.

(4) யோபு இன்னும் தேவனிடத்தில் பக்தியாயிருக்கிறான் - (1:20)

யோபு 23:10 ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்.

யோபு 23:11 என் கால்கள் அவர் அடிகளைப் பற்றிப்பிடித்தது; அவருடைய நெறியைவிட்டு நான் சாயாமல் அதைக் கைக்கொண்டேன்.

யோபு 23:12 அவர் உதடுகளின் கற்பனைகளைவிட்டு நான் பின்வாங்குவதில்லை; அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக் கொண்டேன்.

தீர்க்கதரிசன எண் - 2

"நான் போகும் வழியை அவர் அறிவார்" (யோபு 23:10). யோபுவால் கர்த்தரைக் கண்டுபிடிக்க முடியாமற்போனாலும் கர்த்தர் யோபுவைக் கண்டுபிடிப்பார்.

"என் கால்கள் அவர் அடிகளைப் பற்றிப்பிடித்தது" - யோபு கர்த்தருடைய வழிகளைக் காத்துக் கொண்டு அவருடைய வழிகளில் நடப்பதாகக் கூறுகிறான். தன்னுடைய ஆகாரத்தைப் பார்க்கிலும் கர்த்தருடைய கற்பனைகளே தனக்கு மிகவும் முக்கியமானது என்று கூறுகிறான். (யோபு 23:11-12).

(5) தேவனுடைய வழிகள் ஆராய முடியாதவைகள்

யோபு 23:13 அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார்; அவரைத் திருப்பத் தக்கவர் யார்? அவருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார்.

யோபு 23:14 எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்; இப்படிப் பட்டவைகள் இன்னும் அநேகம் அவரிடத்தில் உண்டு.

யோபு 23:15 ஆகையால் அவருக்கு முன்பாகக் கலங்குகிறேன்; நான் சிந்திக்கிறபோது, அவருக்குப் பயப்படுகிறேன்.

யோபு 23:16 தேவன் என் இருதயத்தை இளக்கரிக்கப் பண்ணினார்; சர்வவல்லவர் என்னைக் கலங்கப்பண்ணினார்.

யோபு 23:17 அந்தகாரம் வராததற்கு முன்னே நான் சங்கரிக்கப்படாமலும், இருளை அவர் எனக்கு மறைக்காமலும் போனதினால் இப்படியிருக்கிறேன்.

யோபு - தொகுப்புரை

23 அதிகாரம்

"அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார்" - கர்த்தர் ஒரே மனம் உள்ளவர். அவருடைய மனதை யாராலும் மாற்ற முடியாது. தம்முடைய ஆத்துமா நினைப்பதை அவர் செய்கிறார். அவருடைய வழிகளை மனுஷரால் அறிய முடியாது. ஆகையினால் அவர்களுடைய தீர்மானங்களுக்கு நாம் ஒப்புரவாகவேண்டும். (யோபு 23:14). இதனால் யோபு கர்த்தருக்குப் பயப்படுகிறான். (யோபு 23:15). கர்த்தர் தனக்கு அடுத்து என்ன செய்யப் போகிறார் என்பது யோபுவிற்குத் தெரியவில்லை. ஆனாலும் கர்த்தருடைய சித்தத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுக்க யோபு ஆயத்தமாக இருக்கிறான்.

"அவருக்குப் பயப்படுகிறேன்" - கர்த்தருடைய நித்திய திட்டம் ஞானமுள்ளது என்பது நமக்குத் தெரியும். ஆனால் அவருடைய திட்டம் என்ன என்பது நமக்குத் தெரியாது. இதனால் நமது வருங்காலத்தைக் குறித்து நமக்குள் பயம் கலந்த நம்பிக்கை உண்டாகிறது. நமது வருங் காலத்தைக் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுத்து விட்டால், நாம் கலக்கமில்லாமல் சமாதானமாக இருக்கலாம்.

"சர்வவல்லவர் என்னைக் கலங்கப் பண்ணினார்" - யோபு கர்த்தரிடத்தில் தனது நம்பிக்கை வெளிப்படுத்துகிறான். (யோபு 23:6-10) ஆனாலும் அவனுக்குள் மறுபடியும் அவிசுவாசம் வந்துவிடுகிறது. கர்த்தர் தன்னைக் கலங்கப்பண்ணுவதாக அவர்மீது குற்றம் சுமத்துகிறான். (யோபு 23:17).

யோபு - தொகுப்புரை

24 அதிகாரம்

(6) துன்மார்க்கரின் பாவங்கள் - தான் இப்படிப்பட்ட பாவம் செய்யவில்லை என்று யோபு கூறுகிறான்

யோபு 24:1 சர்வவல்லவருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க, அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன?

யோபு 24:2 சிலர் எல்லைக்குறிப்புகளை ஒற்றி, மந்தைகளைப் பலாத்காரமாய்ச் சாய்த்துக் கொண்டுபோய் பட்சிக்கிறார்கள்.

யோபு 24:3 தாய் தகப்பன் இல்லாதவர்களின் கழுதையை ஓட்டிக் கொண்டுபோய், விதவையின் மாட்டை ஈடாக எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

யோபு 24:4 தேசத்தில் சிறுமைப் பட்டவர்கள் ஏகமாய் ஒளித்துக்கொள்ளத் தக்கதாக, எளிமையானவர்களை வழியைவிட்டு விலக்குகிறார்கள்.

யோபு 24:5 இதோ, அவர்கள் காட்டுக் கழுதைகளைப்போல இரைதேட அதிகாலமே தங்கள் வேலைக்குப் புறப்படுகிறார்கள்; வனாந்தரவெளிதான் அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் ஆகாரம் கொடுக்க வேண்டும்.

யோபு 24:6 துன்மார்க்கனுடைய வயலில் அவர்கள் அவனுக்காக அறுப்பு அறுத்து, அவனுடைய திராட்சத்தோட்டத்தின் பழங்களைச் சேர்க்கிறார்கள்.

யோபு 24:7 குளிரிலே போர்த்துக் கொள்ளுகிறதற்கு ஒன்றும் இல்லாததினால், வஸ்திரமில்லாமல் இராத்தங்கி,

யோபு 24:8 மலைகளிலிருந்து வரும் மழைகளிலே நனைந்து, ஒதுக்கிடமில்லாததினால் கன்மலையிலே அண்டிக் கொள்ளுகிறார்கள்.

யோபு 24:9 அவர்களோ தகப்பனில்லாத பிள்ளையை முலையைவிட்டுப் பறித்து, தரித்திரன் போர்த்துக்கொண்டிருக்கிறதை அடகு வாங்குகிறார்கள்.

யோபு 24:10 அவனை வஸ்திரமில்லாமல் நடக்கவும், பட்டினியாய் அரிக்கட்டுகளைச் சுமக்கவும்,

யோபு 24:11 தங்கள் மதில்களுக்குள்ளே செக்காட்டவும், தாகத்தவனமாய் ஆலையாட்டவும் பண்ணுகிறார்கள்.

யோபு 24:12 ஊரில் மனுஷர் தவிக்கிறார்கள், குற்றுயிராய்க் கிடக்கிறவர்களின் ஆத்துமா கூப்பிடுகிறது; என்றாலும், தேவன் அதைக் குற்றமாக அவர்கள் மேல் சுமத்துகிறதில்லை.

யோபு 24:13 அவர்கள் வெளிச்சத்துக்கு விரோதமாய் நடக்கிறவர்களின் கூட்டத்தார்; அவர்கள் அவருடைய வழிகளை அறியாமலும், அவருடைய பாதைகளில் தரிக்காமலும் இருக்கிறார்கள்.

யோபு 24:14 கொலைபாதகன் பொழுது விடிகிறபோது எழுந்து, சிறுமையும் எளிமையுமானவனைக் கொன்று, இராக்காலத்திலே திருடனைப்போல் திரிகிறான்.

யோபு 24:15 விபசாரனுடைய கண் மாலை மயங்குகிற வேளைக்குக் காத்திருந்து: என்னை ஒரு கண்ணும் காண மாட்டாதென்று முகத்தை மூடிக் கொள்ளுகிறான்.

யோபு 24:16 அவர்கள் பகலில் அடையாளம் பார்த்த வீடுகளை இருட்டிலே கன்னமிடுகிறார்கள்; அவர்கள் வெளிச்சத்தை அறியார்கள்.

24 அதிகாரம்

யோபு 24:17 விடியுங்காலமும் அவர்களுக்கு மரண இருள்போல் இருக்கிறது; அப்படிப்பட்டவன் மரண இருளின் பயங்கரத்தோடு பழகியிருக்கிறான்.

யோபு 24:18 நீரோட்டத்தைப்போல் தீவிரமாய்ப் போவான்; தேசத்தில் அவன் பங்கு சபிக்கப்பட்டுப் போகிறதினால் அவன் திராட்சதோட்டங்களின் வழியை இனிக் காண்பதில்லை.

யோபு 24:19 வறட்சியும் உஷ்ணமும் உறைந்த மழையைப் பட்சிக்கும்; அப்படியே பாதாளமானது பாவிகளைப் பட்சிக்கும்.

யோபு 24:20 அவனைப் பெற்ற கர்ப்பம் அவனை மறக்கும்; புழு திருப்திகரமாய் அவனைத் தின்னும்; அவன் அப்புறம் நினைக்கப் படுவதில்லை; அக்கிரமமானது பட்டமரத்தைப்போல முறிந்துவிழும்.

யோபு 24:21 பிள்ளைபெறாத மலடியின் ஆஸ்தியைப் பட்சித்துவிட்டு, விதவைக்கு நன்மை செய்யாதேபோகிறான்.

யோபு 24:22 தன் பலத்தினாலே வல்லவர்களைத் தன் பாரிசமாக்குகிறான்; அவன் எழும்புகிற போது ஒருவனுக்கும் பிராணனைப்பற்றி நிச்சயமில்லை.

யோபு 24:23 தேவன் அவனுக்குச் சுக வாழ்வைக் கட்டளையிட்டால், அதின்மேல் உறுதியாய் நம்பிக்கை வைக்கிறான்; ஆனாலும் அவருடைய கண்கள் அப்படிப்பட்டவர்களின் வழிகளுக்கு விரோதமாயிருக்கிறது.

யோபு 24:24 அவர்கள் கொஞ்சக்காலம் உயர்ந்திருந்து, காணாமற்போய், தாழ்த்தப்பட்டு, மற்ற எல்லாரைப்போலும் அடக்கப் படுகிறார்கள்; கதிர்களின் நுனியைப்போல அறுக்கப்படுகிறார்கள்.

யோபு 24:25 அப்படியில்லையென்று என்னைப் பொய்யனாக்கி, என் வார்த்தைகளை வியர்த்தமாக்கத் தக்கவன் யார் என்றான்.

துன்மார்க்கரின் பாவங்கள்

1. எல்லைக்குறிப்புகளை ஒற்றிப் போடுகிறார்கள். (யோபு 24:2)
2. மந்தைகளைப் பலாத்காரமாய்ச் சாய்த்துக் கொண்டுபோய் பட்சிக்கிறார்கள்.
3. தாய் தகப்பன் இல்லாதவர்களின் கழுதையை ஓட்டிக்கொண்டு போகிறார்கள். (யோபு 24:3).
4. விதவையின் மாட்டை ஈடாக எடுத்துக் கொள்ளுகிறார்கள்.
5. எளிமையானவர்களை வழியைவிட்டு விலக்குகிறார்கள். (யோபு 24:4).
6. சிறுமைப்பட்டவர்களை சமுதாயத்தை விட்டுத் துரத்திப்போடுகிறார்கள்.
7. இரைதேட அதிகாலமே தங்கள் வேலைக்குப் புறப்படுகிறார்கள் (யோபு 24:5).
8. வனாந்தரவெளிகளில் ஆகாரத்தைத் தேடுகிறார்கள்.
9. அவர்கள் பிள்ளைகளுக்கும் ஆகாரம் தேடுகிறார்கள்.
10. துன்மார்க்கனுடைய வயலில் அவர்கள் அவனுக்காக அறுப்பு அறுக்கிறார்கள். (யோபு 24:6).
11. அவனுடைய திராட்சத்தோட்டத்தின் பழங்களைச் சேர்க்கிறார்கள்.
12. ஏழைகளின் வஸ்திரங்களை அபகரித்துப் போடுகிறார்கள். (யோபு 24:7).
13. பிரயாணம் செய்கிறவர்களின் கூடாரங்களை அபகரித்துப் போடுகிறார்கள். (யோபு 24:8).
14. ஏழைப் பிள்ளைகளை அபகரித்து அடிமைகளாக விற்றுப்போடுகிறார்கள். (யோபு 24:9).

யோபு - தொகுப்புரை

24 அதிகாரம்

15. தரித்திரன் போர்த்துக் கொண்டிருக்கிறதை அடகு வாங்குகிறார்கள். (யோபு 24:9-10).

16. தரித்திரனைப் பட்டினியாய் அரிக்கட்டுகளைச் சுமக்கப் பண்ணுகிறார்கள். (யோபு 24:10).

17. தங்கள் மதில்களுக்குள்ளே தரித்திரனைக் செக்காட்ட வைக்கிறார்கள். (யோபு 24:11).

18. அவர்களைத் தாகத்தவனமாய் ஆலையாட்டப் பண்ணுகிறார்கள்.

19. ஊரிலுள்ள மனுஷரை ஒடுக்குகிறார்கள். (யோபு 24:12).

20. மனுஷரைக் குற்றுயிராய் அடிக்கிறார்கள்.

21. அவர்கள் வெளிச்சத்துக்கு விரோதமாய் நடக்கிறார்கள். (யோபு 24:13).

22. அவர்கள் தேவனுடைய வழிகளை அறியாமலும், அவருடைய பாதைகளில் தரிக்காமலும் இருக்கிறார்கள்.

23. பகல் பொழுதில் கொலை பண்ணுகிறார்கள். (யோபு 24:14).

24. இராக்காலத்திலே திருடனைப்போல் திரிகிறார்கள்.

25. விபசாரம் பண்ணுகிறார்கள். (யோபு 24:15)

26. வீடுகளில் கன்னமிட்டு திருடுகிறார்கள். (யோபு 24:16-20).

27. பிள்ளைபெறாத மலடியின் ஆஸ்தியைப் பட்சித்துபோடுகிறார்கள். (யோபு 24:21).

28. விதவைக்கு நன்மை செய்யாதே போகிறார்கள்.

29. தன் பலத்தினாலே வல்லவர்களைத் தன் பாரிசமாக்குகிறார்கள். (யோபு 24:22).

30. அவர்கள் எழும்புகிறபோது ஒருவனுக்கும் பிராணனைப்பற்றி நிச்சயமில்லை.

“தேவன் அதைக் குற்றமாக அவர்கள் மேல் சுமத்துகிறதில்லை” - யோபு 24:5-9 ஆகிய வசனங்களில் துன்மார்க்கர் பல இடங்களில் கொள்ளையடிப்பதைப் பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. யோபு 24:10-12 ஆகிய வசனங்களில் அவர்கள் ஏழைகளை ஒடுக்குவது பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் தங்களைத் தண்டிப்பார் என்னும் பயம் அவர்களுக்கு இல்லை.

“வீடுகளை இருட்டிலே கன்னமிடுகிறார்கள்” - கிழக்கு தேசத்திலுள்ள வீடுகள் மண் சுவற்றினால் கட்டப்பட்டிருக்கும். இதுபோன்ற சுவர்களில் துவாரமிட்டு, திருடர்கள் வீட்டிற்குள் புகுந்து அங்குள்ள பொருட்களைத் திருடிச் சென்றுவிடுவார்கள். (யோபு 4:19; எசே 12:5; மத் 6:19; மத் 24:43)

“புழு திருப்திகரமாய் அவனைத் தின்னும்” - மனுஷருடைய சரீரத்தில் ஏராளமான புழுக்கள் இருப்பதாகவும் அவை மனுஷருடைய சரீரத்தை அழித்துவிடும் என்றும் ஒரு நம்பிக்கை யோபுவின் காலத்தில் இருந்தது.

“அவருடைய கண்கள் அப்படிப்பட்டவர்களின் வழிகளுக்கு விரோதமாயிருக்கிறது” - கர்த்தர் துன்மார்க்கருடைய வழிகளை அறிகிறார். சிறிது காலத்திற்குத் துன்மார்க்கர் உயர்ந்திருப்பது போலத் தெரியும். ஆனாலும் முடிவில் கர்த்தர் அவர்களைத் தாழ்த்தித் தண்டிக்கிறார். (யோபு 24:23-24).

யோபு - தொகுப்புரை

25 அதிகாரம்

16. பில்தாத்தின் சம்பாஷணை - மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாய் இருக்க முடியாது

யோபு 25:1 அப்பொழுது சூகியனான பில்தாத் பிரதியுத்தரமாக:

யோபு 25:2 அதிகாரமும் பயங்கரமும் அவரிடத்தில் இருக்கிறது; அவர் தமது உன்னதமான ஸ்தலங்களில் சமாதானத்தை உண்டாக்குகிறார்.

யோபு 25:3 அவருடைய சேனைகளுக்குத் தொகையுண்டோ? அவருடைய வெளிச்சம் யார்மேல் உதிக்காமலிருக்கிறது?

யோபு 25:4 இப்படியிருக்க, மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி?

யோபு 25:5 சந்திரனை அண்ணாந்து பாரும், அதுவும் பிரகாசியாமலிருக்கிறது; நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல.

யோபு 25:6 புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனுபுத்திரனும் எம்மாத்திரம் என்றான்.

பில்தாத்தின் பிரதியுத்தரம்

யோபு எலிப்பாசிற்குத் தன்னுடைய பிரதியுத்தரத்தைக் கூறிமுடித்திருக்கிறான். அதன் பின்பு, பில்தாத் மூன்றாம் முறையாகத் தன்னுடைய கடைசிப் பிரதியுத்தரத்தைக் கூறுகிறான். தேவனுக்கு முன்பாக எந்த மனுஷனாலும் நீதிமானாக இருக்க முடியாது. ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் அசுத்தமானவன். வானத்திலுள்ள நட்சத்திரங்கள்கூட கர்த்தருடைய பார்வையில் சுத்தமானவை அல்ல என்பது பில்தாத்தின் பிரதியுத்தரமாகும். (யோபு 25:1-6).

26 அதிகாரம்

17. பில்தாத்திற்கு யோபுவின் பதிலுரை

(1) யோபு தன் நண்பர்களிடம் பேசிய பரியாசப் பேச்சுகளும் கேள்விகளும்

யோபு 26:1 யோபு மறுமொழியாக:

யோபு 26:2 திடனில்லாதவனுக்கு நீ எப்படி ஒத்தாசை பண்ணினாய்? பெலனற்ற கையை நீ எப்படி ஆதரித்தாய்?

யோபு 26:3 நீ ஞானமில்லாதவனுக்கு எப்படி உசாவுதுணையாயிருந்து, மெய்ப்பொருளைக் குறைவற அறிவித்தாய்?

யோபு 26:4 யாருக்கு அறிவைப் போதித்தாய்? உன்னிடத்திலிருந்து புறப்பட்ட ஆவி யாருடையது?

யோபுவின் மறுமொழி

யோபு தன்னுடைய சிநேகிதருக்குப் பலமுறை பிரதியுத்தரம்கூறி வருகிறான். அவற்றில் இது ஒன்பதாவது பிரதியுத்தரமாகும். இதுவே யோபுவின் பிரதியுத்தரங்களில் கடைசியானது. யோபு 26-31 ஆகிய அதிகாரங்களில் இந்தப் பிரதியுத்தரத்தின் விவரம் கூறப்பட்டிருக்கிறது. யோபு தன்னுடைய கடைசி பிரதியுத்தரத்தைக் கூறி முடித்த பின்பு, சோப்பாரால் அவனுக்குப் பதில் கூறமுடியவில்லை. ஆகையினால் அதன் பின்பு எலிகூ என்பவன் பேசுகிறான். (யோபு 32:1-37:24) அதன் பின்பு, கர்த்தர் யோபுவிற்குப் பிரதியுத்தரம் கூறுகிறார். (யோபு 38:1-41:34). யோபுவின் பிரதியுத்தர விவரம் வருமாறு:

1. தன்னுடைய நண்பர்களைப் பற்றி சில கேள்விகளைக் கேட்கிறான். (யோபு 26:1-4)

2. தேவனுடைய 15 கிரியைகளைப் பற்றிக் கூறுகிறான். (யோபு 26:5-14)

3. தனக்குத் தேவன் பாடுகளைத் தந்ததாக அவர்மீது குற்றம் சுமத்துகிறான். (யோபு 27:1-2)

4. தான் குற்றமற்றவன் என்று விவாதம் பண்ணுகிறான். (யோபு 27:3-12)

5. துன்மார்க்கனைப் பற்றி சோப்பார் கூறிய விவாதங்களை மறுபடியும் கூறுகிறான். (யோபு 27:13-23)

6. இயற்கையான காரியங்களையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களையும் யோபு குறிப்பிடுகிறான். (யோபு 28:1-11)

7. ஞானத்தின் கிரயம், ஆதாரம், விளக்கம் ஆகியவற்றை கூறுகிறான். (யோபு 28:12-28)

8. கடந்த காலத்திற்காகப் புலம்புகிறான். (யோபு 29:1-25)

9. தற்காலத்திற்காகப் புலம்புகிறான். (யோபு 30:1-31)

10. தான் பாவம் செய்யவில்லை என்று அறிவிக்கிறான். (யோபு 31:1-40).

(2) தேவனுடைய 15 கிரியைகள்

யோபு 26:5 ஜலத்தின் கீழ் மடிந்தவர்களுக்கும், அவர்களோடே தங்குகிறவர்களுக்கும் தத்தளிப்பு உண்டு.

யோபு 26:6 அவருக்கு முன்பாகப் பாதாளம் வெளியாய்த் திறந்திருக்கிறது; நரகம் மூடப்படாதிருக்கிறது.

யோபு 26:7 அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்.

யோபு 26:8 அவர் தண்ணீர்களைத் தம்முடைய கார்மேகங்களில் கட்டி வைக்கிறார்; அதின் பாரத்தினால் மேகம் கிழிகிறதில்லை.

யோபு 26:9 அவர் தமது சிங்காசனம் நிற்கும் ஆகாசத்தை ஸ்திரப்படுத்தி, அதின்மேல் தமது மேகத்தை விரிக்கிறார்.

26 அதிகாரம்

யோபு 26:10 அவர் தண்ணீர்கள்மேல் சக்கரவட்டம் தீர்த்தார்; வெளிச்சமும் இருளும் முடியுமட்டும் அப்படியே இருக்கும்.

யோபு 26:11 அவருடைய கண்டிதத்தால் வானத்தின் தூண்கள் அதிர்ந்து தத்தளிக்கும்.

யோபு 26:12 அவர் தமது வல்லமையினால் சமுத்திரக் கொந்தளிப்பை அமரப்பண்ணி, தமது ஞானத்தினால் அதின் மூர்க்கத்தை அடக்குகிறார்.

யோபு 26:13 தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்; அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று.

யோபு 26:14 இதோ, இவைகள் அவருடைய கிரியையில் கடைகோடியானவைகள், அவரைக் குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம்; அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் என்றான்.

"ஜலத்தின் கீழ் மடிந்தவர்கள்" - இந்த வாக்கியத்தில் "மடிந்தவர்கள்" என்பதற்கான எபிரெய வார்த்தை "ரப்பா" (rapha') என்பதாகும். இதிலிருந்து "ரெப்பாயீம்" (Rephaim) என்னும் வார்த்தை வந்திருக்கிறது. இதற்கு இராட்சதர் என்று பொருள். இவர்கள் விழுந்துபோன தூதர்களுக்கும், மனுஷ குமாரத்திகளுக்கும் பிறந்தவர்கள். (ஆதி 6:1-4).

மடிந்தவர் (dead) - רְפָאִים - raw-faw'-iym - 7496

ஆண்பால் பெயர்ச்சொல் - மடிந்தவர், மரித்தவர், செத்தவர், மாண்டிருத்தல், மரித்தல்

இராட்சதர் (giants) רְפָאִים - raw-faw', raw-faw'-iym - 7497

ஆண்பால் பெயர்ச்சொல் - ரெப்பாயீம், இராட்சதர், இராட்சதம், ரெப்பாயீமியர்

தத்தளிப்பு (formed) - חִיל - kheel - 2427

ஆ.பெ.சொ.-திகில், வேதனை, வாதை (remain)

பெ.பெ.சொ.-நோவு

தேவனுடைய கிரியைகள்

1. ஜலத்தின் கீழ் மடிந்தவர்களையும், அவர்களோடே தங்குகிறவர்களையும் தத்தளிக்கப் பண்ணுகிறார். (யோபு 26:5).
2. அவருக்கு முன்பாகப் பாதாளம் வெளியாய்த் திறந்திருக்கிறது (யோபு 26:6).
3. நரகம் மூடப்படாதிருக்கிறது.
4. அவர் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரிக்கிறார். (யோபு 26:7).
5. பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்.
6. அவர் தண்ணீர்களைத் தம்முடைய கார்மேகங்களில் கட்டிவைக்கிறார். (யோபு 26:8).
7. அதின் பாரத்தினால் மேகம் கிழிகிறதில்லை.
8. அவர் தமது சிங்காசனம் நிற்கும் ஆகாசத்தை ஸ்திரப்படுத்துகிறார். (யோபு 26:9).
9. அதின்மேல் தமது மேகத்தை விரிக்கிறார்.
10. அவர் தண்ணீர்கள்மேல் சக்கரவட்டம் தீர்த்தார். (யோபு 26:10).

யோபு - தொகுப்புரை

26 அதிகாரம்

11. அவருடைய கண்டிதத்தால் வானத்தின் தூண்கள் அதிர்ந்து தத்தளிக்கிறது. (யோபு 26:11).

12. அவர் தமது வல்லமையினால் சமுத்திரக் கொந்தளிப்பை அமரப்பண்ணுகிறார். (யோபு 26:12).

13. தமது ஞானத்தினால் அதின் மூர்க்கத்தை அடக்குகிறார்.

14. தமது ஆவியினால் வானத்தை அலங்கரிக்கிறார். (யோபு 26:13).

15. அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று.

"பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" - பூமி எவ்வித ஆதாரமும் இல்லாமல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. தேவனுடைய வல்லமையினால் வானத்திலுள்ள நட்சத்திரங்களெல்லாம் தங்களுக்கு நியமித்த கிரியைகளைச் செய்து கொண்டிருக்கின்றன.

"அதின் பாரத்தினால் மேகம் கிழிகிறதில்லை" - மேகத்தில் தண்ணீர் நிரம்பியிருக்கிறது. அதற்கும் ஒரு பாரமுண்டு. ஆனாலும் கர்த்தருடைய அனுமதியில்லாமல் அது மேகத்தைக் கிழித்து கீழே வருவதில்லை.

"அதின்மேல் தமது மேகத்தை விரிக்கிறார்" - கர்த்தருடைய சிங்காசனம் ஆகாசத்தில் இருக்கிறது. ஆனாலும் மனுஷனால் அதைக் காணமுடியவில்லை. தமது மேகத்தை அந்தச் சிங்காசனத்தின்மீது விரித்திருப்பதினால் மனுஷருடைய பார்வைக்கு அது மறைவாய் இருக்கிறது.

"தண்ணீர்கள்மேல் சக்கரவட்டம் தீர்த்தார்" - (சங் 104:1-9).

"வெளிச்சமும் இருளும் முடியுமட்டும் அப்படியே இருக்கும்" - (ஆதி 1:14-19; ஆதி 8:22).

"அவரைக்குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம்" - கர்த்தரைப் பற்றி மனுஷருக்கு மிகச் சிறிய அளவே வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அவருடைய வல்லமை இடி முழக்கத்தைப் போன்றது. ஆனால் நமக்கு மெல்லிய சப்தம் மட்டுமே வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

யோபு - தொகுப்புரை

27 அதிகாரம்

(3) தன் பாடுகளுக்காக யோபு தேவன்மீது குற்றம் சுமத்துகிறான்

யோபு 27:1 யோபு பின்னும் தன் பிரசங்க வாக்கியத்தைத் தொடர்ந்து சொன்னது:

யோபு 27:2 என் சுவாசம் என்னிலும், தேவன் தந்த ஆவி என் நாசியிலும் இருக்குமட்டும்,

ஆவி (spirit) - רוּחַ - roo'-akh - 7307

பொதுப்பெயர்ச்சொல் - ஆவி, குளிர்ச்சி, சுவாசம், காற்று, மனநோவு, மனம், மனமடிவு, தைரியம், சோர்ந்து போதல், கோபம், உயிர், பிரமை, மூச்சு, கடுங்கொந்தளிப்பு, முற்கோபி, உள்ளம், கீறல், திசை, பக்கம், பெருங்காற்று, சாந்தி **(spirit, breath)** - இந்த வார்த்தை இங்கு பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடவில்லை. தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த போது அவர் அவனுடைய நாசியில் ஊதின ஜீவசுவாசத்தை இது குறிக்கும். (ஆதி 2:7).

(4) யோபு தேவனிடத்தில் தான் வைத்திருக்கும் ஐக்கியத்தைக் காத்துக் கொள்கிறான் - (1:20)

யோபு 27:3 என் உதடுகள் தீமையைச் சொல்வதுமில்லை; என் நாக்கு கபடம் பேசுவதுமில்லையென்று,

யோபு 27:4 என் நியாயத்தைத் தள்ளி விடுகிற தேவனும், என் ஆத்துமாவைக் கசப்பாக்குகிற சர்வ வல்லவருமானவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.

யோபு 27:5 நீங்கள் பேசுகிறது நீதியென்று நான் ஒத்துக்கொள்வது எனக்குத் தூரமாயிருப்பதாக; என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்.

யோபு 27:6 என் நீதியைக்கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன்; அதை நான் விட்டுவிடேன்; நான் உயிரோடிருக்கு மளவும் என் இருதயம் என்னை நிந்திக்காது.

யோபு 27:7 என் பகைஞன் ஆகாதவனைப்போலும், எனக்கு விரோதமாய் எழும்புகிறவன் அக்கிரமக்காரனைப் போலும் இருப்பானாக.

யோபு 27:8 மாயக்காரன் பொருளைத் தேடி வைத்திருந்தாலும், தேவன் அவன் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் போது, அவன் நம்பிக்கை என்ன?

யோபு 27:9 ஆபத்து அவன்மேல் வரும்போது, தேவன் அவன் கூப்பிடுதலைக் கேட்பாரோ?

யோபு 27:10 அவன் சர்வவல்லவர்மேல் மனமகிழ்ச்சியாயிருப்பானோ? அவன் எப்பொழுதும் தேவனைத் தொழுது கொண்டிருப்பானோ?

யோபு 27:11 தேவனுடைய கரத்தின் கிரியையைக் குறித்து உங்களுக்கு உபதேசிப்பேன்; சர்வவல்லவரிடத்தில் இருக்கிறதை நான் மறைக்கமாட்டேன்.

யோபு 27:12 இதோ, நீங்கள் எல்லாரும் அதைக் கண்டிருந்தும், நீங்கள் இத்தனை வீண் எண்ணங்கொண்டிருக்கிறது என்ன?

யோபு தன் உத்தமத்தைப் பற்றிக்கூறும் காரியங்கள்

1. என் உதடுகள் தீமையைச் சொல்வதுமில்லை.
2. என் நாக்கு கபடம் பேசுவதுமில்லை.
3. நீங்கள் பேசுகிறது நீதியென்று நான் ஒத்துக்கொள்வது எனக்குத் தூரமாயிருப்பதாக. (யோபு 27:5).
4. என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்.
5. என் நீதியைக்கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன் (யோபு 27:6).

27 அதிகாரம்

6. அதை நான் விட்டுவிடேன்.

7. நான் உயிரோடிருக்குமளவும் என் இருதயம் என்னை நிந்திக்காது.

"என் நியாயத்தைத் தள்ளிவிடுகிற தேவன்" - யோபு தன்னுடைய வழக்கத்தின்படி, இன்னும் தேவன்மீதே குற்றம் சுமத்துகிறான். தன்னுடைய உபத்திரவங்களுக்குச் சாத்தானே காரணம் என்பதை யோபு இன்னும் புரிந்து கொள்ளவில்லை. (யோபு 1:10-19; யோபு 2:1-8).

யோபு தேவன்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. என் நியாயத்தைத் தள்ளிவிட்டார்.

2. என் ஆத்துமாவைக் கசப்பாக்குகிறார்.

"சர்வவல்லவருமானவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" - கர்த்தர் ஆணையிடும்போதும் (எசே 17:16; எசே 33:11), மற்றவர்கள் ஆணையிடுகிறபோதும் வேதாகமத்தில் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

யோபுவின் சுத்த மனச்சாட்சி

இந்த வாக்கியத்தில் இருதயம் என்பது மனச்சாட்சியைக் குறிக்கிறது. உள்ளான மனுஷன் செய்யும் காரியம் சரியானதா அல்லது தவறானதா என்று இருதயம் தீர்மானம் பண்ணுகிறது. தான் பாவம் செய்யவில்லையென்று ஒருவனுக்குத் தெரிந்திருக்கும்போது, அவன் யோபுவைப் போல தான் பாவியல்ல என்று நிச்சயமாகக் கூறமுடியும். தேவன்மீது குற்றம் சுமத்துகிற பாவம் மட்டுமே யோபுவினிடத்தில் காணப்படுகிறது. தன்னுடைய துயரங்களுக்குத் தேவனே காரணமென்று தவறாக நினைத்துக் கொண்டு யோபு தேவனை நிந்திக்கிறான்.

"தேவன் அவன் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் போது, அவன் நம்பிக்கை என்ன?" - மாய்மாலக்காரருடைய ஆத்துமா எடுத்துக் கொள்ளப்படும்போது அவர்களுக்கு ஒரு நம்பிக்கையும் இல்லை. (யோபு 27:7-12). மாய்மாலக்காரருடைய ஜீவனே பரிதாபமாக இருக்கும். அவர்கள் நேசிக்காததை நேசிப்பதாக அறிக்கையிடுகிறார்கள். தங்கள் இருதயம் வெறுப்பதை விரும்புவதற்கு முயற்சி பண்ணுகிறார்கள். இரக்கம் காண்பிக்காத மனுஷரிடத்தில் பழக விரும்புகிறார்கள். இருதயம் ஈடுபடாமலேயே ஆராதனையில் பங்கு பெறுகிறார்கள். ஆகையினால் மாய்மாலக்காரர் மரிக்கும்போது அவர்களுக்கு ஒரு நம்பிக்கையும் இராது.

(5) யோபுவின் தத்துவம்

(அ) துன்மார்க்கரின் முடிவு

யோபு 27:13 பொல்லாத மனுஷனுக்கு தேவனிடத்திலிருந்து வருகிற பங்கும், கொடூரக்காரர் சர்வவல்லவரால் அடைகிற சுதந்தரமும் என்னவெனில்,

யோபு 27:14 அவனுடைய குமாரர் பெருகினால் பட்டயத்துக்கு இரையாவார்கள்; அவன் கர்ப்பப்பிறப்புகள் ஆகாரத்தினால் திருப்தியாவதில்லை.

யோபு 27:15 அவனுக்கு மீதியானவர்கள் செத்துப் புதைக்கப்படுவார்கள்; அவனுடைய விதவைகள் புலம்புவதில்லை.

யோபு 27:16 அவன் புழுதியைப்போலப் பணத்தைக் குவித்துக்கொண்டாலும், மண்ணைப்போல வஸ்திரங்களைச் சவதரித்தாலும்,

யோபு 27:17 அவன் சவதரித்ததை நீதிமான் உடுத்திக்கொண்டு, குற்றமில்லாதவன் அவன் பணத்தைப் பகிர்ந்துகொள்ளுவான்.

யோபு 27:18 அவனுடைய வீடு பொட்டுப்பூச்சி கட்டின வீட்டைப்போலும், காவல்காக்கிறவன் போட்ட குடிசையைப்போலுமாகும்.

யோபு - தொகுப்புரை

27 அதிகாரம்

யோபு 27:19 அவன் ஐசுவரியவானாய்த் தூங்கிக் கிடந்து, ஒன்றும் பறிகொடாதே போனாலும், அவன் தன் கண்களைத் திறக்கும்போது ஒன்றுமில்லாதிருக்கும்.

யோபு 27:20 வெள்ளத்தைப்போல திகில்கள் அவனை வாரிக்கொண்டு போகும்; இராக்காலத்தில் பெருங்காற்று அவனை அடித்துக்கொண்டுபோகும்.

யோபு 27:21 கொண்டல்காற்று அவனைத் தூக்கிக்கொண்டுபோக, அவன் போய்விடுவான்; அது அவனை அவன் ஸ்தலத்திலிருந்து தள்ளிக்கொண்டு போகும்.

யோபு 27:22 அவர் இவர்களை அவன்மேல் வரப்பண்ணி அவனைத் தப்பவிடாதிருப்பார்; அவருடைய கைக்குத் தப்பியோடப் பார்ப்பான்.

யோபு 27:23 ஜனங்கள் அவனைப் பார்த்துக் கைகொட்டி, அவனை அவன் ஸ்தலத்தை விட்டு வெருட்டிவிடுவார்கள்.

"பொல்லாத மனுஷனுக்கு தேவனிடத்திலிருந்து வருகிற பங்கும், கொடூரக்காரர் சர்வவல்லவரால் அடைகிற சுதந்தரமும்" - யோபு 27:13-23 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் சோப்பாரின் மூன்றாவது பிரதியுத்தரத்திலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறது. இதன்மூலமாக யோபுவின் சிநேகிதர் ஒவ்வொருவரும் மூன்று தரம் பிரதியுத்தரம் கூறியிருக்கிறார்கள். இந்த வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழிநடையும் சோப்பாருடையதாகும். மேலும் யோபுவின் வியாக்கியானத்திற்கு இந்த வசனங்கள் முரணாகவும் உள்ளன. ஆனாலும் மூலபாஷைச் சுவடிகளில் இந்த வசனங்களைச் சோப்பார் எழுதியதற்கான ஆதாரம் எதுவுமில்லை. யோபு 27:12 ஆவது வசனத்தில் யோபு தன் சிநேகிதருடைய வீண் எண்ணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறான். ஒருவேளை இந்த வசனங்கள் அவர்களுடைய வீண் எண்ணமாகக்கூட இருக்கலாம்.

துன்மார்க்கருடைய முடிவு

1. அவனுடைய குமாரர் பெருகினால் பட்டயத்துக்கு இரையாவார்கள்.
2. அவன் கர்ப்பப்பிறப்புகள் ஆகாரத்தினால் திருப்தியாவதில்லை.
3. அவனுக்கு மீதியானவர்கள் செத்துப் புதைக்கப்படுவார்கள். (யோபு 27:15),
4. அவனுடைய விதவைகள் புலம்புவதில்லை.
5. அவன் புழுதியைப்போலப் பணத்தைக் குவித்துக் கொண்டாலும்.... குற்றமில்லாதவன் அவன் பணத்தைப் பகிர்ந்துகொள்ளுவான்.(யோபு27:16-17)
6. அவன் சவதரித்ததை நீதிமான் உடுத்திக்கொள்வான்.
7. அவனுடைய வீடு பொட்டுப்பூச்சி கட்டின வீட்டைப்போலும், காவல்காக்கிறவன் போட்ட குடிசையைப்போலுமாகும்.(யோபு 27:18).
8. அவன் ஐசுவரியவானாய்த் தூங்கிக் கிடந்து மரித்துப்போவான். (யோபு 27:19).
9. வெள்ளத்தைப்போல திகில்கள் அவனை வாரிக்கொண்டுபோகும். (யோபு 27:20).
10. இராக்காலத்தில் பெருங்காற்று அவனை அடித்துக்கொண்டுபோகும்.
11. கொண்டல்காற்று அவனைத் தூக்கிக் கொண்டுபோக, அவன் போய்விடுவான். (யோபு 27:21).
12. அது அவனை அவன் ஸ்தலத்திலி ருந்து தள்ளிக்கொண்டுபோகும்.
13. தேவன் இவர்களை அவன்மேல் வரப் பண்ணி அவனைத் தப்ப விடாதிருப்பார். (யோபு 27:22)
14. ஜனங்கள் அவனைப் பார்த்துக் கைகொட்டி, அவனை அவன் ஸ்தலத்தை விட்டு வெருட்டி விடுவார்கள். (யோபு 27:23)

யோபு - தொகுப்புரை

27 அதிகாரம்

துன்மார்க்கருடைய முடிவு

1. அவனுடைய குமாரர் பெருகினால் பட்டயத்துக்கு இரையாவார்கள்.

2. அவன் கர்ப்பப்பிறப்புகள் ஆகாரத்தினால் திருப்தியாவதில்லை.

3. அவனுக்கு மீதியானவர்கள் செத்துப் புதைக்கப்படுவார்கள். (யோபு 27:15),

4. அவனுடைய விதவைகள் புலம்புவதில்லை.

5. அவன் புழுதியைப்போலப் பணத்தைக் குவித்துக் கொண்டாலும்.... குற்றமில்லாதவன் அவன் பணத்தைப் பகிர்ந்துகொள்ளுவான்.(யோபு27:16-17)

6. அவன் சவதரித்ததை நீதிமான் உடுத்திக்கொள்வான்.

7. அவனுடைய வீடு பொட்டுப்பூச்சி கட்டின வீட்டைப்போலும், காவல் காக்கிறவன் போட்ட குடிசையைப் போலுமாகும்.(யோபு27:18).

8. அவன் ஐசுவரியவானாய்த் தூங்கிக் கிடந்து மரித்துப்போவான். (யோபு 27:19).

9. வெள்ளத்தைப்போல திகில்கள் அவனை வாரிக்கொண்டுபோகும். (யோபு 27:20).

10. இராக்காலத்தில் பெருங்காற்று அவனை அடித்துக்கொண்டுபோகும்.

11. கொண்டல்காற்று அவனைத் தூக்கிக் கொண்டுபோக, அவன் போய்விடுவான். (யோபு 27:21).

12. அது அவனை அவன் ஸ்தலத்திலிருந்து தள்ளிக்கொண்டுபோகும்.

13. தேவன் இவர்களை அவன்மேல் வரப் பண்ணி அவனைத் தப்ப விடாதிருப்பார். (யோபு 27:22)

14. ஜனங்கள் அவனைப் பார்த்துக் கைகொட்டி, அவனை அவன் ஸ்தலத்தை விட்டு வெருட்டி விடுவார்கள். (யோபு 27:23)

"மண்ணைப்போல வஸ்திரங்களைச் சவதரித்தாலும்" - கிழக்கு தேசத்தில் பொன் வெள்ளியைப் போல தங்களுக்கு ஏராளமான வஸ்திரங்களையும் சேகரிப்பார்கள். கிறிஸ்துவும் இதைக் குறித்து மத் 6:19 ஆவது வசனத்தில் கூறியிருக்கிறார். பவுலும் தன்னைப் பற்றிச் சாட்சி கூறும்போது "ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" (அப் 20:33) என்று கூறுகிறார். (1தீமோ 2:9; யாக் 5:2).

"ஜனங்கள் அவனைப் பார்த்துக் கைகொட்டி" - (ஏசா 5:26)

28 அதிகாரம்

(ஆ) யோபுவின் காலத்தில் உலோகச் சுரங்கங்கள், ஆலைகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு இருந்தது

யோபு 28:1 வெள்ளிக்கு விளைவிடம் உண்டு, பொன்னுக்குப் புடமிடும் ஸ்தலமுமுண்டு.

யோபு 28:2 இரும்பு மண்ணிலிருந்து எடுக்கப்படும்; செம்பு கற்களில் உருக்கி எடுக்கப்படும்.

யோபு 28:3 மனிதன் அந்தகாரத்திலும் மரண இருளிலும் இருக்கிற கற்களைக் கடையாந்தரமட்டும் ஆராய்ந்து தேடி, இருளுக்கும் அங்கே முடிவுண்டாக்குகிறான்.

யோபு 28:4 கடக்கக்கூடாததும் நிலையாததுமான ஆறு எழும்பினாலும், உழைப்பாளியானவன் அதை மனுஷரால் வற்றிப்போகப்பண்ணிச் செல்லுகிறான்.

யோபு 28:5 பூமியின்மேல் ஆகாரம் விளையும்; அதின் கீழிடங்களிலிருக்கிறவைகளோ, அக்கினியால் மாறினது போலிருக்கும்.

யோபு 28:6 அதின் கல்லுகளில் இந்திரநீலம் விளையும்; அதின் பொடியில் பொன்பொடிகளும் உண்டாயிருக்கும்.

யோபு 28:7 ஒரு வழியுண்டு, அது ஒரு பட்சிக்கும் தெரியாது; வல்லூறின் கண்ணும் அதைக் கண்டதில்லை;

யோபு 28:8 துஷ்டமிருகங்களின் கால் அதில் படவில்லை; சிங்கம் அதைக் கடந்ததில்லை.

யோபு 28:9 அவன் தன் கைகளைக் கற்பாறையின்மேல் நீட்டி, மலைகளை வேரோடே புரட்டுகிறான்.

யோபு 28:10 கன்மலைகளுக்குள்ளும் நீர்க்கால்களை வெட்டுகிறான்; அவன் கண் விலையுயர்ந்த எல்லாவற்றையும் காணும்.

யோபு 28:11 ஒரு துளியும் கசியாதபடி ஆறுகளை அடைகிறான்; மறைவிடத்திலிருக்கிறதை வெளிச்சத்திலே கொண்டுவருகிறான்.

"பொன்னுக்குப் புடமிடும் ஸ்தலமுமுண்டு" - புடமிடும் ஸ்தலம் என்பது மனுஷனுடைய ஞானம், விவேகம், அறிவு ஆகியவற்றைக் குறிக்கும் வார்த்தையாகும். ஆதிகாலம் முதலே மனுஷனுக்குப் புடமிடும் கலையைப் பற்றித் தெரிந்திருந்தது. லாமேக்கின் குமாரனாகிய தூபால்காயீன் உலோக வேலைகளில் வல்லவனாக இருந்தான். இவன் ஆதாமிலிருந்து காயீனின் வம்சத்தில் ஏழாவதாக வந்தவன். (ஆதி 4:22).

"செம்பு கற்களில் உருக்கி எடுக்கப்படும்" - தூபால்காயீன் வெண்கல வேலையிலும், இரும்பு வேலையிலும் நிபுணனாக இருந்தான். இவனுடைய காலம் நோவாவின் ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலமாகும். (ஆதி 4:22).

"அந்தகாரத்திலும் மரண இருளிலும் இருக்கிற கற்கள்" - சுரங்கத்தைத் தோண்டி, அங்குள்ள தாதுப்பொருட்களை எடுப்பதைப் பற்றி இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. அக்காலத்திலேயே சுரங்கவேலை நடைபெற்றிருக்கிறது. "வல்லூறின் கண்ணும் அதைக் கண்டதில்லை" - பொன், வெள்ளி, உயர்ந்த கற்கள் ஆகியவற்றைச் சுரங்கத்தில் தேடும் மனுஷருடைய பாதையை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. பூமிக்கு அடியிலுள்ள இந்தப் பாதைகள் எந்தப் பட்சிக்கும் வல்லூறுக்கும் தெரியாது. (யோபு 28:7-8).

"மலைகளை வேரோடே புரட்டுகிறான்" - சுரங்க வேலைகளைச் செய்வதற்காகவும், அணைகளைக் கட்டுவதற்காகவும் மனுஷன் மலைகளை வேரோடே புரட்டுகிறான். (யோபு 28:9-11).

(இ) ஞானத்தின் கிரயம் ஆதாரம், விளக்கம் ஆகியவை

யோபு 28:12 ஆனாலும் ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே? புத்தி விளைகிற இடம் எது?

யோபு - தொகுப்புரை

28 அதிகாரம்

யோபு 28:13 அதின் விலை மனுஷனுக்குத் தெரியாது; அது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை.

யோபு 28:14 ஆழமானது: அது என்னிடத்தில் இல்லையென்கிறது; சமுத்திரமானதும், அது என்னிடத்தில் இல்லையென்கிறது.

யோபு 28:15 அதற்கு ஈடாகத் தங்கத்தைக் கொடுக்கவும், அதற்குக் கிரயமாக வெள்ளியை நிறுக்கவும் கூடாது.

யோபு 28:16 ஒப்பீரின் தங்கமும், விலையேறப்பெற்ற கோமேதகமும், இந்திர நீலக்கல்லும் அதற்கு ஈடல்ல.

யோபு 28:17 பொன்னும் பளிங்கும் அதற்கு ஒப்பல்ல; பசும்பொன்னாபரணங்களுக்கு அதை மாற்றக்கூடாது.

யோபு 28:18 பவளத்தையும் ஸ்படிகத்தையும் அத்தோடே ஒப்பிட்டுப் பேசலாகாது; முத்துக்களைப்பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது.

யோபு 28:19 எத்தியோப்பியாவின் புஷ்பராகம் அதற்கு நிகரல்ல; பசும்பொன்னும் அதற்குச் சரியல்ல.

யோபு 28:20 இப்படியிருக்க, ஞானம் எங்கேயிருந்து வரும்; புத்தி தங்கும் இடம் எங்கே?

யோபு 28:21 அது ஜீவனுள்ள சகலருடைய கண்களுக்கும் ஒளித்தும், ஆகாசத்துப் பறவைகளுக்கு மறைந்தும் இருக்கிறது.

யோபு 28:22 நாசமும் மரணமும், நாங்கள் எங்கள் காதுகளினாலேமாத்திரம் அதின் கீர்த்தியைக் கேட்டோம் என்கிறது.

யோபு 28:23 தேவனோ அதின் வழியை அறிவார், அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும்.

யோபு 28:24 அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து, வானங்களின்கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார்.

யோபு 28:25 அவர் காற்றுக்கு அதின் நிறையை நியமித்து, ஜலத்துக்கு அதின் அளவைப் பிரமாணித்து,

யோபு 28:26 மழைக்குத் திட்டத்தையும், இடிமுழக்கத்தோடே கூடிய மின்னலுக்கு வழியையும் ஏற்படுத்துகிறார்.

யோபு 28:27 அவர் அதைப் பார்த்துக் கணக்கிட்டார்; அதை ஆராய்ந்து ஆயத்தப்படுத்தி,

யோபு 28:28 மனுஷனை நோக்கி: இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார் என்று சொன்னான்.

"அதின் விலை மனுஷனுக்குத் தெரியாது" - ஞானம், அறிவு ஆகியவற்றின் உண்மையான மதிப்பு மனுஷனுக்குத் தெரிவதில்லை. இவை கர்த்தரிடமிருந்தே வருகிறது. ஞானத்தையும், அறிவையும் பூமியின் ஆழங்களிலோ, சமுத்திரத்திலோ காணமுடியாது. பொன், வெள்ளி, உயர்ந்த கற்கள் ஆகியவற்றினால் அவற்றை விலை கொடுத்தும் வாங்க முடியாது. (யோபு 28:14-19) ஞானமும், அறிவும் தேவனிடத்திலிருந்து மாத்திரமே வருகிறது. (யோபு 28:20-23)

"பளிங்கு" **(crystal)** - (எசே 1:22; வெளி 4:6; வெளி 21:11; வெளி 22:1).

"பவளம்" **(coral)** - (எசே 27:16)

"ஸ்படிகம்" **(pearls)** - (மத் 7:6; மத் 13:45-46; 1தீமோ 2:9; வெளி 17:4; வெளி 18:12,16; வெளி 21:21).

"முத்து" **(rubies)** - (நீதி 3:15; நீதி 8:11; நீதி 20:15; நீதி 31:10; புல 4:7).

நாசம் **(destruction) - אֲבַדּוֹן - ab-ad-done' - 11**

பெ.பெ.சொ.-நரகம், நாசம், நிர்மூலம், அழிவு

யோபு - தொகுப்புரை

28 அதிகாரம்

தேவனைப் பற்றிய சத்தியம்

1. தேவன் ஞானத்தின் வழியை அறிவார்.
2. அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும்.
3. அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்க்கிறார் (யோபு 28:24).
4. வானங்களின்கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார்.
5. அவர் காற்றுக்கு அதின் நிறையை நியமித்திருக்கிறார். (யோபு 28:25).
6. ஜலத்துக்கு அதின் அளவைப் பிரமாணித்திருக்கிறார்.
7. மழைக்குத் திட்டத்தை ஏற்படுத்துகிறார். (யோபு 28:26).
8. இடிமுழக்கத்தோடே கூடிய மின்னலுக்கு வழியை ஏற்படுத்துகிறார்.
9. அவர் ஞானத்தைப் பார்த்தார். (யோபு 28:27).
10. ஞானத்தைக் கணக்கிட்டார்.
11. ஞானத்தை ஆராய்ந்தார்.
12. ஞானத்தை ஆயத்தப்படுத்தினார்.
13. ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானமென்று அறிவிக்கிறார். (யோபு 28:28).
14. பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்று அறிவிக்கிறார்.

"ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்" - இந்த வாக்கியம் பிற்காலத்தில் சாலொமோன் கூறுவதுபோல உள்ளது. (நீதி 1:7; நீதி 9:10; சங் 111:10).

29 அதிகாரம்

(6) புலம்பல் - யோபுவின் கடந்த காலம்

(அ) யோபுவின் ஐசுவரியத்தின் பத்து அம்சங்கள்

யோபு 29:1 பின்னும் யோபு தன் பிரசங்க வாக்கியத்தைத் தொடர்ந்து சொன்னது:

யோபு 29:2 சென்றுபோன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றிவந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும்.

யோபு 29:3 அப்பொழுது அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்.

யோபு 29:4 தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின்மேல் இருந்தது.

யோபு 29:5 அப்பொழுது சர்வவல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள்.

யோபு 29:6 என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல ஓடி வந்தது; அந்தச் செல்வநாட்களின் சீர் இப்போதிருந்தால் நலமாயிருக்கும்.

"பின்னும் யோபு" - யோபு 28 ஆம் அதிகாரம் முழுவதையும் யோபுவே பேசினான். அதைச் சோப்பார் பேசவில்லை.

யோபுவினுடைய புலம்பலின் இரண்டு காலங்கள்

1. சென்றுபோன காலம்
2. இப்போதுள்ள காலம்

2. கடந்தகால ஆசீர்வாதம். (யோபு 29:7-11)
3. கடந்தகால சுபாவம் (யோபு 29:12-17)
4. கடந்தகால பாதுகாப்பு (யோபு 29:18-20)
5. கடந்தகால மேன்மை (யோபு 29:21-25)

இப்போதுள்ள காலத்தைப் பற்றி யோபுவின் புலம்பல் (யோபு 30)

1. குற்றம் சுமத்துகிறவர்களின் சுபாவம். (யோபு 29:1-8)
2. குற்றம் சுமத்துகிறவர்களின் நடத்தை (யோபு 29:9-14)
3. இப்போதுள்ள பாடுகள் (யோபு 29:15-18)
4. தேவனுக்கு எதிரான குற்றச்சாட்டு (யோபு 29:19-24)
5. இப்போதுள்ள வேதனைகள் (யோபு 29:25-31)

கடந்த ஐசுவரியம்

1. சென்றுபோன மாதங்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும். (யோபு 29:2)
2. தேவன் என்னைக் காப்பாற்றிவந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும்.
3. அப்பொழுது அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது. (யோபு 29:3)
4. அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்.
5. அப்பொழுது நான் என் வாலிப நாட்களில் இருந்தேன்.
6. தேவனுடைய இரகசியச்செயல் என் கூடாரத்தின்மேல் இருந்தது. (யோபு 29:4)

யோபு - தொகுப்புரை

29 அதிகாரம்

7. அப்பொழுது சர்வவல்லவர் என்னோடிருந்தார். (யோபு 29:5)

8. என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள்.

9. என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன். (யோபு 29:6)

10. கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல ஓடி வந்தது.

யோபுவின் சுயவிளக்கம்

1. கடந்தகால ஆசீர்வாதம் (யோபு 29)

2. நிகழ்கால பாடுகள் (யோபு 30)

3. சுயநீதி (யோபு 31)

"என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்" - யோபுவின் வளமான வாழ்வு இங்கு அடையாளமாகக் கூறப்படுகிறது.

"கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல ஓடி வந்தது" - இது எண்ணெய் ஆட்டும் கல்செக்கைக் குறிப்பிடும் வாக்கியம்(உபா 32:13; எசே 32:14).

(ஆ) யோபுவின் மகிமையின் எட்டு அம்சங்கள்

யோபு 29:7 நான் பட்டணவீதியால் வாசலுக்குள் புறப்பட்டுப்போய், வீதியில் என் ஆசனத்தைப் போடும்போது,

யோபு 29:8 வாலிபர் என்னைக் கண்டு ஒளித்துக் கொள்வார்கள்; முதியோர் எழுந்திருந்து நிற்பார்கள்.

யோபு 29:9 பிரபுக்கள் பேசுகிறதை நிறுத்தி, கையினால் தங்கள் வாயைப் பொத்திக் கொள்வார்கள்.

யோபு 29:10 பெரியோரின் சத்தம் அடங்கி, அவர்கள் நாக்கு அவர்கள்மேல் வாயோடு ஒட்டிக்கொள்ளும்.

யோபு 29:11 என்னைக் கேட்ட காது என்னைப் பாக்கியவான் என்றது; என்னைக் கண்ட கண் எனக்குச் சாட்சியிட்டது.

யோபுவின் கடந்தகால ஆசீர்வாதம்

1. நான் பட்டணவீதியால் வாசலுக்குள் புறப்பட்டுப்போகும்போது எனக்கு மேன்மை உண்டாயிருந்தது.

2. வீதியில் என் ஆசனத்தைப் போடும்போது, எனக்கு மேன்மை உண்டாயிருந்தது.

3. வாலிபர் என்னைக் கண்டு ஒளித்துக் கொள்வார்கள். (யோபு 29:8).

4. முதியோர் எழுந்திருந்து நிற்பார்கள்.

5. பிரபுக்கள் பேசுகிறதை நிறுத்தி, கையினால் தங்கள் வாயைப் பொத்திக் கொள்வார்கள். (யோபு 29:9).

6. பெரியோரின் சத்தம் அடங்கி, அவர்கள் நாக்கு அவர்கள்மேல் வாயோடு ஒட்டிக் கொள்ளும். (யோபு 29:10).

7. என் சத்தத்தைக் கேட்ட அவர்கள் என்னை ஆசீர்வதித்தார்கள். (யோபு 29:11).

8. அவர்கள் என்னைக் கண்டபோது மிகுந்த மரியாதையோடு எனக்குச் சாட்சி பகர்ந்தார்கள்.

(இ) யோபுவின் சுபாவத்தின் பன்னிரெண்டு அம்சங்கள்

யோபு 29:12 முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன்.

யோபு 29:13 கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினேன்.

யோபு 29:14 நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாய் இருந்தது.

யோபு - தொகுப்புரை

29 அதிகாரம்

யோபு 29:15 நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்.

யோபு 29:16 நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து, நான் அறியாத வழக்கை ஆராய்ந்துபார்த்தேன்.

யோபு 29:17 நான் அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்து, அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து பிடுங்கினேன்.

யோபுவின் சுபாவம்

1. முறையிடுகிற ஏழையை இரட்சித்தான்.
2. திக்கற்ற பிள்ளையை இரட்சித்தான்.
3. உதவியற்றவனை இரட்சித்தான்.
4. கெட்டுப்போக இருந்தவனை ஆசீர்வதித்தான். (யோபு 29:13).
5. விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினான்.
6. நீதியைத் தரித்துக்கொண்டான். (யோபு 29:14).
7. அவனுடைய நியாயம் அவனுக்குச் சால்வையும் பாகையுமாய் இருந்தது.
8. அவன் குருடனுக்குக் கண்ணாக இருந்தான். (யோபு 29:15).
9. சப்பாணிக்குக் காலாகஇருந்தான்.
10. எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்தான். (யோபு 29:16).
11. அவன் அறியாத வழக்கை ஆராய்ந்து பார்த்தான்.
12. அவன் அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்து, அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து பிடுங்கினான். (யோபு 29:17).

(ஈ) யோபுவின் பாதுகாப்பின் ஆறு அம்சங்கள்

யோபு 29:18 என் கூட்டிலே நான் ஜீவித்துப் போவேன்; என் நாட்களை மணலத்தனையாய்ப் பெருகப் பண்ணுவேன் என்றேன்.

யோபு 29:19 என் வேர் தண்ணீர்களின் ஓரமாய்ப் படர்ந்தது; என் கிளையின்மேல் பனி இரா முழுவதும் தங்கியிருந்தது.

யோபு 29:20 என் மகிமை என்னில் செழித்தோங்கி, என் கையிலுள்ள என் வில் புதுப்பெலன் கொண்டது.

"என் நாட்களை மணலத்தனையாய்ப் பெருகப்பண்ணுவேன்" - நீடித்த வாழ்வு என்னும் பொருளைத் தரும் வாக்கியம். யோபு 140 வருஷம் உயிரோடு இருந்தான். (யோபு 42:16) இஸ்மவேல், யோசேப்பு, மோசே, யோசுவா மேலும் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் அநேகரைவிட யோபு பல வருஷங்கள் அதிகமாகவே ஜீவித்திருக்கிறான்.

யோபுவின் கடந்தகால பாதுகாப்பு

1. என் கூட்டிலே நான் ஜீவித்துப் போவேன் என்றேன்.
2. என் நாட்களை மணலத்தனையாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றேன்.
3. என் வேர் தண்ணீர்களின் ஓரமாய்ப் படர்ந்தது. (யோபு 29:19).
4. என் கிளையின்மேல் பனி இரா முழுவதும் தங்கியிருந்தது.
5. என் மகிமை என்னில் செழித்தோங்கியிருந்தது.(யோபு 29:20).
6. என் கையிலுள்ள என் வில் புதுப்பெலன் கொண்டது.

"என் வேர் தண்ணீர்களின் ஓரமாய்ப் படர்ந்தது" - ஐசுவரியத்தையும், செழுமையையும் குறிக்கும் வாக்கியம். (சங் 1; எரே 17:6-8).

யோபு - தொகுப்புரை

29 அதிகாரம்

"என் கிளையின்மேல் பனி இரா முழுவதும் தங்கியிருந்தது" - பனி என்னும் வார்த்தை ஐசுவரியத்திற்கும், ஆசீர்வாதத்திற்கும் அடையாளமாகும். (ஆதி 27:28,39; உபா 32:2; உபா 33:28; சங் 133:3; நீதி 19:12; ஓசி 14:5; மீகா 5:7).

"என் மகிமை என்னில் செழித்தோங்கி" - யோபுவின் வாலிபம், பெலன் ஆகியவற்றைக் குறிக்கும் வாக்கியம்.

"என் வில் புதுப்பெலன் கொண்டது" - யோபுவின் வீரத்தையும், பெலனையும் குறிக்கும் வாக்கியம். (ஆதி 49:24).

(உ) யோபுவின் மகிமையின் பன்னிரெண்டு அம்சங்கள்

யோபு 29:21 எனக்குச் செவிகொடுத்துக் காத்திருந்தார்கள்; என் ஆலோசனையைக் கேட்டு மவுனமாயிருந்தார்கள்.

யோபு 29:22 என் பேச்சுக்குப் பேசாமலிருந்தார்கள்; என் வசனம் அவர்கள்மேல் துளிதுளியாய் விழுந்தது.

யோபு 29:23 மழைக்குக் காத்திருக்கிறது போல் எனக்குக் காத்திருந்து, பின்மாரிக்கு ஆசையுள்ளவர்கள்போல் தங்கள் வாயை ஆவென்று திறந்திருந்தார்கள்.

யோபு 29:24 நான் அவர்களைப் பார்த்து நகைக்கும்போது, அவர்கள் துணிகரங் கொள்ளவில்லை; என் முகக்களையை மாறச்செய்யவும் இல்லை.

யோபு 29:25 அவர்கள் வழியேபோக எனக்குச் சித்தமாகும்போது, நான் தலைவனாய் உட்கார்ந்து, இராணுவத்துக்குள் ராஜாவைப்போலும், துக்கித்தவர்களைத் தேற்றரவு பண்ணுகிறவனைப் போலும் இருந்தேன்.

யோபுவின் கடந்தகால மேன்மை

1. மனுஷர் எனக்குச் செவிகொடுத்துக் காத்திருந்தார்கள்.
2. என் ஆலோசனையைக் கேட்டு மவுனமாயிருந்தார்கள்.
3. என் பேச்சுக்குப் பேசாமலிருந்தார்கள். (யோபு 29:22).
4. என் வசனம் அவர்கள்மேல் துளிதுளியாய் விழுந்தது.
5. என் வார்த்தைகளை இறுதி வார்த்தையாக அங்கிகரித்தார்கள்.
6. மழைக்குக் காத்திருக்கிறது போல் எனக்குக் காத்திருந்தார்கள். (யோபு 29:23).
7. பின்மாரிக்கு ஆசையுள்ளவர்கள்போல் தங்கள் வாயை ஆவென்று திறந்திருந்தார்கள்.
8. நான் அவர்களைப் பார்த்து நகைக்கும் போது, அவர்கள் துணிகரங் கொள்ளவில்லை (யோபு 29:24).
9. அவர்கள் என் முகக்களையை மாறச் செய்யவில்லை.
10. நான் அவர்கள் வழியைத் தீர்மானம் பண்ணினேன். (யோபு 29:25).
11. இராணுவத்துக்குள் ராஜாவைப்போல் இருந்தேன்.
12. துக்கித்தவர்களைத் தேற்றரவு பண்ணுகிறவனைப் போல் இருந்தேன்.

யோபு - தொகுப்புரை

30 அதிகாரம்

(7) புலம்பல் - யோபுவின் தற்காலம்

(அ) யோபுவைப் பரியாசம் பண்ணுகிறவர்களின் குணாதிசயம்

யோபு 30:1 இப்போதோ என்னிலும் இளவயதானவர்கள் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள்; இவர்களுடைய பிதாக்களை நான் என் மந்தையைக் காக்கும் நாய்களோடே வைக்கவுங்கூட வெட்கப்பட்டிருப்பேன்.

யோபு 30:2 விருத்தாப்பியத்தினாலே பெலனற்றுப்போன அவர்கள் கைகளினால் எனக்கு என்ன உதவியாயிருந்தது.

யோபு 30:3 குறைச்சலினாலும் பசியினாலும் அவர்கள் வாடி, வெகுநாளாய்ப் பாழும் வெறுமையுமான அந்தரவெளிக்கு ஓடிப்போய்,

யோபு 30:4 செடிகளுக்குள் இருக்கிற தழைகளைப் பிடுங்குவார்கள்; காட்டுப்பூண்டுகளின் கிழங்குகள் அவர்களுக்கு ஆகாரமாயிருந்தது.

யோபு 30:5 அவர்கள் மனுஷரின் நடுவிலிருந்து துரத்தப்பட்டார்கள்; கள்ளனைத் துரத்துகிறதுபோல்: கள்ளன் கள்ளன் என்று அவர்களைத் துரத்தி விட்டார்கள்.

யோபு 30:6 அவர்கள் பள்ளத்தாக்குகளின் வெடிப்புகளிலும், பூமியின் கெபிகளிலும், கன்மலைகளிலும் போய் குடியிருந்தார்கள்.

யோபு 30:7 செடிகளுக்குள்ளிருந்து கதறி, காஞ்சொறிகளின்கீழ் ஒதுங்கினார்கள்.

யோபு 30:8 அவர்கள் மூடரின் மக்களும், நீசரின் பிள்ளைகளும், தேசத்திலிருந்து துரத்துண்டவர் களுமாய் இருந்தார்கள்.

"இப்போதோ" - யோபு தன்னுடைய கடந்தகால ஆசீர்வாதம், மேன்மை, பாதுகாப்பு, மகிமை ஆகியவற்றைப் பற்றிக் கூறிய பின்பு தற்போது அவனுக்கு வந்திருக்கும் உபத்திரவம், பாடுகள், புறக்கணிப்புக்கள், சரீரத்திலும், ஆத்துமாவிலும் உண்டாயிருக்கும் துன்பங்கள் ஆகியவற்றை விவரித்துக் கூறுகிறான். (யோபு 30).

தன்னைப் பரியாசம் பண்ணுபவர்களைப் பற்றி யோபு கூறும் வாக்கியம்

1. என்னிலும் இளவயதானவர்கள் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள் (யோபு 30:1).
2. இவர்களுடைய பிதாக்களை நான் என் மந்தையைக் காக்கும் நாய்களோடே வைக்கவுங்கூட வெட்கப்பட்டிருப்பேன்.
3. அவர்கள் கைகளினால் எனக்கு உதவவில்லை. (யோபு 30:2).
4. விருத்தாப்பியத்தினாலே பெலனற்றுப் போன என்னை அவர்கள் மதிக்கவில்லை.
5. அவர்கள் அந்தரவெளிக்கு ஓடிப் போனவர்கள். (யோபு 30:3).
6. காட்டுப்பூண்டுகளின் கிழங்குகள் அவர்களுக்கு ஆகாரமாயிருந்தது. (யோபு 30:4).
7. செடிகளுக்குள் இருக்கிற தழைகளைப் பிடுங்கி புசித்தார்கள்.
8. அவர்கள் மனுஷரின் நடுவிலிருந்து துரத்தப்பட்டார்கள். (யோபு 30:5).
9. அவர்கள் பள்ளத்தாக்குகளின் வெடிப்புகளிலும், பூமியின் கெபிகளிலும், கன்மலைகளிலும் போய் குடியிருந்தார்கள். (யோபு 30:6).
10. செடிகளுக்குள்ளிருந்து கதறி, காஞ்சொறிகளின்கீழ் ஒதுங்கினார்கள். (யோபு 30:7).
11. அவர்கள் மூடரின் மக்களும், நீசரின் பிள்ளைகளுமாயிருந்தார்கள். (யோபு 30:8).

30 அதிகாரம்

12. தேசத்திலிருந்து துரத்துண்டவர்களாய் இருந்தார்கள்.

"காட்டுப்பூண்டுகளின் கிழங்குகள் அவர்களுக்கு ஆகாரமாயிருந்தது" - அரபியாவின் பாலைவனங்களில் காணப்படும் கிழங்கு வகை. சில சமயங்களில் இவை உணவாகவும் பயன்படுகிறது. (2 இராஜா 4:38-39; ஆமோ 7:14; லூக்கா 15:16).

(ஆ) யோபுவைப் பரியாசம் பண்ணுகிறவர்களின் நடத்தை

யோபு 30:9 ஆனாலும் இப்போது நான் அவர்களுக்குப் பாட்டும் பழமொழியும் ஆனேன்.

யோபு 30:10 என்னை அருவருத்து, எனக்குத் தூரமாகி, என் முகத்துக்கு முன்பாகத் துப்பக் கூசாதிருக்கிறார்கள்.

யோபு 30:11 நான் கட்டின கட்டை அவர் அவிழ்த்து, என்னைச் சிறுமைப்படுத்தின படியினால், அவர்களும் கடிவாளத்தை என் முகத்துக்கு முன்பாக உதறி விட்டார்கள்.

யோபு 30:12 வலதுபாரிசத்தில் வாலிபர் எழும்பி, என் கால்களைத் தவறிவிழப் பண்ணி, தங்கள் கேடான வழிகளை எனக்கு நேராக ஆயத்தப்படுத்துகிறார்கள்.

யோபு 30:13 என் பாதையைக் கெடுத்து, என் ஆபத்தை வர்த்திக்கப் பண்ணுகிறார்கள்; அதற்கு அவர்களுக்கு ஒத்தாசை பண்ணுகிறவர்கள் தேவையில்லை.

யோபு 30:14 பெரிதான திறப்புண்டாக்கி தாங்கள் கெடுத்த வழியில் புரண்டு வருகிறார்கள்.

யோபுவின் உபத்திரவம்

1. நான் அவர்களுக்குப் பாட்டானேன்.
2. நான் அவர்களுக்குப் பழமொழியும் ஆனேன்.
3. என்னை அருவருத்தார்கள். (யோபு 30:10).
4. எனக்குத் தூரமானார்கள்.
5. என் முகத்துக்கு முன்பாகத் துப்பக் கூசாதிருக்கிறார்கள்.
6. நான் கட்டின கட்டை அவர்கள் அவிழ்த்தார்கள். (யோபு 30:11).
7. வாலிபர் எனக்கு எதிராக எழும்பினார்கள். (யோபு 30:12).
8. என் கால்களைத் தவறிவிழப் பண்ணினார்கள்.
9. தங்கள் கேடான வழிகளை எனக்கு நேராக ஆயத்தப்படுத்துகிறார்கள்.
10. என் பாதையைக் கெடுக்கிறார்கள். (யோபு 30:13).
11. என் ஆபத்தை வர்த்திக்கப் பண்ணுகிறார்கள்.
12. அவர்களுக்கு ஒத்தாசை பண்ணுகிறவர்கள் தேவையில்லை.
13. தாங்கள் கெடுத்த வழியில் என்மேல் வெள்ளம்போல புரண்டு வருகிறார்கள். (யோபு 30:14).

தேவனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்

1. நான் கட்டின கட்டை அவர் அவிழ்த்தார்.
2. என்னைச் சிறுமைப்படுத்தினார்.

இவ்விரண்டு குற்றச்சாட்டுகளும் தவறானவை. ஏனெனில் யோபுவின் இந்த நிலைமைக்குச் சாத்தானே காரணம். (யோபு 1:10-19; யோபு 2:1-8).

யோபு - தொகுப்புரை

30 அதிகாரம்

"வலதுபாரிசத்தில் வாலிபர் எழும்பி" - கிழக்கு தேசத்தில் வாலிபர் மிகுந்த கட்டுப்பாடுகளோடு வளர்க்கப்படுவார்கள். வயதில் பெரியவர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுப்பார்கள். வாலிபர் யோபுவுக்கு எதிராக எழும்பியிருக்கிறார்கள் என்றால் இதை அவர்களுடைய பெற்றோரின் அனுமதியோடு செய்கிறார்கள் என்று பொருள். முழு சமுதாயமும் யோபுவைப் புறக்கணித்து விட்டது. யோபுவிற்கு ஒத்தாசை தேவைப்படும் போது ஒருவரும் உதவி புரிய முன்வரவில்லை.

(இ) யோபுவின் பாடுகள் - சரீரமும், ஆத்துமாவும் - (வசனம் 25-31)

யோபு 30:15 பயங்கரங்கள் என்மேல் திரும்பிவருகிறது, அவைகள் காற்றைப் போல என் ஆத்துமாவைப் பின் தொடருகிறது; என் சுகவாழ்வு ஒரு மேகத்தைப்போல் கடந்துபோயிற்று.

யோபு 30:16 ஆகையால் இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்துபோயிற்று; உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது.

யோபு 30:17 இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது.

யோபு 30:18 நோயின் உக்கிரத்தினால் என் உடுப்பு வேறுபட்டுப்போயிற்று; அது என் அங்கியின் கழுத்துப்பட்டையைப் போல, என்னைச் சுற்றிக்கொண்டது.

யோபுவின் பாடுகள்

1. பயங்கரங்கள் என்மேல் திரும்பிவருகிறது.
2. அவைகள் காற்றைப்போல என் ஆத்துமாவைப் பின்தொடருகிறது.
3. என் சுகவாழ்வு ஒரு மேகத்தைப்போல் கடந்துபோயிற்று.
4. என் ஆத்துமா என்னில் முறிந்துபோயிற்று. (யோபு 30:16).
5. உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது.
6. இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டது. (யோபு 30:17).
7. என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது.
8. நோயின் உக்கிரத்தினால் என் உடுப்பு வேறுபட்டுப்போயிற்று (யோபு 30:18).

(ஈ) தனக்குப் பாடுகளை உண்டாக்கியதற்காக யோபு தேவனைக் குற்றப்படுத்துவதின் பன்னிரெண்டு அம்சங்கள்

யோபு 30:19 சேற்றிலே தள்ளப்பட்டேன்; தூளுக்கும் சாம்பலுக்கும் ஒப்பானேன்;

யோபு 30:20 உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறுஉத்தரவு கொடாதிருக்கிறீர்; கெஞ்சிநிற்கிறேன், என்மேல் பராமுகமாயிருக்கிறீர்.

யோபு 30:21 என்மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.

யோபு 30:22 நீர் என்னைத் தூக்கி, என்னைக் காற்றிலே பறக்கவிட்டு, என்னைப் பயத்தினால் உருகிப்போகப் பண்ணுகிறீர்.

யோபு 30:23 சகல ஜீவாத்துமாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாவரமாகிய மரணத்துக்கு என்னை ஒப்புக்கொடுப்பீர் என்று அறிவேன்.

யோபு 30:24 ஆனாலும் நான் யாதொருவனை அவன் ஆபத்திலே தவிக்கப்பண்ணினதும்,

30 அதிகாரம்

யோபு தேவனுக்கு எதிராகக் கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. சேற்றில் தள்ளப்பட்டேன்.
2. தூளுக்கும் சாம்பலுக்கும் ஒப்பானேன்.
3. உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறுஉத்தரவு கொடாதிருக்கிறீர். (யோபு 30:20).
4. கெஞ்சிநிற்கிறேன், என்மேல் பராமுகமாயிருக்கிறீர்.
5. என்மேல் கொடூரமுள்ளவராக மாறினீர். (யோபு 30:21).
6. உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.
7. நீர் என்னைத் தூக்கினீர். (யோபு 30:22).
8. நீர் என்னைக் காற்றிலே பறக்கவிட்டீர். (யோபு 30:22).
9. என்னைப் பயத்தினால் உருகிப்போகப் பண்ணுகிறீர்.
10. மரணத்துக்கு என்னை ஒப்புக்கொடுப்பீர். (யோபு 30:23).
11. சகல ஜீவாத்துமாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாவரத்திற்கு என்னை ஒப்புக்கொடுப்பீர்.
12. என் மனுவுக்கு இடங்கொடாமல், எனக்கு விரோதமாய்த் தமது கையை நீட்டுகிறீர். (யோபு 30:25).

"சகல ஜீவாத்துமாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாவரமாகிய மரணம்" - ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபி 9:27)

(உ) யோபுவின் பாடுகள் - சரீரமும், ஆத்துமாவும் - (வசனம் 15-18)

யோபு 30:25 துன்னாளைக் கண்டவனுக்காக நான் அழாதிருந்தும், எளியவனுக்காக என் ஆத்துமா வியா குலப்படாதிருந்ததும் உண்டானால், அவர் என் மனுவுக்கு இடங்கொடாமல், எனக்கு விரோதமாய்த் தமது கையை நீட்டுவாராகயோபு 30:26 நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது.

யோபு 30:27 என் குடல்கள் கொதித்து, அமராதிருக்கிறது; உபத்திரவநாட்கள் என்மேல் வந்தது.

யோபு 30:28 வெயில் படாதிருந்தும், நான் கறுகறுத்துத் திரிகிறேன்; நான் சபையிலிருந்து எழுந்திருக்கும்போது அலறுகிறேன்.

யோபு 30:29 நான் மலைப்பாம்புகளுக்குச் சகோதரனும், கோட்டான்களுக்குத் தோழனுமானேன்.

யோபு 30:30 என் தோல் என்மேல் கறுத்துப் போயிற்று; என் எலும்புகள் உஷ்ணத்தினால் காய்ந்துபோயிற்று.

யோபு 30:31 என் சுரமண்டலம் புலம்பலாகவும், என் கின்னரம் அழுகிறவர்களின் ஓலமாகவும் மாறின.

"எனக்கு விரோதமாய்த் தமது கையை நீட்டுவாராக" - இந்த வாக்கியத்திற்கு பலவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். யோபு கர்த்தருடைய சமுகத்தில் பலமுறை விண்ணப்பம் பண்ணியிருக்கிறான். ஆனாலும் கர்த்தர் தனது ஜெபத்திற்குப் பதில் கொடாமல் தன்னை மரிப்பதற்கு அனுமதித்து விட்டார் என்று யோபு கர்த்தர்மீது குற்றம் சுமத்துகிறான்.

யோபுவின் பாடுகள்

1. நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது (யோபு 30:25-26).
2. வெளிச்சத்தை வரப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. (யோபு 30:26).
3. என் குடல்கள் கொதித்து, அமராதிருக்கிறது (யோபு 30:27).
4. உபத்திரவநாட்கள் என்மேல் வந்தது.

யோபு - தொகுப்புரை

30 அதிகாரம்

5. வெயில் படாதிருந்தும், நான் கறுகறுத்துத் திரிகிறேன். (யோபு 30:28).

6. நான் சபையிலிருந்து எழுந்திருக்கும்போது அலறுகிறேன்.

7. நான் மலைப்பாம்புகளுக்குச் சகோதரனாக இருக்கிறேன். (யோபு 30:29).

8. கோட்டான்களுக்குத் தோழனுமானேன்.

9. என் தோல் என்மேல் கறுத்துப் போயிற்று (யோபு 30:30).

10. என் எலும்புகள் உஷ்ணத்தினால் காய்ந்துபோயிற்று.

11. என் சுரமண்டலம் புலம்பலாயிற்று. (யோபு 30:31).

12. என் கின்னரம் அழுகிறவர்களின் ஓலமாயிற்று.

"உபத்திரவநாட்கள்" - எத்தனை நாட்களுக்கு யோபுவிற்கு உபத்திரவம் வந்தது என்று கூறப்படவில்லை. பலமாதங்கள் தான் உபத்திரவப்படுவதாக யோபு கூறுகிறான். (யோபு 7:3)

"நான் சபையிலிருந்து எழுந்திருக்கும்போது அலறுகிறேன்" - இதற்கு முன்பு சபையில் யோபுவிற்கு மிகுந்த மரியாதை இருந்தது. யோபுவின் ஆலோசனையை எல்லோரும் கேட்டு அதன்படி நடந்தார்கள். (யோபு 29:8-11). ஆனால் இப்போதோ பாடுகளின் மத்தியில் யோபு எழுந்திருந்து அலறினாலும் அவன்மீது ஒருவரும் இரக்கம் காண்பிக்கவில்லை.

"என் சுரமண்டலம்" - இது மெய்யான கீதவாத்தியமாக இருக்கவேண்டும். யோபுவின் இசையும், பாடலும் முடிந்து போயிற்று. நோவாவின் ஜலப்பிரளயத்திற்கு முன்பாகவே யூபால் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனாக இருந்தான். (ஆதி 4:21).

யோபு - தொகுப்புரை

31 அதிகாரம்

(8) யோபுவின் நேர்மையான நடத்தையின் பன்னிரெண்டு அம்சங்கள் - *(1:20)*

(அ) ஸ்திரீகள்மீது மோகமாக இருக்க வில்லை

யோபு 31:1 என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி?

யோபு 31:2 அப்பொழுது உன்னதங்களிலிருந்து தேவன் அளிக்கும்பங்கும்; உன்னதத்திலிருந்து சர்வவல்லவர் கொடுக்கும் சுதந்தரமும் கிடைக்குமோ?

யோபு 31:3 மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக் காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும்.

யோபு 31:4 அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?

"என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான்" - ஸ்திரீகளை இச்சையோடு பார்க்கக்கூடாது என்றும், கன்னிரை வஞ்சிக்கக்கூடாது என்றும் யோபு தன்னுடைய கண்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். (நீதி 6:25; மத் 5:28).

யோபுவின் குற்றமற்ற குணம்

1. ஸ்திரீகளிடத்தில் இச்சையாய் இருக்க வில்லை. (யோபு 31:1-4).
2. மாயையில் நடக்கவில்லை. (யோபு 31:5-6)
3. கண்ணியமில்லாமல் நடக்கவில்லை. (யோபு 31:7-8)
4. வேசித்தனம் பண்ணவில்லை. (யோபு 31:9-12).
5. அநியாயம் செய்யவில்லை. (யோபு 31:13-15).
6. மனிதாபிமானம் இல்லாமல் நடக்கவில்லை. (யோபு 31:16-23).
7. பேராசைப்படவில்லை. (யோபு 31:24-25)
8. விக்கிரகாராதனை செய்யவில்லை. (யோபு 31:26-28).
9. பகைஞருடைய ஆபத்தில் களிகூரவில்லை. (யோபு 31:29-31).
10. விருந்தினரை உபசரியாமல் இருக்க வில்லை. (யோபு 31:32).
11. மாய்மாலம் பண்ணவில்லை. (யோபு 31:33-37).
12. வஞ்சிக்கவில்லை. (யோபு 31:38-40).

(ஆ) யாரையும் ஏமாற்ற வில்லை

யோபு 31:5 நான் மாயையிலே நடந்தேனோ, என் கால் கபடுசெய்யத் தீவிரித்ததோ என்று,

யோபு 31:6 சுமுத்திரையான தராசிலே தேவன் என்னை நிறுத்து, என் உத்தமத்தை அறிவாராக.

"நான் மாயையிலே நடந்தேனோ" - யோபு 31 ஆவது அதிகாரத்தில் தன் சிநேகிதருக்காக யோபு கூறிய கடைசி பிரதியுத்தரம் இடம் பெற்றிருக்கிறது. தன்னிடத்தில் குற்றம் எதுவுமில்லையென்று யோபு நிரூபிக்க விரும்புகிறான். ஸ்திரீகளிடத்தில் தான் இச்சையோடு பழகவில்லை என்றும் (யோபு 31:1-4), மாயையாக நடந்து யாரையும் ஏமாற்றவில்லை என்றும் யோபு அறிவிக்கிறான். (யோபு 31:5-6). கர்த்தர் தன்னை ஒரு சுமுத்திரையான தராசிலே நிறுத்துப் பார்த்தால் தான் குற்றமற்ற உத்தமன் என்பது விளங்கும் என்று அறிவிக்கிறான். (யோபு 31:6)

31 அதிகாரம்

(இ) கண்ணியமில்லாமல் நடந்து கொள்ள வில்லை

யோபு 31:7 என் நடைகள் வழியைவிட்டு விலகினதும், என் இருதயம் என் கண்களைப் பின்தொடர்ந்து, ஏதாகிலும் ஒரு மாசு என் கைகளில் ஒட்டிக் கொண்டதும் உண்டானால்,

யோபு 31:8 அப்பொழுது நான் விதைத்ததை வேறொருவன் புசிப்பானாக; என் பயிர்கள் வேரற்றுப் போகக்கடவது.

யோபு கண்ணியமற்று நடக்கவில்லை

1. யோபுவின் நடைகள் வழியைவிட்டு விலகினதில்லை.

2. அவன் இருதயம் அவன் கண்களைப் பின்தொடரவில்லை.

3. ஏதாகிலும் ஒரு மாசு அவன் கைகளில் ஒட்டிக்கொண்டதில்லை.

யோபு பிறரை ஒடுக்கி செல்வந்தனானதாக அவனுடைய சிநேகிதர் யோபுவின்மீது குற்றம் கூறினார்கள். (யோபு 20:10,18-20) தன்னிடத்தில் ஏதாவது குற்றம் காணப்படுமானால் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க யோபு ஆயத்தமாக இருக்கிறான். (யோபு 31:7-8).

யோபு பாவம் செய்திருந்தால்..... தண்டனைகள்

1. நான் விதைத்ததை வேறொருவன் புசிப்பானாக.

2. என் பயிர்கள் வேரற்றுப்போகக்கடவது.

(ஈ) விபச்சாரம் செய்யவில்லை

யோபு 31:9 என் மனம் யாதொரு ஸ்திரீயின் மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப் பார்த்ததுண்டானால்,

யோபு 31:10 அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக; வேற்றுமனிதர் அவள்மேல் சாய்வார்களாக.

யோபு 31:11 அது தோஷம், அது நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படும் அக்கிரமமே.

யோபு 31:12 அது பாதாளபரியந்தம் பட்சிக்கும் அக்கினியாய் என் சம்பத்தையெல்லாம் நிர்மூலமாக்கும்.

யோபு வேசித்தனம் பண்ணவில்லை

1. யோபுவின் மனம் யாதொரு ஸ்திரீயின் மேல் மயங்கவில்லை.

2. அயலானுடைய வாசலை அவன் எட்டிப்பார்க்கவில்லை.

யோபு வேசித்தனம் செய்திருந்தால்..... தண்டனைகள்

1. என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக.

2. வேற்றுமனிதர் அவள்மேல் சாய்வார்களாக. (யோபு 31:10)

"பாதாளபரியந்தம் பட்சிக்கும் அக்கினி" - வேசித்தனம் ஓர் அக்கினியைப் போன்றது. அது அவனையும், அவனுடைய ஐசுவரியத்தையும் அழித்துப்போடும். வேதவாக்கியத்தின் பிரகாரமாக வேசித்தனம் செய்கிறவர்களுக்குச் சாபம் நிச்சயமாகவே வரும்.

(உ) அநீதி இழைக்கவில்லை

யோபு 31:13 என் வேலைக்காரனானாலும், என் வேலைக்காரியானாலும், என்னோடு வழக்காடும்போது, அவர்கள் நியாயத்தை நான் அசட்டை பண்ணியிருந்தால்,

யோபு 31:14 தேவன் எழும்பும்போது, நான் என்னசெய்வேன்; அவர் விசாரிக்கும் போது, நான் அவருக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்.

யோபு - தொகுப்புரை

31 அதிகாரம்

யோபு 31:15 தாயின் கர்ப்பத்தில் என்னை உண்டுபண்ணினவர் அவனையும் உண்டுபண்ணினார் அல்லவோ? ஒரேவிதமான கர்ப்பத்தில் எங்களை உருவாக்கினார் அல்லவோ?

யோபு நீதியுள்ளவன்

1. தேவனுக்குப் பயந்திருந்தான்.
2. யோபு அநியாயம் செய்திருந்தால் தேவனுக்கு முன்பாக அவனால் மறுஉத்தரவு சொல்ல முடியாது.
3. கர்த்தர் எல்லோரையும் சிருஷ்டித்திருக்கிறார். ஆகையினால் மற்றவர்களுக்கு அநியாயம் செய்ய யோபுவிற்கு உரிமையில்லை. (யோபு 31:15)

(ஊ) மனுஷத்தன்மை இல்லாமல் நடந்து கொள்ளவில்லை

யோபு 31:16 எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப் போகப்பண்ணி,

யோபு 31:17 தாய்தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல், நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ?

யோபு 31:18 என் சிறுவயதுமுதல் அவன் தகப்பனிடத்தில் வளர்வதுபோல என்னோடே வளர்ந்தான்; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகு கொடுத்து நடத்தினேன்.

யோபு 31:19 ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்து போகிறதையும், ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதையும் நான் கண்டபோது,

யோபு 31:20 அவன் என் ஆட்டுமயிர்க் கம்பளியினாலே அனல் கொண்டதினால், அவன் இடை என்னைப் புகழாதிருந்தும்,

யோபு 31:21 ஒலிமுகவாசலில் எனக்குச் செல்வாக்கு உண்டென்று நான் கண்டு, திக்கற்றவனுக்கு விரோதமாய் என் கையை நீட்டினதும் உண்டானால்,

யோபு 31:22 என் கைப்பட்டை தோளிலிருந்து சரிந்து, என் புயத்து எலும்பு முறிந்துபோவதாக.

யோபு 31:23 தேவன் ஆக்கினையிடுவார் என்றும், அவருடைய மகத்துவத்தை உத்தரிக்கக்கூடாது என்றும், எனக்குப் பயங்கரமாயிருந்தது.

யோபுவின் இரக்கக்குணம்

1. எளியவர்கள் வாஞ்சித்ததை அவன் கொடுத்தான்.
2. விதவையின் கண்களைப் பூத்துப் போகப்பண்ணவில்லை.
3. அவன் ஒருவனாய்ச் சாப்பிடவில்லை. (யோபு 31:17)
4. தாய்தகப்பனில்லாத பிள்ளை அவன் ஆகாரத்தில் சாப்பிட்டார்கள்.
5. யோபுவின் சிறுவயதுமுதல் அவன் தகப்பனிடத்தில் வளர்வதுபோல யோபுவோடே வளர்ந்தான் (யோபு 31:18)
6. யோபு தன் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகு கொடுத்து நடத்தினான்.
7. ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்து போகிறதைக் கண்டபோது அவனுக்கு உதவி புரிந்தான். (யோபு 31:19)
8. ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதைக் கண்ட போது அவனுக்கு உதவி புரிந்தான்.
9. அவன் யோபுவின் ஆட்டுமயிர்க் கம்பளியினாலே அனல்கொண்டான். (யோபு 31:20)

யோபு - தொகுப்புரை

31 அதிகாரம்

10. அவன் இடை யோபுவைப் புகழவில்லை.

11. திக்கற்றவனுக்கு விரோதமாய் யோபு தன் கையை நீட்டவில்லை. (யோபு 31:21)

12. ஒலிமுகவாசலில் தனக்குச் செல்வாக்கு உண்டென்று யோபு கண்டு இறுமாப்போடு இருக்கவில்லை.

"என் புயத்து எலும்பு முறிந்துபோவதாக" - யோபு 31:16-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மனிதாபிமானம் அற்ற செயல்களைத் தான் செய்திருந்தால் யோபு 31:22-23 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சாபங்கள் தன்மீது வரட்டும் என்று யோபு அறிவிக்கிறான்.

(எ) பேராசைப்படவில்லை

யோபு 31:24 நான் பொன்னின்மேல் என் நம்பிக்கையை வைத்து, தங்கத்தைப் பார்த்து: நீ என் ஆதரவு என்று நான் சொன்னதும்,

யோபு 31:25 என் ஆஸ்திபெரியதென்றும், என் கைக்கு மிகுதியும் கிடைத்ததென்றும் நான் மகிழ்ந்ததும்,

யோபு பேராசைப்படவில்லை

1. பொன்னின்மேல் தன் நம்பிக்கையை வைக்கவில்லை.

2. தங்கத்தைத் தன் ஆதரவு என்று சொல்லவில்லை.

3. தன் ஆஸ்திபெரியதென்று மகிழவில்லை. (யோபு 31:25)

4. தன் கைக்கு மிகுதியும் கிடைத்ததென்று மகிழவில்லை.

(ஏ) விக்கிரகாராதனை செய்யவில்லை

யோபு 31:26 சூரியன் பிரகாசிக்கும் போதும், அல்லது சந்திரன் மகிமையாய்ச் செல்லும்போதும், நான் அதை நோக்கி:

யோபு 31:27 என் மனம் இரகசியமாய் மயக்கப்பட்டு, என் வாய் என் கையை முத்திசெய்ததுண்டானால்,

யோபு 31:28 இதுவும் நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படத்தக்க அக்கிரமமாயிருக்கும்; அதினால் உன்னதத்திலிருக்கிற தேவனை மறுதலிப்பேனே.

யோபு விக்கிரகாராதனை செய்யவில்லை

1. சூரியனை ஆராதிக்கவில்லை.

2. சந்திரனை ஆராதிக்கவில்லை.

3. அவன் மனம் இரகசியமாய் மயக்கப்படவில்லை. (யோபு 31:27)

4. அவன் வாய் அவன் கையை முத்தி செய்யவில்லை. (விக்கிரகாராதனை செய்கிறவர்கள் விக்கிரகங்களைத் தொட்டு வழிபட்ட பின்பு, தங்களுடைய கைகளை முத்தமிடுவது வழக்கம்)

விக்கிரகாராதனையின் விளைவு

1. நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படத்தக்க அக்கிரமம்

2. உன்னதத்திலிருக்கிற தேவனை மறுதலிப்பது.

(ஐ) யாரையும் வெறுக்கவில்லை

யோபு 31:29 என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழ்ந்து, பொல்லாப்பு அவனுக்கு நேரிட்டபோது களிகூர்ந்திருந்தேனோ?

யோபு 31:30 அவன் ஜீவனுக்குச் சாபத்தைக் கொடுக்கும்படி விரும்பி, வாயினால் பாவஞ்செய்ய நான் இடங்கொடுக்கவில்லை.

யோபு - தொகுப்புரை

31 அதிகாரம்

யோபு 31:31 அவன் இனத்தார்களில் திருப்தியாகாதவனைக் காண்பிப்பவன் யாரென்று என் கூடாரத்தின் மனுஷர் சொல்லார்களோ?

யோபு பிறருக்குப் பொல்லாப்பு செய்யவில்லை

1. என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழவில்லை.
2. பொல்லாப்பு அவனுக்கு நேரிட்டபோது களிகூரவில்லை.
3. அவன் ஜீவனுக்குச் சாபத்தைக் கொடுக்கும்படி விரும்பவில்லை. (யோபு 31:30)
4. என்னுடைய இனத்தார் மற்றவர்களைப் பழிவாங்கவில்லை. (யோபு 31:31) நான் தவறு செய்திருந்தால் தண்டிக்கப் படுவேனாக. (யோபு 31:40)

(ஓ) விருந்தினரை உபசரிக்காமல் இருக்கவில்லை

யோபு 31:32 பரதேசி வீதியிலே இராத்தங்கினதில்லை; வழிப்போக்கனுக்கு என் வாசல்களைத் திறந்தேன்.

(ஓ) மாயமாலம் பண்ணவில்லை

யோபு 31:33 நான் ஆதாமைப்போல என் மீறுதல்களை மூடி, என் அக்கிரமத்தை என் மடியிலே ஒளித்துவைத்தேனோ?

யோபு 31:34 திரளான என் கூட்டத்துக்கு நான் பயந்ததினாலாவது, இனத்தார் ஜனத்தார் பண்ணும் இகழ்ச்சி என்னைத் திடுக்கிடப் பண்ணினதினாலாவது, நான் பேசாதிருந்து, வாசற்படியை விட்டுப் புறப்படாதிருந்தேனோ?

யோபு 31:35 ஆ, என் வழக்கைக் கேட்கிறவன் ஒருவன் இருந்தால் நலமாயிருக்கும்; இதோ, சர்வவல்லவர் எனக்கு உத்தரவு அருளிச்செய்யும், என் எதிராளி தன் வழக்கை எழுதிக் கொடுக்கவும் எனக்கு விருப்பமுண்டு.

யோபு 31:36 அதை நான் என் தோளின்மேல் வைத்து, எனக்குக் கிரீடமாகத் தரித்துக்கொள்வேனே.

யோபு 31:37 அவனுக்கு நான் என் நடைகளைத் தொகை தொகையாய்க் காண்பித்து, ஒரு பிரபுவைப்போல அவனிடத்தில் போவேன்.

"நான் ஆதாமைப்போல என் மீறுதல்களை மூடி" - ஆதாம் தன்னுடைய பாவங்களை மூடி மறைத்தான். (ஆதி 3:1-19). யோபு திரளான கூட்டத்திற்கும், தன்னுடைய இனத்தார், ஜனத்தார் பண்ணும் இகழ்ச்சிக்கும் பயப்பட வில்லை. (யோபு 31:34). கர்த்தர் தன்னுடைய வேண்டுதலைக் கேட்க வேண்டுமென்று யோபு விண்ணப்பம் பண்ணுகிறான். (யோபு 31:35-37).

(ஔ) யாரையும் ஏமாற்றி வஞ்சிக்க வில்லை

யோபு 31:38 எனக்கு விரோதமாக என் காணிபூமி கூப்பிடுகிறதும், அதின் படைச்சால்கள்கூட அழுகிறதும்,

யோபு 31:39 கூலிகொடாமல் நான் அதின் பலனைப் புசித்து, பயிரிட்டவர்களின் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினதும் உண்டானால்,

யோபு 31:40 அதின் கோதுமைக்குப் பதிலாக முள்ளும், வாற்கோதுமைக்குப் பதிலாகக் களையும் முளைக்கக்கடவது என்றான். யோபின் வார்த்தைகள் முடிந்தது.

யோபு துரோகம் செய்யவில்லை

1. எனக்கு விரோதமாக என் காணிபூமி கூப்பிடுகிறதில்லை.
2. அதின்படைச்சால்கள் அழுகிறதில்லை.

யோபு - தொகுப்புரை

31 அதிகாரம்

3. கூலிகொடாமல் நான் அதின் பலனைப் புசிக்கவில்லை. (யோபு 31:39)

4. பயிரிட்டவர்களின் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தவில்லை.

"யோபின் வார்த்தைகள் முடிந்தது" - யோபு தன்னுடைய சிநேகிதருக்குக் கூறிய பிரதியுத்தரத்தின் வார்த்தைகள் முடிந்தது. இதன் பின்பு யோபு கர்த்தரிடத்தில் தன்னுடைய பிரதியுத்தரத்தைக் கூறுகிறான். (யோபு 40:3-5; யோபு 42:1-6).

32 அதிகாரம்

VI. யோபுவும், எலிகூவும் - எலிகூ யோபுவோடு பேசிய சம்பாஷணையும் அவனுடைய மூன்று நண்பர்களும்

1. எலிகூ தொடர்ந்து பேசுகிறான்

யோபு 32:1 யோபு தன் பார்வைக்கு நீதிமானாயிருந்த படியினால், அவனுக்கு அந்த மூன்று மனுஷரும் பிரதியுத்தரம் சொல்லி ஓய்ந்தார்கள்.

யோபு 32:2 அதினால் ராமின் வம்சத்தானான பூசியனாகிய பரகெயேலின் குமாரன் எலிகூவுக்குக் கோபம்மூண்டது; யோபு, தேவனைப் பார்க்கிலும், தன்னைத் தான் நீதிமானாக்கினதினிமித்தம், அவன் மேலும் அவனுக்குக் கோபம்மூண்டது.

யோபு 32:3 கொடுக்கத்தக்க மறுமொழி யோபின் மூன்று சிநேகிதருக்கும் அகப்படாதிருந்தும், அவர்கள்அவனை ஆகாதவனென்று தீர்த்ததினிமித்தம், அவர்கள்மேலும் அவனுக்குக் கோபம் மூண்டது.

யோபு 32:4 அவர்கள் தன்னைப் பார்க்கிலும் வயதுசென்றவர்களான படியினால், எலிகூ யோபின் வார்த்தைகள் முடிந்துதீருமட்டும் காத்திருந்தான்.

யோபு 32:5 அந்த மூன்று மனுஷரின் வாயிலும் மறுஉத்தரவு பிறக்கவில்லையென்று எலிகூ கண்டபோது, அவனுக்குக் கோபம் மூண்டது.

"யோபு தன் பார்வைக்கு நீதிமானாயிருந்த படியினால்" - யோபுவின் சுயநீதியைக் கண்டு அவனுடைய மூன்று சிநேகிதரும் இதற்கு மேலும் அவனுக்குப் பிரதியுத்தரம் கூறாமல் நிறுத்திக் கொள்கிறார்கள்.

"எலிகூ" (Elihu) - இதற்கு முன்பு எலிகூ யோபுவிடம் எதுவும் கூறவில்லை. ஆனாலும் இவர்கள் பேசியது அனைத்தையும் எலிகூ கவனித்துக் கேட்டிருக்கிறான். (யோபு 32:1-9). இங்கு கூறப்பட்டிருக்கும் செய்தியைத் தவிர எலிகூவைப் பற்றி வேறு எந்த விஷயமும் விசேஷமாகத் தெரியவில்லை. எலிகூ யோபுவின் மூன்று சிநேகிதரோடு கூட வந்தவனா அல்லது அவர்கள் வந்தபோது எலிகூவும் அங்கு ஏதேச்சையாக வந்தவனா என்பதும் தெரியவில்லை.

"பூசியன்" (Buzite) - எலிகூ பூஸின் Buz சந்ததியில் வந்தவன். பூஸ் நாகோரின் இரண்டாவது குமாரன். நாகோர் ஆபிரகாமின் சகோதரன். (ஆதி 22:20-21)

"எலிகூவுக்குக் கோபம்மூண்டது" - யோபு 32:2-3 ஆகிய வசனங்களில் "எலிகூவுக்குக் கோபம்மூண்டது" என்று மூன்று முறை கூறப்பட்டிருக்கிறது. ஒரு மனுஷனுடைய மார்க்கச் சிந்தனைகளைப் பற்றிப் பேசும்போது அதற்கு மாற்றுக்கருத்து உடையவர்கள் விரைவில் கோபமடைந்து விடுவார்கள். எலிகூ யோபுவின் பிரதியுத்தரத்தையும், அவனுடைய மூன்று சிநேகிதரின் பிரதியுத்தரங்களையும் கவனித்துக் கேட்டான். அவை எலிகூவின் மார்க்க கோட்பாடுகளுக்கு முரணாக உள்ளன. யோபு தன்னை நீதிமானாகக் காண்பித்தது எலிகூவுக்குக் கோபத்தை உண்டாக்கிற்று. யோபுவின் மூன்று சிநேகிதரும் அவனுக்குப் பதில்கூறாதிருந்ததும், எலிகூவிற்குக் கோபத்தை உண்டாக்கிற்று. இதன் பின்பு எலிகூ தன்னுடைய உள்ளத்தில் உள்ளதை யோபுவிற்கும், அவனுடைய மூன்று சிநேகிதருக்கும் கூறுகிறான். (யோபு 32:6,8, 10-22).

யோபுவிடத்திலும் அவனுடைய சிநேகிதரிடத்திலும் எலிகூ குற்றம் கண்டுபிடிக்கிறான். இவ்விரண்டு பிரிவினருக்கும் எலிகூ ஒரு மத்தியஸ்தன் போல வருகிறான். (யோபு 32:2-6). யோபுவின் மூன்று சிநேகிதரிடம் எலிகூ சிறிதளவே பேசுகிறான். அவனுக்கு யோபுவின்மீது மிகுந்த பாரம் உண்டாயிற்று. யோபுவிற்கு எதிராகக் கூறும் குற்றச்சாட்டுக்களில் எலிகூ யோபுவின் சிநேகிதரோடு சேர்ந்து கொள்கிறான். எலிகூவின் வார்த்தைக்கு யோபு பதில்கூற வில்லை. சர்வ வல்லமையுள்ள தேவனே பதில்கூற முன் வருகிறார். (யோபு 38:1-40:2; யோபு 40:3-யோபு 41:34) யோபுவின் மூன்று சிநேகிதர்மீது கர்த்தருக்குக் கோபம் உண்டாயிற்று. (யோபு 42:7-10).

யோபு - தொகுப்புரை

32 அதிகாரம்

எலிகூ பேசுவதற்குக் காரணம்

1. யோபு தேவனைப்பார்க்கிலும், தன்னைத் தான் நீதிமானாக்கினது.

2. கொடுக்கத்தக்க மறுமொழி யோபின் மூன்று சிநேகிதருக்கும் அகப்படாதிருந்தும், அவர்கள் அவனை ஆகாதவனென்று தீர்த்தது (யோபு 32:3).

"அவர்கள் தன்னைப்பார்க்கிலும் வயது சென்றவர்களானபடியினால்" - முதியோர் முதலாவது பேசுவதும், அவர்கள் பேசி முடித்தபின்பு இளைஞர்கள் பேசுவதும் அக்காலத்து வழக்கம்.

2. எலிகூ இதுவரையிலும் அமைதியாக இருந்ததற்கு காரணம்

யோபு 32:6 ஆதலால் பரகெயேலின் குமாரன் எலிகூ என்னும் பூசியன் பிரதியுத்தரமாக: நான் இளவயதுள்ளவன்; நீங்களோ விருத்தாப்பியர்; ஆகையால் நான் அஞ்சி, என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்தப் பயந்திருந்தேன்.

யோபு 32:7 முதியோர் பேசமட்டும், வயதுசென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும் என்றிருந்தேன்.

"எலிகூ என்னும் பூசியன் பிரதியுத்தரமாக" - எலிகூவின் பிரதியுத்தரம் இந்த வசனத்திலிருந்து ஆரம்பமாகிறது. (யோபு 32:6-37:24).

"நான் இளவயதுள்ளவன்; நீங்களோ விருத்தாப்பியர்" - எலிகூ மிகவும் இளையவனாக இருக்க வேண்டும். ஆகையினால் தன்னுடைய கருத்தைக் கூறுவதற்குக்கூட எலிகூ யோசிக்கிறான். (யோபு 32:6-7).

3. அவனுடைய ஞானத்தின் ஆதாரம்

யோபு 32:8 ஆனாலும் மனுஷரில் ஒரு ஆவியுண்டு; சர்வவல்லவருடைய சுவாசமே அவர்களை உணர்வுள்ளவர்களாக்கும்.

யோபு 32:9 பெரியோரெல்லாம் ஞானிகளல்ல; முதியோரெல்லாம் நீதியை அறிந்தவர்களுமல்ல.

"மனுஷரில் ஒரு ஆவியுண்டு" - ஒவ்வொரு மனுஷரும் சர்வவல்லவருடைய சுவாசத்தினாலே உணர்வடைந்து பேசுகிறார்கள். ஆகையினால் ஒரு காரியத்திற்குப் பிரதியுத்தரம்கூற வயது, மேன்மை, ஐசுவரியம் ஆகிய எதுவும் முக்கியமானதல்ல. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல் இருந்தால் யார் வேண்டுமானாலும் ஞானவார்த்தைகளைப் பேசலாம். (யோபு 32:8-9; அப் 3:21; 2தீமோ 3:15-17; 2பேதுரு 1:21).

4. எலிகூ பேசுவதற்கான காரணத்தின் பதினைந்து அம்சங்கள்

யோபு 32:10 ஆகையால் எனக்குச் செவி கொடுங்கள்; நானும் என் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவேன் என்றேன்.

யோபு 32:11 இதோ, உங்கள் வசனங்கள் முடியுமட்டும் காத்திருந்தேன்; நீங்கள் சொல்லத்தக்கதை ஆராய்ந்து தேடுமட்டும், உங்கள் நியாயங்களுக்குச் செவிகொடுத்தேன்.

யோபு 32:12 நான் உங்கள் சொல்லைக் கவனித்தேன்; ஆனாலும் இதோ, உங்களில் யோபுக்கு நியாயத்தைத் தெரியக்காட்டி, அவருடைய வசனங்களுக்கு ஏற்ற பிரதியுத்தரம் சொல்லுகிறவனில்லை.

யோபு 32:13 ஞானத்தை கண்டுபிடித்தோம் என்று நீங்கள் சொல்லாதபடி பாருங்கள்; மனுஷனல்ல, தேவனே அவரை ஜெயங்கொள்ள வேண்டும்.

யோபு 32:14 அவர் என்னைப்பார்த்துப் பேசினதில்லை; நீங்கள் சொன்ன வார்த்தைகளினால் நான் அவருக்குப் பிரதியுத்தரம் சொல்வதுமில்லை.

32 அதிகாரம்

யோபு 32:15 அவர்கள் கலங்கி, அப்புறம் பிரதியுத்தரம் சொல்லாதிருக்கிறார்கள்;அவர்களுக்கு பேச்சு அற்றுப்போயிற்று.

யோபு 32:16 அவர்கள் பேசார்களோ என்று காத்திருந்தேன்; ஆனாலும் அவர்கள் அப்புறம் மறுமொழி கொடாமலிருந்தபடியினால்,

யோபு 32:17 நானும் பிரதியுத்தரமாக எனக்குத் தோன்றியமட்டும் சொல்லுவேன்; நானும் என் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவேன்.

யோபு 32:18 வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது; என் உள்ளத்திலுள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது.

யோபு 32:19 இதோ, என் உள்ளம் அடைக்கப்பட்டிருந்து, புதுத் துருத்திகளை முதலாய்ப் பீறப்பண்ணுகிற புதுரசத்தைப் போலிருக்கிறது.

யோபு 32:20 நான் ஆறுதலடையும்படி பேசுவேன்; என் உதடுகளைத் திறந்து பிரதியுத்தரம் சொல்லுவேன்.

யோபு 32:21 நான் ஒருவனுடைய முகத்தைப் பாராமலும், ஒரு மனுஷனுக்கும் இச்சகம் பேசாமலும் இருப்பேனாக.

யோபு 32:22 நான் இச்சகம் பேச அறியேன்; பேசினால் என்னை உண்டாக்கினவர் சீக்கிரமாய் என்னை எடுத்துக்கொள்வார்.

எலிகூ பேசுவதற்குக் காரணம்

1. தன் அபிப்பிராயத்தை வெளிப் படுத்துகிறான். (யோபு 32:10,17).

2. அவர்கள் வசனங்கள் முடியுமட்டும் காத்திருந்தான் (யோபு 32:11).

3. அவர்கள் சொல்லத்தக்கதை ஆராய்ந்து தேடுமட்டும், அவர்கள் நியாயங்களுக்குச் செவிகொடுத்தான்.

4. அவர்களில் யாரும் யோபுவுக்கு நியாயத்தைத் தெரியக்காட்டவில்லை.

5. யோபுவின் வசனங்களுக்கு ஏற்ற பிரதியுத்தரம் அவர்கள் யாரும் சொல்ல வில்லை. (யோபு 32:12).

6. ஞானத்தை கண்டுபிடித்தோம் என்று அவர்கள் சொன்னார்கள். (யோபு 32:13).

7. மனுஷனல்ல, தேவனே அவரை ஜெயங்கொள்ளவேண்டும்.

8. அவர் என்னைப்பார்த்துப் பேசினதில்லை (யோபு 32:14).

9. நீங்கள் சொன்ன வார்த்தைகளினால் நான் அவருக்குப் பிரதியுத்தரம் சொல்வதுமில்லை.

10. வார்த்தைகள் எலிகூவிற்குள் நிறைந்திருக்கிறது. (யோபு 32:18).

11. எலிகூவின் உள்ளத்திலுள்ள ஆவி அவனை நெருக்கியது.

12. என் உள்ளம் அடைக்கப்பட்டிருந்து, புதுத் துருத்திகளை முதலாய்ப் பீறப்பண்ணுகிற புதுரசத்தைப் போலிருக்கிறது. (யோபு 32:19).

13. நான் ஆறுதலடையும்படி பேசுவேன்; என் உதடுகளைத் திறந்து பிரதியுத்தரம் சொல்லுவேன். (யோபு 32:20).

14. நான் ஒருவனுடைய முகத்தைப் பாராமலும், ஒரு மனுஷனுக்கும் இச்சகம் பேசாமலும் இருப்பேனாக. (யோபு 32:21)

15. நான் இச்சகம் பேச அறியேன்; பேசினால் என்னை உண்டாக்கினவர் சீக்கிரமாய் என்னை எடுத்துக் கொள்வார். (யோபு 32:22).

33 அதிகாரம்

5. எலிகூ யோபுவிடம் கூறிய முதலாவது பதிலுரை

(1) பதிலுரைப்பதற்கு அவனுடைய தகுதி

யோபு 33:1 யோபே, என் நியாயங்களைக் கேளும்; என் வார்த்தைகளுக்கெல்லாம் செவி கொடும்.

யோபு 33:2 இதோ, என் வாயை இப்போது திறந்தேன்; என் வாயிலிருக்கிற என் நாவானது பேசும்.

யோபு 33:3 என் வார்த்தைகள் என் இருதயத்தின் உண்மைக்கு ஒத்திருக்கும்; நான் அறிந்ததை என் உதடுகள் சுத்தமாய் வசனிக்கும்.

யோபு 33:4 தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது.

யோபு 33:5 உம்மாலே கூடுமானால் எனக்கு மறுமொழி கொடும்; நீர் ஆயத்தப்பட்டு எனக்கு எதிராக நில்லும்.

யோபு 33:6 இதோ, உம்மைப்போல நானும் தேவனால் உண்டானவன்; நானும் மண்ணினால் உருவாக்கப்பட்டவன்.

யோபு 33:7 இதோ, நீர் எனக்குப் பயப்பட்டுக் கலங்கத் தேவையில்லை; என் கை உம்மேல் பாரமாயிருக்கமாட்டாது.

எலிகூ யோபுவிற்குக் கூறிய வாக்குறுதிகள்

1. ஒத்திருக்கும்.
2. 2. நான் அறிந்ததை என் உதடுகள் சுத்தமாய் வசனிக்கும்.
3. நீர் விரும்புகிறபடி தேவனுடைய சார்பாக நான் உமக்குப் பதில் கூறுவேன். (யோபு 33:6).
4. நீர் எனக்குப் பயப்பட்டு கலங்கத் தேவையில்லை (யோபு 33:7).
5. என் கை உம்மேல் பாரமாயிருக்கமாட்டாது.

"தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்" - யோபுவும், தானும் சமமானவர்கள் என்று எலிகூ கூறுகிறான். இவர்கள் இருவருக்குமே ஒரே மாதிரியான ஜீவசுவாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருவருமே மண்ணினால் உருவாக்கப் பட்டவர்கள். (யோபு 33:4,6).

எலிகூ கிறிஸ்துவின் முன்மாதிரியான அடையாளமல்ல

தமக்கும், யோபுவிற்கும் இடையில் மத்தியஸ்தம் பண்ணுவதற்குத் தேவன் எலிகூவை அனுப்பவில்லை. தேவன் சொல்லக் கூடாத சில காரியங்களை எலிகூ கூறுகிறான். ஒருசிலர் எலிகூவைக் கிறிஸ்துவின் முன்மாதிரியான அடையாளம் என்று கூறுகிறார்கள். ஆனால் இந்த வியாக்கியானம் தவறானதாகும். அதற்கான காரணங்கள்:

1. யோபுவின் சிநேகிதரிடத்தில் எலிகூ தயவை எதிர்பார்க்கிறான். (யோபு 34:1-4). யோபுவின் சிநேகிதரைக் கர்த்தர் கடிந்து கொண்டார். (யோபு 42)
2. யோபு ஞானமில்லாமல் பேசினான் என்று எலிகூ கூறுவது கர்த்தருடைய வார்த்தைக்கு முரணாக உள்ளது. (யோபு 42:7, யோபு 34:35).
3. யோபு ஏற்கெனவே அனுபவிக்கும் பாடுகளைவிட இன்னும் அதிகமாக அனுபவிக்க வேண்டுமென்று எலிகூ விரும்புகிறான். தேவன் இதுபோல விரும்புவதில்லை. (யோபு 34:37).
4. யோபு தன்னைத் தேவனைவிட நீதிமானாகக் கூறியதாக எலிகூ குறைகூறுகிறான். ஆனால் யோபு அவ்வாறு கூறவில்லை. (யோபு 35:2).

33 அதிகாரம்

5. யோபுவின் துன்மார்க்கத்தை எலிகூ கடிந்து கூறுகிறான். இந்த விஷயத்தில் எலிகூ யோபுவின் சத்துருக்களோடு ஒத்துப்போகிறான். (யோபு 35:8).

6. தேவன் தமது கோபத்தினால் யோபுவை உபத்திரவப்படுத்துகிறார் என்று எலிகூ கூறுவது தவறான சத்தியமாகும். (யோபு 35:15).

7. யோபு ஞானமில்லாமல் தன்னுடைய வார்த்தைகளை அதிகரிக்கிறான் என்று எலிகூ கூறுவது தேவன் யோபு 42:7 ஆவது வசனத்தில் கூறியிருப்பதற்கு முரணாக உள்ளது. (யோபு 35:16).

8. தான் தேவனுடைய சார்பாகப் பேசுவதாக எலிகூ கூறுவதற்கு ஆதாரம் எதுவுமில்லை. (யோபு 33:6; யோபு 36:2).

9. தன்னை அறிவில் தேறினவனாக எலிகூ கூறுவது தவறு. (யோபு 36:4).

10. தேவனைப் பற்றியும், துன்மார்க்கனைப் பற்றியும் எலிகூ கூறும் காரியங்கள் உண்மைக்கு மாறானவை. (யோபு 36:6-26)

11. எலிகூ பேசி முடித்த பின்பு, தேவன் தாமே யோபுவிடம் பேசுகிறார். இதனால் எலிகூ தேவனுடைய சார்பாகப் பேசவில்லை என்பது தெளிவாகிறது.

(2) யோபுவின் எட்டு தவறுகள்

யோபு 33:8 நான் காதோரக் கேட்க நீர் சொன்னதும், எனக்குக் கேள்வியான உம்முடைய வார்த்தைகளின் சத்தமும் என்னவென்றால்:

யோபு 33:9 நான் மீறுதல் இல்லாத சுத்தன், நான் குற்றமற்றவன், என்னில் அக்கிரமமில்லை.

யோபு 33:10 இதோ, என்னில் அவர் குற்றம் பிடிக்கப் பார்க்கிறார், என்னைத் தமக்குச் சத்துருவாக எண்ணிக் கொள்ளுகிறார்.

யோபு 33:11 அவர் என் கால்களைத் தொழுவிலே மாட்டி, என் நடைகளையெல்லாம் காவல் படுத்துகிறார் என்று சொன்னீர்.

யோபு 33:12 இதிலே நீர் நீதியுள்ளவர் அல்லவென்று உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன்; மனுஷனைப் பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார்.

யோபு 33:13 அவர் தம்முடைய செயல்கள் எல்லாவற்றையுங்குறித்துக் காரணம் சொல்லவில்லையென்று நீர் அவரோடே ஏன் வழக்காடுகிறீர்?

எலிகூ யோபுவின்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. நான் மீறுதல் இல்லாத சுத்தன் என்று சொன்னீர்.

2. நான் குற்றமற்றவன் என்று சொன்னீர்.

3. என்னில் அக்கிரமமில்லை என்று சொன்னீர்.

4. என்னில் அவர் குற்றம் பிடிக்கப் பார்க்கிறார் என்று சொன்னீர். (யோபு 33:10).

5. என்னைத் தமக்குச் சத்துருவாக எண்ணிக்கொள்ளுகிறார் என்று சொன்னீர்.

6. அவர் என் கால்களைத் தொழுவிலே மாட்டுகிறார் என்று சொன்னீர். (யோபு 33:11).

7. என் நடைகளையெல்லாம் காவல் படுத்துகிறார் என்று சொன்னீர்.

8. அவர் தம்முடைய செயல்கள் எல்லாவற்றையுங்குறித்துக் காரணம் சொல்லவில்லையென்று நீர் அவரோடே வழக்காடுகிறீர். (யோபு 33:13).

யோபு - தொகுப்புரை

33 அதிகாரம்

யோபுவிற்கு எதிராக எலிகூ கூறும் குற்றச்சாட்டுக்கள் சரியானவை. ஏனெனில் தான் காரணமில்லாமல் சோதிக்கப்படுவதாக யோபு நினைக்கிறான். (யோபு 9:17).

(3) தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் கிரியைகள்

(அ) தேவன் தமது சித்தத்தையும் நோக்கத்தையும் வெளிப் படுத்துகிறார்

யோபு 33:14 தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத் திருந்துகிறவரல்லவே.

யோபு 33:15 கனநித்திரை மனுஷர்மேல் இறங்கி, அவர்கள் படுக்கையின் மேல் அயர்ந்திருக்கையில்,

யோபு 33:16 அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி, அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரை போட்டு,

யோபு 33:17 மனுஷன் தன்னுடைய செய்கையைவிட்டு நீங்கவும், மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார்.

யோபு 33:18 இவ்விதமாய் அவன் ஆத்துமாவைப் படுகுழிக்கும், அவன் ஜீவனைப் பட்டய வெட்டுக்கும் தப்புவிக்கிறார்.

தேவன் மனுஷரோடு கிரியை நடப்பிக்கும் விதம்

1. தேவன் தம்முடைய சித்தத்தையும், நோக்கத்தையும் மனுஷருக்கு வெளிப்படுத்துகிறார். (யோபு 33:14-18).
2. தேவனுடைய சித்தத்திற்கும், நோக்கத்திற்கும் மனுஷன் கீழ்ப்படியாமல் போனால், அவனுக்குத் தண்டனை வருகிறது. (யோபு 33:19-22).
3. மனுஷன் கர்த்தரிடத்தில் திரும்பினால் மனுஷனுக்குத் தம்முடைய நிதானத்தை அறிவிக்கும்படிக்குத் தேவன் அவனுக்கு அநுசாரியாயிருப்பார். (யோபு 33:23).
4. ஒருவன் தேவனுடைய செய்தியை ஏற்றுக் கொண்டு அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தால் அவன் இரட்சிக்கப்படுவான், சொஸ்தமாவான். (யோபு 33:24-28).

தேவன் மனுஷரோடு கிரியை நடப்பிப்பதற்குக் காரணம்

1. மனுஷன் தன்னுடைய செய்கையைவிட்டு நீங்க. (யோபு 33:17).
2. மனுஷருடைய பெருமை அடங்க.
3. அவன் ஆத்துமாவைப் படுகுழிக்கு தப்புவிக்க. (யோபு 33:18).
4. அவன் ஜீவனைப் பட்டய வெட்டுக்கு தப்புவிக்க.
5. அவனை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்தினாலே பிரகாசிப்பிக்க. (யோபு 33:29-30).

(ஆ) மனுஷன் தேவனை மறுதலிக்கும் போது பாடுகளின் மூலமாக மனுஷனுக்கு பாடம் கற்பிக்கிறார்

யோபு 33:19 அவன் தன் படுக்கையிலே வாதையினாலும், தன் சகல எலும்புகளிலும் அகோரமான நோவினாலும் தண்டிக்கப்படுகிறான்.

யோபு 33:20 அவன் ஜீவன் அப்பத்தையும், அவன் ஆத்துமா ருசிகரமாக போஜனத்தையும் அரோசிக்கும்.

யோபு - தொகுப்புரை

33 அதிகாரம்

யோபு 33:21 அவன் மாம்சம் காணப்படாத படிக்கு அழிந்து, மூடப்பட்டிருந்த அவன் எலும்புகள் வெளிப்படுகிறது.

யோபு 33:22 அவன் ஆத்துமா பாதாளத்துக்கும், அவன் பிராணன் சாவுக்கும் சமீபிக்கிறது.

சரீர சுகமாதலும், சிட்சையும்

ஒருவன் தேவனுக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் பண்ணினால் மாத்திரமே கர்த்தருடைய வாதை அவனுக்கு வரும். (யோபு 33:14). சாத்தான் கலகக்காரனை வாதிப்பதற்கு அனுமதித்து விடுவார். யோபு 33:19-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாதைகளைப் பொதுவாகக் கர்த்தர் அனுமதிப்பதில்லை. ஆனாலும் யோபு 33:14-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம், தேவை ஏற்பட்டால் மட்டுமே மனுஷன் வாதிக்கப்படுவதற்கு அனுமதிக்கிறார்.

யோபுவைப்போல சரித்திரத்தில் வேறு யாரும் சோதனைகளை அனுபவித்ததில்லை. யோபுவின் வரலாற்றை இந்தப் புஸ்தகத்தின் மூலமாகத் தியானித்து, அவனுடைய அனுபவங்களை நாம் புரிந்து கொள்கிறோம். யோபுவின் காலத்தில் வேதாகமம் அவனுடைய கையில் கிடைக்கவில்லை. தற்காலத்தில் வேதாகமத்தை நமது கரங்களில் பெற்றிருக்கும் நாமோ சாத்தானுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். அப்போது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான். (யாக் 4:7; 1பேதுரு 5:8-9).

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் தியானித்து, நமக்கு வரும் சோதனைகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள முடியும். (சங் 34:9-10; சங் 37:1-8; சங் 84:11; சங் 91:1-12; சங் 103:1-4; மத் 7:7-11; மத் 8:17; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:1-13; லூக்கா 18:1-8; லூக்கா 24:49; யோவான் 10:10; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; 1கொரி 12:1-11; 2கொரி 1:20; எபே 6:10-18; எபி 2:1-4; எபி 11:6; யாக் 5:14-16; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:13- 14).

துன்மார்க்கனுக்கு வரும் தண்டனை

1. அவன் தன் படுக்கையிலே வாதையினால் தண்டிக்கப்படுகிறான்.
2. அவன் தன் சகல எலும்புகளிலும் அகோரமான நோவினால் தண்டிக்கப் படுகிறான்.
3. அவன் ஜீவன் அப்பத்தை அரோசிக்கும். (யோபு 33:20).
4. அவன் ஆத்துமா ருசிகரமாக போஜனத்தை அரோசிக்கும்.
5. அவன் மாம்சம் காணப்படாதபடிக்கு அழிந்துபோகும். (யோபு 33:21).
6. மூடப்பட்டிருந்த அவன் எலும்புகள் வெளிப்படும்.
7. அவன் ஆத்துமா பாதாளத்துக்குச் சமீபிக்கும். (யோபு 33:22).
8. அவன் பிராணன் சாவுக்குச் சமீபிக்கிறது.

பாதாளம் (grave) - **שַׁחַת - shakh'-ath - 7845**

பெ.பெ.சொ. - சேற்றுப்பள்ளம், அழிவு, படுகுழி, பாதாளம் (a pit dug out of the earth) (யோபு 33:18)

(இ) மனுஷன் தாழ்மையடைந்து தேவனிடத்தில் மனந்திரும்பி வரும்போது அவர் தமது செய்தியோடு அதை வியாக்கியானம் பண்ணுவதற்கும் ஒருவரை அனுப்புகிறார்

யோபு 33:23 ஆயிரத்தில் ஒருவராகிய சாமாசி பண்ணுகிற தூதனானவர் மனுஷனுக்குத் தம்முடைய நிதானத்தை அறிவிக்கும் படிக்கு, அவனுக்கு அநுசாரியாயிருந்தாரேயாகில்,

33 அதிகாரம்

கர்த்தருடைய தூதரின் ஊழியம்

தேவனுடைய ஊழியக்காரர் கொஞ்சம்பேரே இருப்பதாக எலிகூ கூறுகிறான். அவர்கள் தேவையுள்ள ஜனங்களைச் சந்திக்க வேண்டும். அவ்வாறு சந்திக்கும்போது தேவனுடைய நீதியை அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். வியாதியஸ்தர் எவ்வாறு குணமடைய வேண்டுமென்று விவரித்துக் காண்பிக்கிறார்கள். இதுவே தேவனுடைய ஊழியக்காரர் செய்ய வேண்டிய ஊழியமாகும். ஒருவன் வியாதியாக இருக்கும்போது அந்த வியாதி சாத்தானிடமிருந்தே வருகிறது என்பதை தேவனுடைய ஊழியக்காரர் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வியாதி குணமடைவதற்குக் கர்த்தர் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்து முடித்துவிட்டார் என்றும் ஊழியக்காரர் விசுவாசிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து பாவங்களை மன்னிக்கிறார். வியாதிகளையும் சொஸ்தமாக்குகிறார்.

மனுஷருக்கு வந்திருக்கும் வியாதி கர்த்தரிடமிருந்து வந்திருக்கும் சிட்சை என்று தவறாக வியாக்கியானம் பண்ணிவிடக்கூடாது. கர்த்தர் வியாதியிலிருந்து மனுஷரை விடுவிக்கிறவர். அவர் மனுஷருக்கு வியாதியைக் கொடுக்கிறவர் அல்ல. வியாதியஸ்தர் குணமடைய வேண்டுமென்பதே கர்த்தருடைய சித்தம். ஆரோக்கியமுள்ளவர்கள் வியாதியஸ்தர் ஆகவேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமல்ல. வியாதியிலிருந்து கர்த்தர் நம்மைக் குணப்படுத்துவார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். நமக்கு அவர் வியாதியைக் கொடுத்து விடுவார் என்று பயப்படக்கூடாது.

(ஈ) தேவனால் சிட்சிக்கப்பட்டவன் தேவனை ஏற்றுக் கொள்ளும்போது தேவன் அவனை இரட்சித்து குணப்படுத்துகிறார்

யோபு 33:24 அவர் அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு; நீர் அவனை இரட்சியும்; மீட்கும் பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார்.

யோபு 33:25 அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப் பார்க்கிலும் ஆரோக்கியமடையும்; தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்.

யோபு 33:26 அவன் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, அவன் அவருடைய சமுகத்தைக் கெம்பீரத்தோடே பார்க்கும்படி அவர் அவன்மேல் பிரியமாகி, அந்த மனுஷனுக்கு அவனுடைய நீதியின் பலனைக் கொடுப்பார்.

யோபு 33:27 அவன் மனுஷரை நோக்கிப் பார்த்து: நான் பாவஞ்செய்து செம்மையானதைப் புரட்டினேன், அது எனக்குப் பிரயோஜனமாயிருக்கவில்லை.

யோபு 33:28 என் ஆத்துமா படுகுழியில் இறங்காதபடி, அவர் அதை இரட்சிப்பார்; ஆகையால் என் பிராணன் வெளிச்சத்தைக் காணும் என்று சொல்லுவான்.

“அவர் அவனுக்கு இரங்கி” - கர்த்தர் இரக்கமுள்ளவர். நீடிய கிருபையுள்ளவர். தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறவர். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8). விசுவாசம் கேள்வியினால் வருகிறது. (ரோமர் 10:17) தேவனுடைய வாக்குத்தத்தங்களை எடுத்துக் கூறி மனுஷருடைய விசுவாசம் விருத்தி அடையும் விதமாக வியாக்கியானம் பண்ண வேண்டும். (யோபு 33:26-28; யாக் 5:14-16).

இரட்சித்தல் (deliver) פָּדָה - paw-dah' - 6308

யோபு – தொகுப்புரை

33 அதிகாரம்

வினைச்சொல் - இரட்சி (deliver; redeem; loose; ransom by price) (யோபு 33:24; உபா 7:8; சங் 34:22; எரே 15:21).

தேவன் மீட்கும் பொருளைக் கண்டுபிடித்திருக்கிறார்

மனுஷருடைய மீட்பு தேவனுடைய கிருபையைச் சார்ந்திருக்கிறது. மனுஷரை மீட்பதற்குக் கர்த்தர் ஒரு மீட்கும் பொருளை எதிர்பார்க்கிறார். மீட்கும் பொருளை எதிர்பார்ப்பவர் கர்த்தரே. மனுஷனை வியாதியிலிருந்து எப்படி இரட்சிக்க வேண்டும் என்பதற்கு கர்த்தர் மீட்கும் பொருளைத் தேடிப் பார்க்கிறார். இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பாவநிவாரண பலியாக மரித்ததே தேவன் கண்டுபிடித்திருக்கும் மீட்கும் பொருளாகும்.

மீட்பு (ransom) - כֹּפֶר - ko'-fer - 3724

வினைச்சொல் - மீட்பு (யோபு 33:24; யோபு 36:18; யாத் 30:12; சங் 49:7; நீதி 6:35; நீதி 13:8; நீதி 21:18; ஏசா 43:3; மத் 20:28; மாற்கு 10:45; 1தீமோ 2:6).

பாவநிவர்த்தி செய்தல் כָּפַר - kaw-far' - 3722

வினைச்சொல் - பிராயசித்தம் பண்ணு, பாவநிவிர்த்திசெய், மன்னி, அநுக்கிரகம் பண்ணு. (to cover; expiate; placate; cancel; make atonement; cleanse; disannul; forgive; pardon; purge; reconcile)

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாகத் தேவன் மனுஷருடைய வியாதியைச் சொஸ்தமாக்குகிறார். மனுஷருடைய பாவங்களை மன்னிக்கிறார். (ஏசா 53, notes; மத் 8:17; மத் 26:28; 1கொரி 11:29-30; கொலோ 1:20; எபி 10:19-23; யாக் 5:14-16; 1பேதுரு 2:24). மனுஷகுமாரனுக்குப் பூமியில் இவற்றைச் செய்வதற்கு அதிகாரம் உள்ளது. (மத் 9:1-8; யோவான் 10:10).

தேவன் நீதியுள்ளவர். ஆகையினால் அவர் மீட்கும் கிரயத்தை எதிர்பார்க்கிறார். மீட்கும் கிரயத்தைக் கண்டுபிடித்த பின்பு, அவர் பாவநிவாரணத்தின் ஆசீர்வாதங்களை மனுஷருக்கு அருளாமல் நிறுத்தி வைக்கமாட்டார். பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (1யோவான் 3:8).

பாவநிவாரண பலியின் மூலமாக வரும் ஆசீர்வாதங்கள்

1. சரீர சுகமாதல் (யோபு 33:25)
2. வாலிபத்தில் இருந்ததைப்போல ஆரோக்கியம். (யோபு 33:25; சங் 103:4-5; யோவான் 10:10; 3யோவான் 1:2)
3. ஜெபத்திற்குப் பதிலுரை. (யோபு 33:26; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:1-13; லூக்கா 18:1-8; யோவான் 14:12-15; யோவான்15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:7-8; 1யோவான்3:21-22;1யோவான் 5:13-14)
4. நம்பிக்கை (யோபு 33:26; தீத்து 2:13; எபி 3:6; எபி 6:11,18-19; எபி 7:19; 1பேதுரு 1:3,13; 1யோவான் 3:3)
5. நீதி (யோபு 33:26; ரோமர் 3:21-26; ரோமர் 4:1-25;ரோமர் 5:17-21; 1கொரி 1:30; 2கொரி 5:21; 1பேதுரு 2:24; 1யோவான் 2:29; 1யோவான் 3:7-10)
6. ஆத்தும இரட்சிப்பு அல்லது பாவமன்னிப்பு (யோபு 33:27-28; மத் 26:28; லூக்கா 13:1-5; ரோமர் 1:16; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9)

33 அதிகாரம்

7. உயிர்த்தெழுதல் (ரோமர் 33:28,30; ரோமர் 18:5; யோவான் 5:28-29).

(உ) தேவனுடைய கிரியைகளின் காரணம்

யோபு 33:29 இதோ, தேவன் மனுஷனுடைய ஆத்துமாவைப் படுகுழிக்கு விலக்குகிறதற்கும், அவனை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்தினாலே பிரகாசிப் பிக்கிறதற்கும்,

யோபு 33:30 அவர் இவைகளையெல்லாம் அவனிடத்தில் பலமுறை நடப்பிக்கிறார்.

(4) எலிகூ யோபுவிடம் கூறியது

யோபு 33:31 யோபே, நீர் கவனித்து என் சொல்லைக் கேளும்; நான் பேசப்போகிறேன், நீர் மவுனமாயிரும்.

யோபு 33:32 சொல்லத்தக்க நியாயங்கள் இருந்ததேயானால், எனக்கு மறுஉத்தரவு கொடும்; நீர் பேசும், உம்மை நீதிமானாகத் தீர்க்க எனக்கு ஆசையுண்டு.

யோபு 33:33 ஒன்றும் இல்லாதிருந்ததேயாகில் நீர் என் சொல்லைக் கேளும், மவுனமாயிரும், நான் உமக்கு ஞானத்தை உபதேசிப்பேன் என்றான்.

"யோபே, நீர் கவனித்து என் சொல்லைக் கேளும்" - தன்னுடைய குற்றச்சாட்டுக்களுக்கு யோபு பதில் கூற வேண்டுமென்று எலிகூ ஒருவேளை எதிர்பார்த்திருந்திருக்கலாம்.(யோபு 33:31-33).

34 அதிகாரம்

(5) யோபுவின் மூன்று நண்பர்களோடு கூறிய எலிகூ கூறிய பதிலுரை

(அ) அவர்களுடைய கருணைக்காக விண்ணப்பம்

யோபு 34:1 பின்னும் எலிகூ மாறுத்தரமாக:

யோபு 34:2 ஞானிகளே, என் வார்த்தைகளைக் கேளுங்கள்; அறிவாளிகளே, எனக்குச் செவி கொடுங்கள்.

யோபு 34:3 வாயானது போஜனத்தை ருசி பார்க்கிறதுபோல, செவியானது வார்த்தைகளைச் சோதித்துப்பார்க்கும்.

யோபு 34:4 நமக்காக நியாயமானதைத் தெரிந்து கொள்வோமாக; நன்மை இன்னதென்று நமக்குள்ளே அறிந்து கொள்வோமாக.

"ஞானிகளே, என் வார்த்தைகளைக் கேளுங்கள்" - எலிகூ யோபுவின் சிநேகிதரிடம் இப்போது பேசுகிறான். (யோபு 34:1-4).

(ஆ) தேவனுக்கும் மனுஷருக்கும் எதிராக யோபு எட்டு பாவங்களைப் புரிந்ததாக எலிகூ யோபுவைக் குற்றப்படுத்துகிறான்

யோபு 34:5 யோபு: நான் நீதிமான்; தேவன் என் நியாயத்தைத் தள்ளிவிட்டார் என்றும்,

எலிகூ யோபுவின்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. நான் நீதிமான் என்று சொன்னீர்.
2. தேவன் என் நியாயத்தைத் தள்ளிவிட்டார் என்று சொன்னீர்.
3. நியாயம் என்னிடத்தில் இருந்தும் நான் பொய்யனென்று எண்ணப்படுகிறேன் என்று சொன்னீர். (யோபு 34:6).
4. மீறுதல் இல்லாதிருந்தும், அம்பினால் எனக்கு உண்டான காயம் ஆறாததாயிருக்கிறது என்று சொன்னீர்.
5. பரியாசம் பண்ணுதலைத் தண்ணீரைப்போல் குடித்தீர். (யோபு 34:7).
6. அக்கிரமக்காரரோடே கூடிக்கொண்டீர்.
7. துன்மார்க்கரோடே திரிகிறீர்.
8. தேவன்மேல் பிரியம் வைக்கிறது மனுஷனுக்குப் பிரயோஜனம் அல்ல என்றீர். (யோபு 34:9).

(இ) கேட்பதற்கு முதலாவது அழைப்பு - தேவன் தமது நீதியை நிலை நிறுத்துவதன் பன்னிரெண்டு அம்சங்கள்

யோபு 34:6 நியாயம் என்னிடத்தில் இருந்தும் நான் பொய்யனென்று எண்ணப்படுகிறேன்; மீறுதல் இல்லாதிருந்தும், அம்பினால் எனக்கு உண்டான காயம் ஆறாததாயிருக்கிறதென்றும் சொன்னாரே.

யோபு 34:7 யோபைப்போலவே, பரியாசம்பண்ணுதலைத் தண்ணீரைப் போல் குடித்து,

யோபு 34:8 அக்கிரமக்காரரோடே கூடிக் கொண்டு, துன்மார்க்கரோடே திரிகிறவன் யார்?

யோபு 34:9 எப்படியெனில், தேவன்மேல் பிரியம் வைக்கிறது மனுஷனுக்குப் பிரயோஜனம் அல்ல என்றாரே.

யோபு 34:10 ஆகையால் புத்திமான்களே, எனக்குச் செவி கொடுங்கள்; அக்கிரமம் தேவனுக்கும், அநீதி சர்வவல்லவருக்கும் தூரமாயிருக்கிறது.

34 அதிகாரம்

யோபு 34:11 மனுஷனுடைய செய்கைக்குத் தக்கதை அவனுக்குச் சரிகட்டி, அவனவன் நடக்கைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிக்கிறார்.

யோபு 34:12 தேவன் அநியாயஞ் செய்யாமலும், சர்வவல்லவர் நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே.

யோபு 34:13 பூமியின்மேல் மனுஷனுக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்? பூச்சக்கரம் முழுதையும் ஒழுங்குப்படுத்தினவர் யார்?

யோபு 34:14 அவர் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாகத் திரும்பினாராகில், அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார்.

யோபு 34:15 அப்படியே மாம்சமான யாவும் ஏகமாய் ஜீவித்துப்போம், மனுஷன் தூளுக்குத் திரும்புவான்.

தேவனுடைய நீதி

1. அக்கிரமம் தேவனுக்கு தூரமாயிருக்கிறது.

2. அநீதி சர்வவல்லவருக்குத் தூரமாயிருக்கிறது

3. மனுஷனுடைய செய்கைக்குத்தக்கதை அவனுக்குச் சரிகட்டுகிறார். (யோபு 34:11).

4. அவனவன் நடக்கைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிக்கிறார்.

5. சர்வவல்லவர் நீதியைப் புரட்டமாட்டார். (யோபு 34:12).

6. பூமியின்மேல் மனுஷனுக்கு அதிகாரம் கொடுத்தார். (யோபு 34:13).

7. பூச்சக்கரம் முழுதையும் ஒழுங்குப் படுத்தினார்.

8. அவர் தம்முடைய இருதயத்தை மனுஷன் மேல் வைத்தார். (யோபு 34:14).

9. மனுஷனுடைய முடிவை ஆளுகை செய்கிறார்.

10. மாம்சமான யாவும் ஏகமாய் ஜீவித்துப் போக வைக்கிறார். (யோபு 34:15; எபி 9:27).

11. மனுஷன் தூளுக்குத் திரும்புவான். (யோபு 34:15; ஆதி 3:19).

12. நீதியைப் பகைக்கிற ஒருவன் ஆளக்கூடாது. (யோபு 34:17).

13. தேவன் மகா நீதிபரர்.

14. தேவனைப் பொல்லாதவர் என்று சொல்லக்கூடாது. (யோபு 34:18).

15. பிரபுக்களின் முகத்தைப் பார்க்கமாட்டார். (யோபு 34:19).

16. ஐசுவரியவானை அதிகமாய் எண்ண மாட்டார்.

17. இவர்கள் எல்லாரும் அவர் கரங்களின் கிரியையே.

18. மனுஷர் சடிதியில் சாவார்கள். (யோபு 34:20).

19. அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது (யோபு 34:21).

20. அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார்.

21. அக்கிரமக்காரர் ஒளித்துக் கொள்ளத்தக்க அந்தகாரமில்லை. (யோபு 34:22).

22. அவன்மேல் மிஞ்சினதொன்றை சுமத்தமாட்டார். (யோபு 34:23).

23. மனுஷன் தேவனோடே வழக்காட முடியாது.

24. அவர் வல்லமையுள்ளவர்களை நொறுக்குகிறார். (யோபு 34:24).

34 அதிகாரம்

25. வேறே மனுஷரை அவர்கள் ஸ்தானத்திலே நிறுத்துகிறார்.

26. அவர்கள் கிரியைகளை அவர் அறிந்தவர். (யோபு 34:25).

27. அவர்கள் நசுங்கிப்போகத்தக்கதாய் இராக்காலத்தில் அவர்களைக் கவிழ்த்துப் போடுகிறார்.

28. எல்லாரும் பார்க்கும்படி அவர்களைத் துன்மார்க்கரென்று அடிக்கிறார். (யோபு 34:28).

29. அவர்கள் அவரை விட்டுப் பின்வாங்கி போனபடியினால் அவர்களை அடிக்கிறார். (யோபு 34:26).

30. அவர்கள் எளியவர்களை ஒடுக்கிய படியினால் அவர்களை அடிக்கிறார். (யோபு 34:27)

31. எளியவர்களின் கூக்குரலைக் கேட்கிறார்.

32. பிரச்சனைகளை முடியப்பண்ணுகிறார்.

33. கர்த்தர் தம்மை வெளிப்படுத்தும் வரையிலும் அவரை யாரும் காணமுடியாது.

34. அவர் தேசங்களோடும், தனிமனிதரோடும் கிரியை நடப்பிக்கிறார்.

35. மாயக்காரரின் ஆளுகையிலிருந்து ஜனங்களை விடுவிக்கிறார். (யோபு 34:30).

36. தேவனுக்கு எதிராகப் பாவம் செய்கிறவர்கள் நீதியாகத் தண்டிக்கப் படுகிறார்கள். (யோபு 34:31).

37. பாவம் செய்கிறவர்களை இனிமேல் பாவம் செய்யாதிருக்குமாறு அவர்களைத் தண்டிக்கிறார்.

38. மனுஷர் தங்களுக்குத் தெரியாத காரியங்களைக் கற்றுக் கொள்ளக் கவனம் செலுத்த வேண்டும். (யோபு 34:32).

39. மனுஷர் பாவத்தைவிட்டு விலகி நீதியாய் ஜீவிக்க வேண்டும்.

40. தேவன் எல்லாத் தவறுகளையும் தண்டித்து நீதிசெய்வார். (யோபு 34:33).

ஆவியும், சுவாசமும்

மனுஷனுடைய ஆவியும், அவனுடைய சுவாசமும் இங்கு வேறுபடுத்திக் கூறப்பட்டிருக்கிறது. சரீரமும், ஆத்துமாவும் இணைந்து செயல்படுவதற்கு மனுஷனுடைய சுவாசம் உதவி புரிகிறது. சுவாசம் என்பது மனுஷனுடைய உள்ளான மனுஷனல்ல. மனுஷனுடைய ஆவியும், ஆத்துமாவுமே அவனுடைய உள்ளான மனுஷனாகும்.

(ஈ) கேட்பதற்கு இரண்டாவது அழைப்பு - - தேவன் தமது நீதியை நிலைநிறுத்துவதன் முப்பது அம்சங்கள்

யோபு 34:16 உமக்கு உணர்விருந்தால் இதைக் கேளும், என் வார்த்தைகளின் சத்தத்துக்குச் செவிகொடும்.

யோபு 34:17 நீதியைப் பகைக்கிற ஒருவன் ஆளக்கூடுமோ? மகா நீதிபரரைக் குற்றப்படுத்துவீரோ?

யோபு 34:18 ஒரு ராஜாவைப் பார்த்து, நீ பொல்லாதவன் என்றும், அதிபதிகளைப் பார்த்து, நீங்கள் அக்கிரமக்காரர் என்றும் சொல்லத்தகுமோ?

யோபு 34:19 இப்படியிருக்க, பிரபுக்களின் முகத்தைப் பாராமலும், ஏழையைப் பார்க்கிலும் ஐசுவரியவானை அதிகமாய் எண்ணாமலும் இருக்கிறவரை நோக்கி இப்படிச் சொல்லலாமா? இவர்கள் எல்லாரும் அவர் கரங்களின் கிரியையே.

34 அதிகாரம்

யோபு 34:20 இப்படிப்பட்டவர்கள் சடிதியில் சாவார்கள்; ஜனங்கள் பாதிஜாமத்தில் கலங்கி ஒழிந்து போவார்கள்; காணாத கையினால் பலவந்தர் அழிந்துபோவார்கள்.

யோபு 34:21 அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது; அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார்.

யோபு 34:22 அக்கிரமக்காரர் ஒளித்துக் கொள்ளத்தக்க அந்தகாரமுமில்லை, மரண இருளுமில்லை.

யோபு 34:23 மனுஷன் தேவனோடே வழக்காடும்படி அவர் அவன்மேல் மிஞ்சினதொன்றையும் சுமத்தமாட்டார்.

யோபு 34:24 ஆராய்ந்து முடியாத நியாயமாய் அவர் வல்லமையுள்ளவர்களை நொறுக்கி, வேறே மனுஷரை அவர்கள் ஸ்தானத்திலே நிறுத்துகிறார்.

யோபு 34:25 அவர்கள் கிரியைகளை அவர் அறிந்தவரானபடியால், அவர்கள் நசுங்கிப் போகத்தக்கதாய் இராக்காலத்தில் அவர்களைக் கவிழ்த்துப் போடுகிறார்.

யோபு 34:26 அவர்கள் அவரை விட்டுப் பின்வாங்கி, அவருடைய எல்லா வழிகளையும் உணர்ந்து கொள்ளாமல் போனபடியினாலும்,

யோபு 34:27 எளியவர்களின் கூக்குரல் அவரிடத்தில் சேரும்படி செய்ததினாலும்,சிறுமையானவனுடைய கூக்குரலைக் கேட்கிற அவர்,

யோபு 34:28 எல்லாரும் பார்க்கும்படி அவர்களைத் துன்மார்க்கரென்று அடிக்கிறார்.

யோபு 34:29 மாயக்காரன் ஆளாதபடிக்கும், ஜனங்கள் சிக்கிக்கொள்ளப் படாதபடிக்கும்,

யோபு 34:30 ஒரு ஜனத்துக்கானாலும் ஒரு மனுஷனுக்கானாலும், அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்? அவர் தமது முகத்தை மறைத்தால் அவரைக் காண்கிறவன் யார்?

யோபு 34:31 நான் தண்டிக்கப்பட்டேன்; நான் இனிப் பாவஞ்செய்யமாட்டேன்.

யோபு 34:32 நான் காணாத காரியத்தை நீர் எனக்குப் போதியும், நான் அநியாயம் பண்ணினேனானால், நான் இனி அப்படிச் செய்வதில்லை என்று தேவனை நோக்கிச் சொல்லத்தகுமே.

யோபு 34:33 நீர் அப்படிச் செய்ய மாட்டோமென்கிற படியினால், உம்மோடிருக்கிறவர்களில் ஒருவனை உமக்குப் பதிலாக அதைச் செய்யச்சொல்வீரோ? நான் அல்ல, நீரே தெரிந்துகொள்ள வேண்டும்; அல்லவென்றால், நீர் அறிந்திருக்கிறதைச் சொல்லும்.

"அக்கிரமக்காரர் ஒளித்துக்கொள்ளத்தக்க அந்தகாரமுமில்லை" - மனுஷர் மரித்துப்போன பின்பும் அவர்களுடைய ஆத்துமா ஜீவனோடு இருக்கும். அக்கிரமக்காரரின் ஆத்துமா தேவனைவிட்டு எங்கும் ஒளித்துக்கொள்ள முடியாது.

"அவன்மேல் மிஞ்சினதொன்றையும் சுமத்த மாட்டார்" - (1கொரி 10:12-13)

"நான் இனிப் பாவஞ்செய்யமாட்டேன்" - எலிகூவின் இந்த ஆலோசனை யோபுவிற்குப் பொருந்தும். யோபு கர்த்தரிடத்தில் தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவருடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (யோபு 34:31-32).

(உ) எலிகூ யோபுவைக் கடிந்து கொள்கிறான் - யோபு இன்னும் அதிகமாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகிறான்

யோபு 34:34 யோபு அறிவில்லாமல் பேசினார்; அவர் வார்த்தைகள் ஞானமுள்ளவைகள் அல்லவென்று,

யோபு - தொகுப்புரை

34 அதிகாரம்

யோபு 34:35 புத்தியுள்ள மனுஷர் என் பட்சமாய்ப் பேசுவார்கள்; ஞானமுள்ள மனுஷனும் எனக்குச் செவி கொடுப்பான்.

யோபு 34:36 அக்கிரமக்காரர் சொன்ன மறு உத்தரவுகளினிமித்தம் யோபு முற்றமுடிய சோதிக்கப்பட வேண்டியதே என் அபேட்சை.

யோபு 34:37 தம்முடைய பாவத்தோடே மீறுதலைக் கூட்டினார்; அவர் எங்களுக்குள்ளே கைகொட்டி, தேவனுக்கு விரோதமாய்த் தம்முடைய வார்த்தைகளை மிகுதியாக வசனித்தார் என்றான்.

"யோபு அறிவில்லாமல் பேசினார்" - யோபு தனக்குத் தெரியாத காரியங்களைக்கூட ஞானமில்லாமல் பேசுவதாக எலிகூ அவன்மீது குற்றம் சுமத்துகிறான்.

"யோபு முற்றமுடிய சோதிக்கப்பட வேண்டியதே என் அபேட்சை" - யோபுவின் சிநேகிதரைப் போலவே எலிகூவும் விரும்புகிறான். யோபு இன்னும் அதிகமாகச் சோதிக்கப்பட்டு பாடுகளை அனுபவிக்க வேண்டுமென்பது எலிகூவின் விருப்பம். (யோபு 34:35-36). யோபு தன்னுடைய பாவத்தோடு மீறுதலைக் கூட்டினான். தேவனுக்கு விரோதமாக யோபு அதிகமாகப் பேசினான் (யோபு 34:37) என்று எலிகூ யோபுவின்மீது குற்றம் சுமத்துகிறான்.

35 அதிகாரம்

(6) எலிகூ யோபுவிடம் கூறிய இரண்டாவது பதிலுரை

(அ) அவனுடைய மூன்று பெரிய தவறுகள்

யோபு 35:1 பின்னும் எலிகூ மாறுத்தரமாக:

யோபு 35:2 என் நீதி தேவனுடைய நீதியைப் பார்க்கிலும் பெரியதென்று நீர் சொன்னது நியாயம் என்று எண்ணுகிறீரோ?

யோபு 35:3 நான் பாவியாயிராததினால் எனக்குப் பிரயோஜனமென்ன? பலன் என்ன? என்று சொன்னீர்.

"பின்னும் எலிகூ மாறுத்தரமாக" - யோபு 34 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகளை எலிகூ பேசி முடித்த பின்பு, யோபுவோ அல்லது யோபுவின் சிநேகிதரில் யாராவது ஒருவரோ தனக்குப் பிரதியுத்தரம் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால் ஒருவரும் பிரதியுத்தரம் கூறவில்லை. ஆகையினால் எலிகூ தன்னுடைய சம்பாஷனையைத் தொடருகிறான்.

எலிகூ யோபுவின்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. என் நீதி தேவனுடைய நீதியைப் பார்க்கிலும் பெரியதென்று நீர் சொன்னது.

2. நான் பாவியாயிராததினால் எனக்குப் பிரயோஜனமென்ன? என்று நீர் சொன்னது. (யோபு 35:3)

3. என் பாவத்திலிருந்து நான் சுத்திகரிக்கப் படுவதினால் எனக்கு என்ன பலன் என்று நீர் சொன்னது.

யோபு தன்னுடைய பிரதியுத்தரங்களில் இவற்றில் எதையும் கூறவில்லை. ஆனால் யோபுவின் சம்பாஷனையில் இந்தக் கருத்து காணப்படுவதாக எலிகூ நினைக்கிறான். தான் பாவம் செய்யாதவன் என்றும், பிறருக்குத் தான் எந்தத் தீங்கும் செய்யவில்லை என்றும் யோபு கூறுகிறான். யோபுவின் பாவத்தினால் அவனுக்கு இந்தப் பாடுகள் வரவில்லை. சாத்தானே யோபுவைச் சோதிக்கிறான்.(யோபு 1:10-19; யோபு 2:6-10).

(ஆ) எலிகூ யோபுவை நிந்தித்து தேவன் செய்தது சரியானது எனக் கூறுகிறான்

யோபு 35:4 உமக்கும் உம்மோடே இருக்கிற உம்முடைய சிநேகிதருக்கும் நான் பிரதியுத்தரம் சொல்லுகிறேன்.

யோபு 35:5 நீர் வானத்தை அண்ணாந்து பார்த்து, உம்மைப்பார்க்கிலும் உயரமாயிருக்கிற ஆகாய மண்டலங்களைக் கண்ணோக்கும்.

யோபு 35:6 நீர் பாவஞ்செய்தால் அதினாலே அவருக்கு என்ன நஷ்டம்? உம்முடைய மீறுதல்கள் மிகுதியானாலும், அதினாலே அவருக்கு என்ன சேதம்?

யோபு 35:7 நீர் நீதிமானாயிருந்தால், அதினாலே அவருக்கு என்ன கிடைக்கும்? அல்லது அவர் உம்முடைய கையில் என்ன லாபத்தைப் பெறுவார்?

யோபு 35:8 உம்முடைய பாவத்தினால் உம்மைப் போன்ற மனுஷனுக்கு நஷ்டமும், உம்முடைய நீதியினால் மனுபுத்திரனுக்கு லாபமும் உண்டாகும்.

யோபு 35:9 அநேகரால் பலவந்தமாய் ஒடுக்கப்பட்டவர்கள் முறையிட்டு, வல்லவர்களுடைய புயத்தினிமித்தம் அலறுகிறார்கள்.

யோபு 35:10 பூமியின் மிருகங்களைப் பார்க்கிலும் எங்களைப் புத்திமான்களும், ஆகாசத்துப் பறவைகளைப் பார்க்கிலும் எங்களை ஞானவான்களுமாக்கி,

35 அதிகாரம்

யோபு 35:11 என்னை உண்டாக்கினவரும், இரவிலும் கீதம்பாட அருள் செய்கிறவருமாகிய என் சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் எங்கே என்று கேட்பவன் ஒருவனுமில்லை.

யோபு 35:12 அங்கே அவர்கள் பொல்லாதவர்களின் பெருமையினிமித்தம்கூப்பிடுகிறார்கள்; அவரோ மறு உத்தரவு கொடுக்கிறதில்லை.

யோபு 35:13 தேவன் வீண்வார்த்தைக்குச் செவிகொடார், சர்வவல்லவர் அதைக் கவனியார்.

யோபு 35:14 அவருடைய தரிசனம் உமக்குக் கிடைக்கிறதில்லை என்று நீர் சொல்லுகிறீரே; ஆனாலும் நியாயத்தீர்ப்பு அவரிடத்தில் இருக்கிறது; ஆகையால் அவருக்குக் காத்துக்கொண்டிரும்.

"உமக்கும் உம்மோடே இருக்கிற உம்முடைய சிநேகிதருக்கும்" - எலிகூவைப் போல எலிப்பாசும் இந்தக் காரியங்களைக் கூறியிருக்கிறான். (யோபு 22:2-30) ஆனாலும் இந்தப் பிரச்சனையைத் தெளிவுபடுத்துவதற்குப் பதிலாக அவன் யோபுவின்மீது குற்றம் சுமத்துகிறான்.

தேவனுடைய சுபாவம்

1. தேவன் வானங்களில் வாசம்பண்ணுகிறார். மனுஷரைப் பார்க்கிலும் அவர் உயரமானவர்.

2. மனுஷருடைய பாவத்தினால் தேவனுக்கு நஷ்டமில்லை. (யோபு 35:6).

3. மனுஷருடைய நீதியினால் தேவனுக்கு லாபமும் இல்லை. (யோபு 35:7).

"அநேகரால் பலவந்தமாய் ஒடுக்கப் பட்டவர்கள்" - மனுஷரை மனுஷரே ஒடுக்குகிறார்கள் என்றும், தேவன் யாரையும் ஒடுக்குவதில்லை என்றும் எலிகூ கூறுகிறான். (யோபு 35:9-12) பலவான்கள் பலவீனர்களை ஒடுக்கும்போது தேவன் பொறுத்துக் கொள்கிறார். பலவீனர்களின் பாடுகளுக்குத் தேவன் காரணமல்ல. தன்னுடைய பாடுகளுக்குத் தேவனே காரணமென்று யோபு கூறியதினால் எலிகூ இந்த வார்த்தையைக் கூறியிருக்க வேண்டும்.

"வல்லவர்களுடைய புயத்தினிமித்தம் அலறுகிறார்கள்" - ஒடுக்கப்படுகிறவர்கள் வல்லவர்களைப் பார்த்து அலறுகிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் முறையிடவில்லை. கர்த்தரிடத்தில் முறையிட்டால் இரட்சிப்பு உண்டு. மற்றவர்களைக் குறித்து கர்த்தரிடத்தில் குறைகூறுவதற்குப் பதிலாகத் தங்களுடைய பிரச்சனைகளிலிருந்து இரட்சிக்கப்படுவதற்காகக் கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும். ஜெபித்தால் கர்த்தர் ஒடுக்கப்படுகிறவர்களை இரட்சிப்பார். (யோபு 35:10-12).

"தேவன் வீண்வார்த்தைக்குச் செவி கொடார்" - ஒடுக்கப்படுகிறவர்கள் வீண்வார்த்தைகளைப் பேசுகிறார்கள். தங்களுடைய பாடுகளைக் குறித்து விவரிக்கிறார்கள். தங்களிடத்தில் பாவமில்லை என்றும், தாங்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுவதாகவும் புலம்புகிறார்கள். கர்த்தர் இதுபோன்ற வீண் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கமாட்டார்.

"அவருக்குக் காத்துக்கொண்டிரு" - யோபு தேவனுடைய நீதியையும், நியாயத்தையும் நம்ப வேண்டும். தன்னுடைய பிரச்சனைகளிலிருந்து கர்த்தர் தன்னை விடுவிப்பார் என்று அவரையே சார்ந்து ஜீவிக்க வேண்டும்.

(இ) யோபுவைத் தேவன் தண்டித்திருப்பதாக எலிகூ கூறுகிறான்

யோபு 35:15 இப்போது அவருடைய கோபமானது நியாயத்தை முற்றிலும் விசாரியாது; அவர் இன்னும் ஒன்றையும் குறையற்றவிதமாய்த் தீர்க்கவில்லை.

யோபு - தொகுப்புரை

35 அதிகாரம்

யோபு 35:16 ஆகையால் யோபு வீணாய்த் தம்முடைய வாயைத் திறந்து, அறிவில்லாமல் வார்த்தைகளை மிகுதியாய் வசனிக்கிறார் என்றான்.

"இப்போது" - தேவன் தன்னை விடுவிப்பார் என்று யோபு இதுவரையிலும் நம்பவில்லை. தன்னுடைய பாடுகளுக்குத்தேவனே காரணமென்று இதுவரையிலும் குற்றம் கூறி வந்திருக்கிறான். சர்வவல்லவருக்கு விரோதமாக யோபு குற்றச்சாட்டுக்களைக் கூறி வந்திருக்கிறான். (யோபு 35:15-16).

36 அதிகாரம்

(7) எலிகூ தேவனை இன்னும் ஆதரித்துப் பேசுகிறான்

(அ) தேவனுக்காகப் பேசுவதாகக் கூறுகிறான்

யோபு 36:1 பின்னும் எலிகூ:

யோபு 36:2 நான் பேசிமுடியுமட்டும் சற்றே பொறும்; இன்னும் தேவன் பட்சத்தில் நான் சொல்லவேண்டிய நியாயங்களை உமக்குச் சொல்லிக்காண்பிப்பேன்.

யோபு 36:3 நான் தூரத்திலிருந்து என் ஞானத்தைக் கொண்டுவந்து, என்னை உண்டாக்கினவருடைய நீதியை விளங்கப் பண்ணுவேன்.

யோபு 36:4 மெய்யாகவே என் வார்த்தைகள் பொய்யற்றிருக்கும்; உம்மோடே பேசுகிறவன் அறிவில் தேறினவன்.

"பின்னும் எலிகூ" - யோபுவோ அல்லது அவனுடைய சிநேகிதர்களோ பிரதியுத்தரம் கூறுவார்கள் என்று எலிகூ எதிர்பார்த்தான். ஆனால் அவர்கள் ஒரு பிரதியுத்தரமும் கூறவில்லை. ஆகையினால் எலிகூ தொடர்ந்து பேசுகிறான். (யோபு 35:1-2).

"உண்டாக்கினவர்"- யோபுவின் புஸ்தகத்தில் கர்த்தரே மனுஷனைச் சிருஷ்டித்தவராகவும் உண்டாக்கினவஞாகவும் வர்ணிக்கப் பட்டிருக்கிறார். (யோபு 4:17; யோபு 10:8-9; யோபு 32:22; யோபு 33:4; யோபு 35:10; யோபு 36:3).

எலிகூவின் பிரதியுத்தரம்

1. இன்னும் தேவன்பட்சத்தில் நான் சொல்லவேண்டிய நியாயங்களை உமக்குச் சொல்லிக்காண்பிப்பேன். (யோபு 36:2).

2. நான் தூரத்திலிருந்து என் ஞானத்தைக் கொண்டுவருவேன். (யோபு 36:3).

3. என்னை உண்டாக்கினவருடைய நீதியை விளங்கப்பண்ணுவேன்.

4. மெய்யாகவே என் வார்த்தைகள் பொய்யற்றிருக்கும். (யோபு 36:4).

5. பரிபூரண அறிவினால் உம்மோடு பேசுவேன்.

"உம்மோடே பேசுகிறவன் அறிவில் தேறினவன்" - எலிகூ வயதில் இளையவன். ஆனாலும் முதியோரிடம் காணப்படும் பூரண அறிவு தன்னோடு இருப்பதாகக் கூறுகிறான்.

(ஆ) தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் பதினெட்டு கிரியைகள்

யோபு 36:5 இதோ, தேவன் மகத்துவமுள்ளவர், அவர் ஒருவரையும் புறக்கணியார்; மன உருக்கத்திலும் அவர் மகத்துவமுள்ளவர்.

யோபு 36:6 அவர் துன்மார்க்கரைப் பிழைக்க ஒட்டாதிருக்கிறார்; சிறுமையானவர்களின் நியாயத்தை விசாரிக்கிறார்.

யோபு 36:7 அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல், அவர்களை ராஜாக்களோடே கூட சிங்காசனத்தில் ஏறவும், உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார்.

யோபு 36:8 அவர்கள் விலங்குகள் போடப்பட்டு, உபத்திரவத்தின் கயிறுகளால் கட்டப்பட்டிருந்தாலும்,

யோபு 36:9 அவர், அவர்கள் கிரியையையும், மிஞ்சிப்போன அவர்களுடைய மீறுதல்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தி,

யோபு 36:10 அக்கிரமத்தை விட்டுத் திரும்பும்படி அவர்கள் செவியைத் திறந்து கடிந்துகொள்ளுகிறார்.

யோபு 36:11 அவர்கள் அடங்கி அவரைச் சேவித்தால், தங்கள் நாட்களை நன்மையாகவும், தங்கள் வருஷங்களைச் செல்வவாழ்வாகவும் போக்குவார்கள்.

யோபு 36:12 அடங்கார்களேயாகில் பட்டயத்துக்கு இரையாகி, ஞானம் அடையாமல் மாண்டுபோவார்கள்.

36 அதிகாரம்

யோபு 36:13 மாயமுள்ள இருதயத்தார் குரோதத்தைக் குவித்துக் கொள்ளுகிறார்கள்; அவர்களை அவர் கட்டிவைக்கும்போது கெஞ்சிக் கூப்பிடுவார்கள்.

யோபு 36:14 அவர்கள் வாலவயதிலே மாண்டுபோவார்கள்; இலச்சையானவர் களுக்குள்ளே அவர்கள் பிராணன் முடியும்.

யோபு 36:15 சிறுமைப்பட்டவர்களை அவர் சிறுமைக்கு நீங்கலாக்கி, அவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கையில் அவர்கள் செவியைத் திறக்கிறார்.

தேவனைப் பற்றிய சத்தியம்

1. தேவன் மகத்துவமுள்ளவர்.
2. அவர் ஒருவரையும் புறக்கணியார்.
3. மன உருக்கத்திலும் அவர் மகத்துவ முள்ளவர்.
4. அவர் துன்மார்க்கரைப் பிழைக்க ஒட்டாதிருக்கிறார். (யோபு 36:6).
5. சிறுமையானவர்களின் நியாயத்தை விசாரிக்கிறார்.
6. அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல் இருக்கிறார். (யோபு 36:7).
7. நீதிமான்களை நித்திய காலமாக ஸ்தாபிக்கிறார்.
8. அவர்களை உயர்த்துகிறார்.
9. மிஞ்சிப்போன அவர்களுடைய மீறுதல்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். (யோபு 36:9).
10. அவர்கள் செவியைத் திறந்து கடிந்துகொள்ளுகிறார். (யோபு 36:10).
11. அக்கிரமத்தை விட்டுத் திரும்பும்படி அவர்களுக்குக் கட்டளையிடுகிறார்.
12. அவர்கள் அடங்கி அவரைச் சேவித்தால், தங்கள் நாட்களை நன்மையாகவும், தங்கள் வருஷங்களைச் செல்வ வாழ்வாகவும் போக்குவார்கள். (யோபு 36:11).
13. அடங்காரகளேயாகில் பட்டயத்துக்கு இரையாகி, ஞானம் அடையாமல் மாண்டு போவார்கள். (யோபு 36:12).
14. மாயமுள்ளஇருதயத்தார் குரோதத்தைக் குவித்துக்கொள்ளுகிறார்கள். (யோபு 36:13).
15. அவர்களை அவர் கட்டிவைக்கிறார்.
16. அவர்கள் வாலவயதிலே மாண்டு போவார்கள். (யோபு 36:14).
17. சிறுமைப்பட்டவர்களை அவர் சிறுமைக்கு நீங்கலாக்குகிறார். (யோபு 36:15).
18. அவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கையில் அவர்கள் செவியைத் திறக்கிறார்.

(இ) தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் கிரியையே யோபுவிடமும் காணப் படுவதாக எலிகூ கூறுகிறான்

யோபு 36:16 அப்படியே அவர் உம்மையும்நெருக்கத்தினின்று விலக்கி, ஒடுக்கமில்லாத விசாலத்திலே வைப்பார்; உம்முடைய போஜனபந்தி கொழுமையான பதார்த்தங்களால் நிறைந்திருக்கும்.

யோபு 36:17 ஆகாதவன்மேல் வரும் நியாயத்தீர்ப்பு நிறைவேறப் பார்ப்பீர்; நியாயமும் நீதியும் உம்மை ஆதரிக்கும்.

யோபு 36:18 உக்கிரமுண்டாயிருக் கிறதினால் அவர் உம்மை ஒரு அடியினால் வாரிக்கொண்டு போகாத படிக்கு எச்சரிக்கையாயிரும்; அப்பொழுது மீட்கும் பொருளை மிகுதியாய்க் கொடுத்தாலும் அதற்கு நீர் நீங்கலாகமாட்டீர்.

யோபு 36:19 உம்முடைய செல்வத்தை அவர் மதிப்பாரோ? உம்முடைய பொன்னையும், பூரண பராக்கி ரமத்தையும் அவர் மதிக்கமாட்டாரே.

36 அதிகாரம்

யோபு 36:20 ஜனங்கள் தங்கள் இடத்தை விட்டு வாரிக்கொள்ளப் படப்போகிற இரவை வாஞ்சிக்காதிரும்.

யோபு 36:21 அக்கிரமத்துக்குத் திரும்பாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; உபத்திரவத்தைப்பார்க்கிலும் அக்கிர மத்தைத் தெரிந்துகொண்டீரே.

யோபு 36:22 இதோ, தேவன் தம்முடைய வல்லமையில் உயர்ந்திருக்கிறார்; அவரைப்போல் போதிக்கிறவர் யார்?

யோபு 36:23 அவருடைய வழியின் நியாயத்தை விசாரிக்கத்தக்கவன் யார்? நீர் அநியாயம் செய்தீர் என்று சொல்லத்தக்கவன் யார்?

யோபு 36:24 மனுஷர் நோக்கிப் பார்க்கிற அவருடைய கிரியையை நீர் மகிமைப்படுத்த நினையும்.

யோபு 36:25 எல்லா மனுஷரும் அதைக் காண்கிறார்களே; தூரத்திலி ருந்து அது மனுஷருக்கு வெளிப் படுகிறது.

யோபுவிற்கு ஆலோசனை

1. அவர் உம்மையும் நெருக்கத்தினின்று விலக்கி,ஒடுக்கமில்லாத விசாலத்திலே வைப்பார் (யோபு 36:16).

2. உம்முடைய போஜனபந்தி கொழுமையான பதார்த்தங்களால் நிறைந்திருக்கும்.

3. ஆகாதவன்மேல் வரும் நியாயத்தீர்ப்பு நிறைவேறப் பார்ப்பீர். (யோபு 36:17).

4. நியாயமும் நீதியும் உம்மை ஆதரிக்கும்.

5. உக்கிரமுண்டாயிருக்கிறதினால் அவர் உம்மை ஒரு அடியினால் வாரிக்கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும் (யோபு 36:18).

6. அப்பொழுது மீட்கும் பொருளை மிகுதியாய்க் கொடுத்தாலும் அதற்கு நீர் நீங்கலாகமாட்டீர்.

7. உம்முடைய செல்வத்தை அவர் மதிக்க மாட்டார். (யோபு 36:19).

8. உம்முடைய பொன்னையும், பூரண பராக்கிரமத்தையும் அவர் மதிக்க மாட்டார்.

9. ஜனங்கள் தங்கள் இடத்தை விட்டு வாரிக்கொள்ளப்படப்போகிற இரவை வாஞ்சிக்காதிரும். (யோபு 36:20).

10. அக்கிரமத்துக்குத் திரும்பாதபடிக்கு எச்சரிக்கையாயிரும். (யோபு 36:21).

11. உபத்திரவத்தைப்பார்க்கிலும் அக்கிர மத்தைத் தெரிந்துகொண்டீரே.

12. தேவன் தம்முடைய வல்லமையில் உயர்ந்திருக்கிறார். (யோபு 36:22).

13. அவருடைய வழியின் நியாயத்தை உம்மால் விசாரிக்கக்கூடாது. (யோபு 36:23).

14. நீர் அநியாயம் செய்தீர் என்று உம்மால் தேவனைக் குற்றப்படுத்த முடியாது.

15. மனுஷர் நோக்கிப்பார்க்கிற அவருடைய கிரியையை நீர் மகிமைப்படுத்த நினையும். (யோபு 36:24).

16. எல்லா மனுஷரும் தேவனுடைய கிரியையைக் காண்கிறார்கள். தூரத்திலிருந்து அது உமக்குள் வெளிப்படுகிறது. (யோபு 36:25).

எலிகூ யோபுவின்மீது கூறும் குற்றச்சாட்டுக்கள்

1. பரியாசம்பண்ணுதலைத் தண்ணீரைப் போல் குடித்தீர். (யோபு 34:7).

2. அக்கிரமக்காரரோடே கூடிக்கொண்டு, துன்மார்க்கரோடே திரிகிறீர். (யோபு 34:8).

3. தேவன்மேல் பிரியம் வைக்கிறது மனுஷனுக்குப் பிரயோஜனம் அல்ல என்கிறீர். (யோபு 34:9).

4. யோபுவின் வார்த்தையில் ஞானமில்லை. (யோபு 34:35).

5. உம்முடைய பாவத்தோடே மீறுதலைக் கூட்டினீர். (யோபு 34:37)

யோபு - தொகுப்புரை

36 அதிகாரம்

6. கைகொட்டி, தேவனுக்கு விரோதமாய்த் தன்னுடையவார்த்தைகளை மிகுதியாக வசனித்தீர். (யோபு 34:37).

7. தன் நீதி தேவனுடைய நீதியைப் பார்க்கிலும் பெரியதென்று சொன்னீர். (யோபு 35:2).

8. நான் பாவியாயிராததினால் எனக்குப் பிரயோஜனமென்ன என்றீர். (யோபு 35:3)

9. யோபு வீணாய்த் தன்னுடைய வாயைத் திறந்து,அறிவில்லாமல் வார்த்தைகளை மிகுதியாய் வசனிக்கிறான். (யோபு 35:16)

10. உபத்திரவத்தைப்பார்க்கிலும் அக்கிரமத்தைத் தெரிந்துகொண்டீர். (யோபு 36:21)

"அவருடைய வழியின் நியாயத்தை விசாரிக்கத்தக்கவன் யார்?" - இவ்விரண்டு வினாக்களும் யோபுவிடம் கேட்கப்படுகிறது. தேவனிடம் இவற்றைக் கூறி இதற்குப் பதில் பெற்றுத்தருமாறு யோபு கூறுகிறான். (யோபு 36:23-24). தேவனுடைய கிரியைகளைப் பற்றி யோபு அதிகமாகக் குறைகூறுவதாக எலிகூ குற்றம் சுமத்துகிறான். காரணமில்லாமல் தேவன் தன்னை உபத்திரவப்படுத்துவதாக யோபு விசனப்படுகிறான். (யோபு 9:17) தேவன் தன்னை விசாரியாமல் தண்டிப்பதாகவும் யோபு தேவன்மீது குற்றம் சுமத்துகிறான். (யோபு 23:1-10).

(ஈ) தேவனுடைய முப்பத்தி நான்கு பெரிய கிரியைகள்

யோபு 36:26 இதோ, தேவன் மகத்துவமுள்ளவர்; நாம் அவரை அறிய முடியாது; அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது.

யோபு 36:27 அவர் நீர்த்துளிகளை அணுவைப் போல ஏறப்பண்ணுகிறார்; அவைகள் மேகத்திலிருந்து மழையாய்ச் சொரிகிறது.

யோபு 36:28 அதை மேகங்கள் பெய்து, மனுஷர்மேல் மிகுதியாய்ப் பொழிகிறது.

யோபு 36:29 மேகங்களின் பரவுதலையும்,அவருடைய கூடாரத்திலிருந்து எழும்பும் குமுறல்களையும் அறியமுடியுமோ?

யோபு 36:30 இதோ, அதின்மேல் தம்முடைய மின்னலின் ஒளியை விரிக்கிறார்; சமுத்திரத்தின் ஆழங்களையும் மூடுகிறார்.

யோபு 36:31 அவைகளால் ஜனங்களை தண்டிக்கிறவரும், ஆகாரங்கொடுத்து இரட்சிக்கிறவருமாயிருக்கிறார்.

யோபு 36:32 அவர் மின்னலின் ஒளியைத் தமது கைக்குள்ளே மூடி, அது இன்னின்னதை அடிக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

யோபு 36:33 அதினால் அவர் செய்ய நினைக்கிறதையும், மந்தாரம் எழும்பப் போகிறதையும், ஆடுமாடுகள் அறியப் படுத்தும்.

"நாம் அவரை அறிய முடியாது" - தேவனுடைய அளவற்ற வல்லமையையும், கிரியைகளையும் மனுஷரால் அறிய முடியாது. தேவனை அவருடைய பரிபூரணத்தில் இதுவரையிலும் ஒரு மனுஷனும் தரிசித்ததில்லை.

"அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது" - தேவன் நித்திய காலமாகவே இருக்கிறார். இனிமேலும் நித்திய காலமாகவே இருப்பார். (சங் 90:2).

தேவனுடைய மகாப்பெரிய கிரியைகள்

1. அவர் நீர்த்துளிகளை அணுவைப் போல ஏறப்பண்ணுகிறார். (யோபு 36:27).

2. அவைகள் மேகத்திலிருந்து மழையாய்ச் சொரிகிறது.

3. மனுஷர்மேல் மழையை மிகுதியாய்ப் பொழிய வைக்கிறார். (யோபு 36:28).

4. மேகங்களைப் பரப்புகிறார். (யோபு 36:29).

36 அதிகாரம்

5. மேகங்களில் இடியை உண்டு பண்ணுகிறார்..

6. தம்முடைய கூடாரத்தில் மின்னலின் ஒளியை விரிக்கிறார் (யோபு 36:30).

7. சமுத்திரத்தின் ஆழங்களை தண்ணீரால் மூடுகிறார்.

8. மேகம், மின்னல், இடி ஆகியவற்றால் ஜனங்களைத் தண்டிக்கிறார். (யோபு 36:31).

9. ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து இரட்சிக்கிறார்.

10. அவர் மின்னலின் ஒளியைத் தமது கைக்குள்ளே மூடுகிறார். (யோபு 36:32).

11. அது இன்னின்னதை அடிக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

12. இடி இடிக்கப்பண்ணுகிறார். (யோபு 36:33).

13. ஆடுமாடுகளைப்போல மந்தாரத்தைக் கூட்டிச் சேர்க்கிறார்.

14. மனுஷருடைய இருதயத்தைத் தத்தளிக்கப் பண்ணுகிறார். (யோபு 37:1).

15. இடியைத் தன்னிடத்தைவிட்டுத் தெறிக்கப்பண்ணுகிறார்.

16. வானத்தின்கீழ் இடியை இடிக்கப் பண்ணுகிறார். (யோபு 37:3).

17. பூமியின் கடையாந்தரங்கள்மேல் அதின்மின்னலையும் செல்லவிடுகிறார்.

18. மின்னலுக்குப் பின்பு இடியின் சத்தத்தைக் குமுறப்பண்ணுகிறார். (யோபு 37:4).

19. தம்முடையமகத்துவத்தின் சத்தத்தைக் குமுறப்பண்ணுகிறார்.

20. தேவன் தம்முடைய சத்தத்தை ஆச்சரியமானவிதமாய்க் குமுறப் பண்ணுகிறார் (யோபு 37:5).

21. நாம் கிரகிக்கக்கூடாத பெரிய காரியங்களை அவர் செய்கிறார்.

22. அவர் உறைந்த மழையை அனுப்புகிறார். (யோபு 37:6).

23. அவர் கல்மழையை அனுப்புகிறார்.

24. அவர் பெருமழையைப் பூமியின்மேல் அனுப்புகிறார்.

25. பெரியசூறாவளிகளினால் மனுஷருடைய கிரியைகளை நிறுத்திப் போடுகிறார். (யோபு 37:7).

26. சூறாவளிகளில் காட்டுமிருங்கள் தங்கள் குகைகளில் புகுந்து, அவற்றைத் தங்கள் கெபிகளில் தங்க வைக்கிறார். (யோபு 37:8).

27. தெற்கேயிருந்து சூறாவளியை அனுப்புகிறார். (யோபு 37:9).

28. வடகாற்றினால் குளிரை அனுப்புகிறார்.

29. தம்முடைய சுவாசத்தினால் தேவன் குளிரைக் கொடுக்கிறார் (யோபு 37:10).

30. ஜலத்தின் மேற்பரப்பை உறைந்து போகச் செய்கிறார்.

31. அவர் நீர்த்துளிகளை மேகத்தில் ஏற்றுகிறார். (யோபு 37:11).

32. மின்னலினால் மேகத்தைச் சிதறப் பண்ணுகிறார்.

33. மேகங்களைத் தம்முடைய ஞான ஆலோசனைகளின்படியே சுற்றித் திரியப் பண்ணுகிறார். (யோபு 37:12).

34. மேகங்களை ஒன்றில் தண்டனையாகவும், ஒன்றில் தம்முடைய பூமிக்கு உபயோகமாகவும்,ஒன்றில் கிருபையாகவும், அவைகளை வரப் பண்ணுகிறார். (யோபு 37:13).

யோபு - தொகுப்புரை

37 அதிகாரம்

யோபு 37:1 இதினால் என் இருதயம் தத்தளித்து, தன்னிடத்தை விட்டுத் தெறிக்கிறது.

யோபு 37:2 அவருடைய சத்தத்தினால் உண்டாகிற அதிர்ச்சியையும், அவர் வாயிலிருந்து புறப்படுகிற முழக்கத்தையும் கவனமாய்க் கேளுங்கள்.

யோபு 37:3 அவர் வானத்தின் கீழெங்கும் அந்தத் தொனியையும், பூமியின் கடையாந்தரங்கள்மேல் அதின்மின்னலையும் செல்லவிடுகிறார்.

யோபு 37:4 அதற்குப்பின்பு அவர் சத்தமாய் முழங்கி, தம்முடைய மகத்துவத்தின் சத்தத்தைக் குமுறப் பண்ணுகிறார்; அவருடைய சத்தம் கேட்கப் படும்போது அதைத் தவிர்க்கமுடியாது.

யோபு 37:5 தேவன் தம்முடைய சத்தத்தை ஆச்சரியமானவிதமாய்க் குமுறப் பண்ணுகிறார்; நாம் கிரகிக்கக்கூடாதபெரிய காரியங்களை அவர் செய்கிறார்.

யோபு 37:6 அவர் உறைந்த மழையையும், கல்மழையையும், தம்முடைய வல்லமையின் பெருமழையையும் பார்த்து: பூமியின்மேல் பெய்யுங்கள்என்று கட்டளையிடுகிறார்.

யோபு 37:7 தாம் உண்டாக்கின சகல மனுஷரும் தம்மை அறியும்படிக்கு, அவர் சகல மனுஷருடைய கையையும் முத்திரித்துப்போடுகிறார்.

யோபு 37:8 அப்பொழுது காட்டுமிருங்கள் தங்கள் குகைகளில் புகுந்து, தங்கள் கெபிகளில் தங்கும்.

யோபு 37:9 தெற்கேயிருந்து சூறாவளியும், வடகாற்றினால் குளிரும் வரும்.

யோபு 37:10 தம்முடைய சுவாசத்தினால் தேவன் குளிரைக் கொடுக்கிறார்; அப்பொழுது ஜலத்தின் மேற்பரப்பானது உறைந்துபோம்.

யோபு 37:11 அவர் நீர்த்துளிகளை மேகத்தில் ஏற்றி, மின்னலினால் மேகத்தைச் சிதறப்பண்ணுகிறார்.

யோபு 37:12 அவர் அவைகளுக்குக் கட்டளையிடுகிற யாவையும், அவைகள் பூச்சக்கரத்தில் நடப்பிக்கும்படி, அவர் அவைகளைத் தம்முடைய ஞான ஆலோசனைகளின்படியே சுற்றித் திரியப்பண்ணுகிறார்.

யோபு 37:13 ஒன்றில் தண்டனையாகவும், ஒன்றில் தம்முடைய பூமிக்கு உபயோகமாகவும், ஒன்றில் கிருபையாகவும், அவைகளை வரப்பண்ணுகிறார்.

"அவர் சகல மனுஷருடைய கையையும் முத்திரித்துப்போடுகிறார்" - புயல், பனி ஆகியவற்றினால் மனுஷர், மிருகங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் கட்டுப்படுத்தப் படுகின்றன. (யோபு 37:6-8).

"தெற்கேயிருந்து சூறாவளி" - சூறாவளி தெற்கிலிருந்து வருவதாக பல வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 21:1; சக 9:14) சூறாவளி வடக்கிலிருந்து வருவதாகவும் எசே 1:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. குளிர்காற்று பொதுவாக வடதிசையிலிருந்து வரும்.

(உ) தேவனுடைய வல்லமையையும் கிரியைகளையும் கவனிக்க வேண்டுமென்று எலிகூ யோபுவுக்கு ஆலோசனை கூறுகிறான் - தேவனை விடத் தன்னை ஞானவானாக எண்ணக்கூடாது

யோபு 37:14 யோபே, இதற்குச் செவிகொடும்; தரித்துநின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளைத் தியானித்துப் பாரும்.

யோபு 37:15 தேவன் அவைகளைத் திட்டம்பண்ணி, தம்முடைய மேகத்தின் மின்னலைப் பிரகாசிக்கப்பண்ணும் விதத்தை அறிவீரோ?

யோபு 37:16 மேகங்கள் தொங்கும்படி வைக்கும் நிறைவையும், பூரண ஞானமுள்ளவரின் அற்புதமான செய்கைகளையும்,

யோபு - தொகுப்புரை

37 அதிகாரம்

யோபு 37:17 தென்றலினால் அவர் பூமியை அமையப்பண்ணும்போது, உம்முடைய வஸ்திரங்கள் உஷ்ணமாயிருக்கும் வகையையும் அறிவீரோ?

யோபு 37:18 வார்க்கப்பட்ட கண்ணாடியைப் போல் கெட்டியான ஆகாயமண்டலங்களை நீர் அவரோடே கூட இருந்து விரித்தீரோ?

யோபு 37:19 அவருக்கு நாம் சொல்லத் தக்கதை எங்களுக்குப் போதியும்; அந்தகாரத்தினிமித்தம் முறைதப்பிப் பேசுகிறோம்.

யோபு 37:20 நான் பேசத்துணிந்தேன் என்று யாதாமொருவன் அவருக்கு முன்பாகச் சொல்லத்தகுமோ? ஒருவன் பேசத்துணிந்தால் அவன் விழுங்கப் பட்டுப்போவானே.

யோபு 37:21 இப்போதும் காற்று வீசி ஆகாயமண்டலங்களிலுள்ள மப்பு நீங்கப்பண்ணியிருக்கிற சமயத்தில் வடக்கேயிருந்து பொன்மயமான காந்தி வருகிறபோது,

யோபு 37:22 ஆகாயமண்டலத்திலே பிரகாசிக்கிற சூரியனை முதலாய் ஒருவரும் நோக்கிப் பார்க்கக்கூடாதே; தேவனிடத்திலோ பயங்கரமான மகத்துவமுண்டு.

யோபு 37:23 சர்வவல்லவரை நாம் கண்டுபிடிக்கக்கூடாது; அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர்; அவர் மகா நீதிபரர்; அவர் ஒடுக்கமாட்டார்.

யோபு 37:24 ஆகையால் மனுஷர் அவருக்குப் பயப்படவேண்டும்; தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்கமாட்டார் என்றான்.

எலிகூ யோபுவிற்குக் கூறிய புத்திமதிகள்

1. என் நியாயங்களைக் கேளும் (யோபு 33:1).
2. என் வார்த்தைகளுக்கெல்லாம் செவி கொடும். (யோபு 33:1).
3. உம்மாலே கூடுமானால் எனக்கு மறுமொழி கொடும் (யோபு 33:5).
4. நீர் ஆயத்தப்பட்டு எனக்கு எதிராக நில்லும். (யோபு 33:5).
5. நீர் கவனித்து என் சொல்லைக் கேளும் (யோபு 33:31).
6. நான் பேசப்போகிறேன், நீர் மவுனமாயிரும். (யோபு 33:31).
7. சொல்லத்தக்க நியாயங்கள் இருந்ததேயானால், எனக்கு மறுஉத்தரவு கொடும் (யோபு 33:32).
8. நீர் பேசும், உம்மை நீதிமானாகத் தீர்க்க எனக்கு ஆசையுண்டு. (யோபு 33:32).
9. ஒன்றும் இல்லாதிருந்ததேயாகில் நீர் என் சொல்லைக் கேளும் (யோபு 33:33).
10. மவுனமாயிரும், நான் உமக்கு ஞானத்தை உபதேசிப்பேன் (யோபு 33:33).
11. என் வார்த்தைகளைக் கேளும். (யோபு 34:2).
12. எனக்குச் செவிகொடும். (யோபு 34:10).
13. என் வார்த்தைகளின் சத்தத்துக்குச் செவிகொடும். (யோபு 34:16).
14. நான் பேசிமுடியுமட்டும் சற்றே பொறும் (யோபு 36:2).
15. அக்கிரமத்துக்குத் திரும்பாதபடிக்கு எச்சரிக்கையாயிரும் (யோபு 36:21).
16. அவருடைய கிரியையை நீர் மகிமைப்படுத்த நினையும். (யோபு 36:24).
17. அவருடைய சத்தத்தினால் உண்டாகிற அதிர்ச்சியைக் கேளும். (யோபு 37:2).
18. தரித்துநின்று தேவனுடைய ஆச்சரிய மான கிரியைகளைத் தியானித்துப் பாரும். (யோபு 37:14).

யோபு - தொகுப்புரை

37 அதிகாரம்

"மேகங்கள் தொங்கும்படி" - மேகங்கள் வானத்தில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. மேகத்தில் தண்ணீர் இருந்தாலும் அதையும் தாங்கிக் கொண்டு அது வானத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. தேவனுடைய பிரமாணத்தின் பிரகாரம் அவை தொங்குகிறது. கர்த்தர் கட்டளையிடும் போது அது பூமியில் மழையாகப் பொழிகிறது.

"அந்தகாரத்தினிமித்தம் முறைதப்பிப் பேசுகிறோம்" - யோபு தம்முடைய வழக்கைத் தேவனுக்கு முன்பாக விவாதிக்க விரும்புகிறான். தன்மீது எந்தவிதக் குற்றமும் இல்லை என்று சாதிக்கிறான். (யோபு 13:3,18:22). யோபுவிற்குத் தேவனைப் பற்றி சரியாகத் தெரியவில்லை என்று எலிகூ குற்றம் கூறுகிறான். தேவனுடைய சமுகத்தில் யாராலும் பேசமுடியாது. நமக்கு என்ன பேசுவது என்றும் தெரியாது என்று எலிகூ மேலும் கூறுகிறான். (யோபு 37:19-24).

38 அதிகாரம்

VII. கர்த்தரும் யோபுவும்

1. கர்த்தருடைய முதலாவது சம்பாஷணை

(1) கர்த்தருடைய கோரிக்கைகள்

யோபு 38:1 அப்பொழுது கர்த்தர்: பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவாக:

யோபு 38:2 அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிற இவன் யார்?

யோபு 38:3 இப்போதும் புருஷனைப்போல் இடைகட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு.

"அப்பொழுது கர்த்தர்" - யோபுவைக் குற்றப் படுத்தி எலிகூ தன்னுடைய பிரதியுத்தரத்தைக் கூறிமுடித்த பின்பு, கர்த்தர் பேசுகிறார். அவர் பெருங்காற்றிலிருந்து யோபுவிற்கு உத்தரவு கொடுக்கிறார். (யோபு 38:1-40:2).

"அறிவில்லாத வார்த்தைகளினால்" - தேவனைத் துதிப்பதற்குப் பதிலாக யோபு இதுவரையிலும் தேவன்மீது குற்றம் கூறியிருக்கிறான். இறுதியில் யோபுவின் உள்ளத்தில் தேவனைப் பற்றிக் குழப்பம் உண்டாயிற்று. தேவனைக் குற்றப் படுத்துவதற்குப் பதிலாகத் தன்னையே குற்றப்படுத்த வேண்டுமென்று யோபு தீர்மானம் பண்ணுகிறான்.

"புருஷனைப்போல் இடைகட்டிக்கொள்" - தேவனுடைய பிரதியுத்தரத்தைக் கேட்பதற்கு யோபு ஆயத்தப்பட வேண்டும். இதுவரையிலும் யோபு இடைகட்டிக் கொள்ளாமல் துக்கத்தில் இருந்தான். கர்த்தர் முதல் காரியமாக யோபுவைப் புருஷனைப்போல இடைகட்டிக் கொள்ளுமாறு கட்டளையிடுகிறார்.

"நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு" - இந்த வசனப்பகுதி முழுவதும் வஞ்சகப்புகழ்ச்சியினால் irony நிறைந்திருக்கிறது. தம்மைப் பற்றி விளக்கிக் கூறுமாறு தேவன் யோபுவிடம் கேட்கிறார். (யோபு 38:3-39:30). யோபுவால் தேவனைப் பற்றி விளக்கிக் கூற முடியாது. தேவனுடைய கிரியைகள், சித்தம், நோக்கம் ஆகியவை எதுவும் யோபுவிற்குச் சரியாகத் தெரியாது.

(2) உயிரற்ற பொருட்களின் சிருஷ்டிப்பைக் குறித்து முப்பத்தாறு கேள்விகள்

யோபு 38:4 நான் பூமியை அஸ்திபாரப் படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி.

யோபு 38:5 அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின்மேல் நூல்போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு.

யோபு 38:6 அதின் ஆதாரங்கள் எதின்மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்?

யோபு 38:7 அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே.

யோபு 38:8 கர்ப்பத்திலிருந்து உதிக்கிறது போல் சமுத்திரம் புரண்டுவந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்?

யோபு 38:9 மேகத்தை அதற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடைவையாகவும் நான் உடுத்தின போதும்,

யோபு 38:10 நான் அதற்கு எல்லையைக் குறித்து, அதற்குத் தாழ்ப்பாள்களையும் கதவுகளையும் போட்டு:

யோபு 38:11 இம்மட்டும் வா, மிஞ்சி வராதே; உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது என்று நான் சொல்லுகிறபோதும் நீ எங்கேயிருந்தாய்?

யோபு 38:12 துஷ்டர்கள் பூமியிலிருந்து உதறிப்போடப்படும்படிக்கு, அதின் கடையாந் தரங்களைப் பிடிக்கும் பொருட்டு,

யோபு - தொகுப்புரை

38 அதிகாரம்

யோபு 38:13 உன் ஜீவகாலத்தில் எப்போதாவது நீ விடியற் காலத்துக்குக் கட்டளை கொடுத்த, அருணோதயத்துக்கு அதின் இடத்தைக் காண்பித்ததுண்டோ?

யோபு 38:14 பூமி முத்திரையிடப்பட்ட களிமண்போல்வேறே ரூபங்கொள்ளும்; சகலமும் வஸ்திரம் தரித்திருக்கிறது போல் காணப்படும்.

யோபு 38:15 துன்மார்க்கரின் ஒளி அவர்களை விட்டு எடுபடும்; மேட்டிமையான புயம் முறிக்கப்படும்.

யோபு 38:16 நீ சமுத்திரத்தின் அடித்தலங்கள்மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில்உலாவினதுண்டோ?

யோபு 38:17 மரணவாசல்கள் உனக்குத் திறந்ததுண்டோ? மரண இருளின் வாசல்களை நீ பார்த்ததுண்டோ?

யோபு38:18 நீ பூமியின் விசாலங்களை ஆராய்ந்து அறிந்ததுண்டோ? இவைகளையெல்லாம் நீ அறிந்தி ருந்தால் சொல்லு.

யோபு 38:19 வெளிச்சம் வாசமாயிருக்கும் இடத்துக்கு வழி யெங்கே? இருள் குடிகொண்டிருக்கும் ஸ்தானமெங்கே?

யோபு 38:20 அதின் எல்லை இன்னதென்று உனக்குத் தெரியுமோ? அதின் வீட்டுக்குப்போகிற பாதையை அறிந்திருக்கிறாயோ?

யோபு 38:21 நீ அதை அறியும்படி அப்போது பிறந்திருந்தாயோ? உன் நாட்களின் தொகை அவ்வளவு பெரிதோ?

யோபு 38:22 உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த்தாயோ?

யோபு 38:23 ஆபத்து வருங் காலத்திலும், கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும், பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்து வைத்திருக்கிறேன்.

யோபு 38:24 வெளிச்சம் பரவப் படுகிறதற்கும், கீழ்காற்று பூமியின்மேல் வீசுகிறதற்குமான வழி எங்கே?

யோபு 38:25 பாழும் அந்தர வெளியுமானகரையைத் திருப்தியாக்கி, இளம் பூண்டுகளின் முளைகளை முளைக்கப் பண்ணும்படி,

யோபு 38:26 பூமியெங்கும் மனுஷர் குடியில்லாத இடத்திலும், மனுஷ சஞ்சாரமில்லாத வனாந்தரத்திலும் மழையை வருஷிக்கப்பண்ணி,

யோபு 38:27 வெள்ளத்துக்கு நீர்க்கால்களையும்,இடிமுழக்கங்களோடு வரும்மின்னலுக்கு வழிகளையும் பகுத்தவர் யார்?

யோபு 38:28 மழைக்கு ஒரு தகப்பனுண்டோ? பனித்துளிகளை ஜநிப்பித்தவர் யார்?

யோபு 38:29 உறைந்த தண்ணீர் யாருடைய வயிற்றிலிருந்து புறப்படுகிறது? ஆகாயத்தினுடைய உறைந்த பனியைப் பெற்றவர் யார்?

யோபு 38:30 ஜலம் கல்லுருவங் கொண்டு மறைந்து, ஆழத்தின் முகம் கெட்டியாய் உறைந்திருக்கிறதே.

யோபு 38:31 அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக் கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ?

யோபு 38:32 இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச் சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ?

யோபு 38:33 வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம் பண்ணுவாயோ?

யோபு - தொகுப்புரை

38 அதிகாரம்

யோபு 38:34 ஏராளமான தண்ணீர் உன்மேல் சொரியவேணும் என்று உன் சத்தத்தை மேகங்கள்பரியந்தம் உயர்த்துவாயோ?

யோபு 38:35 நீ மின்னல்களை அழைத்தனுப்பி, அவைகள் புறப்பட்டு வந்து: இதோ, இங்கேயிருக்கிறோம் என்று உனக்குச் சொல்லும்படி செய்வாயோ?

யோபு 38:36 அந்தக்கரணங்களில் ஞானத்தை வைத்தவர் யார்? உள்ளத்தில் புத்தியைக் கொடுத்தவர் யார்?

யோபு 38:37 ஞானத்தினாலே கொடிமாசிகளை எண்ணுபவர் யார்?

யோபு 38:38 தூளானது ஏகபாளமாகவும், மண்கட்டிகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளவும், ஆகாயத்துருத்திகளிலுள்ள தண்ணீரைப் பொழியப்பண்ணுகிறவர் யார்?

உயிரில்லாப் பொருட்களின் சிருஷ்டிப்பு பற்றிய விவரம்

1. பூமியின் அஸ்திபாரங்கள். (யோபு 38:4)
2. பூமியின் எல்லை. (யோபு 38:5)
3. பூமியின்மீது போடப்பட்டிருக்கும் கோடுகள்.
4. பூமியின் ஆதாரங்கள். (யோபு 38:6)
5. பூமியின் கோடிக்கல் போடப்படும்போது தேவபுத்திரரின் கெம்பீரிப்பு. (யோபு 38:6-7)
6. சமுத்திரம் அடைக்கப்படுவது. (யோபு 38:8)
7. சமுத்திரத்தின் எல்லை. (யோபு 38:9-11)
8. இரவு, பகலின் பிரமாணம் (யோபு 38:12-13)
9. சமுத்திரத்தின் ஊற்றுக்கள். (யோபு 38:16)
10. சமுத்திரத்தின் ஆழங்கள்.
11. மரணவாசல்கள் (யோபு 38:17)
12. மரண இருளின் வாசல்கள்.
13. பூமியின் விசாலங்கள். (யோபு 38:18)
14. வெளிச்சம் வாசமாயிருக்கும் இடம். (யோபு 38:19)
15. இருள் வாசமாயிருக்கும் இடம். (யோபு 38:19-20)
16. யோபுவினுடைய நாட்களின் தொகை (யோபு 38:21)
17. உறைந்த மழையின் பண்டசாலை (யோபு 38:22)
18. கல்மழையின் பண்டசாலை (யோபு 38:22-23)
19. வெளிச்சமும், காற்றும் (யோபு 38:24)
20. மின்னல், இடி, மழைகள் (யோபு 38:25-27)
21. மழையின் தோற்றம் (யோபு 38:28)
22. உறைந்த தண்ணீரின் தோற்றம்
23. உறைந்த பனியின் தோற்றம். (யோபு 38:29)
24. உறைந்த ஜலத்தின் தோற்றம் (யோபு 38:29-30)
25. அறுமீன் நட்சத்திரங்கள் (யோபு 38:31)
26. ராசிகள் (யோபு 38:32)
27. துருவ சக்கர நட்சத்திரங்கள்
28. வானத்தின் நியமங்கள் (யோபு 38:33)
29. வானத்தில் பூமியை ஆளும் ஆளுகை
30. மேகங்களின் ஆளுகை (யோபு 38:34)
31. மின்னல்கள் வருவது (யோபு 38:35)

யோபு - தொகுப்புரை

38 அதிகாரம்

32. அந்தக்கரணங்களில் ஞானம் (யோபு 38:36)

33. உள்ளத்தில் புத்தி

34. கொடிமாசிகளின் எண்ணிக்கை (யோபு 38:37)

35. ஆகாயத்துருத்திகள், தூள், மண் கட்டிகள் ஆகியவை (யோபு 38:38)

"விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி" - வானத்தில் ஏராளமான நட்சத்திரங்கள் உள்ளன. பல நட்சத்திரங்கள் வானத்திலுள்ள கோளங்களுக்குச் சூரியனைப்போல் உள்ளன. பூமி சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே வானம் சிருஷ்டிக்கப்பட்டது. சங் 19 இலும் மேலும் பல வசனங்களிலும் சிருஷ்டிகள் பாடுவது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. தேவனுடைய எல்லா சிருஷ்டிகளும் தேவனோடும், மனுஷரோடும் ஏதாவது ஒரு வழியில் தகவல் பரிமாற்றம் செய்கின்றன. சிருஷ்டிப்பிலிருந்து எல்லா சாபமும் அகற்றப்பட்ட பின்பு, இந்தத் தகவல் பரிமாற்றம் குழப்பமில்லாமல் தெளிவாக இருக்கும். (ரோமர் 8:21-24; வெளி 22:3).

"தேவபுத்திரர்" (sons of God) - இவர்கள் தேவதூதர்கள் ஆவார்கள். (யோபு 1:6; யோபு 2:1; ஆதி 6:1-4)

"உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது" - தங்களைத் தடை பண்ணுவதற்கு ஒன்றுமே இல்லாததுபோல அலைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தேவன் அலைகளை அடக்குகிறார். தேவன் வகுத்திருக்கும் எல்லையைத் தாண்டி கடல் அலை வராது. (யோபு 38:10-11; சங் 104:1-10).

உயிருள்ள ஜீவன்களின் சிருஷ்டிப்பு பற்றிய விவரம்

1. சிங்கம் இரையை வேட்டையாடுகிறது. (யோபு 38:39- 40)

2. சிங்கக்குட்டிகள் கெபியில் பதிவிருக்கிறது.

3. காக்கைக்குஞ்சுகளுக்கு உணவு கிடைக்கிறது. (யோபு 38:41)

4.வரையாடுகள் ஈனுங்காலம். (யோபு 39:1)

5. மான்கள் குட்டிபோடும் காலம்.

6. அவைகள் சினைப்பட்டிருந்து வருகிற மாதங்கள். (யோபு 39:2)

7. அவைகள் ஈனுங்காலம்.

8. காட்டுக்கழுதையைத் தன்னிச்சையாய்த் திரிவது. (யோபு 39:5)

9. காட்டுக்கழுதையின் கட்டுகளை அவிழ்ப்பது.

10. காண்டாமிருகம் சேவிப்பது. (யோபு 39:9)

11. படைச்சால்களை உழ காண்டாமிருகத்தைப் பழக்குவது. (யோபு 39:10)

12. காண்டாமிருகத்தைக் கயிறுபோட்டு ஏரிலே பூட்டுவது.

13. காண்டாமிருகத்தை அதிக பெலமுள்ளதென்று நம்புவது. (யோபு 39:11)

14. காண்டாமிருகத்திடம் வேலை வாங்குவது.

15. காண்டாமிருகம் தானியத்தைக் களஞ்சியத்தில் சேர்க்கும் என்று நம்புவது. (யோபு 39:12)

16. நாரையின் செட்டைகள் (யோபு 39:13)

17. தீக்குருவிகளின் செட்டைகள்

18. குதிரையின் வீரியம் (யோபு 39:13)

19. குதிரையின் தொண்டையில் குமுறல். (யோபு 39:19)

20. குதிரையினுடைய நாசியின் செருக்கு (யோபு 39:20)

21. ராஜாளி பறப்பது. (யோபு 39:26)

22. கழுகு உயரப் பறப்பது. (யோபு 39:27)

23. தேவனுடைய கிரியைகளில் பிரதானமான கிரியை. (யோபு 40:19)

யோபு - தொகுப்புரை

38 அதிகாரம்

"அருணோதயத்துக்கு அதின் இடத்தைக் காண்பித்ததுண்டோ?" - இரவும், பகலும் நித்தமும் மாறிமாறி வருகிறது. சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவை இரவையும்,பகலையும்ஆளுகை செய்கின்றன. (யோபு 38:12-13; ஆதி 1:14-19; ஆதி 8:22).

"மரணவாசல்கள் உனக்குத் திறந்ததுண்டோ?" - நரகம், மரணம் ஆகியவற்றின் வாசல்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (வெளி 1:18; வெளி 9:1; வெளி 20:1).

"பூமியின் விசாலங்களை ஆராய்ந்து அறிந்ததுண்டோ?" - யோபுவின் காலத்தில் பூமியின் சுற்றளவு எவ்வளவு என்பது அவர்களுக்குத் தெரியாது. பூமியின் விட்டம் 8000 மைல்கள். பூமியின் சுற்றளவு 25,000 மைல்கள்.

"ஆபத்து வருங்காலத்திலும்" - கல்மழையும், பனியும் தேவனுடைய கட்டளையின் படி வரும். தம்முடைய சத்துருக்களை அழிப்பதற்காகத் தேவன் கல்மழையைப் பயன்படுத்தியிருக்கிறார். (யாத் 9:22- 26; யோசு 10:11; சங் 18:12-13; சங்78:47-48; சங் 105:32). நியாயத்தீர்ப்பின் ஒரு பகுதியாக வருங்காலத்தில் கல்மழை பூமியில் வந்து விழும். (வெளி 8:7; வெளி 11:19; வெளி 16:21; எசே 38:22).

"மழையை வருஷிக்கப்பண்ணி" - தேவன் மேகத்தைத் தண்ணீரால்நிரப்பி, அதை பூமியின்மீது மழையாக வருஷிக்கப் பண்ணுகிறார். மனுஷருடைய சிருஷ்டிப்புக்கு முன்பாகவே மழை பெய்தது என்று ஒருசிலர் கூறுகிறார்கள். (ஏசா 4:12-14) மழை பெய்யும் விதமாகத் தேவன் வானத்தில் மேகத்தை வைத்திருக்கிறார். (ஆதி 1:6-8). நோவாவின் காலத்திற்கு முன்பாகவே பூமியில் மழை பெய்திருக்கிறது. (ஆதி 2:5-6)

(3)உயிருள்ளவைகளின் சிருஷ்டிப்பைக் குறித்து இருபத்தி மூன்று கேள்விகள்

யோபு 38:39 நீ சிங்கத்துக்கு இரையை வேட்டையாடி,

யோபு 38:40 சிங்கக்குட்டிகள் தாங்கள் தங்கும் இடங்களிலே கிடந்து கெபியிலே பதிவிருக்கிறபோது, அவைகளின் ஆசையைத் திருப்தியாக்குவாயோ?

யோபு 38:41 காக்கைக்குஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு, ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது, அவைகளுக்கு இரையைச் சவதரித்துக் கொடுக்கிறவர் யார்?

யோபு - தொகுப்புரை

39 அதிகாரம்

யோபு 39:1 வரையாடுகள் ஈனுங்காலத்தை அறிவாயோ? மான்கள் குட்டி போடுகிறதைக் கவனித்தாயோ?

யோபு 39:2 அவைகள் சினைப்பட்டிருந்துவருகிற மாதங்களை நீ எண்ணி, அவைகள் ஈனுங்காலத்தை அறிவாயோ?

யோபு 39:3 அவைகள் நொந்து குனிந்துதங்கள் குட்டிகளைப் போட்டு, தங்கள் வேதனைகளை நீக்கிவிடும்.

யோபு 39:4 அவைகளின் குட்டிகள் பலத்து, வனத்திலே வளர்ந்து, அவைகளண்டைக்குத் திரும்ப வராமற் போய்விடும்.

யோபு 39:5 காட்டுக்கழுதையைத் தன்னிச்சையாய்த் திரியவிட்டவர் யார்? அந்தக் காட்டுக்கழுதையின் கட்டுகளை அவிழ்த்தவர் யார்?

யோபு 39:6 அதற்கு நான் வனாந்தரத்தை வீடாகவும், உவர் நிலத்தை வாசஸ்தலமாகவும் கொடுத்தேன்.

யோபு 39:7 அது பட்டணத்தின் இரைச்சலை அலட்சியம்பண்ணி, ஓட்டுகிறவனுடைய கூக்குரலை மதிக்கிறதில்லை.

யோபு 39:8 அது மலைகளிலே தன் மேய்ச்சலைக்கண்டுபிடித்து, சகலவிதப் பச்சைப்பூண்டுகளையும் தேடித்திரியும்.

யோபு 39:9 காண்டாமிருகம் உன்னிடத்தில் சேவிக்கச் சம்மதிக்குமோ? அது உன் முன்னணைக்கு முன்பாக இராத்தங்குமோ?

யோபு 39:10 படைச்சால்களை உழ நீ காண்டாமிருகத்தைக் கயிறுபோட்டு ஏரிலே பூட்டுவாயோ? அது உனக்கு இசைந்து பரம்படிக்குமோ?

யோபு 39:11 அது அதிக பெலமுள்ளதென்று நீ நம்பி அதினிடத்தில் வேலை வாங்குவாயோ?

யோபு 39:12 உன் தானியத்தை அது உன் வீட்டில் கொண்டுவந்து, உன் களஞ்சியத்தில் சேர்க்கும் என்று நீ அதை நம்புவாயோ?

யோபு 39:13 தீக்குருவிகள் தங்கள் செட்டைகளை அசைவாட்டி ஓடுகிற ஓட்டம், நாரை தன் செட்டைகளாலும் இறகுகளாலும் பறக்கிறதற்குச் சமானமல்லவோ?

யோபு 39:14 அது தன் முட்டைகளைத் தரையிலே இட்டு, அவைகளை மணலிலே அனலுறைக்க வைத்து விட்டுப் போய்,

யோபு 39:15 காலால் மிதிபட்டு உடைந்து போம் என்பதையும், காட்டுமிருகங்கள் அவைகளை மிதித்து விடும்என்பதையும் நினைக்கிறதில்லை.

யோபு 39:16 அது தன் குஞ்சுகள் தன்னுடைய தல்லாததுபோல அவைகளைக் காக்காத கடின குணமுள்ளதாயிருக்கும்; அவைகளுக்காகஅதற்குக் கவலையில்லாதபடியினால் அது பட்ட வருத்தம் விருதாவாம்.

யோபு 39:17 தேவன் அதற்குப் புத்தியைக் கொடாமல், ஞானத்தை விலக்கிவைத்தார்.

யோபு 39:18 அது செட்டை விரித்து எழும்பும்போது, குதிரையையும் அதின்மேல் ஏறியிருக்கிறவனையும் அலட்சியம் பண்ணும்.

யோபு 39:19 குதிரைக்கு நீ வீரியத்தைக் கொடுத்தாயோ? அதின் தொண்டையில் குமுறலை வைத்தாயோ?

யோபு 39:20 ஒரு வெட்டுக்கிளியை மிரட்டுகிறதுபோல அதை மிரட்டுவாயோ? அதினுடைய நாசியின் செருக்கு பயங்கரமாயிருக்கிறது.

யோபு - தொகுப்புரை

39 அதிகாரம்

யோபு 39:21 அது தரையிலே தாளடித்து, தன்பலத்தில் களித்து, ஆயுதங்களைத் தரித்தவருக்கு எதிராகப் புறப்படும்.

யோபு 39:22 அது கலங்காமலும், பட்டயத்துக்குப் பின்வாங்காமலுமிருந்து, பயப்படுதலை அலட்சியம் பண்ணும்.

யோபு 39:23 அம்பறாத்துணியும், மின்னுகிற ஈட்டியும், கேடகமும் அதின்மேல் கலகலக்கும்போது,

யோபு 39:24 கர்வமும் மூர்க்கமுங் கொண்டு தரையை விழுங்கி விடுகிறதுபோல அநுமானித்து, எக்காளத்தின் தொனிக்கு அஞ்சாமல் பாயும்.

யோபு 39:25 எக்காளம் தொனிக்கும் போது அது நிகியென்று கனைக்கும்; யுத்தத்தையும், படைத்தலைவரின் ஆர்ப்பரிப்பையும், சேனைகளின் ஆரவாரத்தையும் தூரத்திலிருந்து மோப்பம் பிடிக்கும்.

யோபு 39:26 உன் புத்தியினாலே ராஜாளிபறந்து, தெற்குக்கு எதிராகத் தன் செட்டைகளை விரிக்கிறதோ?

யோபு 39:27 உன் கற்பனையினாலே கழுகு உயரப் பறந்து, உயரத்திலே தன் கூட்டைக் கட்டுமோ?

யோபு 39:28 அது கன்மலையிலும், கன்மலையின் சிகரத்திலும், அரணான ஸ்தலத்திலும் தங்கி வாசம்பண்ணும்.

யோபு 39:29 அங்கேயிருந்து இரையை நோக்கும்; அதின் கண்கள் தூரத்திலிருந்து அதைப் பார்க்கும்.

யோபு 39:30 அதின் குஞ்சுகள் இரத்தத்தை உறிஞ்சும்; பிணம் எங்கேயோ அங்கே கழுகு சேரும் என்றார்.

"அதின் குஞ்சுகள் இரத்தத்தை உறிஞ்சும்" - (எசே 39:17-20; மத் 24:28; லூக்கா 17:34-37; வெளி 19:17-21)

40 அதிகாரம்

(4) கர்த்தருக்கு யோபுவின் பதிலுரை

யோபு 40:1 பின்னும் கர்த்தர் யோபுக்கு உத்தரமாக:

யோபு 40:2 சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன் பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார்.

யோபு 40:3 அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக:

யோபு 40:4 இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன்.

யோபு 40:5 நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி, நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்.

யோபுவின் பாவங்கள்

1. சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறான்.
2. தேவன் பேரில் குற்றம் பிடிக்கிறான்.
3. தேவனுடைய நியாயத்தை அவமாக்குகிறான். (யோபு 40:8).
4. யோபு தன்னை நீதிமானாக்கிக் கொள்ளும்படிக்கு தேவன்மேல் குற்றஞ்சுமத்துகிறான்.
5. அறிவில்லாமல் ஆலோசனையை மறைக்கிறான். (யோபு 42:3).
6. அவனுக்குத் தெரியாததைக் கூறுகிறான்.

"யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக" - கர்த்தர் யோபுவிடம் 60 கேள்விகளைக் கேட்கிறார். யோபு தன்னுடைய சிநேகிதரிடத்தில் தைரியமாகப் பிரதியுத்தரம் கூறியதுபோல கர்த்தரிடத்தில் தைரியமாகப் பேசவில்லை. (யோபு 40:3-5).

"நான் நீசன்" - யோபு 23:1-8 ஆகிய வசனங்களில் யோபு தன்னை உத்தமனாகக் காண்பித்தான். ஆனால் இப்போது தன்னை நீசன் என்று கர்த்தருக்கு முன்பாக அறிவிக்கிறான். கர்த்தருக்கு முன்பாக யோபுவால் பதில் கூறமுடியவில்லை. ஆகையினால் தன் கையினால் தன்னுடைய வாயைப் பொத்திக் கொள்கிறான்.

"நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்" - தேவனுடைய சமுகத்தில் யோபு இரண்டுகேள்விகளை மட்டுமே கேட்கிறான். அவற்றில் இது ஒரு கேள்வி. இதற்கு முன்பு யோபு தன்னுடைய சிநேகிதரிடத்தில் கேள்விகளை வரிசையாகக் கேட்டான். ஆனால் இப்போதோ கர்த்தருக்கு முன்பாக யோபு தன் வாயைத் திறக்கவில்லை. இனிமேல் தான் எந்தப் பிரதியுத்தரமும் கொடுக்கப்போவதில்லை என்று அறிவிக்கிறான். (யோபு 40:4-5). அதன் பின்பு, யோபு மனந்திருந்துகிறான். (யோபு 42:1-6).

2. கர்த்தரின் இரண்டாவது சம்பாஷணை

(1) யோபுவைப் பற்றி நான்கு கேள்விகள்

யோபு 40:6 அப்பொழுது கர்த்தர் பெருங்காற்றில் இருந்து யோபுக்கு உத்தரவு அருளினார்.

யோபு 40:7 இப்போதும் புருஷனைப் போல நீ அரைக்கட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு.

யோபு 40:8 நீ என் நியாயத்தை அவமாக்குவாயோ? நீ உன்னை நீதிமானாக்கிக்கொள்ளும்படிக்கு என்மேல் குற்றஞ்சுமத்துவாயோ?

யோபு 40:9 தேவனுடைய புயத்தைப் போல் உனக்குப் புயமுண்டோ? அவரைப்போல் இடிமுழக்கமாய்ச் சத்தமிடக் கூடுமோ?

"அப்பொழுது கர்த்தர்" - யோபு ஒருசில வசனங்களைப் பேசிய பின்பு கர்த்தர் மறுபடியும் பேசுகிறார். யோபுவிடம் மேலும் 25 கேள்விகளைக் கேட்கிறார். (யோபு 40:6-41:34).

யோபு - தொகுப்புரை

40 அதிகாரம்

கர்த்தர் யோபுவிற்குக் கூறிய கட்டளைகள்

1. புருஷனைப்போல நீ அரைக் கட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு. (யோபு 38:3)
2. தேவன் பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக் கடவன் (யோபு 40:2).
3. புருஷனைப்போல நீ அரைக் கட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு. (யோபு 40:7).
4. நீ முக்கியத்தாலும் மகத்துவத்தாலும் உன்னை அலங்கரித்துக் கொள். (யோபு 40:10).
5. மகிமையையும் கனத்தையும் தரித்துக் கொள். (யோபு 40:10).
6. நீ உன் கோபத்தின் உக்கிரத்தை வீசி, அகந்தையுள்ளவனையெல்லாம் தேடிப்பார்த்து தாழ்த்திவிடு. (யோபு 40:11).
7. பெருமையுள்ளவனையெல்லாம் கவனித்து, அவனைப் பணியப்பண்ணு. (யோபு 40:12).
8. துன்மார்க்கரை அவர்களிருக்கிற ஸ்தலத்திலே மிதித்துவிடு. (யோபு 40:12).
9. நீ அவர்களை ஏகமாய்ப் புழுதியிலே புதைத்துப்போடு. (யோபு 40:13).
10. அவர்கள் முகங்களை அந்தரங்கத்திலே கட்டிப்போடு. (யோபு 40:13).
11. இப்போதும் பிகெமோத்தை நீ கவனித்துப்பார். (யோபு 40:15).
12. இதோ, நதி புரண்டுவந்தாலும் அது பயந்தோடாது (யோபு 40:23).
13. அதைப் பிடிக்கலாம் என்று நம்பினவன் மோசம்போனான். (யோபு 41:9).

கர்த்தர் யோபுவிடம் கேட்ட கேள்விகள் (யோபு 40:8-9)

1. நீ என் நியாயத்தை அவமாக்குவாயோ?
2. நீ உன்னை நீதிமானாக்கிக் கொள்ளும் படிக்கு என்மேல் குற்றஞ்சுமத்துவாயோ?
3. தேவனுடைய புயத்தைப்போல் உனக்குப் புயமுண்டோ?
4. அவரைப்போல் இடிமுழக்கமாய்ச் சத்தமிடக் கூடுமோ?

(2) யோபுவுக்கு கூறப்பட்டுள்ள அறைகூவலின் எட்டு அம்சங்கள்

யோபு 40:10 இப்போதும் நீ முக்கியத்தாலும் மகத்துவத்தாலும் உன்னை அலங்கரித்து, மகிமையையும் கனத்தையும் தரித்துக்கொண்டு,

யோபு 40:11 நீ உன் கோபத்தின் உக்கிரத்தைவீசி, அகந்தையுள்ளவனை யெல்லாம்தேடிப்பார்த்து தாழ்த்திவிட்டு,

யோபு 40:12 பெருமையுள்ளவனை யெல்லாம் கவனித்து, அவனைப் பணியப் பண்ணி, துன்மார்க்கரை அவர்களிருக்கிற ஸ்தலத்திலே மிதித்துவிடு.

யோபு 40:13 நீ அவர்களை ஏகமாய்ப் புழுதியிலே புதைத்து, அவர்கள் முகங்களை அந்தரங்கத்திலே கட்டிப்போடு.

யோபு 40:14 அப்பொழுது உன் வலதுகை உனக்கு இரட்சிப்பு உண்டுபண்ணும் என்று சொல்லி நான் உன்னைப் புகழுவேன்.

40 அதிகாரம்

கர்த்தர் யோபுவிற்குக் கூறிய அறைகூவல்

1. நீ முக்கியத்தாலும் மகத்துவத்தாலும் உன்னை அலங்கரித்துகொள்.
2. மகிமையையும் கனத்தையும் தரித்துக் கொள்.
3. நீ உன் கோபத்தின் உக்கிரத்தை வீசிப்போடு. (யோபு 40:11).
4. அகந்தையுள்ளவனையெல்லாம் தேடிப் பார்த்து தாழ்த்திவிடு
5. பெருமையுள்ளவனையெல்லாம் கவனித்து, அவனைப் பணியப்பண்ணு.
6. துன்மார்க்கரை அவர்களிருக்கிற ஸ்தலத்திலே மிதித்துவிடு. (யோபு 40:12).
7. நீ அவர்களை ஏகமாய்ப் புழுதியிலே புதைத்துப்போடு. (யோபு 40:13).
8. அவர்கள் முகங்களை அந்தரங் கத்திலே கட்டிப்போடு.

"அப்பொழுது" - யோபு 40:10-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எட்டுக் காரியங்களையும் யோபு செய்தால் அவனுக்கு இரட்சிப்பு உண்டாகும்.

(3) பிகெமோத்தைப் பற்றிய விளக்கத்தின் பதினாறு அம்சங்கள்

யோபு 40:15 இப்போதும் பிகெமோத்தை நீ கவனித்துப்பார்; உன்னை உண்டாக்கினதுபோல அதையும் உண்டாக்கினேன்; அது மாட்டைப்போல் புல்லைத்தின்னும்.

யோபு 40:16 இதோ, அதினுடைய பெலன் அதின் இடுப்பிலும், அதின் வீரியம் அதின் வயிற்றின் நரம் புகளிலும் இருக்கிறது.

யோபு 40:17 அது தன் வாலைக் கேதுரு மரத்தைப்போல் நீட்டுகிறது; அதின் இடுப்பு நரம்புகள் பின்னிக் கொண்டிருக்கிறது.

யோபு 40:18 அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப்போலவும், அதின் அஸ்திகள் இருப்புக் கம்பிகளைப் போலவும் இருக்கிறது.

யோபு 40:19 அது தேவனுடைய கிரியைகளில் பிரதானமான ஒரு கிரியை, அதை உண்டாக்கினவர் அதற்கு ஒரு பட்டயத்தையும் கொடுத்தார்.

யோபு 40:20 காட்டுமிருகங்கள் யாவும் விளையாடுகிற மலைகள் அதற்கு மேய்ச்சலை விளைவிக்கும்.

யோபு 40:21 அது நிழலுள்ள செடிகளின் கீழும், நாணலின் மறைவிலும், உளையிலும் படுத்துக் கொள்ளும்.

யோபு 40:22 தழைகளின் நிழல் அதைக்கவிந்து, நதியின் அலரிகள் அதைச் சூழ்ந்துகொள்ளும்.

யோபு 40:23 இதோ, நதி புரண்டு வந்தாலும் அது பயந்தோடாது; யோர்தான் நதியத்தனை தண்ணீர் அதின் முகத்தில் மோதினாலும் அது அசையாமலிக்கும்.

யோபு 40:24 அதின் கண்கள் பார்த்திருக்க அதை யார் பிடிக்கக் கூடும்? மூக்கணாங்கயிறுபோட அதின் மூக்கை யார் குத்தக்கூடும்?

"பிகெமோத்" (behemoth) - இது ஒரு மிருகத்தின் பெயர். ஆனால் இது என்ன மிருகம் என்று யாருக்கும் தெரியவில்லை. சிலர் இதை யானை என்றும், வேறுசிலர் இதை நீர்யானை என்றும் கூறுகிறார்கள். இந்த மிருகம் இப்போது இல்லை.

பிகெமோத்தைப் பற்றிய விளக்கம்

1. அது மாட்டைப்போல் புல்லைத்தின்னும். (யோபு 40:15).
2. அதினுடைய பெலன் அதின் இடுப்பில் இருக்கிறது. (யோபு 40:16).
3. அதின் வீரியம் அதின் வயிற்றின் நரம்புகளில் இருக்கிறது.
4. அது தன் வாலைக் கேதுரு மரத்தைப்போல் நீட்டுகிறது. (யோபு 40:17).

யோபு - தொகுப்புரை

40 அதிகாரம்

5. அதின் இடுப்பு நரம்புகள் பின்னிக் கொண்டிருக்கிறது.

6. அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப்போல இருக்கிறது. (யோபு 40:18).

7. அதின் அஸ்திகள் இருப்புக் கம்பிகளைப் போல இருக்கிறது.

8. அது தேவனுடைய கிரியைகளில் பிரதானமான ஒரு கிரியை (யோபு 40:19).

9. அதைத் தேவனுடைய பட்டயத்தால் கொல்ல முடியும்.

10. அது மலைகளில் மேயும். (யோபு 40:20).

11. அது நிழலுள்ள செடிகளின் கீழ் படுத்துக் கொள்ளும். (யோபு 40:21-22).

12. அது நாணலின் மறைவிலும், உளையிலும் படுத்துக்கொள்ளும்.

13. தழைகளின் நிழல் அதைக்கவிந்து, நதியின் அலரிகள் அதைச் சூழ்ந்து கொள்ளும். (யோபு 40:22).

14. அது அதிகளவில் தண்ணீர்குடிக்கும். (யோபு 40:23).

15. மெதுவாக நகர்ந்து செல்லும்.

16. அதை மனுஷரால் பிடிக்க முடியாது. அதற்கு மூக்கணாங்கயிறு போட முடியாது.(யோபு 40:24)

41 அதிகாரம்

(4) லிவியாதானைப் பற்றிய இருபது கேள்விகள் - (வசனம் 34; ஏசா 27:1; வெளி 12:1-17; 13:1-4; 16:13; 20:2)

யோபு 41:1 லிவியாதானை தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ? அதின் நாக்கை நீ விடுகிற கயிற்றினாலே பிடிக்கக் கூடுமோ?

யோபு 41:2 அதின் மூக்கை நார்க்கயிறு போட்டுக் கட்டக்கூடுமோ? குறட்டினால் அதின் தாடையை உருவக் குத்தக் கூடுமோ?

யோபு 41:3 அது உன்னைப் பார்த்து அநேக விண்ணப்பஞ் செய்யுமோ? உன்னை நோக்கி இச்சக வார்த்தைகளைச் சொல்லுமோ?

யோபு 41:4 அது உன்னோட உடன்படிக்கை பண்ணுமோ? அதைச் சதாகாலமும் அடிமைகொள்வாயோ?

யோபு 41:5 ஒரு குருவியோடே விளையாடுகிறதுபோல், நீ அதனோடே விளையாடி, அதை நீ உன் பெண்மக்களண்டையிலே கட்டி வைப்பாயோ?

யோபு 41:6 கூட்டாளிகள் அதைப் பிடிக்கப்பிரயத்தனப்பட்டு, அதை வியாபாரிகளுக்குப் பங்கிடு வார்களோ?

யோபு 41:7 நீ அதின் தோலை அநேக அம்புகளினாலும், அதின் தலையை எறிவல்லையங்களினாலும் எறிவாயோ?

யோபு 41:8 அதின்மேல் உன் கையைப் போடு, யுத்தத்தை நினைத்துக்கொள்; இனி அப்படிச் செய்யத் துணியமாட்டாய்.

யோபு 41:9 இதோ, அதைப் பிடிக்கலாம் என்று நம்பினவன் மோசம்போய், அதைப் பார்த்தவுடனே, விழுவான் அல்லவோ?

யோபு 41:10 அதை எழுப்பத்தக்க தைரியவான் இல்லாதிருக்க, எனக்கு முன்பாக நிற்பவன் யார்?

யோபு 41:11 தனக்குப் பதில்கொடுக்கப் படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவகள்.

யோபு 41:12 அதின் அங்கங்களும், அதின் வீரியமும், அதின் உடல் இசைவின் நேர்த்தியும் இன்னதென்று நான் சொல்லாமல் மறைக்கமாட்டேன்.

யோபு 41:13 அது மூடியிருக்கிற அதின் போர்வையைக் கிளப்பக்கூடியவன் யார்? அதின் இரண்டு தாடைகளில் நடுவே கடிவாளம் போடத்தக்கவன் யார்?

யோபு 41:14 அதின் முகத்தின் கதவைத் திறக்கக்கூடியவன் யார்? சுற்றிலுமிருக்கிற அதின் பற்கள் பயங்கரமானவைகள்.

லிவியாதானைப் பற்றிய கேள்விகள்

1. லிவியாதானைத் தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ? (யோபு 41:1)
2. அதின் நாக்கை நீ விடுகிற கயிற்றினாலே பிடிக்கக்கூடுமோ?
3. அதின் மூக்கை நார்க்கயிறுபோட்டுக் கட்டக்கூடுமோ? (யோபு 41:2)
4. குறட்டினால் அதின் தாடையை உருவக் குத்தக்கூடுமோ?
5. அது உன்னைப் பார்த்து அநேக விண்ணப்பஞ் செய்யுமோ?(யோபு 41:3)
6. உன்னை நோக்கி இச்சக வார்த்தைகளைச் சொல்லுமோ?
7. அது உன்னோட உடன்படிக்கை பண்ணுமோ? (யோபு 41:4)
8. அதைச் சதாகாலமும் அடிமை கொள்வாயோ?
9. ஒரு குருவியோடே விளையாடுகிறது போல், நீ அதனோடே விளையாடுவாயோ. (யோபு 41:5)
10. அதை நீ உன் பெண் மக்களண்டையிலே கட்டிவைப் பாயோ?
11. கூட்டாளிகளுக்கு அதைவிருந்து வைப்பாயோ (யோபு 41:6)

41 அதிகாரம்

12. அதை வியாபாரிகளுக்குப் பங்கிடுவாயோ?

13. நீ அதின் தோலை அநேக அம்புகளினால் எறிவாயோ? (யோபு 41:7)

14. அதின் தலையை எறி வல்லையங்களினால் எறிவாயோ?

15. இதோ, அதைப் பிடிக்கலாம் என்று நம்பினவன் மோசம்போய், அதைப் பார்த்தவுடனே, விழுவான் அல்லவோ? (யோபு 41:9)

16. அதை எழுப்பத்தக்க தைரியவான் இல்லாதிருக்க, எனக்கு முன்பாக நிற்பவன் யார்? (யோபு 41:10)

17. அதற்குப் பதில்கொடுத்தவன் யார் (யோபு 41:11)

18. அது மூடியிருக்கிற அதின் போர்வையைக் கிளப்பக்கூடியவன் யார்? (யோபு 41:13)

19. அதின் இரண்டு தாடைகளில் நடுவே கடிவாளம் போடத்தக்கவன் யார்?

(5) லிவியாதானைப் பற்றிய விளக்கத்தின் ஐம்பத்தியாறு அம்சங்கள்

யோபு 41:15 முத்திரைப் பதிப்புபோல அழுத்தங்கொண்டு அடர்த்தியாயிருக்கிற அதின் பரிசைகளின் அரணிப்பு மகா சிறப்பாயிருக்கிறது.

யோபு 41:16 அவைகள் நடுவே காற்றும் புகமாட்டாத நெருக்கமாய் அவைகள் ஒன்றோடொன்று இணைக்கப் பட்டிருக்கிறது.

யோபு 41:17 அவைகள் ஒன்றேடொன்று ஒடிக்கொண்டு இணைபிரியாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது.

யோபு 41:18 அது தும்முகையில் ஒளி வீசும், அதின் கண்கள் அருணோதயத்தின் புருவங்களைப் போல் இருக்கிறது.

யோபு 41:19 அதின் வாயிலிருந்து எரிகிற பந்தங்கள் புறப்பட்டு, அக்கினிப்பொறிகள் பறக்கும்.

யோபு 41:20 கொதிக்கிற சட்டியிலும் கொப்பரையிலும் இருந்து புறப்படுகிறது போல, அதின் நாசிகளிலிருந்து புகை புறப்படும்.

யோபு 41:21 அதின் சுவாசம் கரிகளைக் கொளுத்தும், அதின் வாயிலிருந்து ஜுவாலை புறப்படும்.

யோபு 41:22 அதின் கழுத்திலே பெலன் குடிகொண்டிருக்கும்; பயங்கரம் அதற்கு முன் கூத்தாடும்.

யோபு 41:23 அதின் உடற்கூறுகள், அசையாத கெட்டியாய் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கும்.

யோபு 41:24 அதின் நெஞ்சு கல்லைப் போலவும், ஏந்திரத்தின் அடிக்கல்லைப் போலவும் கெட்டியாயிருக்கும்.

யோபு 41:25 அது எழும்பும்போது பலசாலிகள் அஞ்சி பயத்தினால்மயங்கித் திகைப்பார்கள்.

யோபு 41:26 அதைத் தாங்குகிறவனுடைய பட்டயம், ஈட்டி, வல்லையம், கவசம், ஒன்றும் அதற்குமுன் நிற்காது.

யோபு 41:27 அது இரும்பை வைக்கோலாகவும், வெண்கலத்தை உளுத்த மரமாகவும் எண்ணும்.

யோபு 41:28 அம்பு அதைத் துரத்தாது; கவண் கற்கள் அதற்குத் துரும்பாகும்.

யோபு 41:29 அது பெருந்தடிகளைத் தாளடிகளாக எண்ணி, ஈட்டியின் அசைவை இகழும்.

யோபு 41:30. அதின் கீழாகக் கூர்மையான கற்கள் கிடந்தாலும், அது சேற்றின்மேல் ஒடுகிறதுபோலக் கருக்கான அவைகளின்மேலும் ஓடும்.

யோபு - தொகுப்புரை

41 அதிகாரம்

யோபு 41:31 அது ஆழத்தை உலைப்பானையைப் போல் பொங்கப்பண்ணி, கடலைத் தைலம்போலக் கலக்கிவிடும்.

யோபு 41:32 அது தனக்குப் பின்னாகப் பாதையைத் துலங்கப்பண்ணும்; ஆழமானது வெளுப்பான நரையைப்போல் விளங்கும்.

யோபு 41:33 பூமியின்மேல் அதற்கு ஒப்பானது ஒன்றுமில்லை; அது நிர்ப்பயமாயிருக்க உண்டு பண்ணப்பட்டது.

யோபு 41:34 அது மேட்டிமையானதையெல்லாம் அற்பமாய் எண்ணுகிறது; அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கிறது என்றார்.

லிவியாதானைப் பற்றிய விளக்கம்

1. லிவியாதானைத் தூண்டிலினால் பிடிக்க முடியாது. (யோபு 41:1).
2. அதின் நாக்கைக் கயிற்றினால் பிடிக்க முடியாது.
3. அதின் மூக்கை நார்க்கயிறுபோட்டுக் கட்ட முடியாது. (யோபு 41:2).
4. குறட்டினால் அதின் தாடையை உருவக் குத்த முடியாது.
5. அது தன் ஜீவனுக்காக அநேக விண்ணப்பஞ் செய்யாது. (யோபு 41:3).
6. அதைச் சதாகாலமும் அடிமை கொள்ள முடியாது. (யோபு 41:4).
7. அதை பழக்க முடியாது. (யோபு 41:5).
8. அதைச் சாப்பிட முடியாது. (யோபு 41:6).
9. அதைப் பங்கிட்டு விற்க முடியாது.
10. அதின் தோலை அநேக அம்புகளினால் எறியமுடியாது. (யோபு 41:7).
11. அதின் தலையை எறி வல்லையங்களினால் எறியமுடியாது.
12. மனுஷரால் அதோடு சண்டை போட முடியாது. (யோபு 41:8).
13. அதைப் பிடிக்கலாம் என்று நம்பினவன் மோசம்போவான். (யோபு 41:9).
14. மனுஷன் அதைப் பார்த்தவுடன் விழுவான்.
15. அதை எழுப்பத்தக்க தைரியவான் ஒருவனும் இல்லை. (யோபு 41:10-11)
16. அதின் அங்கங்களும், அதின் வீரியமும், அதின் உடல் இசைவின் நேர்த்தியும் இன்னதென்று கர்த்தர் சொல்லாமல் மறைக்கமாட்டார். (யோபு 41:12).
17. அது மூடியிருக்கிற அதின் போர்வையை ஒருவனாலும் கிளப்ப முடியாது. (யோபு 41:13).
18. அதின் இரண்டு தாடைகளில் நடுவே கடிவாளம் போடத்தக்கவன் ஒருவனும் இல்லை.
19. அதின் முகத்தின் கதவைத் (தாடையைத்) திறக்கக் கூடியவன் ஒருவனும்இல்லை. (யோபு 41:14).
20. அதின் பரிசைகளின் அரணிப்பு மகாசிறப்பாயிருக்கிறது.(யோபு 41:15).
21. அதின் பரிசைகளின் அரணிப்பு முத்திரைப் பதிப்புப்போல அழுத்தங் கொண்டிருக்கிறது.
22. அவைகள் நடுவே காற்றும் புகமாட்டாத நெருக்கமாய் அவைகள் ஒன்றோடொன்று இணைக்கப் பட்டிருக்கிறது. (யோபு 41:16).
23. அவைகள் ஒன்றேடொன்று ஒட்டிக் கொண்டிருக்கிறது. (யோபு 41:17).
24. அவைகள் இணைபிரியாமல் இருக்கிறது.
25. அவைகள் பிடித்துக் கொண்டிருக்கிறது.

41 அதிகாரம்

26. அது தும்முகையில் ஒளி வீசும் (யோபு 41:18).

27. அதின் கண்கள் அருணோதயத்தின் புருவங்களைப் போல் இருக்கிறது.

28. அதின் வாயிலிருந்து எரிகிற பந்தங்கள் புறப்படுகிறது. (யோபு 41:19).

29. அது தன் வாயைத் திறக்கும்போது அக்கினிப்பொறிகள் பறக்கும்.

30. அதின் நாசிகளிலிருந்து புகை புறப்படும். (யோபு 40:20)

31. அதின் சுவாசம் கரிகளைக் கொளுத்தும். அதின் வாயிலிருந்து ஜுவாலை புறப்படும். (யோபு 41:21).

32. அதின் கழுத்திலே பெலன் குடி கொண்டிருக்கும் (யோபு 41:22).

33. பயங்கரம் அதற்கு முன் கூத்தாடும்.

34. அதின் உடற்கூறுகள், அசையாத கெட்டியாய் இருக்கும். (யோபு 41:23).

35. அவை ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருக்கும்.

36. அதின் நெஞ்சு கல்லைப்போலவும், ஏந்திரத்தின் அடிக்கல்லைப்போலவும் கெட்டியாயிருக்கும். (யோபு 41:24).

37. அது எழும்பும்போது பலசாலிகள் அஞ்சுவார்கள். (யோபு 41:25).

38. பலசாலிகள் பயத்தினால்மயங்கித் திகைப்பார்கள்.

39. அதைத் தாங்குகிறவனுடைய பட்டயம் ஒன்றும் அதற்குமுன் நிற்காது. (யோபு 41:26).

40. ஈட்டி, வல்லையம், கவசம், ஒன்றும் அதற்குமுன் நிற்காது.

41. அது இரும்பை வைக்கோலாக எண்ணும். (யோபு 41:27).

42. வெண்கலத்தை உளுத்த மரமாக எண்ணும்.

43. அம்பு அதைத் துரத்தாது (யோபு 41:28).

44. கவண் கற்கள் அதற்குத் துரும்பாகும் (யோபு 41:28).

45. அது பெருந்தடிகளைத் தாளடிகளாக எண்ணும். (யோபு 41:29).

46. ஈட்டியின் அசைவை இகழும்.

47. அதின் கீழாகக் கூர்மையான கற்கள் கிடந்தாலும் அவைகளின் மேல் ஓடும். (யோபு 41:30).

48. கூர்மையான கற்களைச் சேற்றைப்போல எண்ணும்.

49. அது ஆழத்தை உலைப்பானையைப் போல் பொங்கப்பண்ணும். (யோபு 41:31).

50. கடலைத் தைலம்போலக் கலக்கி விடும்.

51. அது தனக்குப் பின்னாகப் பாதையைத் துலங்கப்பண்ணும். (யோபு 41:32).

52. ஆழமானது வெளுப்பான நரையைப்போல் அதற்கு விளங்கும்.

53. பூமியின்மேல் அதற்கு ஒப்பானது ஒன்றுமில்லை (யோபு 41:33).

54. அது நிர்ப்பயமாயிருக்க உண்டு பண்ணப் பட்டது.

55. அது மேட்டிமையானதையெல்லாம் அற்பமாய் எண்ணுகிறது (யோபு 41:34).

56. அது அகங்காரமுள்ள ஜீவன்களுக் கெல்லாம் ராஜாவாயிருக்கிறது.

யோபு - தொகுப்புரை

41 அதிகாரம்

லிவியாதான் சாத்தானுக்கு அடையாளமாக இருக்கிறான். சாத்தான் வலுசர்ப்பமானவன். இவன் தேவனுக்கும், மனுஷருக்கும் சத்துரு. லிவியாதானைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கும் காரியங்கள் இது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட சிருஷ்டி என்பது தெரியவருகிறது. (ஏசா 27:1; வெளி 12) "அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கிறது" என்று யோபு 41:34 ஆவது வசனத்தில் லிவியாதானைப் பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. கீழ்ப் படியாமையின் பிள்ளைகளிடத்தில் சாத்தானின் ஆவி கிரியை நடப்பிக்கிறது. (எபே 2:1-3). மிருகம் பெருமைப் படக்கூடியது என்று யோபுவின் புஸ்தகத்தில் எங்கும் கூறப்படவில்லை. மனுஷனே பெருமைக் காரனாகக் கூறப்பட்டிருக்கிறான். (யோபு 9:13; யோபு 26:12 ;யோபு 40:11-12) யோபுவின் புஸ்தகத்தில் பெருமை என்னும் வார்த்தை மனுஷரோடு சேர்ந்து சொல்லப்பட்டிருப்பதுபோல (யோபு 33:17; யோபு 35:12) லிவியாதானோடும் (யோபு 41:15) சேர்ந்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் "அகங்காரமுள்ள ஜீவன்கள்" "the children of pride" என்னும் வாக்கியம் மனுஷரையே குறிக்கும். (யோபு 41:34) சாத்தான் அகங்காரமுள்ளவர்களுக்கும், பெருமையுள்ளவர்களுக்கும் ராஜாவாக இருக்கிறான்.

யோபு - தொகுப்புரை

42 அதிகாரம்

(6) யோபு கர்த்தரிடம் கூறிய பதிலுரை

யோபு 42:1 அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக:

யோபு 42:2 தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்;

யோபு 42:3 அறிவில்லாமல் ஆலோசனையை மறைக்கிற இவன் யார்? ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன்.

யோபு 42:4 நீர் எனக்குச் செவிகொடும்; அப்பொழுது நான் பேசுவேன்; நான் உம்மைக் கேள்விகேட்பேன், நீர் எனக்கு உத்தரவு சொல்லும்.

யோபு 42:5 என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.

யோபு 42:6 ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்.

"அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக" - தேவன் யோபுவிடம் பல கேள்விகளைக் கேட்கிறார். அதன்பின்பு யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரம் கூறுகிறான். (யோபு 42:1-6).

யோபு கர்த்தருக்குக் கூறிய பிரதியுத்தரம்

1. தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். (யோபு 42:2).
2. நீர் செய்ய நினைத்தது தடைபடாது.
3. நான் அறிவில்லாமல் ஆலோசனையை மறைத்தேன். (யோபு 42:3).
4. நான் எனக்குத் தெரியாததை அலப்பினேன்.
5. என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன்.
6. நீர் எனக்குச் செவிகொடும். (யோபு 42:4)
7. நீர் எனக்கு உத்தரவு சொல்லும்.
8. என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன் (யோபு 42:5).
9. இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.
10. நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப் படுகிறேன் (யோபு 42:6).

"என் கண் உம்மைக் காண்கிறது." - கர்த்தர் யோபுவிற்குப் பிரத்தியேட்சமாகத் தரிசனமானார். யோபுவால் கர்த்தருடைய சரீர உருவத்தைக் காணமுடிந்தது.

VIII. கர்த்தரும் யோபுவின் மூன்று நண்பர்களும்

யோபு 42:7 கர்த்தர் இந்த வார்த்தைகளை யோபோடே பேசினபின், கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி: உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை.

யோபு 42:8 ஆதலால் நீங்கள் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக் கடாக்களையும் தெரிந்துகொண்டு, என் தாசனாகிய யோபினிடத்தில் போய், உங்களுக்காகச் சர்வாங்க தகனபலிகளை இடுங்கள்; என் தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான்; நான் அவன் முகத்தைப் பார்த்து, உங்களை உங்கள் புத்தியீனத்துக்குத் தக்கதாக நடத்தாதிருப்பேன்; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை என்றார்.

யோபு 42:9 அப்பொழுது தேமானியனான எலிப்பாசும் சூகியனான பில்தாதும் நாகமாத்தியனான சோப்பாரும் போய், கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடியே செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.

யோபு - தொகுப்புரை

42 அதிகாரம்

"கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி" - கர்த்தர் யோபுவிடம் பேசி முடித்தபின்பு, யோபுவின் சிநேகிதரிடத்தில் பேசுகிறார். அவர் எலிகூவிடம் ஒன்றும் பேசவில்லை. இதற்கான காரணமும் தெரியவில்லை. யோபுவைத் தன் தாசன் என்று அறிவிக்கிறார். யோபுவைப்போல அவர்கள் தம்மைக்குறித்து நிதானமாகப் பேசவில்லை என்று அறிவிக்கிறார். கர்த்தர் யோபுவைக் கடிந்து கூறினாலும் (யோபு 40:2,8) அவனைத் தம்முடைய தாசன் என்று அழைத்து அவனை அங்கிகரிக்கிறார்.

"உங்களுக்காகச் சர்வாங்க தகனபலி களை இடுங்கள்" - யோபுவின் மூன்று சிநேகிதரும், தங்களுக்காகச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்த வேண்டும். யோபு அவர்களுக்காக வேண்டுதல் செய்வான். அப்பொழுது கர்த்தர் யோபுவின் முகத்தைப் பார்த்து அவனுடைய சிநேகிதரை மன்னிப்பார். (யோபு 42:7-8).

"என் தாசனாகிய யோபு பேசினதுபோல்" - யோபு கர்த்தருக்கு விரோதமாகப் பல குற்றச்சாட்டுக்களைக் கூறினான். தாங்கமுடியாத வேதனைகளினாலும், சாத்தானுடைய சோதனைகளினாலும் யோபு அவற்றைக் கூறியதாக கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆனால் யோபுவின் சிநேகிதருக்கோ அவனுடைய உண்மையான பாடுகள் தெரிய வில்லை. அவன்மீது வரிசையாகக் குற்றச் சாட்டுக்களைக் கூறினார்கள். ஆகையினால் கர்த்தருடைய பார்வையில் யோபு பேசியது நிதானமாகவும், அவனுடைய சிநேகிதர் பேசியது நிதானமற்றதாகவும் தெரிகிறது. (யோபு 42:7-8).

IX. **கர்த்தர், சாத்தான், யோபு** - (1:6-22; 2:1-8; யாக் 5:10-11)

யோபு 42:10 யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.

யோபு 42:11 அப்பொழுது அவனுடைய எல்லாச் சகோதரரும் சகோதரிகளும், முன் அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனிடத்தில் வந்து, அவன் வீட்டிலே அவனோடே போஜனம் பண்ணி, கர்த்தர் அவன்மேல் வரப்பண்ணின சகல தீங்கினிமித்தம் அவனுக்காக அங்கலாய்த்து, அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் ஒவ்வொரு தங்கக்காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்.

யோபு 42:12 கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்; பதினாலாயிரம் ஆடுகளும், ஆறாயிரம் ஒட்டகங்களும், ஆயிரம் ஏர்களும், ஆயிரம் கழுதைகளும் அவனுக்கு உண்டாயின.

யோபு 42:13 ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் அவனுக்குப் பிறந்தார்கள்.

"கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்" - கர்த்தர் யோபுவைக் குணப்படுத்தினார். சோதிக்கப்படுவதற்கு முன்பாக அவனுக்கு இருந்ததையெல்லாம் திரும்பவும் கொடுத்தார்.

"யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்" - யோபுவின் முந்திய ஐசுவரியத்தைவிட இப்போது அவனுக்கு இரண்டு மடங்கு ஐசுவரியம் பெருகிற்று. (யோபு 1:3, 42:12)

"அப்பொழுது அவனுடைய எல்லாச் சகோதரரும் சகோதரிகளும்" - யோபுவிற்கு வந்த சோதனை முடிந்தது. யோபு குணமானான். சாத்தான் தோல்வியுற்றான். அப்போது அவனுடைய குடும்பத்தாரும், அவனுக்கு அறிமுகமானவர்களும் அவனிடத்தில் மறுபடியும் வந்து பழகுகிறார்கள்.

யோபுவின் சிநேகிதர் மூலமாக ஆசீர்வாதங்கள்

1. அவனுக்காக அங்கலாய்த்தார்கள்.
2. அவனுக்கு ஆறுதல் சொன்னார்கள்.

42 அதிகாரம்

3. அவரவர் ஒவ்வொரு தங்கக்காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்.

"அவரவர் ஒவ்வொரு தங்கக்காசை" - கிழக்கு தேசத்தில் ஏழைகளுக்கு உதவும் பழக்கம் இருந்திருக்கிறது. ஒருவன் அதிகப்பாடுகளைப் பட்டு அனுபவித்த பின்பும், நோய்வாய்ப்பட்டு குணமான பின்பும், வியாபாரத்திலும், தொழிலிலும் நஷ்டம் ஏற்பட்டு நொடித்துப் போனாலும் அவனுடைய உற்றார் உறவினர்கள் சேர்ந்து வந்து அவனுக்குத் தங்களால் முடிந்த வெகுமதிகளைக் கொடுப்பது வழக்கம். அவனுடைய கஷ்டங்கள் நீங்கி, இனிமேல் அவன் மற்றவர்களைப்போல நன்றாக வாழவேண்டும் என்னும் நல்ல நோக்கத்தோடு அவர்கள் அவனுக்கு உதவி புரிந்தார்கள்.

'யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்" - (யோபு 1:3)

"ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும்" - ஏற்ற காலத்தில் யோபுவிற்கு மறுபடியும் பிள்ளைகள் பிறக்கிறார்கள். முந்தி இருந்ததுபோல அதே எண்ணிக்கையில் யோபுவிற்கு இப்போதும் பிள்ளைகள் இருக்கிறார்கள். (யோபு 1:19)

X. யோபுவின் முடிவுரை

யோபு 42:14 மூத்த மகளுக்கு எமீமாள் என்றும், இரண்டாம் மகளுக்குக் கெத்சீயாள் என்றும், மூன்றாம் மகளுக்குக் கேரேனாப்புக் என்றும் பேரிட்டான்.

யோபு 42:15 தேசத்தில் எங்கும் யோபின் குமாரத்திகளைப்போல் சௌந்தரியமான பெண்கள் காணப்படவில்லை; அவர்கள் தகப்பன் அவர்கள் சகோதரரின் நடுவிலே அவர்களுக்குச் சுதந்தரம் கொடுத்தான்.

யோபு 42:16 இதற்குப்பின்பு யோபு நூற்றுநாற்பது வருஷம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான்.

யோபு 42:17 யோபு நெடுநாளிலிருந்து,பூரண வயதுள்ளவனாய் மரித்தான்.

யோபுவின் சௌந்தரியமான குமாரத்திகள்

1. எமீமாள் **(Jemima)** - இந்தப் பெயருக்கு "புறா, தெளிவான நாள்" **"a dove, a clear day"** என்று பொருள். (யோபு 42:14)

2. கெத்சீயாள் **(Kezia)** - இந்தப் பெயருக்கு "கிராம்பு, வாசனைப் பொருள்" **"Cinnamon, fragrant spices"** என்று பொருள்

3. கேரேனாப்புக் **(Kerenhappuch)** - இந்தப் பெயருக்கு "கண் மைக்கூடு" **"horn of the eye paint"** என்று பொருள்.

"யோபு நூற்றுநாற்பது வருஷம் உயிரோடிருந்து" - யோபுவிற்குப் பாடுகள் வந்தபோது அவனுடைய வயது 70. அதன் பின்பு யோபு 140 வருஷங்கள் உயிரோடு இருந்திருக்கிறான். யோபு மரித்தபோது அவனுடைய வயது 210.

"பூரண வயதுள்ளவனாய் மரித்தான்" - செப்துவஜிந்த் பதிப்பில் யோபு 42:17 ஆவது வசனத்தில் இந்த வாக்கியத்தின் முடிவில் "கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை எழுப்பும் போது யோபுவும் மறுபடியும் எழும்புவான்" என்று எழுதப்பட்டிருக்கிறது **"And it is written that he shall rise again with those whom the Lord raises up"**. புதிய ஏற்பாட்டில் யோபுவின் ஜீவியம் மேற்கோளாகக் கூறப்பட்டு, உறுதி பண்ணப்பட்டிருக்கிறது. (யாக் 5:10-11).